# நன்னூல் உரைவளம்

9

## உருபு புணரியல்

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

## நன்னூல் உரைவளம் (தொகுதி-9)

### எழுத்ததிகாரம்

# உருபு புணரியல்

பதிப்பாசிரியர்

முனைவர் இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

இரண்டாம் முதன்மைச் சாலை,

தரமணி, சென்னை-600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Nannūl uraivaḷam (Vol. 9)**<br>**Eḻuttatikāram**<br>**Urupu puṇariyal** |
| Author | : | Dr. R. Kannan<br>Associate Professor<br>Dept. of Tamil Language<br>Presidency College, Chennai - 5 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Tharamani<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 697 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 11 Point |
| No. of Pages | : | 216 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 95/- (Rupees Ninety five only) |
| Printed by | : | Sri Venkateswara Offset<br>New No. 47, Rajanga Mathya Street<br>Vadapalani, Chennai - 600 026.<br>Phone : 23621409 |
| Subject | : | Tamil Grammar |

முனைவர் கரு.அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை — 113

# அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மை யுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந் தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரை வளத்தினைஎம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலா சாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வ.குமார சாமிப் புலவர், வை.மு.சடகோபராமானுசாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார், பவானந்தம் பிள்ளை, கொ.இராமலிங்கத் தம்பிரான், கா.நமச்சிவாய முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவார் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல் லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான முனைவர் **இரா.கண்ணன்**, சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ்வுரைவளத்தின் பதிப்புப் பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப் பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப் பணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

**கரு.அழ.குணசேகரன்**

சென்னை – 113.

12.11.2010.

# முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக்கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன.பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக் கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப் படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண் டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக் கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலைநாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமை யானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன.வேறுசில அச்சேறிய பின்னும் இன்று அருகியுள்ளன.இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரைவளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப் பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா,ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமைப் பகுதி,நன்னூல் உரைகள் ஆகியன இவ்வுரைவளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலைநாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரைகளையேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் ***கரு.அழ.குணசேகரன்*** அவர்களும், துணை இயக்குநர் **திரு.க.ந.வீரபாகு சுப்பிரமணியன்** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக் கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை **முனைவர் ந.கலைவாணி** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

10.11.2010 | இரா.கண்ணன்.
சென்னை–55

# நன்னூல் உரைவளம்

(தொகுதி – 9)

## எழுத்ததிகாரம்

# உருபு புணரியல்

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ ,ஒ, ஓ, ஔ, ஃ – இவ்வெழுத்துக்கள் முறையே a , ā , i , ī ,u ,ū ,e, ē ,ai ,o, ō, au, kh எனவும்,

க், ங் , ச், ஞ் , ட் ,ண், த், ந் , ப், ம், ய், ர் , ல் , வ், ழ், ள், ற் , ன் – வ்வெழுத்துக்கள் முறையே k, ṅ , s, ñ , t , ṇ, ṭ , n , p , m , y , r , l , v ,ḷ ,ḻ, ṟ , ṉ, kh

எனவும் ஆங்கில எழுத்துப்பெயர்ப்பில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

# சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அவி | – | அவிநயம் |
| இடள் | – | இதன் பொருள் |
| இல, விள | – | இலக்கண விளக்கம் |
| உ–ம் | – | உதாரணம் |
| உணர்–ற்று | – | உணர்த்துதல் நுதலிற்று |
| எ–டு | – | எடுத்க்காட்டு |
| எ–று | – | என்றவாறு |
| எ–னின் | – | என் நுதலிற்றே எனின் |
| சுவாமி | – | சுவாமிநாதம் |
| சூ–ம் | – | சூத்திரம் |
| தொல், எழு | – | தொல்காப்பியம் எழுத்ததிகாரம் |
| தொல், சொல் | – | தொல்காப்பியம் சொல்லதிகாரம் |
| தொல், பொருள் | – | தொல்காப்பியம் பொருளதிகாரம் |
| தொன் | – | தொன்னூல் விளக்கம் |
| நச் | – | நச்சினார்க்கினியர் |
| ந.பா | – | நவநீதப் பாட்டியல் |
| நேமி | – | நேமிநாதம் |
| பா–டு | – | பாட வேறுபாடு |
| பொ–ரை | – | பொழிப்புரை |
| மா.அலங் | – | மாறனலங்காரம் |
| து.வீ | – | முத்துவீரியம் |
| வீர | – | வீரசோழியம் |
| வெண், பாட் | – | வெண்பாப் பாட்டியல் |

# நன்னூல் உரைவளம்

## தொகுதி – 9

## எழுத்ததிகாரம்

# உருபு புணரியல்

## COMBINATION OF CASE-ENDINGS

239. ஒருவ னொருத்திபல ரொன்று பலவென
வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்
குருபு முறழ்தர நாற்பதா முருபே.

ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என
வரு பெயர் ஐந்து ஒடு பெயர் முதல் இரு நான்கு
உருபும் உறழ்தர நாற்பது ஆம் உருபே.

oruvaṉ oruṭṭi palar oṉṟu pala eṉa
varu peyar ainṭu otu peyar muṭal
iru nāṉku
urupum uṟaḷṭara nāṟpaṭu ām urupē.

இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### CASE - ENDINGS

### Number of case-endings

By combining together the eight case-endings—from the Nominative to the Vocative—with each of the five nouns of the forms

**oruvan, orutti, palar, onru** and **pala,** we obtain forty inflections (of the Noun)

## மயிலை நாதர்

இவ்வோத்து என்னுதலியதோ வெனின் ஒத்து நுதலியதூஉம் ஒத்தினது பெயர் உரைப்பவே விளங்கும், ஆயின், இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், [1]உருபுகள் பதத்தொடு புணருமாறு உணர்த்திற் றாகலான், உருபு புணரியலென்னும் பெயர்த்து. மேலோத்தினோடு [2]இதற்கு இயை பென்னையோ வெனின், மேல் பதத்தொடு பதம் புணருமாறு உணர்த்தினார்; ஈண்டு அப் பதத்தொடு உருபு புணருமாறு உணர்த்தலின் மேலோத்தினோடு இயைபுடைத்தென்க, [3]இவ்வோத்தினுள் இத் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், வேற்றுமை யுருபுகள் ஆமிடமும் அவற்றது தொகையும் உணர்த்துதல் நுதலிற்று,

**இ–ள்.:** இவ்வைந்து பெயருடனும் எழுவாய் வேற்றுமையான பெயர் முதலாக விளியீறாக நின்ற எட்டினையும் உறழ வேற்றுமை யுருபுகள் நாற்பதாம், **எ–று.**

வ–று.:–

நம்பி, சாத்தி, மக்கள், [4]மரம், மாடுகள். இவற்றுள், நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ என உயர்திணை ஆண்பா லொருமைப் பெயரோடு எட்டுருபும் வந்தவாறு.

ஏனை நான்கு பெயரோடும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** வேற்றுமை உருபுகள் நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருமாறு இவ்வியலால் கூறுவான் தொடங்கி அவ்வெட்டு உருபுகளும் சாரும் இடவகையான் இத்துணைத்து என்பது உணர்–ற்று.

**இ–ள்.:** இப்பாற் பொருளின என்று கருத வரும் ஐந்து பெயருடனே எழுவாய் வேற்றுமையான பெயர் முதலாக விளியீறாக நின்ற எட்டு உருபினையும், உறழ, வேற்றுமை உருபுகள் நாற்பதாம், எ–று.

---

பாட வேறுபாடு.:– 1. (1) உருபியலோத்தென்னும்: (2) உருபிய லென்னும் 2. இயைபு இதற்கு 3. ஆயின், இத்தலைச் 4. மரம், மரங்கள்

சொல்மேல் வைத்தோதின் இப்பெயர்களோடு அன்றிப் பொதுப்பெயர்களோடு உருபு வாரா எனப் பொருள்படுமாதலின், எல்லாப் பெயரும்அடங்குவதற்குப் பொருள்மேல் வைத்து, 'என வருபெயர்' என்றார்.

வ – று.:

நம்பி சாத்தி மக்கள் மரம் மரங்கள் என்னும் இவற்றுள், நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ என ஒருவன் என்னும் வாய்பாட்டு உயர்திணை ஆண்பாற் பெயரோடு எட்டு உருபுகளும் வந்தன. ஏனை நான்கு பெயரோடும் இவ்வாறே யொட்டுக.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், வேற்றுமை உருபு பொருந்துமிடமும் அவற்றது தொகையும் கூறியது.

இ–ள்.: **ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவென** – ஒருவனென்றும் ஒருத்தி யென்றும் பலரென்றும் ஒன்றென்றும் பலவென்றும், **வரு பெயர் ஐந்தொடு** – வருகிற இவ்வைந்து பெயருடனும், **பெயர்முதல் இரு நான்கு உருபும் உறழ்தர** – பெயர் வேற்றுமை முதலாக விளி வேற்றுமை ஈறாக நின்ற எட்டு வேற்றுமை உருபினையும் உறழ, **நாற்பதாம் உருபே** – வேற்றுமை உருபுகள் நாற்பதாம், எ–று.

உ–ம்.:–

நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பியே என உயர்திணை ஆணொருமை யோடு எட்டுருபும் வந்தன. ஒழிந்த நாற்பெயரோடு ஒட்டுக.

## விசாகப் பெருமாளையர்

இது, வேற்றுமை யுருபுகள் நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருமாறு இவ் வியலாற் சொல்லத் தொடங்கி அவ் வெட்டுருபுகளும் சாரு மிடவகையால் இத்தனையா மென்பது உணர்த்துகின்றது.

இ–ள்.: **ஒருவன்** – ஒருவனும், **ஒருத்தி** – ஒருத்தியும், **பலர்** – பலரும், **ஒன்று** – ஒன்றும், **பல** – பலவும், **என** – என்று கருத, **வரு** – வருகின்ற, **பெயரைந் தொடு** – ஐந்து பெயரோடும், **பெயர் முதல்** – எழுவாய் வேற்றுமையான பெயர் முதல் விளியீறாக நின்ற, **இருநான் குருபும்**–எட்டுருபுகளையும், **உறழ்தர** – பெருக்க, **உருபு** – வேற்றுமை யுருபுகளானவை, **நாற்பதாம்** – நாற்பதாகும், எ–று.

வ–று.:–

நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள், என்கிற இவற்றுள், நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ என ஒருவனென்னும் வாய்பாட் டுயர்திணை யாண்பாற் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன, மற்றை நான்கு பெயர்களோடும் இப்படியே கூட்டுக.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வேற்றுமையுருபுகள் சாருமிடவகையால் இத்தனை யாகுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஒருவ னொருத்தி பலரொன்று பலவென
வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்
குருபு முறழ்தர நாற்பதா முருபே.

(ஒருவன் ஒருத்திபலர் ஒன்று பல என
வரு பெயர் ஐந்தொடு பெயர் முதல் இருநான்கு
உருபும் உறழ்தர நாற்பது ஆம் உருபு.)

இ–ள்.: **ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என வருபெயர் ஐந்தொடு** – ஒருவனும் ஒருத்தியும் பலரும் ஒன்றும் பலவும் என்று கருத வரும் ஐந்து பெயரோடும், **பெயர் முதல் இருநான்கு உருபும் உறழ்தர** – எழுவாய் வேற்றுமையான பெயர் முதல் விளியீறாக நின்ற எட்டுருபுகளையும் பெருக்க, **உருபு நாற்பது ஆம்** – வேற்றுமையுருபுகள் நாற்பதாகும், எ–று.

பெயர்முத லிருநான்கு என்பதில் பெயரென்பது திரிபில்லாது தன்னியல்பாய் நிற்கு மெழுவாய் வேற்றுமை.

வ–று.:–

1. நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்னும் இவற்றுள், நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ என ஒருவனென்னும் வாய்பாட்டுயர் திணை ஆண்பாற் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன. மற்றை நான்கு பெயர்களோடும் இப்படியே யொட்டுக.

எழுவாயுருபொன் றில்லாதிருக்கவும் ஐ முதலியன போல எழுவாயுருபு மொன்றாக எண்ணப்பட்டதென்னை?

செயப்படுபொருள் முதலியவற்றின்வேறாய்ப் பொருண் மாத்திர முணர்த்தலின் திரிபின்மையாகிய எழுவாய்நிலையு மொரு வேற்றுமை யுருபாயிற் றென்க.

பால்வகையாற் பெயர் எத்தனை யாகும்?

"ஒருவன்னொருத்தி பலரொன்று பலவென்
வருபெயரைந்து"

வேற்றுமையுருபு எட்டு எனக் கூறின் அமையுமாகவும் நாற்பதெனக் கூறியதென்னை?

எல்லா வேற்றுமையருபுமேலாத பெயருஞ் சிலவுளவாயி னும் ஐம்பாற்பெயரும் எட்டு வேற்றுமையுருபுகளை யுமேற்குெ மன்பது பொதுவகையால் வலியுறுத்தற் கென்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, வேற்றுமையுருபுகள் நிலைமொழியோடும் வருமொழி யோடும் புணருஞ் செய்கை, இந்த இயலினாலே சொல்லத் தொடங்கி, அந்த எட்டுருபுகளுஞ் சாரும் இட வகையால் இவ்வள வென்பது உணர்த்துகின்றது.

**இ–ள்.: ஒருவ னொருத்தி பலரொன்று பல வென வரு பெயரைந்தொடு** – இந்தப் பாலுக்கு உரியன வென்று நினைக்க வரும் இவ்வைந்து பெயரோடும், **பெயர் முதலிரு நான்குருபும்** – பெயர் வேற்றுமை முதல் விளி வேற்றுமை வரையிற் கடந்த எட்டுருபுகளையும், **உறழ்தர** – பெருக்க, **நாற்பதா முருபு** – உருபுகள் நாற்பதாம், எ–று.

சொல்லின் மேல் வைத்துக் கூறினால் இப் பெயர்களோ டன்றிப் பொதுப்பெயர்களோடே யுருபுகள் வாரா வெனப் பொருள்படு மாதலால் எல்லாப் பெயரு மடங்குதற்குப் பொருளின் மேல் வைத்து 'என வரு பெயரைந் தொ'டென்றார்.

வ–று.:–

நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்னுமிவற்றுள் நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ என ஒருவன்என்னும் வாய்பாட்டு உயர்திணை யாண்பாற் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன. மற்ற நான்கு பெயரோடு மிப்படியே யொட்டுக.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உயிரீறும் மெய்யீறுமான வேற்றுமையுருபுகள் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் விதத்தைக் கூறும் இயல்.

**உரை :– ஒருவன்** – ஒருவனும் (ஆண்பாலும்), **ஒருத்தி** – ஒருத்தியும் (பெண்பாலும்), **பலர்** – பலரும் (பலர்பாலும்), **ஒன்று** – ஒன்றும் (ஒன்றன் பாலும்), **பல** – பலவும் (பலவின்பாலும்), **என வரு** – என்று வருகின்ற, **பெயர் ஐந்தொடு** – ஐம்பாற்பெயர்களோடும், **பெயர்முதல் இருநான்கு உருபும்** – பெயர் வேற்றுமை (எழுவாய்) முதல் விளிவேற்றுமைவரையில் நின்ற எட்டு வேற்றுமை யுருபுகளையும், **உறழ் தர** – பெருக்கிக் கணக்கிட, **உருபு நாற்பது ஆம்** – (வேற்றுமை) யுருபுகள் நாற்பதாகும்.

உ–ம்.:–

நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ என 'ஒருவன்' என்னும் வாய்பாட்டு உயர்திணையாண்பாற் பெயரோடு எட்டு உருபுகளும் வந்தன.

குறிப்பு.:–

கூனி, மக்கள், மரம், மரங்கள் என்னும் மற்றை நான்கு வாய்பாட்டுப் பெயர்களோடும் இப்படியே கூட்டுக. சொல்லின்மேல் வைத்துக் கூறாது, எல்லாப் பெயரும் அடங்கப் பொருளின் மேல்வைத்து 'வருபெயரைந்தொடு' என்றார்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என வரு பெயர் ஐந்தொடு** – ஒருவனும் ஒருத்தியும் பலரும் ஒன்றும் பலவும் என்று கருத வரும் ஐந்து பெயரோடும், **பெயர் முதல் இருநான்கு உருபும் உறழ் தர** – எழுவாய் வேற்றுமையான பெயர் முதல் விளி யீறாக நின்ற எட்டுருபுகளையும் பெருக்க, **உருபு நாற்பது ஆம்** – வேற்றுமை யுருபுகள் நாற்பதாகும், எ–று.

வ–று.:–

நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்னும் இவற்றுள், நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ என ஒருவனென்னும் வாய்பாட் டுயர்திணை யாண்பாற் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன. மற்றை நான்கு பெயர்களோடும் இப்படியே யொட்டுக.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என வருபெயர் ஐந்தொடு** ஒருவனும் ஒருத்தியும் பலரும் ஒன்றும் பலவும் என்று கருதவரும் ஐந்து பெயரோடும், **பெயர் முதல் இருநான்கு உருபும் உறழ் தர** – எழுவாய் வேற்றுமையான பெயர் முதல் விளி யீறாக நின்ற எட்டுருபுகளையும் பெருக்க, **உருபு நாற்பது ஆம்** – வேற்றுமை யுருபுகள் நாற்பதாகும். எ–று.

சொல்லின் மேல்வைத்துக் கூறினால் இப்பெயர்களோ டன்றிப் பொதுப் பெயர்களோடு உருபுகள் வாராவெனப் பொருள்படுதலால் எல்லாப்பெயரு மடங்குதற்குப் பொருளின் மேல் வைத்து எனவரு பெயரைந் தோடென்றார்.

வ–று.:–

நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்னும் இவற்றுள், நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண்,

நம்பீ என ஒருவனென்னும் வாய்ப்பாட்டுயர் திணையாண்பாற் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன. மற்றை நான்கு பெயர்களோடும் இப்படியே பொட்டுக.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

உயிரீறும் மெய்யீறுமான வேற்றுமை யுருபுகள் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் விதத்தைச் சொல்லும் இயல். உயிரீறு மெய்யீறு என்றவற்றுள் அடங்குவனவற்றையே தனியே எடுத்துக் கூறுதலால், இவ்வியல் அவ்விரண்டு இயல்களின் பின் வைக்கப்பட்டது.

இ–ள்.:– **ஒருவன்** – ஒருவனும் (ஆண் பாலும்), **ஒருத்தி** – ஒருத்தியும் (பெண்பாலும்), **பலர்** – பலரும் (பலர் பாலும்), **ஒன்று** – ஒன்றும் (ஒன்றன் பாலும்), **பல** – பலவும் (பலவின் பாலும்) **என** – என்று, **வரு** – வருகின்ற, **பெயர் ஐந்தொடு** – ஐந்துபாற் பெயர்களோடும், **பெயர் முதல் இரு நான்கு உருபும்** – பெயர் வேற்றுமை (எழுவாய்) முதல் விளி வேற்றுமை வரையில் நின்ற எட்டு வேற்றுமை யுருபுகளையும், **உறழ்தர** – பெருக்கிக் கணக்கிட, **உருபு நாற்பது ஆம்** – (வேற்றுமை) உருபுகள் நாற்பதாகும், எ–று.

உ–ம்.:–

நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பியே என ஒருவன் என்னும் வாய்பாட்டு உயர்திணை ஆண்பாற் பெயரோடு எட்டு உருபுகளும் வந்தன. கூனி, மக்கள், மரம், மரங்கள் என்னும் மற்றை நான்கு வாய்பாட்டுப் பெயர்களோடும் இப்படியே கூட்டுக.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என வரு பெயர் ஐந்தொடு – ஒருவனும் ஒருத்தியும் பலரும் ஒன்றும் பரவும் என்று கருத வரும் ஐந்துபெயரோடும், பெயர் முதல் இருநான்கு உருபும் உறழ்தர – எழுவாய் வேற்றுமையான பெயர்முதல் விளியீறாக நின்ற எட்டுருபுகளையும் பெருக்க, உருபு நாற்பது ஆம் – வேற்றுமையுருபுகள் நாற்பதாகும். எ–று.

உ–ம்.:–

நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்னும் இவற்றுள், நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ எ ஒருவனென்னும் வாய்பாட்டுயர்திணை யாண்பாற் பெயரொடு எட்டுருபுகளும் வந்தன. மற்றை நான்குபெயர்களோடும் இப்படியே யொட்டுக.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:–** **ஒருவன்** – ஒருவனும், **ஒருத்தி** – ஒருத்தியும், **பலர்** – பலரும், **ஒன்று** – ஒன்றும், **பல** – பலவும், **என வரு** – என்று கருக வருகின்ற, **பெயர் ஐந்தொடு** – ஐந்துவகைப் பெயரோடும், **பெயர் முதல் இருநான்கு உருபும்** – ((எழுவாய் வேற்றுமையான) பெயர் முதல் விளி ஈறாகநின்ற எட்டுருபுகளையும், **உறழ்தர** – பெருக்க, **உருபு நாற்பது ஆம்** – (வேற்றுமை) உருபுகளானவை நாற்பதாகும். எ–று

பொ–ரை:–

ஒருவனும் ஒருக்தியும் பலரும் ஒன்றும் பலவும் என்று கருத வருகின்ற ஐந்துவகைப் பெயரோடும் (எழுவாய் வேற்றுமையான) பெயர் முதல் விளியீறாகநின்ற எட்டுருபுகளையும் பெருக்க, (வேற்றுமை) உருபுகளானவை நாற்பதாகும்.

எ–ம்.:–

2–வது வேற்றுமை நம்பி + ஐ = நம்பியை.

3–வது வேற்றுமை நம்பி + ஆல் = நம்பியால்.

4–வது வேற்றுமை நம்பி + கு = நம்பிக்கு.

5–வது வேற்றுமை நம்பி + இன் = நம்பியின்

6–வது வேற்றுமை நம்பி +அது = நம்பியது.

7–வது வேற்றுமை நம்பி + கண் – நம்பிக்கண்

8–வது வேற்றுமை = நம்பீ.

என ஒருவன் என்னும் வாய்பாட்டு உயர்திணை ஆண்பாற் பெயரோடு எட்டு உருபுகளும் வந்தன.

சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்கிற ஒருத்தி, பலர், ஒன்று, பல என்னும் மற்ற நான்கு வாய்பாட்டுப் பெயர்களோடும் இப்படியே கூட்டுக.

## கா.நமச்சிவாய முதலியார்

'ஐ' முதலிய வேற்றுமை யுருபுகள் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் இயல்பினைக் கூறும் இயல்.

**ஒருவன்** –ஒருவனும், **ஒருத்தி** – ஒருத்தியும், **பலர்** – பலரும், **ஒன்று** – ஒன்றும், **பல** – பலவும், **என** – என்று கருத, **வரு** – வரும், **பெயர் ஐந்தொடு** – ஐந்து பெயரொடும், **பெயர் முதல்** – எழுவாய் வேற்றுமையாகிய பெயர் முதல் விளியீறாகநின்ற, **இருநான்கு உருபும்** – எட்டு உருபுகளையும், **உறழ்தர** – பெருக்க, **உருபு** – வேற்றுமை யுருபுகளானவை, **நாற்பது ஆம்** – நாற்பதாகும்.

உதாரணம்

நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்னும் இவற்றுள்,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 – ஆம் | வேற்றுமை | நம்பி | | | | நம்பி |
| 2– ஆம் | ” | நம்பி | + | ஐ | | நம்பியை |
| 3 – ஆம் | ” | நம்பி | + | ஆல் | = | நம்பியால் |
| 4 – ஆம் | ” | நம்பி | + | கு | = | நம்பிக்கு |
| 5 – ஆம் | ” | நம்பி | + | இன் | = | நம்பியின் |
| 6 – ஆம் | ” | நம்பி | + | அது | = | நம்பியது |
| 7 – ஆம் | ” | நம்பி | + | கண் | = | நம்பிகண் |
| 8 – ஆம் | ” | நம்பி | | | = | நம்பீ |

என ஒருவன் என்னும் வாய்பாட்டு உயர்திணை ஆண்பாற் பெயரோடு எட்டு உருபுகளும் வந்தன.

## மோசகு பொன்னையா

ஒருவனும், ஒருத்தியும், பலரும், ஒன்றும், பலவும் என்று கருத வரும் பெயர்கள் ஐந்தோடும், பெயர் முதலிய எட்டு உருபுகளையும் பெருக்கி முடிக்க வேற்றுமை உருபுகள் நாற்பதாகும், எ–று.

பொருள்மேல் வைத்தோதி அனைத்துப் பெயரையும் அடக்கினார்.

எ–டு.:–

நம்பி, நங்கை, மக்கள், மரம், மரங்கள் – பெயர்கள்

பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி – உருபுகள் எட்டு

நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ – என ஒருவன் என்னும் வாய்ப்பாட்டு உயர்திணை ஆண்பாற் பெயரோடு எட்டு உருபுகளும் வந்தன. மற்றைய நான்கு பெயர்களோடும் இவ்வாறே ஒட்டிக் காண்க.

(1)

240. பெயர்வழித் [1]தன்பொரு டரவரு முருபே.

பெயர் வழித் தன் பொருள் தர வரும் உருபே.

peyar vaḻit tan poruḷ tara varum urupē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**The position and use of case-endings**

Case-endings are added to Nouns to denote their (various) meanings.

## ஒப்புமைப் பகுதி

கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப

(தொல். சொல்.: 69)

......................மூண்டவைதாம்
தோற்றும் பெயர் முன்னர்...........

(நேமி.: 40)

ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன வேழெனு மொழிப
விளிகொள் வதன்கண் விளியலங் கடையே

(இ.வி.: 193)

எல்லாப் பெயரும் வேற்றுமை யேற்கும்

(மு.வீ.: 506)

பெயரே வேற்றுமை பெற்று.........

(தொ.வி.: 53 :1)

## மயிலை நாதர்

எ–ன், வேற்றுமையுருபு [2]வருமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– பெயர்க்குப் பின்னாகத் தன்பொருளைத் தோற்றுவித்தற்குவரும், [3]வேற்றுமையுருபு, எ–று.

---

பாட வேறுபாடு.:–

1. .தம்பொருள்
2. புணருமிடம்
3. வேற்றுமை யுருபுகள்

வ—று.:—

மரம், மரத்தை, மரத்தால், மரமே எனவரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், வேற்றுமை உருபுகள் வருதற்குக் காரணமும் வரும் இடமும் உணர்—ற்று.

இ—ள்.:— வேற்றுமை யுருபுகள் தம்பொருளைத் தரப் பெயர்க்குப் பின் வரும், எ—று.

வ—று.:—

நம்பி பெற்றான், நம்பியைப்பெற்றான், நம்பியாற் பெற்றான்
என வரும். பிறவும் அன்ன.
தம்பொருள் தர வருவன எழுவாய் முதலிய எட்டுருபும்,
வழி வருவன பெயர் முழுவதூஉம் உருபாய எழுவாய்
ஒழிந்த ஏழுருபும் எனக் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், வேற்றுமையுருபு வருமிடம் கூறியது.

இ—ள்.:— பெயர்வழித் — எவ்வகைப் பெயர்க்கும் பின்னாக, தம் பொருள் தர — தம் பொருளைத் தோற்றுவித்தற்கு, வரும் உருபே— வேற்றுமை உருபுகள் வரும், எ—று.

உ—ம்.:—

நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது,
நம்பிகண், நம்பியே என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது, வேற்றுமை யுருபுகள் வருதற்குக் காரணமும் வருமிடமும் உணர்த்துகின்றது

இ—ள்.:— உருபு — வேற்றுமை யுருபுகளானவை, தம்பொருள்— தம் பொருளை, தர — கொடுக்க, பெயர் வழி — பெயர்க்குப் பின், வரும் — வரும், எ—று.

உ—ம்.:—

நம்பி பெற்றான், நம்பியைப் பெற்றான் என வரும்.
மற்றவைகளும் இப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உருபின் பயனும் அது வருமிடமுங் கூறுஞ் சூத்திரம் யாது?

பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே.

(பெயர்வழித் தம்பொருள் தர வரும் உருபே.)

இ–ள்.:– உருபு – வேற்றுமை யுருபுகள், தம்பொருள் தர–தம்பொருளைக் கொடுக்க, பெயர்வழி வரும் – பெயர்க்குப்பின் வரும், எ–று.

வ–று.:–

நம்பிபெற்றான், நம்பியைப்பெற்றான், நம்பியாற்பெற்றான் என வரும். மற்றவையும் இப்படியே.

## முகவை இராமனுச கவிராயர்

இது, வேற்றுமை யுருபுகள் வருதற்கு காரணமும், அவை வருமிடமுங் கூறுகின்றது,

இ–ள்.:– உருபு–வேற்றுமை யுருபுகள், தம்பொருடர – தம் பொருள்களைத் தரும் பொருட்டு, பெயர்வழி வரும் – பெயர்க்குப் பின்வரும், எ–று.

வ–று.:–

நம்பிபெற்றான், நம்பியைப்பெற்றான், நம்பியாற்பெற்றான் என வரும். பிறவுமிப்படியே காண்க. தம்பொருடரவருவன எழுவாயுருபு முதலிய எட்டுருபுகளும். பின்வருவன பெயர் முழுவதும் உருபாகிய எழுவாயுருபு ஒழிந்த ஏழுருபுகளு மெனக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– உருபு – (வேற்றுமை) உருபுகள், தம் பொருள் தர– தமது பொருள்களைக் கொடுக்க, பெயர் வழி – பெயர்க்குப்பின், வரும்.

குறிப்பு:–

பொருள் – கர்த்தாப் பொருள், செயப்படுபொருள் முதலியன.

உ–ம்.:–

நம்பி பெற்றான், நம்பியைப் பெற்றான் என இவ்வாறு காண்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– உருபு – வேற்றுமை யுருபுகள், தம்பொருள் தர – தம்பொருளைக் கொடுக்க, பெயர்வழி வரும் – பெயர்க்குப் பின் வரும், எ–று.

வ—று.:—

நம்பிபெற்றான், நம்பியைப்பெற்றான் என வரும்.
மற்றவைகளும் இப்படியே.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள். உருபு — வேற்றுமையுருபுகள் — தம்பொருள்தர — தம்பொருளைக் கொடுக்க, — பெயர்வழி வரும் — பெயர்க்குப்பின்வரும். எ—று.

தம்பொருள் என்றது:— கருத்தா, கருமம் (கருமம் — செயப்படுபொருள்) கருவி, முதலியன.

வ—று.:—

நம்பிபெற்றான், நம்பியைப்பெற்றான், நம்பியாற் பெற்றான்
எனவரும். மற்றவைகளும் இப்படியே.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.: உருபு — (வேற்றுமை) உருபுகள், தம் பொருள் தர — தமது பொருளைக் கொடுக்க. பெயர் வழி — பெயர்க்குப் பின், வரும் —; எ—று.

தம் பொருள் — கர்த்தாப்பொருள், செயப்படுபொருள் முதலியன.

உ—ம்.:—

நம்பி பெற்றான், நம்பியைப் பெற்றான் என இவ்வாறு காண்க.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— உருபு — வேற்றுமை யுருபுகள், தற்பொருள் தர — தம்பொருளைக் கொடுக்க, பெயர்வழி வரும் — பெயர்க்குப்பின் வரும். எ—று.

(பொருள் — கர்த்தாப்பொருள், செயப்படுபொருள் முதலியன.)

உ—ம்.:—

நம்பிபெற்றான், நம்பியைப்பெற்றான், நம்பியாற்பெற்றான்
என வரும். மற்றவைகளும் இப்படியே.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ—ள்.:— உருபு — (வேற்றுமை) உருபுகளானவை, தம் பொருள் தர — தம்பொருளைக் கொடுக்க. பெயர்வழி வரும் — பெயருக்குப் பின் வரும். எ—று

பொ–ரை.:–

வேற்றுமை உருபுகள் தம் பொருளைத் தரப் பெயருக்குப் பின் வரும்.

**முதல் வேற்றுமை.:–**

நம்பி + பெற்றான் = நம்பி பெற்றான்.

**இரண்டாம் வேற்றுமை.:–**

நம்பி + ஐ + பெற்றான் = நம்பியைப் பெற்றான்.

**மூன்றாம் வேற்றுமை.:–**

நம்பி + ஆல் + பெற்றான் = நம்பியாற்பெற்றான்.

மற்றவைகளு மிப்படியே. தம்பொருள் தர வருவன எழுவாய் முதலிய எட்டுருபுகள். வழிவருவன பெயர்முழுது முருபுமாகிய எழுவாயொழிந்த ஏழுருபுகள்.

## கா.நமச்சிவாய முதலியார்

உருபு – வேற்றுமை யுருபுகளானவை, தம் பொருள் – தம் பொருளை, தர – கொடுக்க, பெயர்வழி வரும் – பெயருக்குப்பின் வரும்.

உதாரணம்:–

நம்பி + ஐ + பெற்றான் = நம்பியைப் பெற்றான்

## மோசசு பொன்னையா

வேற்றுமை உருபுகள் தம் பொருளைத் தரப் பெயருக்குப் பின்னர் வரும், எ–று.

எ–டு.:–

நம்பி வென்றான்

நம்பியை வென்றான்

நம்பியால் வென்றான் மற்றவைகளும் இவ்வாறே.

பெயருக்குப் பின் வருவன ஐ முதலிய ஆறு உருபுகளுமே என்க.

241. ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
[1]ஒக்கும னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

ஒற்று உயிர் முதல் ஈற்று உருபுகள் புணர்ச்சியின்
ஒக்கும் மன் அப் பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

oṛṛu uyir muṭal īṛṛu urupukaḻ puṇarssiyiṉ
ōkkum maṉ ap peyar vēṛṛumaip puṇarppē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Combination of case - endings

The combination of the (six) Case-endings whose initials and finals are either vowels or consonants (with the words between which they may be employed, resemble, in a large measure, the Casual combinations of Nouns having such initials and finals.

## மயிலை நாதர்

எ—ன், உருபுகள் பதத்தொடு புணரு முறைமை மாட்டெறிந் துணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:— மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாகவுடைய உருபுகள் நிலைமொழியாயும் [2]வருமொழியாயும் பதத்தோடு புணருமிடத்து ஒற்றும் உயிரும் முதலும் ஈறுமாக வரும் பெயர்ப்பதங்கள் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் தம்முட் புணரும் புணர்ச்சியோடு ஒப்பனவாம், பெரும்பாலும், எ—று.

வ—று.:—

நம்பியை யென்புழி, நம்பி யென உயிரீற்று ஒருமைப் பெயரை நிறுவி, அதன்வழியே, 'பெயர்வழித் தன்பொருள் தரவரு முருபே' என்றதனால் 'ஐ' யுருபு தந்து, 'இஈ ஐவழி யவ்வும்' என்றதனால் யகர வுடம்படு மெய்யை வருவித்து, 'உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பு' என்றதனால்,

---

பாட வேறுபாடு.:—

1. ஒக்குமன்னப்பெயர்

2. மேல் வருமொழியாயும்

உடன்மேலுயிரேற்றி நம்பியை என முடிக்க. இவ்வாறே உயிரீற்றுப் பெயர் மேல் உயிர் முதலுருபுகள் வந்தன முடிக்க. நம்பிக்கு என்புழி, நம்பியென நிறுவி, 'பெயர்வழித் தன்பொரு டரவரு முருபே' என்றதனாற், குவ் வுருபு தந்து, 'பொதுப்பெய ருயர்திணைப்பெயர்கள்' என்றதனால், இயல்பாக வர, அதனை இதனுள் 'மன்' என்ற விதப்பானே மாற்றி, 'இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்' என்பதனாற், ககர வொற்றை மிகுத்து நம்பிக்கு என முடிக்க. நம்பிகண் என்புழி நம்பியெனநிறுவி, 'பெயர்வழி' என்றதனாற் கண்ணுருபு தந்து, 'இயல்பினும் விதியினும்' என்றதனானே, ககர வொற்று [1]மிகுவான் வர இதனுட் பெரும்பாலுமொக்குமெனச் சொல்லியவதனானே சிறுபான்மை யொவ்வாதாகலின் ஈண்டுக் ககரத்தை [2]மிகுக்காது நம்பிகண் என முடிக்க. இவ்வாறே உயிரீற்றுப் பெயர் மேல்வரும் ஒற்று முதலுருபுகளெல்லா முடிக்க. நம்பீ யென்னும் [3]விளியுருபு சொல்லதிகாரத்து விளி வேற்றுமைப்படியே கொள்க. பொன்னை யென்புழி பொன் என ஒற்றீற்று அஃறிணை யொருமைப் பெயரை நிறுவி முன்போல ஐயுருபு தந்து, 'தனிக் குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்' என்றதனால் னகரம்தை யிரட்டித்து, 'உடன்மே லுயிர்வந் தொன்றுவது' என்றதனால் ஈற்று னகரத்தின் மேலே உருபுயிரை யேற்றிப் பொன்னையென முடிக்க. இவ்வாறே மெய்யீற்றுப் பெயர்மேல் வரும் உயிர்முதலுருபுகளெல்லாம் முடிக்க. பொற்கு [4]என்புழிப் பொன் என நிறுவிக் குவ்வுருபுதந்து, 'ணனவல்லினம் வரட்டறவும்' என்றதனால் னகரத்தை றகரமாக்கிப் பொற்கு என முடிக்க. இவ்வாறே மகவை, மகவான், மகக்கு மகக்கண்; காவை, காவான், காக்கு, காக்கண்; கிளியை, கிளியான், கிளிக்கு, கிளிக்கண் எனவும், மண்ணை, மண்ணான், மட்கு, மட்கண்; வேயை, வேயான், வேய்க்கு, வேய்க்கண்; ஊரை, ஊரான், ஊர்க்கு, ஊர்க்கண்; பாழை, பாழான், பாழ்க்கு, பாழ்க்கண், எனவும் பெரும்பாலொப்பனவும், அவர்க்கு, அவர்கண், அரசர்க்கு அரசர்கண், பார்ப்பார்க்கு, பார்ப்பார்கண், சாத்தற்கு, சாத்தன்கண் எனவும், விளவிற்கு, விளவின்கண், ஆவிற்கு, ஆவின்கண், ஊரிற்கு, ஊரின்கண்,

பாட வேறுபாடு.:–

1.மிக்குவர

2.மிகாது

3.விளிவேற்றுமை

4.என்பதற்கு

எனவும் சிறுபான்மை புணர்ச்சி பொவ்வாதனவும் கண்டு முடிக்க.

இனி இவ்வாறு முடிந்து நின்ற உருபுப் பதங்களை நிலைமொழியாக நிறுவி, உயிர் முதலாயும் மெய்ம் முதலாயும் வரும் மொழிகளோடு மேலைப் புணரியல்களிற் புணர்த்தவாறே புணர்க்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** ஐ முதலிய ஆறுருபும் நிலைமொழி வருமொழியோடு புணருமாறு **உணர் – ற்று.**

**இ–ள்:** தொகாநிலையாய வேற்றுமைப் புணர்ச்சிக்கண் இடையே நின்று நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் ஒற்றுயிர்களை முதலும் ஈறுமாகவுடைய ஐ முதலிய வேற்றுமை உருபு ஆறும் இடைச்சொல்லேனும் இயல்பொடு விகாரத்து இயையும் புணர்ச்சி வகையால் பெரும்பாலும் ஒக்கும், போன இரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் இயல்பொடு விகாரத் தியைந்த ஒற்றுயிர் முதலீற்றுப் பெயர்களை, **எ– று.**

மன் என்றமையான் சிறுபான்மை ஒவ்வா என்பதாம்.

**உ–ம்.:–**

நம்பிகண் வாழ்வு என்புழி, '**ஆவி யரமுன் வன்மை மிகா**' என்றும், '**ணன வல்லினம் வரட் டறவும் பிறவரின் இயல்புமாகும் வேற்றுமைக்கு**' என்றும் கூறியவாறே, கண்ணுருபின் முதலும் ஈறும் இயல்பாயின. உறிக்கட்டயிர் என்புழி, '**இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்**' என்றும், '**ணன வல்லினம்வரட் டறவும்**' என்றும், கூறியவாறே கண்ணுருபின் முதலும் ஈறும் விகாரமாயின. பழிக்கஞ்சி என்புழி, '**இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கச தப மிகும்**' என்றும் '**முற்றுமற்றொரோ வழி**' என்றும் கூறியவாறே குவ்வுருபின் முதலும் ஈறும் விகாரமாயின. நம்பிக்குப்பிள்ளை என்புழி '**ஆவியரமுன் வன்மை மிகா**' என்ற விதி ஒவ்வாது, குவ்வுருபின் முதல் வல்லொற்று மிக்கது. பிறவும் அன்ன. இவ்வுருபு சாத்திக்கு, கிளிக்கு எனப் பொதுப்பெயரஃறிணைப் பெயர்க்கண்ணும் மிகுதலின் '**சில விகாரமாம் உயர்திணை**' என்னும் விதியன்று.

ஒற்றுயிர் முதலீற்று உருபுகள் என்றமையின், '**நாற்பதாம் உருபே**' எனத் தொகை கொடுத்துக் கொணர்ந்தவற்றுள் எழுவாயும் விளியும் ஒழித்துத் தமக்கென உருபு முதலீறும் உடைய ஐம்முதலிய ஆறு உருபிற்கும் இவ்விதி கூறுகின்றார்

என்பதூஉம், இவ்வுருபுகளின் முதலீறுகட்கு மாட்டேற்றான் இவ்விதி கூறவே உருபின் இருமருங்கும் புணரும் நிலைமொழி யீறும் வருமொழி முதலும்படும் பாகுபாட்டிற்கு விதி, போன இரண்டு இயலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கு என விதித்தவற்றுள் அடங்கும் ஆதலின், அவையும் இம் மாட்டேற்றான் அமைத்தாரல்லர் என்பதூஉம், அங்ஙனம் அடங்குவதற்கு 'மூன்றாறுருபெண்' என்னும் சூத்திரமே கரி என்பதூஉம், 'தான் தாம் நாம் முதல்குறுகும்' என்றற் றொடக்கத்து உருபோடு புணரும் நிலைமொழிகளின் விகாரங்கள் தொகைநிலைக்கண்ணும் நாற்கணத்தின் முன்னும் வருதலின் அவ் விகாரம் எழுத்துப் புணர்ச்சியான் வந்தனவல்ல வேற்றுமைப் பொருள் நோக்கத்தானே வந்தன அதனால் இவ்வியலுள் கூறப்படும் என்பதூஉம்.

'ஒக்குமன்னப்பெயர்' என்றமையின் வினையிறுதி வேற்றுமைப் புணர்ச்சிக்கு வாராமையின் அதனை ஒழித்துப் பெயரை உவமித்தார் என்பதூஉம், வேற்றுமைப் புணர்ப்பே என்றமையின் வேற்றுமை யுருபின் புணர்ச்சி யாதலின் அதற்கு அல்வழிப் புணர்ச்சி ஒவ்வா என்பதூஉம் பெற்றாம்

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், உருபுகள் பதத்தோடு புணரும் முறைமை மாட்டெறிந்து உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.:- **ஒற்றுயிர் முதலீற் றுருபுகள்** – மெய் முதலாயும் மெய் ஈறாயும் உயிர் முதலாயும் உயிர் ஈறாயும் மெய் முதலாயும் உயிர் ஈறாயும் உயிர் முதலாயும் மெய் ஈறாயும் வரும் உருபுகள்.

உ-ம்.:-

கண், அது, கடை, ஆல்.

**புணர்ச்சியின்** – நிலைமொழியாயும் வருமொழியாயும் பதத்தோடு புணருமிடத்து, **ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே** – முற் கூறிய அப்பெயர்ப் பதங்கள் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் தம்முடன் புணரும் புணர்ச்சி விதியோடு ஒக்கும் பெரும்பாலும், எ-று.

## விசாகப் பெருமாளையர்

இது, ஐம் முதலிய வாறுருபுகளும் நிலைமொழி வருமொழியோடு புணருமாறு உணர்த்துகின்றது.

**இ—ள்.: ஒற்றுயிர் முதலீற்று** — நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருகிற மெய்யுயிர்களை முதலு மீறுமாகவுடைய, **உருபுகள்** — ஐம் முதலிய வாறுருபுகளும் (இடைச்சொல்லாயினும்) **புணர்ச்சியின்**—இயல்பொடு விகாரத்தியையும் புணர்ச்சி வகையால், **மன்** — பெரும்பாலும், **ஒக்கும்** — ஒக்கும், **வேற்றுமைப்புணர்ப்பு** — போன விரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண், **அப்பெயர்** — இயல்பொடு விகாரத் தியைந்த மெய்யுயிர் முதலீற்றுப் பெயர்களை, **எ—று.** (மன்னென்றமையால் சிறுபான்மை ஒவ்வாவென்பதாம்.)

**உ—ம்.:** —

**நம்பிகண்வாழ்**—இங்கே, 'ஆவியரமுன் வன்மைமிகா' வென்றும், 'ணனவல்லினம் வரட்டறவும் பிறவரி னியலபுமாகும் வேற்றுமைக்' கென்றும், சொல்லியபடியே கண்ணுருபின் முதலுமீறும் இயல்பாயின. **உறிக்கட்டயிர்**—இங்கே, 'இயல்பினும் விதியினுநின்றவுயர்முன் கசதப மிகு'மென்றும், 'ணனவல்லினம் வரட்டறவு'மென்றும், சொல்லியபடியே கண்ணுருபின் முதலுமீறும் விகாரமாயின. **பழிக்கஞ்சி** — இங்கே, 'இயல்பினு விதியினுநின்ற வுயிர்முன் கசதபமிகு'மென்றும், 'முற்றுமற்றொரோவழி' யென்றும், சொல்லியபடியே குவ்வுருபின் முதலுமீறும் விகாரமாயின. **நம்பிக்குப் பிள்ளை** இங்கே, 'ஆவியரமுன் வன்மை மிகா'வென்ற விதி யொவ்வாமற் குவ்வுருபின்முதல் வல்லொற்று மிக்கது, மற்றவையு மிப்படியே வருதலை ஆராய்ந்தறிக.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

போன உயிரீற்றுப்புணர்ச்சி மெய்யீற்றுப்புணர்ச்சி யிரண்டினுங் கூறிய வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கு விதித்த முடிபுகள் உருபுபுணர்ச்சிக்கும் பெரும்பாலும் பொருந்துமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

(ஒற்று உயிர் முதல் ஈற்று உருபுகள் புணர்ச்சியின் ஒக்கும் மன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.)

**இ—ள்.:— ஒற்று உயிர் முதல் ஈற்று உருபுகள்** — நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் மெய்யுயிர்களை முதலும் ஈறுமாகவுடைய ஐமுதலிய ஆறுருபுகளும், **புணர்ச்சியின் மன்ஒக்கும்** — இடைச்சொல்லாயினும் இயல்பொடு விகாரத்தியையும் புணர்ச்சிவகையாற் பெரும்பாலும் ஒக்கும், **வேற்றுமைப்புணர்ப்பு** — போன விரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண்,

அப்பெயர் – இயல்பொடு விகாரத்தியைந்த மெய்யுயிர் முதலீற்றுப் பெயர்களை, எ–று.

உ–ம்.:–

நம்பிகண்வாழ்வு; இங்கே "பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய் வலிவரி னியல்பாம் "ஆவி யரமுன் வன்மை மிகா" என்றும், "ண ன வல்லினம் வரட்டறவும் பிறவரி னியல்புமாகும் வேற்றுமைக்கு" என்றுஞ் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலுமீறும் இயல்பாயின.

உறிக்கட்டயிர்; இங்கே "இயல்பினும் விதினினு என்ற வுயிர் முன் க ச த ப மிகும்" என்றும். "ண ன வல்லினம் வரட்டறவும்" என்றுஞ் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலுமீறும் விகாரமாயின.

பழிக்கஞ்சி; இங்கே "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும்" என்றும், "முற்றுமற் றொரோவழி" என்றுஞ் சொல்லியபடியே, குவ் வுருபின் முதலு மீறும் விகாரமாயின.

மன் என்றமையால், சிறுபான்மை ஒவ்வாவென்பதாம்.

நம்பிக்குப்பிள்ளை; இங்கே "பொதுப்பெய ருயர்திணைப் பெயர்களீற்றுமெய் வலிவரி னியல்பா மாவி ய ர முன் வன்மை மிகா" என்ற விதி யொவ்வாமற் குவ் வுருபின்முதல் வல்லொற்று மிக்கது. மற்றவையும் இப்படியே வருதலை ஆராய்ந்தறிக.

## முகவை இராமானுச கவிராயர்

இது, ஐ முதலாகிய ஆறு உருபும், நிலைமொழி வருமொழியோடு புணருஞ் செய்கை கூறுகின்றது,

**இ–ள்.: ஒற்றுயிர் முதலீற்றுருபுகள்** – (இடையிலே விரிந்து நின்று நிலைமொழி வருமொழியொடு புணரும்) ஒற்றையும் உயிரையும் முதலும் ஈறுமாகப் பெற்ற ஐ முதலிய ஆறு உருபுகளும், (இடைச் சொல்லாயினும்) **புணர்ச்சியினொக்கு மன்** – இயல்பொடு விகாரத்தியையும் புணர்ச்சி வகையினாலே பெரும்பாலு மொக்கும், **அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பு** –போன இரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பொடு விகாரத்து இயைந்த ஒற்றுயிர் முதலீற்றுப் பெயர்களை, எ–று,

'மன்', என்றதினாலே சிறுபான்மை ஒவ்வாது என்பது பெறப்பட்டது.

**உ–ம்.: –**

'நம்பிகண்வாழ்வு' என்றவிடத்து, 'ஆவியரமுன் வன்மைமிகா'வென்றும், 'ணனவல்லினம் வரட்டறவும் பிறவரி னியல்பு மாகும்' என்றுங் கூறியபடியே, கண் உருபின் முதலு மீறும் இயல்பாயின. உறிக்கட்டயிர் என்றவிடத்து 'இயல்பினும் விதியினு நின்றவுயிர் முன் கசதப மிகு'மென்றும் 'ணன வல்லினம் வரட்டறவு' மென்றுங் கூறியபடியே கண் உருபின் முதலு மீறும் விகாரமாயின. 'பழிக்கஞ்சி' என்றவிடத்து, 'இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன் கசதப மிகு' மென்றும், 'முற்றுமற்றொரோவழி'யென்றுங் கூறியபடியே, குவ்வுருபின் முதலு மீறும் விகாரமாயின. நம்பிக்குப்பிள்ளை யென்ற விடத்து, 'ஆவியரமுன் வன்மை மிகா'வென்ற விதி யொவ்வாது, குவ்வுருபின் முதல் வல்லொற்று மிக்கது. பிறவுமிப்படியே காண்க.

இந்த உருபு சாத்திக்கு, கிளிக்கு எனப் பொதுப்பெயர் அஃறினைப் பெயரிலு மிகுதலால், 'சிலவிகாரமா முயர்திணை'யென்ற விதியன் றென்க. 'ஒற்றுயிர் முதலீற் றுருபுக'ளென்றதினாலே 'நாற்பதாமுருபே' யெனத் தொகை கொடுத்துக் கூறியவற்றுள் எழுவாயும் விளியும் ஒழித்துத் தமக்கென முதலு மீறுமாக வுடைய ஐ முதலிய ஆறுருபிற்கும் இந்த விதி கூறினாரென்பதும், இந்த உருபுகளின் முதலீறுகட்கு மாட்டேற்றால் இவ் விதி கூறவே யுருபின் இருமருங்கும் புணரும் நிலைமொழி யீறும் வருமொழி முதலும் படுஞ்செய்கைகளுக்கு விதி போன இரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக் கென விதித்தவற்றுள் அடங்குமாதலின் அவையும் இந்த மாட்டேற்றால் அமைத்தில ரென்பதும் அப்படி யடங்குவதற்கு, 'மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ றாகுமுகர முன்ன ரியல்'பென்னுஞ் சூத்திரமே. சான்றென்பதும் (சான்று –சாட்சி), 'தான்றா நாமுதல் குறுகு'மென்னுந் தொடக்கத்து உருபொடு புணரும் நிலைமொழிகளின் விகாரங்கள் தொகைநிலையிலும் நாற்கணத்தின் முன்னும் வருதலின் அந்த விகாரம் எழுத்துப் புணர்ச்சியால் வந்தனவல்ல; வேற்றுமைப் பொருள் நோக்கத்தால் வந்தனவாதலால் இந்த இயலிலே கூறப்படு மென்பதும்,

'ஒக்குமன் னப்பெய' ரென்றமையால் வினையினிறுதி வேற்றுமைப் புணர்ச்சிக்கு வாராமையால் அதனை யொழித்துப் பெயரை யுவமித்தா ரென்பதும், 'வேற்றுமைப் புணர்ப்பே' யென்றதினாலே வேற்றுமை யுருபின் புணர்ச்சி

யாதலின் அதற்கு அல்வழிப் புணர்ச்சி யொவ்வா தென்பதும் பெறப்படும். உருபுகள் ஒக்கும் என முடிக்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :– ஒற்று உயிர் முதல் ஈறு** – மெய்யையும் உயிரையும் முதலுமிறுதியுமாகவுடைய, **உருபுகள்** – (ஐமுதலிய ஆறுவேற்றுமை) உருபுகள், (இடைச்சொல்லாயினும்), **புணர்ச்சியின்** – (நிலைமொழி வருமொழிகளோடு இயல்பாகவும் விகாரமாகவும்) புணரும் வகையால், **வேற்றுமை புணர்ப்பு அப்பெயர்** – (சென்ற இரண்டியல்களுள்ளும்) வேற்றுமைப்புணர்ச்சியில் இயல்பாகவும் விகாரமாகவும் புணர்கிற மெய்யுயிர் முதலீற்றுப்பெயர்களை, **மன் ஒக்கும்** – பெரும்பாலும் ஒத்து நடக்கும்.

குறிப்பு:–

பெரும்பாலும் ஒக்கும் என்றமையின், சிறுபான்மை ஒவ்வா வென்பதாயிற்று.

உ.ம்:–

நம்பி+கண்+வாழ்வு=நம்பிகண்வாழ்வு – இங்கு முறையே "ஆவியரமுன்வன்மைமிகா" எனவும், "ணனவல்லினம்வரட் டறவும்" எனவும் சொல்லியபடி கண்ணுருபின் முதலும் ஈறும் இயல்பாயின.

உறி+கண்+பால்=உறிக்கட்பால் – இங்கு முறையே "இயல்பினும் விதியினும்" எனவும், "ணனவல்லினம் வரட்டறவும்" எனவும் சொல்லியபடி கண்ணுருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

நம்பி+கு = நம்பிக்கு – இங்கு "ஆவியரமுன் வன்மை மிகா" என்ற விதி ஒவ்வாமல் குவ்வுருபின் முதல் வல்லொற்றுமிக்கது.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: ஒற்று உயிர் முதல் ஈற்று உருபுகள்** – நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் மெய்யுயிர்களை முதலும் ஈறுமாகவுடைய ஐம் முதலிய ஆறுருபுகளும், **புணர்ச்சியின் மன் ஒக்கும்**– இடைச் சொல்லாயினும் இயல்பொடு விகாரத்தியையும் புணர்ச்சி வகையாற் பெரும்பாலும் ஒக்கும், **வேற்றுமைப்புணர்ப்பு**–போன விரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண், **அப்பெயர்** – இயல்பொடு விகாரத்தியைந்த மெய்யுயுர் முதலீற்றுப் பெயர்களை, **எ–று.**

மன் என்றமையால், சிறுபான்மை ஒவ்வாவென்பதாம்.

உ—ம்:—

நம்பிகண்வாழ்வு; இங்கே "ஆவி யரமுன் வன்மை மிகா" என்றும், "ண ன வல்லினம் வரட்டறவும் பிறவரி னியல்புமாகும் வேற்றுமைக்கு" என்றுஞ் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலுமீறும் இயல்பாயின.

உறிக்கட்டயிர்; இங்கே "இயல்பினும் விதியினு நின்ற உயிர் முன் க ச த ப மிகும்" என்றும், "ண ன வல்லினம் வரட்டறவும்" என்றுஞ் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலுமீறும் விகாரமாயின.

பழிக்கஞ்சி; இங்கே "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும்" என்றும், "முற்றுமற் றொரோவழி" என்றுஞ் சொல்லியபடியே, குவ்வுருபின் முதலுமீறும் விகாரமாயின.

நம்பிக்குப்பிள்ளை; இங்கே "ஆவி யர முன் வன்மை மிகா" என்ற விதியொவ்வாமற் குவ்வுருபின் முதல் வல்லொற்று மிக்கது. மற்றவையும் இப்படியே வருதலை ஆராய்ந்தறிக.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள். ஒற்று உயிர் முதல் ஈற்று உருபுகள் – நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் மெய்புயிர்களை முதலும் ஈறுமாகவுடைய ஐம்முதலிய ஆறுருபுகளும், – புணர்ச்சியின் மன் ஒக்கும், – இடைச் சொல்லாயினும் இயல்பொடு விகாரத்தினையும் புணர்ச்சிவகைப்பாற் பெரும்பாலும் ஒக்கும், – வேற்றுமைப் புணர்ப்பு – போன விரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக் கண், – அப்பெயர் – இயல்பொடு விகாரத்தியைந்த மெய்யுயிர் முதலீற்றுப்பெயர்களை. எ—று.

மன் என்றமையால், சிறுபான்மை ஒவ்வாவென்பதாம்.

இந்தவுருபுகளின் முதலீறுகட்கு மாட்டேற்றால் இவ்விதி கூறவே உருபின் இருமருங்கும் புணரும் நிலைமொழியீறும் வருமொழி முதலும் படுஞ் செய்கைகளுக்கு விதிபோன இரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கென விதித்தவற்றுள் அடங்குமாதலின் அவையும் இந்தமாட்டேற்றால் அமைத்திலரென்பதும், அப்படி அடங்குதற்கு 'மூன்றாறுருபெண்வினைத் தொகைசுட்டீறாகுமுகர முன்னரியல்பே' என்னுஞ் சூத்திரமே சான்றென்பதும் பெறப்படும்.

உ–ம்.:–

நம்பிகண் வாழ்வு; இங்கே 'ஆவியரமுன்வன்மைமிகா' என்றும், 'ணனவல்லினம் வரட்டறவும் பிறவரி னியல்புமாகும் வேற்றுமைக்கு' என்றும் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலுமீறும் இயல்பாயின.

உறிக்கட்டயிர்; இங்கே 'இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும்' என்றும் 'ண ன வல்லினம் வரட்டறவும்' என்றுஞ் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலுமீறும் விகாரமாயின.

பழிக்கஞ்சி; இங்கே 'இயல்பினும் விதியினு நின்ற வுயிர் முன் க ச த ப மிகும்' என்றும் 'முற்றுமற் றொரோவழி' என்றுஞ் சொல்லியபடியே குவ்வுருபின் முதலுமீறும் விகாரமாயின.

நம்பிக்குப்பிள்ளை; இங்கே 'ஆவி யர முன் வன்மை மிகா' என்ற விதி யொவ்வாமற் குவ்வுருபின் முதல்வல்லொற்று மிக்கது. மற்றவையும் இப்படியே வருதலை ஆராய்ந்தறிக.

## வை. மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– **ஒற்று உயிர்முதல் ஈறு** – மெய்யையும் உயிரையும் முதலும் இறுதியுமாக வுடைய, **உருபுகள்** – (ஐ முதலிய ஆறு) வேற்றுமை யுருபுகள், (இடைச் சொல்லாயினும்), **புணர்ச்சியின்** – (நிலைமொழி வரு மொழிகளோடு புணருமிடத்து, **வேற்றுமை புணர்ப்பு அப்பெயர்** – (நடந்த இரண்டியல்களுள்ளும்) வேற்றுமைப் பொருட் புணர்ச்சியில் இயல்பாகவும் விகாரமாகவும் புணர்ந்த மெய்யுயிர் முதலீற்றுப் பெயர்களை. **மன் ஒக்கும்** – பெரும்பாலும் ஒத்து நடக்கும்; எ – று.

உ–ம்.:–

நம்பி+கண்+வாழ்வு = நம்பிகண்வாழ்வு–இங்கே முறையே **"ஆவி யரமுன் வன்மை மிகா"** என்றும், **"ணன வல்லினம் வரட் டறவும் பிறவரி னியல்பு மாகும் வேற்றுமைக்கு"** என்றும் சொல்லியபடியே கண்ணுருபின் முதலும் ஈறும் இயல்பாயின.

உறி+கண்+பால் = உறிக்கட்பால்–இங்கே முறையே **"இயல்பினும் விதியினும் நின்ற வுயிர் முன் கசதப மிகும்"** என்றும், **"ணனவல்லினம் வரட்டறவும்"** என்றும் சொல்லியபடியே கண்ணுருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

'பெரும்பாலும் ஒக்கும்' என்றமையால், சிறுபான்மை ஒவ்வா வென்பதாம்.

உ—ம்.:—

நம்பி+கு = நம்பிக்கு. இங்கே "ஆவியரமுன் வன்மை மிகா" என்ற விதி ஒவ்வாமல் குவ் வுருபின் முதல் வல்லொற்று மிக்கது.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள்.:— ஒற்று உயிர் முதல் ஈற்று உருபுகள்** — நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் மெய்ப்புயிர்களை முதலும் ஈறுமாகவுடைய ஐம் முதலிய ஆறுருபுகளும், **புணர்ச்சியின் மன் ஒக்கும்** — இடைச்சொல்லாயினும் இயல்பொடு விகாரத்தியையும் புணர்ச்சி வகையாற் பெரும்பாலும் ஒக்கும், **வேற்றுமைப் புணர்ப்பு** — போனவிரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண், **அப்பெயர்** — இயல்பொடு விகாரத்தியைந்த மெய்யுயிர் முதலீற்றுப் பெயர்களை. எ—று.

'மன்' என்றமையால், சிறுபான்மை ஒவ்வாவென்பதாம்.

உ—ம்.:—

நம்பிகண்வாழ்வு; இங்கே "ஆவி யரமுன் வன்மை மிகா" (சூ–159) என்றும், "ண ன வல் லினம்வரட் டறவும் பிறவரி – னியல்பு மாகும் வேற்றுமைக்கு" (சூ–209) என்றுஞ் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலுமீறும் இயல்பாயின.

உறிக்கண் + தயிர் = உறிக்கட்டயிர்; இங்கே "இயல்பினும் விதியினு நின்றவுயிர் முன் க ச த ப மிகும்" (சூ – 209) என்றுஞ் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலு மீறும் விகாரமாயின.

பழிக்கு + அஞ்சி = பழிக்கஞ்சி; இங்கே "இயல்பினு விதியினு நின்ற வுயிர் முன் க ச த ப மிகும்" (சூ–165) என்றும், "முற்றுமற் றொரோவழி" (சூ–164) என்றுஞ் சொல்லியபடியே, குவ்வுருபின் முதலுமீரும் விகாரமாயின.

நம்பிக்குப்பிள்ளை; இங்கே "ஆவியரமுன் வன்மை மிகா" (சூ–159) என்ற விதியொவ்வாமற் குவ்வுருபின் முதல் வல்லொற்று மிக்கது. மற்றவையும் இப்படியே வருதலை ஆராய்ந்தறிக.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள்.:— ஒற்று உயிர் முதல் ஈறு** — (நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருகிற) மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாகவுடைய, **உருபுகள்** — (ஐ முதலிய ஆறு) உருபுகளும் (இடைச் சொல்லாயினும்),

புணர்ச்சியின் – (இயல்பொடு விகாரத்து இயையும்) புணர்ச்சி வகையால், மன் ஒக்கும் – பெரும்பாலும் ஒக்கும், வேற்றுமைப் புணர்ப்பு – (போன இரண்டியலுள்ளும்) வேற்றுமைப் புணர்ச்சிக்கண், அப்பெயர் – (இயல்பொடு விகாரத்தியைந்த) மெய்யுயிர் முதலீற்றுப் பெயர்களை. எ–று

பொ–ரை.:–

முதலிலும் ஈற்றிலும் மெய்யையும் உயிரையும் உடைய வேற்றுமை உருபுகள் ஆறும், நிலை மொழியோடும் வரு மொழியோடும் புணரும் பொழுது, வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்போடு விகாரமாய்ப் புணர்ந்த ஒற்றுயிர் முதலீற்றுப் பெயர்களைப் பெரும்பாலும் ஒத்துவரும்.

மன் என்றமையால் சிறுபான்மை ஒவ்வா வென்பதாம்.

நம்பி+கண்+வாழ்வு=நம்பிகண்வாழ்வு–இங்கே "ஆவியரமுன் வன்மைமிகா" என்றும், "ண ன வல்லினம் வரட்டறவும் பிறவரி னியல்புமாகும் வேற்றுமைக்கு" என்றும் சொல்லியபடியே கண்ணுருபின் முதலும் ஈறும் இயல்பாயின.

உறி+கண்+தயிர்=உறிக்கட்டயிர்–இங்கே "இயல்பினும் விதியினும் நின்றவுயிர்முன் கசதபமிகும்" என்றும். "ணன வல்லினம் வரட்டறவும்" என்றும் சொல்லியபடியே கண்ணுருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

பழி+கு+அஞ்சி=பழிக்கஞ்சி–இங்கே "இயல்பினும் விதியினும் நின்றவுயிர்முன் கசதபமிகம்" என்றும், "முற்று மற்றொரோவழி" என்றும் சொல்லியபடியே குவ்வுருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

நம்பி+கு+பிள்ளை=நம்பிக்குப்பிள்ளை– இங்கே "ஆவியரமுன் வன்மை மிகா" என்ற விதி ஒவ்வாமற் குவ்வுருபின் முதல் வல்லொற்று மிக்கது. மற்றவையு மிப்படியே வருதலை ஆராய்ந்தறிக,

## கா.நமச்சிவாய முதலியார்

ஒற்றுயிர் முதல் ஈறு – (நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருகின்ற) மெய் உயிர்களை முதலும் ஈறுமாக வுடைய, உருபுகள்–ஐ முதலிய ஆறு உருபுகளும் (இடைச் சொல்லாயினும்), புணர்ச்சியின் – (இயல்பாகவும் விகாரமாகவும் புணரும்) புணர்ச்சிவகையால், வேற்றுமைப் புணர்ப்பு– (மேல் இரண்டியலுள்ளும்) வேற்றுமைப் புணர்ச்சிக்கண், அப்பெயர் – இயல்பொடு விகாரத்தியைந்த மெய் உயிர் முதலீற்றுப் பெயர்களை, மன் ஒக்கும்–பெரும்பாலும் ஒக்கும்.

'மன்' என்றமைபால், சிறுபான்மை ஒவ்வா என்பதாம்.

நம்பி + கண் + வாழ்வு = நம்பிகண்வாழ்வு

இங்கே, 'ஆவியரமுன் வன்மை மிகா' (சூ–159) என்றதனால், கண் உருபின் முதலில் மிகாது இயல்பாயிற்று.

'ண ன வல்லினம் வரட் டறவும் பிறவரின் இயல்புமாகும் வேற்றுமைக்கு'

(சூ–209)

என்றதனால், கண்ணுருபின் ஈறு இயல்பாயிற்று.

உறி + கண் + தயிர் = உறிக்கட்டயிர்

இங்கே,

'இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன் கசதப மிகும்' (சூ–165)

என்றதனால், கண உருபின் முதலில் மிகுந்தது

'ண ன வல்லினம் வரட் டறவும்' (சூ–209) என்று சொல்லியபடி, கண்ணுருபின் ஈறு டகரமாகத் திரிந்தது.

பழி + கு + அஞ்சி = பழிக்கஞ்சி

இங்கே,

'இயல்பினும் விதியினு நின்ற உயிர்முன் கசதப மிகும்' (சூ. 165)

என்றதனால், குவ்வுருபின் முதலில் மிகுந்தது.

"முற்றுமற் றொரோவழி" (சூ164) என்றதனால், குவ்வுருபின் உகரம் கெட்டது. பழிக்கு என்பதனை ஒரு மொழியாகக் கொண்டு 'உயிர்வரின்' உக்குறள் மெய்விட்டோடும்' (சூ–164) என்னும் விதியினால் புணர்ந்தது எனினும் பொருந்தும்.

நம்பி + கு + பிள்ளை = நம்பிக்குப்பிள்ளை

இங்கே, 'ஆவி யரமுன் வன்மை மிகா'(சூ–159) என்ற விதி ஒவ்வாமற் குவ்வுருபின் முதலில் வல்லொற்று மிக்கது.

மற்றவையும் இப்படியே வருதலை ஆராய்தறிக.

## மோசசு பொன்னையா

ஒற்றையும் உயிரையும் முதலும் ஈறுமாகக் கொண்ட ஐ முதல் கண் ஈறாக உள்ள வேற்றுமை உருபுகள் இடைச் சொற்களேயாயினும், நிலைவருமொழிகளோடே புணருங்கால், வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாகவும் விகாரமாகவும் நிலைவருமொழிகளோடு புணரும் ஒற்றையும்

உயிரையும் முதலும் இறுதியுமாகக் கொண்ட பெயர்களைப் பெரும்பாலும் ஒத்து இயலும், எ–று.

எ–டு.:–

1. நம்பிகண் வாழ்வு

'ஆவியரமுன் வன்மை மிகா';

'ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்

இயல்பு மாகும் வேற்றுமைக்கு'

என்ற விதிகளின்படி, கண்ணுருபின் முதலும் ஈறும் இயல்பாயின.

2. உறிக்கட்டயிர்

'இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்

கசதப மிகும்'

'ணனவல் லினம்வரட் டறவும்'

என்ற விதிகளின்படி, கண்ணுருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

3. பழிக்கஞ்சி

'இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்

கசதப மிகும்'

'முற்றுமற் றொரோ வழி'

என்ற விதிகளின்படி, குவ்வுருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

பெரும்பாலும் ஒத்து இயலும் என்றமையால், 'நம்பிக்குப் பிள்ளை' என்றவிடத்து, 'ஆவி யரமுன் வன்மை மிகா என்ற விதிக்கு முரணாகக் குவ்வுருபின் வழி வல்லொற்றுமிக்கு முடிந்தது போல்வனவும் உண்டு எனக் கொள்க.

(3)

**242. பதமுன் விகுதியும் பதமு முருபும்**
**புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை**
**வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்.**

பதம் முன் விகுதியும் பதமும் உருபும்

புணர் வழி ஒன்றும் பலவும் சாரியை

வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்.

paṭam muṉ vikuṭiyum paṭamum urupum
puṇar vaḷi oṉṟum palavum sāriyai
varuṭalum ṭavirṭalum vikaṟpamum ākum.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

## EUPHONIC INCREMENTS

### The use of Euphonic Increments

When words combine with Terminations, or with other words or Case-endings—(in some combinations) one or more (Euphonic) increments may be inserted; in others, none; while in other again, both (insertion and non-insertion) are admissible.

## ஒப்புமைப் பகுதி

பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப
வேற்றுமை யுருபு நிலைபெறு வழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்
ஒட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது
இடைநின் றியலுஞ் சாரியை இயற்கை
உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்

(தொல். எழு.: 133)

உருபினும் பொருண்முடி பொக்குமன் பயின்றே

(இ.வி.: 148)

அவைதாம்
சாரியைச் சொற்களைச் சார்ந்துநின் றியலும்

(மு.வீ.: 173)

சாரியை என்பசார் பதம் எழுத்து எனப்
பதத்தொடு விகுதியும் பதமும் உருபும்
புணர்புளி இடையில் புணர்வன...

(தொ.வி.: 52 : 1–3)

## மயிலைநாதர்

எ–ன், சாரியை வருமிடமும் வருமியல்பும் உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: [1]நிலைப்பதத்தின் முன்னர் விகுதியும் பதமும் உருபும் வந்து தொடருமிடத்து அவ் விரண்டிற்கும் இடையே ஒன்றும் இரண்டும் சாரியை [2]வந்து நிற்றலும் வாராதொழிதலும் ஒன்றற்கே ஓரிடத்து வந்து ஓரிடத்து வாராது வழங்குதலுமாம், எ–று.

எனவே [3]சாரியை எல்லாவற்றிற்கும் ஒருதலை யன்றி ஒன்றற்கே வரவேண்டியும் வரவேண்டாதும் ஒன்றற்கே ஓரிடத்து வேண்டியும் ஓரிடத்து வேண்டாதும் வரப்பெறும்; அவ் விடங்களறிந்து வருவித்துப் புணர்க்க வேண்டு மென்றவாறு.

வ–று.:

விகுதிப் புணர்ச்சிக்கண் [4]ஊரது, உண்டது என்றற் றொடக்கத்தன சாரியை வேண்டியே நின்றன. வெற்பன், பொருப்பன், ஊரன், வீரன் என்றற் றொடக்கத்தன சாரியை வேண்டாவாயின. உண்டனன், உண்டான், உண்டனள் – உண்டாள், உண்டனர் – உண்டார் எனவும், மொழிகுவன்– மொழிவன், மொழிகுவள் – மொழிவள், மொழிகுவர் – மொழிவர் எனவும் [5]ஒன்றற்கே ஓரிடத்து வேண்டியும் ஓரிடத்து வேண்டாதும் வந்தன.

இனிப் பதப் புணர்ச்சிக்கண் அரையே முந்திரிகை, கலனே யிருநாழி என இவை தம்மிற் கீழான எண் அளவுகளில் வரவேண்டியே நின்றன. உருபுப்பொருட் புணர்ச்சிக்கண், அத்திக்காய்; ஞாற்சி, விறகு,[6]அடி எனவும், அல்வழிக்கண், அத்திகடிது; ஞான்றது, வலிந்தது, அசைந்தது எனவும் நாற்கணத்தோடும் சாரியை வேண்டாது வந்தன. புளியங்காய்: ஞாற்சி, விறகு அடி; எனவும், புளிகுறிது; ஞான்றது, வீழ்ந்தது, அழகிது, எனவும் , நாற்கணத்தோடும் வேற்றுமையில்

---

பாட வேறுபாடு.:– 1.நிலைமொழிப்பதத்தின்

2. (1) வருதலும் வராததும், (2) வந்து நிற்றலும் நில்லாவாதலும் வந்தும் வாராது நிற்றலுமாம், எ–று.

3.சாரியை யேற்றல்

4. உள்ளது உண்டது

5. ஒன்றற்கு வேண்டியும் வேண்டாதும்

6. அடவி

வேண்டியும் அல்வழியில் வேண்டாதும் வந்தன[1].

[2]இனி உருபு புணர்ச்சிக்கண் [3]அவற்றை. அவற்றால், அவற்றுக்கண், அவையிற்றை, அவை யிற்றால், அவையிற்றுக்கண் எனவும், மரத்தை, மரத்தால், மரத்துக்கண் எனவும் இவை வேண்டியே நின்றன; மரக்கு, மரக்கண் என வேண்டாது வரவும் பெறும். வேயை, வேயால், வேய்க்கு, வேய்க்கண் என இவை வேண்டாது வந்தன. செருவை செருவிற்கு, விளவை விளவிற்கு என இவை ஒன்றற்கே ஓரிடத்து வேண்டியும் ஓரிடத்து வேண்டாதும் வந்தன. மரத்தினை, மரத்தினால், மரத்திற்கு, மரத்தின்கண், அவற்றினை, அவற்றினால், அவற்றிற்கு, அவற்றின்கண் எனப் பலவும் வந்தன. உருபு புணர்ச்சி யல்லாத விடத்து ஒருதலையாக வேண்டியே [4]நிற்பனவல்ல சாரியையெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** உருபு புணர்ச்சிக்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியாகச் சாரியை மேல் விதிப்பான் தொடங்கி, அவை வருமாறு இவ்வாறு என உணர்த்தும் வழி, ஒப்பின் முடித்தலான் விகுதிப் புணர்ச்சிக்கும் பதப் புணர்ச்சிக்கும் **உடனுணர்—ற்று.**

**இ—ள்.:—** பதத்தின் முன் விகுதியேனும் பதமேனும் உருபேனும் புணருமிடத்துச் சாரியை யொன்றேனும் பலவேனும் வருதலும், வாராதொழிதலும், இவ் விரண்டுமாகிய விகற்பமுமாம், **எ—று.**

புணர்ந்தவழி புணரும்வழி என்னாது புணர்வழி எனப் பொதுமையிற் கூறவே, இம் மூவகைப் புணர்ச்சியுள் சாரியை விதித்தனவற்றுள்ளும் விதிப்பனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள் ளும் அவை வருமாறு இவ்வாறென உய்த்துணர்க என்றாராயிற்று.

---

**பாட வேறுபாடு.:—**

**1. 'நினைகுமி னீவிரெல்லாம்'' (நினையுமின்), ''நினைமினீர் நீணில வேந்தீர்'' என ஒன்றற்கேஓரிடத்து வேண்டியும் வேண்டாதும் வந்தது**

**2. இன்னும்**

**3. அரணினை அவற்றை**

**4. நிற்பனவுரியவல்ல.**

வ–று.:–

நடந்தனன் எனவும், நடந்தான் எனவும், நடந்தன, நடந்த எனவும் விகுதிப் புணர்ச்சியுள் சாரியை வேண்டியும் வேண்டாதும் விகற்பித்தும் வந்தன. புளியமரம், புளியங்காய், உரினுக்கடிது, உரினுக் கடுமை எனவும்; புளிக்கறி, புளிங்கறி எனவும்; நெல்லின்குப்பை, நெற்குப்பை எனவும் பதப்புணர்ச்சியுள் சாரியை அவ்வாறாயின. அவற்றை, அவற்றினை; மரத்தை, மரத்தினை எனவும்; தன்னை, என்னை எனவும்; ஆனை, ஆவை எனவும் உருபு புணர்ச்சியுள் சாரியை அவ்வாறாயின. பிறவும் அன்ன. மாடத்துக்கு, மாடக்கு என்றற் றொடக்கத்தன வேண்டியவழி இன்மையின் செய்யுள் விகாரமாம் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம்,

**இ–ள்.: பதமுன் விகுதியும்** – பதத்தின் முன் விகுதி வந்து தொடருமிடத்தும், **பதமும்** – பதத்தின் முன்னே பதம் வந்து தொடருமிடத்தும், **உருபும் புணர்வழி** – பதத்தின் முன்னே உருபு வந்து தொடருமிடத்தும், **ஒன்றும் பலவும் சாரியை வருதலும்** – அவ்விரண்டிற்கும் இடையே ஒரு சாரியை இரண்டு சாரியை வருதலும், **தவிர்தலும்** – இடையே சாரியை வராமல் இயல்பாய் முடிதலும், **விகற்பமும் ஆகும்** – ஒரு புணர்ச்சிக்கே ஓரிடத்து வந்தும் ஓரிடத்து வராமலும் வழங்குவனவாம், எ–று.

உ–ம்.:–

ஊரது, உண்டது என அகரச் சாரியை விகுதிப் புணர்ச்சிக்கண் வந்தது, வெற்பன், பொருப்பன், வீரன், ஊரன் எனச் சாரியை வேண்டாவாயின. உண்டனன், உண்டான், மொழிகுவன், மொழிவன் என ஒன்றற்கே ஓரிடத்து வேண்டியும் ஓரிடத்து வேண்டாமலும் வந்தன.

பதப்புணர்ச்சிக்கண் புளியங்காய் எனச் சாரியை வேண்டி வந்தது; அத்திக்காய் என வேண்டாது வந்தது. உருபு புணர்ச்சிக்கண் மலையுச்சி, மலையினுச்சி என வேண்டியும் வேண்டாமலும் வந்தது. மரத்தை மரத்தால் என வேண்டியும் வந்தன. மரக்கு, மரக்கரை என வேண்டாமலும் வரும். வேயை, வேயால் என வேண்டாது வந்தன. விளவை, விளவினை, குழியை, குழியினை என ஒன்றற்கே வேண்டியும் வேண்டாமலும் வந்தன.

## விசாகப் பெருமாளையர்

இது, உருபு புணர்ச்சிக்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியாகச் சாரியை மேல் விதிக்கும்படியாகத் தொடங்கி அவை வருமாறு இவ்வாறென அறிவிக்குமிடத்து ஒப்பின் முடித்தலால் விகுதிப் புணர்ச்சிக்கும் பதப் புணர்ச்சிக்கும் உடனுணர்த்துகின்றது.

**இ—ள்:.— பத முன்**—பதத்தின் முன், **விகுதியும்** — இறுதி நிலையாவது, **பதமும்** —பதமாவது, **உருபும்**—உருபாவது, **புணர்வழி** —புணருமிடத்து, **சாரியை யொன்றும்** — ஒரு சாரியை யாயினும் (சாரியை), **பலவும்** — பல சாரியை யாயினும், **வருதலும்** —வருதலும், **தவிர்தலும்** — வராதொழிதலும், **விகற்பமும்** — இவ் விரண்டுமாகிய விகற்பமும், **ஆகும்**—ஆகும், **எ—று.**

**உ—ம்:—**

நடந்தனன் எனவும், நடந்தான் எனவும், நடந்தன, நடந்த எனவும், விகுதிப் புணர்ச்சியுட் சாரியை வேண்டியும் வேண்டாமலும் விகற்பித்தும் வந்தன, புளியங்காய் எனவும், புளிக்கறி எனவும், நெல்லின் குப்பை, நெற்குப்பை எனவும், பதப்புணர்ச்சியுட் சாரியை அவ்வாறாயின. அவற்றை எனவும், தன்னை எனவும், ஆனை, ஆவை எனவும், உருபு புணர்ச்சியுட் சாரியை அவ்வாறாயின. ஆவினுக்கு, மரத்தினுக்கு இவைகளிலே சாரியை பல வந்தன.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

சாரியை வருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

பதமுன் விகுதியும் பதமு முருபும்
புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை
வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்.

(பதமுன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்.)

**இ—ள்.: பதமுன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி** — பதத்தின் முன் விகுதியாவது பதமாவது உருபாவது புணருமிடத்து, **சாரியை ஒன்றும் பலவும்** — ஒரு சாரியையாயினும் பல சாரியையாயினும், **வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்** — வருதலும் வராதொழிதலும் இவ்விரண்டுமாகிய விகற்பமும் ஆகும். **எ—று.**

உ–ம்.:–

(1) நடந்தனன் எனவும், நடந்தான் எனவும், நடந்தன, நடந்த எனவும், விகுதிப்புணர்ச்சியுட் சாரியைவேண்டியும் வேண்டாதும் விகற்பித்தும் வந்தன.

(2) புளியங்காய் எனவும், புளிக்கறி எனவும், நெல்லின்குப்பை, நெற்குப்பை எனவும், பதப்புணர்ச்சியுட் சாரியை அவ்வாறாயின.

(3) அவற்றை எனவும். தன்னை எனவும், ஆனை, ஆவை. எனவும் உருபுபுணர்ச்சியுட் சாரியை அவ்வாறாயின.

(4) ஆவினுக்கு, மரத்தினுக்கு இவைகளிலே சாரியை பலவந்தன.

பதமுன் பதமுமெனக் கூறாது பதமுன் விகுதியுமென விகுதியை முதலெடுத்துக் கூறிய தென்ன?

பதப்புணர்ச்சி உருபுபுணர்ச்சி இரண்டுங் கூறி விகுதிப் புணர்ச்சிக்கு விதிகூறாமையின் அதுவும் பதப்புணர்க்சிக்குக் கூறிய விதியே பெறுமென்பது காட்டுதற்கென்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, உருபுப் புணர்ச்சிக்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியாகச் சாரியைகளை இனி விதிக்கத் தொடங்கி, அவை வருகிற விதமிப்படி யென்று சொல்லுமிடத்தில் **ஒப்பின்முடித்த லென்னும் உத்தியால்** விகுதிப் புணர்ச்சிக்கும் பதப்புணர்ச்சிக்கும் அதனோடு கூட்டிச் சொல்லுதலை யுணர்த்துகின்றது.

**இ–ள்.:– பதமுன் விகுதியும் பதமு முருபும் புணர்வுழி** – பதத்தின் முன் விகுதி யாயினும் பதமாயினும் உருபாயினும் புணருமிடத்து, **ஒன்றும் பலவுஞ் சாரியை** – ஒரு சாரியை யாயினும் பல சாரியை யாயினும், **வருதலுந் தவிர்தலும் விகற்பமுமாகும்** – வேண்டியே வருதலும் வேண்டா 'து' ஒழிதலும் இவ் விரண்டுமாகிய விகற்பமுமாம், **எ–று.**

வ–று.:–

நடந்தனன் – இதில் அன் சாரியை வேண்டியே நின்றது; நடந்தான்–சாரியை வேண்டாது நின்றது. நடந்தன, நடந்த– வேண்டியும் வேண்டாதும் நின்றது இவை விகுதிப்புணர்ச்சி. புளியமரம்–எனவும், புளிக்கறி–எனவும், நெல்லின் குப்பை– நெற்குப்பை, எனவும், பதப் புணர்ச்சிக்கும் அவற்றை, மரத்தை எனவும்; தன்னை–என்னை–எனவும், ஆனை, ஆவை

எனவும், உருபுப் புணர்ச்சிக்கும் முறையே சாரியை யவ்வாறாதல் காண்க. முகத்தினான்–குளத்தங்கரை–அவற்றினை–அவற்றினுக்கு–மரத்தினுக்கு–என்றாற் போல்வனவற்றில்–முறையே–அத்து இன், அத்து ஆம், அற்று இன், அற்று இன் உ, அத்து இன் உ, எனப் பல சாரியை வருதல் காண்க. பிறவுமன்ன. நிலக்கு, மாடக்கு என்றாற் போல்வன. நிலத்துக்கு மாடத்துக்கு எனச் சாரியை வேண்டிய வழி இல்லாததினாலே செய்புள் விகாரமா மென்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :-**

**பதன்முன்** – பதத்தின்முன், **விகுதியும்** – விகுதியாவது, **பதமும்** – பதமாவது, **உருபும்** – உருபாவது, **புணர்வழி** – புணருமிடத்து, **சாரியை ஒன்றும் பலவும்** – ஒருசாரியையாயினும் பலசாரியையாயினும், **வருதலும்** – வேண்டிவருதலும், **தவிர்தலும்** – வேண்டாமல் ஒழிதலும், **விகற்பமும்** – (ஒன்றுக்கேவருதலுந் தவிர்தலுமாகிய) உறழ்ச்சியும், **ஆகும்**

**உ–ம்:–**

| விகுதிப்புணர்ச்சி | பதப்புணர்ச்சி | உருபு புணர்ச்சி | | |
|---|---|---|---|---|
| நடந்தனன் | புளியங்காய் | அவற்றை | – | வருதல் |
| நடந்தான் | புளிக்கறி | தன்னை | – | தவிர்தல் |
| நடந்தன | நெல்லின்குப்பை | ஆனை | | |
| நடந்த | நெற்குப்பை | ஆவை | – | விகற்பம் |

ஆவினுக்கு, மரத்தினுக்கு – சாரியைகள் பலவந்தன.

**குறிப்பு:–**

மாடத்துக்கு – மாடக்கு, நிலத்துக்கு – நிலக்கு என்றாற் போல்வன சாரியை வேண்டுமிடத்து இல்லாமையால் செய்யுள் விகாரமெனவறிக.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: பதமுன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி** – பதத்தின் முன் இறுதிநிலையாவது பதமாவது உருபாவது புணருமிடத்து, **சாரியை ஒன்றும் (சாரியை) பலவும்** – ஒருசாரியை யாயினும் பலசாரியை யாயினும், **வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்** – வருதலும் வராதொழிதலும் இவ்விரண்டுமாகிய விகற்பமும் ஆகும், எ – று.

உ–ம்.:–

(1) நடந்தனன் எனவும் நடந்தான் எனவும் நடந்தன, நடந்த எனவும், விகுதிப் புணர்ச்சியுட் சாரியை வேண்டியும், வேண்டாதும், விகற்பித்தும் வந்தன.

(2) புளியங்காய் எனவும் புளிக்கறி எனவும் நெல்லின்குப்பை, நெற்குப்பை எனவும் பதப்புணர்ச்சியுட் சாரியை அவ்வாறாயின.

(3) அவற்றை, எனவும். தன்னை. எனவும். ஆனை. ஆவை. எனவும். உருபுபுணர்ச்சியுட் சாரியை அவ்வாறாயின.

(4) ஆவினுக்கு, மரத்தினுக்கு இவைகளிலே சாரியை பல வந்தன.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். பதமுன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி – பதத்தின் முன் இறுதிநிலையாவது பதமாவது உருபாவது புணருமிடத்து, – சாரியை ஒன்றும் (சாரியை) பலவும் – ஒரு சாரியையாயினும் பல சாரியையாயினும் – வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும் – வருதலும் வராதொழிதலும் இவ்விரண்டுமாகிய விகற்பமும் ஆகும். எ–று.

உ–ம்.:–

(1) நடந்தனன், நடவாநின்றனன், படித்தனன், படியாநின்றனன் என்பன விகுதிப் புணர்ச்சியில் சாரியை பெற்றே நின்றன. இவைகளில் சாரியை அன்.

(2) நடந்தான், நடவா நின்றான், படித்தான், படியா நின்றான் என்பன விகுதிப் புணர்ச்சியில் சாரியைபெறாமலே நின்றன.

(3) நடந்தன, நடந்த; ஓடா நின்றன, ஓடாநின்ற என்பன விகுதிப் புணர்ச்சியில் சாரியை விகற்பித்து (=பெற்றும் பெறாதும்) வந்தன.

புளியங்காய், ஆலம்பழம், வேப்பம்பலகை எனப் பதப்புணர்ச்சியில் சாரியை பெற்றே வந்தன.

புளிக்கறி, தினைச்சோறு, நீர்க்குடம் என்பன பதப்புணர்ச்சியிற் சாரியை பெறாதே வந்தன.

நெல்லின் குப்பை, நெற்குப்பை; மண்ணாங்கட்டி, மண்கட்டி, என்பன பதப்புணர்ச்சியிற் சாரியை விகற்பித்து (பெற்றும் பெறாதும்) வந்தன.

அவற்றை, மரத்தை, பழத்தை என்பன உருபுபுணர்ச்சியுட் சாரியை பெற்றே வந்தன.

தன்னை, சருக்கரையை என்பன உருபு புணர்ச்சியுட் சாரியைபெறாதே வந்தன.

ஆனை, ஆவை; கோனை, கோவை; நந்தமை, நம்மை

என்பன உருபு புணர்ச்சியுட் சாரியை விகற்பித்து (பெற்றும் பெறாதும்) வந்தன.

ஆவினுக்கு, மரத்தினுக்கு, என்றனக்கு என்பன சாரியை பல பெற்று வந்தன.

## வை. மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: பதம் முன்** – பதத்தின் முன், **விகுதியும்** – விகுதியாவது, **பதமும்** – பதமாவது, **உருபும்** – உருபாவது, **புணர் வழி** –புணருமிடத்து, (அவற்றிற்கு இடையே), **சாரியை ஒன்றும் பலவும்** – ஒரு சாரியை யாயினும் பல சாரியைகளாயினும்;– (1) வருதலும் –, (2) **தவிர்த்தலும்**–வராதிருத்தலும் (3) **விகற்பமும்** (ஒன்றுக்கே வருதலும் தவிர்தலுமாகிய) உறழ்ச்சியும், **ஆகும்** –; எ–று.

உ–ம்.:–

| விகுதிப்புணர்ச்சி | பதப்புணர்ச்சி | உருபுபுணர்ச்சி |
|---|---|---|
| (1) நடந்தனன் | புளியங்காய் | அவற்றை–வருதல். |
| (2) நடந்தான் | புளிக்கறி தன்னை–தவிர்தல். | |
| (3) நடந்த<br>நடந்த | நெல்லின் குப்பை<br>நெற்குப்பை | ஆனை– விகற்பம்<br>ஆவை – விகற்பம் |

ஆவினுக்கு, மரத்தினுக்கு–சாரியைகள் பல வந்தன.மாடத்துக்கு – மாடக்கு, நிலத்துக்கு – நிலக்கு முதலியன – சாரியை வேண்டுமிடத்து இல்லாமையால், தொகுத்தலென்னுஞ் செய்யுள் விகாரமாம்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:–பதமுன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி** – பதத்தின் முன் இறுதிநிலையாவது பதமாவது உருபாவது புணருமிடத்து, **சாரியை ஒன்றும்** (சாரியை) **பலவும்** – ஒரு சாரியையாயினும் பல சாரியையாயினும், **வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்** – வருதலும் வராதொழிதலும் இவ்விரண்டுமாகிய விகற்பமும் ஆகும். எ–று.

விகுதிப்புணர்ச்சி பதப்புணர்ச்சி உருபுபணர்ச்சி

நடந்தனன் – புளிங்காய் – அவற்றை (சாரியைவந்தன)
நடந்தான் – புளிக்கறி – தன்னை (சாரியை தவிர்ந்தனஇ
நடந்தன, நடந்த – நெல்லின்குப்பை – ஆனை ஆவை (விகற்பம்)

ஆவினுக்கு, மரத்தினுக்கு – இவைகளிலே சாரியை பல வந்தன.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:–பதம் முன்–பதத்தின் முன், **விகுதியும் பதமும் உருபும் புணர்வழி** – விகுதியாவது பதமாவது உருபாவது புணருமிடத்து (அவற்றிற்கிடையே), **சாரியை ஒன்றும் பலவும்** – ஒரு சாரியையாயினும் பல சாரியையாயினும், **வருதலும் தவிர்தலும்** – வருதலும் வாராதொழிதலும், **விகற்பமும்** – (வருதலும் தவிர்தலுமாகிய இரண்டு) விகற்பமும், **ஆகும்**–ஆகும். எ–று

பொ–ரை.:–

பதத்தின்பின் விகுதியாவது பதமாவது உருபாவது புணரும்போது (அவற்றிற்கிடையே), சாரியை ஒன்றாயினும் பலவாயினும் வருதலும், வாராமையும், இவ்விரண்டும் ஆகிய விகற்பமும் ஆகும். (விகற்பம் – உறழ்ச்சி.)

**விகுதிப்புணர்ச்சி**

நடந்தனன் – அன் எனச் சாரியை வேண்டியே வந்தது.

நடந்தான் – சாரியை வேண்டாமல் வந்தது.

நடந்தன – அன் எனச் சாரியை வேண்டியும்,

நடந்த –அ எனச் சாரியை வேண்டாமலும் விகற்பித்து வந்தன.

**பதப் புணர்ச்சி.**

புளியங்காய்–புளி+அம்+காய் என அம் சாரியைபெற்று வந்தது.

புளிக்கறி–புளி+கறி எனச் சாரியை பெறாமல் வந்தது.

நெல்லின்குப்பை–நெல்+இன்+குப்பை என இன் சாரியை பெற்றும்,

நெற்குப்பை – நெல் +குப்பை எனச் சாரியை பெறாமலும் விகற்பித்து வந்தன.

**உருபு புணர்ச்சி.**

அவற்றை–அவ்+அற்று+ஐ என அற்றுச் சாரியை பெற்று வந்தது.

தன்னை–தன்+ஐ எனச் சாரியை பெறாமல் வந்தது.

ஆனை – ஆ+ன்+ஐ என ன் சாரியை பெற்றும்,

ஆவை–ஆ+ஐ எனச் சாரியை பெறாமலும் விகற்பித்து வந்தன.

ஆவினுக்கு – ஆ+இன்+உ+கு எனச் சாரியைகள் பல வந்தன.

மற்றவைகளும் இப்படியே வருதல் காண்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**பதமுன்** – பதத்தின் முன், **விகுதியும்** – விகுதியாவது, **பதமும்** – பதமாவது, **உருபும்** – உருபாவது, **புணர்வழி** – புணருமிடத்து, **சாரியை ஒன்றும்** – ஒரு சாரியையாயினும், (சாரியை) பலவும் – பலசாரியை யாயினும், **(1) வருதலும்** – வருதலும், **(2) தவிர்தலும்** – வாரா தொழிதலும், **(3) விகற்பமும் ஆகும்** – இவ்விரண்டுமாகிய விகற்பமும் ஆகும்.

**உதாரணம்:–**

**(1) விகுதிப் புணர்ச்சி**

(1) நடந்தனன்– நட + த் + த் + அன் + அன்
என அன் சாரியை பெற்று வந்தது.

(2) நடந்தான்– நட + த் + த் + ஆன்
எனச் சாரியை பெறாமல் வந்தது.

(3) நடந்தன– நட + த் + த் + அன் + அ
என அன் சாரியை பெற்றும்,
நடந்த – நட + த் + த் + அ
எனச் சாரியை பெறாமலும் விகற்பமாகி வந்தன.

**(2) பதப்புணர்ச்சி**

(1) புளியங்காய்– புளி + அம் + காய்
என அம் சாரியை பெற்று வந்தது.

(2) புளக்கறி– புளி + கறி
எனச் சாரியை பெறாமல் வந்தது.

(3) நெல்லின்குப்பை – நெல் + இன் + குப்பை
என இன் சாரியை பெற்றும்
நெற்குப்பை – நெல் + குப்பை
எனச் சாரியை பெறாமலும் விகற்பமாகி வந்தன.

**(3) உருபுபுணர்ச்சி**

(1) அவற்றை – அவ் + அற்று + ஐ

என அற்றுச் சாரியை பெற்று வந்தது.

(2) தன்னை– தன் + ஐ

எனச் சாரியை பெறாமல் வந்தது.

(3) ஆனை– ஆ + ன் + ஐ

என னகரச் சாரியை பெற்றும்,

ஆவை– ஆ + ஐ

எனச் சாரியை பெறாமலும் விகற்பமாகி வந்தன.

பலசாரியை

ஆவினுக்கு – ஆ + இன் + உ + கு

மரத்தினுக்கு– மரம் + அத்து + இன் + உ + கு

எனச் சாரியைகள் பல வந்தன.

## மோசசு பொன்னையா

ஒரு சொல்லின் முன்னர், விகுதியோ வேறு சொல்லோ, உருபோ புணருங்கால், ஒன்றோ பலவோ சாரியை பெற்றும், பெறாமலும் விகற்பமாகியும் முடியும், எ–று.

எ–டு.:–

நடந்தனன்; நடந்தான்; விகுதிப் புணர்ச்சியுள், சாரியை பெற்றும்,

நடந்தன; நடந்த. பெறாமலும் விகற்பமாகியும் முடிந்தன.

புளியங்காய்; புளிக்கறி பதப்புணர்ச்சியுள், சாரியை பெற்றும்,

நெல்லின் குப்பை; பெறாமலும் விகற்பமாகியும்

நெற்குப்பை முடிந்தன.

அவற்றை,தன்னை, ஆனை, அவை – உருபு புணர்ச்சியுள், சாரியை பெற்றும் விகற்பமாயும் முடிந்தன.

ஆவினுக்கு, மரத்திற்கு – சாரியைகள் பல வந்தன.

சாரியை மொழிகளெல்லாம் முற்காலத்தில் பொருட் சிறப்புடன் வழங்கின என்பது தொல்காப்பியர், 'சாரியை மொழியே' என்றதனாலும்; சேனாவரையர், 'பொருணிலைக்குதவுத'லாவது எல்லாவற்றையும் என்புழி

வற்றுச் சாரியை நிலைமொழிப் பொருள் அஃறிணைப் பொருள் என்பதுபட வருதலும், எல்லா நம்மையும் என்புழி நம்முச் சாரியை அப்பொருள் தன்மைப் பன்மை என்பதுபட வருதலும், அல்லவும் தாஞ்சார்ந்து வரும் மொழிப் பொருட்கு உபகாரமுடையவாய் வருமாறு ஓர்ந்து கொள்ளப்படும். அல்லாக்கால், சாரியை மொழியாகா 'வென்பது' என்று கூறுவதாலும் தெளிவுறும்.

எனினும், மொழி நூலார் எவ்விடத்தும் தமக்கெனச் சிறப்புப் பொருள் பெற்று வழங்கும் பிறசொற்களைப் போல் இவற்றைப் பொருளன் என்று கொள்வதில்லை இவற்றுள் குறிப்பிட்ட பொருள் தந்து நிற்கும் அற்று, தம், நம், நும், தாம், தான், தன் என்பவற்றை மாற்றுப் பொருளசை என ஏற்பர்.

(4)

243. அன் ஆன் இன்அல் அற்றிற் றத்தம்
தம்நம் நும்ஏ அஉ ஐகுன
[1]இன்ன பிறவும் பொதுச்சாரியையே.

அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்
தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன
இன்ன பிறவும் பொதுச் சாரியையே.

a<u>n</u> ā<u>n</u> i<u>n</u> al aṟṟu iṟṟu aṭṭu am
ṭam nam num ē a u ai ku <u>n</u>a
i<u>nn</u>a piṟavum potus sāriyaiyē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### General Euphonic increments

an, an, in, al, arru, irru, attu, am, tam, nam, num, e, a, u, ai, ku and n,— these (Seventeen Particles and some other of this kind are the general (euphonic) Increments.

---

பாட வேறுபாடு.:-

1. அன்னபிறவும்

## ஒப்புமைப் பகுதி

அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே

(தொல். எழு.:120)

அன்னா னின்ன லற்றிற் றத்தந்
தம்நம் நும்மே அஉ ஐகுன
வின்ன பிறவுஞ் சாரியை மொழியே

(இ.வி.: 59)

அத்தம் மானக் கின்னன் னொன்னிக்
கற்றுத் தந்நம் நும்மு மாம்பிற

(மு.வீ.: 174)

......................... அவற்றுள்
அஎஉஐ குன் அன்ஆன் இன்அல்
அற்று இற்று அத்து அம்தம் நம்நும் எனப்
பதினேழு அன்றிப் பிறவுமாம் பொதுச்
சாரியை அவற்றோர் வழியன் றாகும் விகற்பமே

(தொ.வி.: 52 : 3–7)

## மயிலை நாதர்

எ–ன், மேற் சாரியை யென்றார், அவை இவை யென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: அன்னும் ஆனும் இன்னும் அல்லும் அற்றும் இற்றும் அத்தும் அம்மும் தம்மும் நம்மும் நும்மும் ஏயும் அவ்வும் உவ்வும் ஐயும் குவ்வும் னவ்வும் இவைபோல்வன பிறவும் விகுதி பதம் உருபு ஆன மூன்று புணர்ச்சிக்கும் பொதுவான சாரியைகளாம், எ–று.

வ–று.:–

ஒன்றன்கூட்டம், ஒருபாற்கு, வண்டின்கால், "பூநறுந் தொடையல்சூடி," பலவற்றை, பதிற்றுப்பத்து, மரத்திலை, புளியங்காய், எல்லார் தம்மையும், எல்லா நம்மையும், எல்லீர்

நும்மையும், கலனே தூணி, [1]குன்றக்கூகை, சாத்தனுக்கு. "கேழ லட்ட [2]பேழ்வாயேற்றை", "துறுகன் [3]மறையினு முய்குவை போலாய்" ஆன்கன்று என முறையே காண்க.

'பிற' என்றதனானே மற்று வருவனவும் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், மேற் சாரியை என்றார், அவை இவை என்பது உணர் – ற்று.

இ–ள்.: அன்னும் ஆனும் இன்னும் அல்லும் அற்றும் இற்றும் அத்தும் அம்மும் தம்மும் நம்மும் நும்மும் ஏயும் அவ்வும் உவ்வும் ஐயும் குவ்வும் னவ்வும், இவை போல்வன பிறவும், விகுதி பதம் உருபு என்னும் மூன்று புணர்ச்சிக்கண்ணும் தனிமொழிக்கண்ணும் வருதலின் பொதுச்சாரியை என்னும் பெயரவாம், எ–று.

வ–று.:–

ஒன்றன் கூட்டம், ஒருபாற்கு, வண்டின் கால், தொடையல், பலவற்றை, பதிற்றுப்பத்து, மரத்திலை, மன்றம், எல்லார் தம்மையும், எல்லார் நம்மையும், எல்லீர் நும்மையும், கலனே தூணி, நடந்தது, சாத்தனுக்கு, [1]"கேழல் அட்ட பேழ்வாயேற்றை", [2]" துறுகன் மறையினும் உய்குவை போலாய்", ஆன் என முறையே காண்க.

இன்ன பிற என்றதனானே, அவன்றனை என்புழித் தன் என்னும் சாரியையும், அவன்றான் அவர்தாம் என்புழித் தான் தாம் என்னும் சாரியையும், புற்றாஞ்சோறு என்புழி ஆம் சாரியையும், இல்லாப்பொருள் என்னும் பண்புத் தொகைக்கண் ஆகாரச்சாரியையும் வந்தன. இன்னும் வருவனவும் காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், மேற் சாரியை என்றார்; அவை இவை யெனக் கூறியது.

இ–ள்.: அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம் – அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம்நம் நும்மே – தம் , நம், நும், ஏ, அஉ ஐகுன்

---

பாட வேறுபாடு.:–

1. வானமதி

2.பேழைவாய்

3.முழையினும்

– அ, உ, ஐ, கு, ன், **இன்னபிறவும்** – இப்பதினேழு சாரியையும் இவை போல்வன பிறவும், **பொதுச்சாரியையே** – விகுதி பதம் உருபு முதலான சாரியையாம், எ–று.

**உ–ம்.:–**

ஒன்றன் கூட்டம், ஒரு பாற்கு, வண்டின் கால், "பூநறுந் தொடையல் சூடிய," பலவற்றை. பதிற்றுப்பத்து, மரத்திலை, புளியங்காய், எல்லார்தம்மையும், எல்லார் நம்மையும், எல்லீர் நும்மையும், கலனே தூணி, குன்றக்கூகை, சாத்தனுக்கு, பண்டைச்சாத்தன், மொழிகுவான், ஆன்கன்று என முறையே காண்க.

"பிற" என்றதில் ஞான்று, கேளு, ஒன் முதலாயின கொள்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** முன் சாரியை யென்றார் அவை இவை யென்பது உணர்த்துகின்றது.

**இ–ள்.: அன்ன** – அன் முதல் னகர மெய்யீறாகச் சொல்லப்பட்ட பதினேழும், **இன்ன பிறவும்** – இவை போல்வன பிறவும், **பொதுச்சாரியை** – விகுதி பத முருபென்கிற மூன்று புணர்ச்சிகளிலுந் தனிமொழிகளிலும் வருதலினாலே பொதுச்சாரியையாகும், எ–று.

**உ–ம்.:**

ஒன்றன்கூட்டம் – அன், ஒருபாற்கு, – ஆன், வண்டின்கால், – இன், தொடையல், –அல், பலவற்றை, –அற்று, –பதிற்றுப்பத்து, –இற்று, மரத்திலை, அத்து, மன்றம், –அம், எல்லார்தம்மையும், –தம், எல்லா நம்மையும், –நம், எல்லீர் நும்மையும், –நும், கலனே தூணி, –ஏ, நடந்தது, –அ, சாத்தனுக்கு, – உ, ஏற்றை, –ஐ, உய்குவை, கு, ஆன், –ன், என முறையே காண்க. இன்னபிறவு மென்றதனால் அவன்றனை, –தன் , அவன்றான், –தான், அவர்தாம், தாம், புற்றாஞ்சோறு, –ஆம், இல்லாப்பொருள், –ஆ என வருகின்றவையும் மற்றுமிப்படி வருமவைகளையும் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பொதுச்சாரியைகள் எவை?

அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்
தம் நம் நும் ஏ அஉ ஐ குன
இன்ன பிறவும் பொதுச்சாரியையே.
(அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்

தம் நம் நும் ஏ அஉ ஐ குன
இன்ன பிறவும் பொதுச்சாரியையே.)

**இ-ள்.:- அன்....ன** - அன் முதல் னகரமெய்யீறாகச் சொல்லப்பட்ட பதினேழும், **இன்னபிறவும்** - இவை போல்வன பிறவும், **பொதுச்சாரியை** - விகுதிபத முருபென்னு மூன்று புணர்ச்சிகளிலுந் தனிமொழிகளிலும் வருதலினாலே பொதுச் சாரியையாகும், எ-று.

உ-ம்.:-

அன் - ஒன்றன் கூட்டம், ஆன் - ஒரு பாற்கு, இன் - வண்டின்கால், அல் - தொடையல், அற்று - பலவற்றை, இற்று, பதிற்றுப்பத்து, அத்து - மரத்திலை, அம் - மன்றம், தம் - எல்லார்தம்மையும், நம் - எல்லாநம்மையும், நும் - எல்லீர் நும்மையும், ஏ- கலனே தூணி, அ - நடந்தது, உ-சாத்தனுக்கு, ஐ - ஒற்றை, கு - உப்குவை, ன் - ஆன் என முறையே காண்க.

இன்னபிறவும் என்றதனால், தன் - அவன்றனை, தான் - அவன்றான், தாம் - அவர்தாம், ஆம் - புற்றாஞ்சோறு, ஆ- இல்லாப்பொருள், து-செய்துகொண்டான் என்பனவும், இன்னும் வருவன உளவாயின் அவையுங் கொள்க.

ஆனுருபிற்கும் ஆன்சாரியைக்கும் இன்னுருபிற்கும் இன்சாரியைக்கும் வேற்றுமை யாது?

சாரியையாபின் உருபேற்றலும் உருபாயின் அஃதேலாமையும் தம்முள் வேற்றுமையாம்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது**, சாரியை யிவை யென்கின்றது.

**இ-ள்.:-** அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம் தம் நம்நும் ஏ அ உ ஐ கு ன என்பனவும், **இன்ன பிறவும்** - இவை போல்வனபிறவும், **பொதுச்சாரியை** - விகுதி பதம் உருபு என்னும் மூவகைப் புணர்ச்சியிலும் தனிமொழியிலும் வருதலாற் பொதுச்சாரியை யென்னும் பெயரை யுடையனவாம், எ-று.

வ-று.:-

அன்-ஒன்றன் கூட்டம், ஆன்-ஒருபாற்கு, இன்-வண்டின்கால், அல்-தொடையல், அற்று-பலவற்றை, இற்று-பதிற்றுப்பத்து, அத்து-மரத்திலை, அம்-புளிபங்காய், தம்-எல்லார் தம்மையும், நம்-எல்லார் நம்மையும், நும்-எல்லீர் நும்மையும், ஏ-கலனே தூணி, அ-நடந்தது, உ-சாத்தனுக்கு, ஐ-பண்டைக்காலம், கு-

உய்குவாய், ன—ஆன்கன்று, என முறையே காண்க. 'இன்ன பிறவு'மென்றதினாலே தன் - அவன்றன்னை, தான்—அவன்றான், தாம்—அவர்தாம், ஆம்—புற்றாஞ்சோறு, மண்ணாங்கட்டி, ஆ—இல்லாப்பொருள், என்பனவும்; இன்னும் வெருவன வுளவாயின் அவையுங் கொள்க. இதில் னகரச் சாரியை ஈற்றில் வரும்போது, ஆன்கன்று என ஈற்று னகரமாகவும், இடையில் வரும்போது, மொழிநருமென மொழி முதல் நகரமாகவும் வருமெனக் காண்க. 'பெறுனவும் என்பது பெறுவனவும் என்பது குறைந்து நின்றது

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உரை :- அன்ன - அன் முதல் னகரமெய் ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழும், இன்னபிறவும் - இவைபோல்வன பிறவும், பொதுசாரியை - (விகுதி பதம் உருபு என்கிற மூன்று புணர்ச்சிகளிலும் தனிமொழிகளிலும் வருதலினாலே) பொதுச்சாரியையாகும்.

| சாரியை | | உதாரணம் | | சாரியை |
|---|---|---|---|---|
| ஒன்றன் கூட்டம் | - அன் | எல்லா நன்மையும் | - | நம் |
| ஒருபாற்கு | - ஆன் | எல்லீர் நும்மையும் | - | நும் |
| வண்டின்கால் | - இன் | ஒன்றேகால் | - | ஏ |
| தொடையல் | - அல் | நடந்தது | - | அ |
| பலவற்றை | - அற்று | சாத்தனுக்கு | - | உ |
| பதிற்றுப்பத்து | - இற்று | ஒன்றை | - | ஐ |
| மரத்திலை | - அத்து | செய்குவாய் | - | கு |
| நெஞ்சம் | - அம் | கோன் | - | ன் |
| எல்லார் தம்மையும் | - தம் | | | |

குறிப்பு:-

தன் - அவன்றனைதாம் - அவர்தாம் ஆ - இல்லாப் பொருள் தான் - அவன்றான் ஆம் - மண்ணாங்கட்டி து—நடத்தற்கு என வருகின்றமையும், மற்றும் இப்படி வருபவையும் 'இன்ன பிறவும்' என்றதனாற் கொள்க. இவற்றுள் னகரச்சாரியை இறுதியில் வரும்போது 'ஆன்' என ஈற்றுனகரமாகவும், இடையில் வரும்போது 'மொழிநர்' என மொழிமுதல் நகரமாகவும் வருமென்பர் இராமானுசகவிராயர்.

## ஆறுமுக நாவலர்

இ—ள.: அன்...... ன - அன் முதல் னகர மெய்யீறாகச் சொல்லப்பட்ட

பதினேழும், இன்ன பிறவும் – இவை போல்வன பிறவும், பொதுச்சாரியை – விகுதி பதமுருபென்னு மூன்று புணர்ச்சிகளிலுந் தனிமொழிகளிலும் வருதலினாலே பொதுச்சாரியை யாகும், எ–று.

உ–ம்.:–

அன் – ஒன்றன்கூட்டம், ஆன் – ஒருபாற்கு, இன் – வண்டின்கால், அல் – தொடையல், அற்று – பலவற்றை, இற்று – பதிற்றுப்பத்து, அத்து – மரத்திலை, அம் – மன்றம், தம் – எல்லார் தம்மையும், நம் – எல்லா நம்மையும், நும் – எல்லீர் நும்மையும், ஏ – கலனேதூணி, அ – நடந்தது, உ – சாத்தனுக்கு, ஐ – ஏற்றை, கு – உய்குவை, ன் – ஆன் என முறையே காண்க.

'இன்ன பிறவும்' என்றதனால், தன் – அவன்றன்னை, தான் – அவன்றான், தாம் – அவர்தாம், ஆம்–புற்றாஞ்சோறு, ஆ – இல்லாப்பொருள், து – செய்துகொண்டான் என்பனவும், இன்னும் வருவன உளவாயின் அவையுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். அன்......ன–அன் முதல் னகரமெய்யீறாகச் சொல்லப்பட்ட பதினேழும், – இன்ன பிறவும் – இவைபோல்வன பிறவும், – பொதுச் சாரியை – விகுதிபதமுருபென்னு மூன்று புணர்ச்சிகளிலுந் தனிமொழிகளிலும் வருதலினாலே பொதுச்சாரியையாகும். எ–று.

உ–ம்.:–

அன் – ஒன்றன் கூட்டம், ஆன் – ஒருபாற்கு, இன்– வண்டின்கால், அல்–தொடையல், அற்று – பலவற்றை, இற்று – பதிற்றுப்பத்து, அத்து – மரத்திலை, அம் – மன்றம், தம் – எல்லார்தம்மையும், நம் – எல்லா நும்மையும், நும் – எல்லீர்நும்மையும், ஏ – கலனே தூணி, அ – நடந்தது, உ – சாத்தனுக்கு, ஐ – ஏற்றை, கு – உய்குவை, ன் – ஆன் எனமுறையே காண்க.

இன்ன பிறவும் என்றதனால், தன் – அவன்றனை, தான் – அவன்றான், தாம் – அவர்தாம், ஆம் – புற்றாஞ்சோறு, ஆ – இல்லாப் பொருள். து – செய்துகொண்டான் என்பனவும், இன்னும் வருவன உளவாயின் அவையுங்கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: அன்...ன – அன் முதல் னகரமெய் (ன்) ஈறாகச் சொல்லப் பட்ட பதினேழும், இன்ன பிறவும் – இவை போல்வன பிறவும், பொது சாரியை –

(விகுதி பதம் உருபு என்கிற மூன்று புணர்ச்சிகளிலும் தனிமொழிகளிலும் வருதலினாலே) பொதுவான சாரியைகளாம்; எ – று.

உ–ம்.: –

| சாரியை | சாரியை |
|---|---|
| அன் –ஒன்றன்கூட்டம் (ப) | நம் – எல்லாநம்மையும் (உ) |
| ஆன் – ஒருபாற்கு (உ) | நும்–எல்லீர்நும்மையும் (உ) |
| இன் – வண்டின்கால் (ப) | ஏ –ஒன்றேகால் (ப) |
| அல் – தொடையல் (த) | அ –நடந்தது (வி) |
| அற்று–பலவற்றை (உ) | உ –சாத்தனுக்கு (உ) |
| இற்று–பதிற்றுப்பத்து (ப) | ஐ – ஒற்றை (த) |
| அத்து–மரத்திலை(ப) | கு – செய்குவாய் (வி) |
| அம் – நெஞ்சம்(த) | ன்–கோன் (த) |
| தம் – எல்லார்தம்மையும் (உ) | 'இன்ன பிறவும்' என்றதனால், |
| தன் – அவன்றனை (உ) | தாம் – அவர்தாம் (த)<br>ஆ – இல்லாப்பொருள் (ப) |
| தான் –அவன்றான் (த) | ஆம் – மண்ணாங்கட்டி (ப)<br>து – நடத்தற்கு (வி) |

என வருகின்றவையும், மற்றும் இப்படி வருபவையும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

(இ–ள்.) அன் ன – அல் முதல் னகரமெய்யீறாகச் சொல்லப்பட்ட பதினேழும், இன்ன பிறவும் – இவை போல்வன பிறவும், பொதுச்சாரியை – விகுதி பத முருபென்னு மூன்று புணர்ச்சிகளிலுந் தனிமொழிகளிலும் வருதலினாலே பொதுச்சாரியையாகும். எ–று.

உ–ம்.:–

உன் – ஒன்றன் கூட்டம். நம் – எல்லாநம்மையும்,

ஆன் – ஒருபாற்கு, நும் – எல்லீர்நும்மையும்,

இன் – வண்டின்கால், ஏ – கலனேதூணி,

அல் – தொடையல், அ – நடந்தது,

அற்று – பலவற்றை, உ – சாத்தனுக்கு,

இற்று – பதிற்றுப்பத்து, ஐ – ஏற்றை,

அத்து – மரத்திலை, கு – உய்குவை,

அம் – மன்றம், ன் – ஆன் – என, முறையேகாண்க.

தம் – எல்லார் தம்மையும்.

'இன்னபிறவும்' என்றதனால்,

தன் – அவன்றன்னை, ஆம் – புற்றாஞ்சோறு,

தான் – அவன்றான். ஆ – இல்லாப்பொருள்,

தாம் – அவர்தாம், து – செய்துகொண்டான்,

என்பனவும், இன்னும் வருவன உளவாயின் அவையுங் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– அன்.....ன – அன்முதல் னகரமெய் (ன்) ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழும், **இன்ன பிறவும்** – இவைபோல்வன பிறவும், **பொது சாரியை** – (விகுதி பதம் உருபு என்கிற மூன்று புணர்ச்சிகளிலும் தனி மொழிகளிலும் வருதலினாலே) பொதுச் சாரியை யாகும். எ–று

பொ–ரை.:–அன், ஆன் முதலிய பதினேழும், இவைபோல் வனபிறவும், (விகுதி பதம் உருபு என்கின்ற மூன்று புணர்ச்சிகளிலும் தனிமொழிகளிலும் வருதலினால்) பொதுச்சாரியையாகும்.

சாரியை.

உ–ம்.:–

ஒன்றன்கூட்டம்–அன்

ஒருபாற்கு – ஆன்

வண்டின்கால் – இன்

தொடையல் – அல்

பலவற்றை – அற்று

பதிற்றுப்பத்து – இற்று

மரத்திலை – அத்து

மன்றம் – அம்

எல்லார்தம்மையும் – தம்

எல்லாநம்மையும் – நம்

எல்லீர்நும்மையும் –நும்

கலனே தூணி –ஏ

நடந்தது – அ

சாத்தனுக்கு – உ

ஏற்றை – ஐ

உய்குவை–கு

சாரியை.

“இன்ன பிறவும்” என்றதனால்

அவன்றனை – தன் சாரியை.

அவன்றான் – தான் „

அவர்தாம் – தாம் „

புற்றாஞ்சோறு – ஆம் „

இல்லாப்பொருள்–ஆ „

என வருகின்றவையும் மற்றும் இப்படி வருபவைகளையும் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம் தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன** – அன்முதல் னகர மெய்யீறாகச் சொல்லப்பட்ட பதினேழும், **இன்னபிறவும்** – இவைபோல்வன பிறவும், **பொதுச்சாரியை** – (விகுதி பதம் உருபு என்னும் மூன்று புணர்ச்சிகளிலும் தனிமொழிகளிலும் வருதலினாலே) பொதுச்சாரியையாகும்.

உதாரணம்

| | | சாரியை | | | சாரியை |
|---|---|---|---|---|---|
| ஒன்றன்கூட்டம் | – | அன் | எல்லார் நம்மையும் | – | நம் |
| ஒருபாற்கு | – | ஆன் | எல்லீர் நும்மையும் | – | நும் |
| வண்டின்கால் | – | இன் | கலனே தூணி | – | ஏ |
| தொடையல் | – | அல் | நடந்தது | – | அ |
| பலவற்றை | – | அற்று | சாத்தனுக்கு | – | உ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பதிற்றுப்பத்து | – | இற்று | ஏற்றை | – | ஐ |
| மரத்திலை | – | அத்து | உய்குவை | – | கு |
| மன்றம் | – | அம் | ஆன் | – | ன் |
| எல்லார் தம்மையும் | – | தம் | | | |

'இன்னபிறவும்' என்றதனால்,

| | | சாரியை |
|---|---|---|
| அவன்றனை | – | தன் |
| அவன்றான் | – | தான் |
| அவர்தாம் | – | தாம் |
| புற்றாஞ்சோறு | – | ஆம் |
| இல்லாப்பொருள் | – | ஆ |

என வருகின்றவையும், மற்றும் இப்படியே வருவனவுங் கொள்க.

## மோசசு பொன்னையா

அன் முதல் னகரம் ஈறாகச் சொல்லப்பட்ட பதினாறும் இவை போல்வன பிறவும் விகுதி, பத, உருபு புணர்ச்சிகளிலும், தனிமொழியிலும் வரும் பொதுச்சாரியைகளாம், எ–று.

எ–டு.:–

அதனால்; நின்வயினானே; எண்கின் வயநிரை; பலவற்று; பதிற்றுக்கை; நகரத்து; நெஞ்சமொடு;

எல்லீர் தம்மையும், எல்லா நம்மையும்.

எல்லீர் நும்மையும்; ஆறேகால்; குன்றக்கூகை

நடந்தது; கொக்கினுக்கு ஒற்றை, செய்குவம்

கோன்,

தொல்காப்பியர் சாரியைகள் என்பதுவும் பிறவும், என்றார். அவர்

**அவைதாம்**
**இன்னே வற்றே அத்தே அம்மே**
**ஒன்னே ஆனே அக்கே இக்கே**
**அன்னென் கிளவி உளப்படப் பிறவும்**
**அன்ன என்ப சாரியை மொழியே.**

என்று கூறிய நூற்பாவின் அன்ன என்றதால் உரையாசிரியர் தம், நும், எம், கெழு, ஏ, ஐ, ஞான்று என்ற எட்டையும்

கூட்டியுரைத்தனர். இவ்வாசிரியர் சாரியைகள் பதினாறு என்றார்.

தொல்காப்பியர், 'பல்லவை நுதலிய அகர இறுபெயரு'க்கும் 'யாவென் வினா'வுக்கும் வற்றுச் சாரியை விதித்தார். சுட்டு முதல் ஐகார ஈற்றுச் சொற்களோடு வற்றுச் சாரியை புணருங்கால் வற்றின் வகரம் கெட்டு அதனிடத்தில் அகரம் நிற்கும் பண்பு உரித்தாகும் என்றும் அவரே விதித்தார். அதனால் அவையற்றை இவையற்றை உவையற்றை என்பன முடிக்கப்பட்டன. நச்சினார்க்கினியர் இலேசால் எவன்+அற்று+ஐ என்பவை எவற்றை என்றாகும் என்று தங்கால வழக்கு நோக்கி முடித்தார். அவையற்றை, இவையற்றை, உவையற்றை என்பன வழக்கிழந்த நிலையில், அவற்றை, இவற்றை, உவற்றை என்பனவும், எவற்றை என்பதும் பெருவழக்கான்மை கண்டு இவ்வாசிரியர் வற்றை விடுத்து அற்றையே சாரியையாகக் கொண்டார் எனக் கொள்க.

இன்சாரியையை விதித்த தொல்காப்பியர் ஆ என்னும் சொல்லின் முன்னர் அது இகரங் கெட்டு நிற்றற்கும் உரித்து என்றார். உரையாசிரியர் அந்நூற்பாவின் உரையில் மா என்னும் சொல்லின் முன்னும் அவ்வாறே ஆம் என்றனர். பிற்காலத்தில் ஆ, மா என்னும் சொற்கள் னகரச் சாரியை பெற்று ஆன், மான் என்ற வடிவிலேயே வழங்கி வருவனவாயின. கோ என்னுஞ் சொல்லுக்கு ஒன் என்னுஞ் சாரியை உரிமைப்படுத்தப்பட்டது. பிற்காலத்தில் கோ என்னும் சொல் னகரச் சாரியை பெற்றுக் கோன் என்ற வடிவிலேயே வழங்கிற்று. இவ்வழக்கு நோக்கி இவ்வாசிரியர் னகரத்தைச் சாரியையாகக் கொண்டதோடு, வழக்கொழிந்த ஒன் சாரியையை விடுத்தார்.

அளவுப் பெயர்களில் யாதானுமொன்று வருமொழியாக வரின், இன் சாரியையின் னகர ஒற்று றகர ஒற்றாகும் எனத் தொல்காப்பியர் விதித்தும் பதிற்றகல், பதிற்றுழக்கு என்னும் தொடர்களுக்குப் புணர்ச்சி அமைதி கூறினார். உரையாசிரியர் இலேசால் பிறவழியும் இன்னின் னகரம் றகரமாதலை அமைத்துப் பதிற்றொன்று பதிற்றேழு என்பவற்றை எடுத்துக் காட்டினர். இவ்வாசிரியர் இற்று என்பதையும் வழக்கு நோக்கி அமைத்துக் கொண்டார்.

இக்குச் சாரியையின் இகரக் கேட்டிற்கு விதி கூறினார் தொல்காப்பியர். உரையாசிரியர் ஆடிக்குக் கொண்டான்,

சித்திரைக்குக் கொண்டான் என இகரங்கெட்ட இக்கிற்கு எடுத்துக்காட்டுத் தந்தனர். அவையும் வழக்கிழந்து போயினவாக இவ்வாசிரியர் இக்கென்னுஞ் சாரியையை விடுத்தார்.

தொல்காப்பியர் அக்கு என்ற சாரியையைச் சிறப்புடை ஒன்பதனுள் அடக்கிக் கூறினாலும்,

*'எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி*
*அக்கின் இறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே*
*குற்றிய லுகரம் முற்றத்தோன் றாது'*

என்று கூறியுள்ளமையாலும், அதன் உரையாலும் அகரச்சாரியையே அக்காலத்தில் வழக்கிலிருந்தது என்பது போதரும். இவ்வாசிரியர் காலத்தில் அக்கு மறந்து அகரமே சாரியையாகத் தெளிவுற வழங்கினமையின் அக்கை விடுத்து அகரத்தைச் சாரியையாகக் கொண்டார்.

தமிழ் மொழியில் ஒலித்துணையாக வரற்குரியன குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றுமே என்றார் தொல்காப்பியர். கால வழக்கில் ஒரு மாத்திரை பெற்று உ, கு என்பன ஒலித்துணைகளாக வழங்கி வரலாயின. புணர் மொழிகளிலும் அவை கெடாமல் நிலை பெற்று நின்றன. அவற்றையும் இவ்வாசிரியர் சாரியைகளாகக் கொண்டார். இவற்றோடு தொல்காப்பியர் சொன்ன ஒன்பதனுள் இன், அத்து, அம், ஆன, அன் என்ற ஐந்தையும் இலேசால் உரையாசிரியர் கொண்ட எட்டனுள், தம், நம், நும், ஏ, ஐ என்ற ஐந்தையையும் எவ்வித மாற்றமுமின்றிக் கூட்டியுரைத்துச் சாரியைகள் பதினாறு என வரையறுத்தார் இவ்வாசிரியர் என அறிக.

இந்நூற்பாவில் இன்னல் லற்று என வருவதை இன்+அல்+அற்று எனப் பிரித்து அல் என்பதையும் இவ்வாசிரியர் சாரியையாகக் கொண்டார் எனக் கூறித் 'தொடையல்' என்பதை எடுத்துக்காட்டாகக் கொள்வாரும் உளர். தொடையல், படையல் என்பவற்றின்கண் அமைந்து நிற்கும் அல், விகுதியே யன்றிச் சாரியை யன்று என்பது கூர்த்து நோக்கவாருக்குப் புலனாகும். 'குலைபலங் காந்தள்' என்றவிடத்தும் குலைபல் என்பது அல் விகுதி பெற்ற பெயரே என்க. இனி, இன்ன பிறவும் என்றதனால், அவன் றன்னை, அவன்றான், அவர்தாம், புற்றாஞ்சோறு, இல்லாப் பொருள்

என்பவற்றில் முறையே அமைந்து வழங்கும் தன், தான், தாம்,
ஆம், ஆ என்பவற்றையும் சாரியைகளெனவே கொள்க.

(5)

244. எல்லா மென்ப திழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றே னம்மிடை யடைந்தற் றாகும்.

எல்லாம் என்பது இழி திணை ஆயின்
அற்று ஒடு உருபின் மேல் உம் உறுமே
அன்றேல் அம் இடை அடைந்து அற்று ஆகும்.

ellām enpaṭu iḻi tiṇai āyiṉ
aṟṟu ōtu urupiṉ mēl um uṟumē
aṉṟēl am itai ataintu aṟṟu ākum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### SPECIAL RULES

### Special rule for ellām

When ellām is (declined as) an Impersonal, the increment **arru** is added to it, and **um** to its Case-ending. If not, **nam** is inserted and **um** added as above.

## ஒப்புமைப் பகுதி

எல்லாம் என்னும் இறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையும் இறுதி யான

(தொல்.எழு.: 190)

உயர்திணை யாயின் நம்மிடை வருமே

(தொல். எழு.: 191)

எல்லா மென்ப திழிதிணை யாயி
னற்றோ டுருபின் மேலும் முறுமே
யன்றே னம்மிடை யடைந்தற் றாகும்

(இ.வி.: 152)

அற்றெல் லாம்பெறு மாயிடை யும்மை
இறுதியொடு சிவணு மென்மனார் புலவர்

(மு.வீ.: 224)

உயர்திணை யாயி னம்மிடை தோன்றும்

(மு.வீ.: 225)

## மயிலை நாதர்

எ—ன், ஒருசார் [1]சாரியை பெறுமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: எல்லா மென்னும் பெயர் அஃறிணையானகாலை அற்றுச் சாரியையும் உருபின் மேலே உம்மும் பெறும்; [2]உயர்திணையானகாலை இடையே நம்முச் சாரியையும் உருபின் மேலே முன்போல் உம்மும் பெற்று முடியும், எ—று.

வ—று.:—

எல்லாவற்றையும், எல்லாவற்றொடும் எனவும், எல்லாவற்றுக் கோடும், செவியும் தலையும் புறமும் எனவும்; அஃறிணைக்கண் உருபினும் பொருளினும் அற்றும் உம்மும் வந்தன. எல்லாநம்மையும் எல்லா நம்மொடும் எனவும், எல்லாநங்கையும்; செவியும், தலையும், புறமும் எனவும் உயர்திணைக்கண் உருபினும் பொருளினும் நம்மும் உம்மும் வந்தன.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ—னின், ஒருசார் நிலைமொழியோடு உருபு புணர்தற்கு *'ஒற்றுயிர் முதலீற்றுருபுகள்' என்னும் சூத்திரத்தான்* எய்தியதன் மேற் சிறப்புவிதி உணர் — ற்று.

---

பாட வேறுபாடு.:—

1. சாரியையாமாறு

2. உயர்திணை விரவுத்திணைகளான காலை

இ–ள்.:– எல்லாம் என்னும் பொதுப்பெயர் அஃறிணைக்கண் ஆனகாலை, அதனோடு ஆறு உருபும் புணரின் இடையே அற்றுச் சாரியையும் உருபின்மேல் முற்றும்மையும் பெறும்; உயர்திணைக்கண் ஆனகாலை இடையே நம்முச் சாரியையும் உருபின் மேல் முற்றும்மையும் பெறும், எ–று.

உ–ம்.:–

எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் எனவும்; எல்லா நம்மையும், எல்லா நம்மாலும் எனவும் வரும்.

இனி, இரட்டுறமொழிதல் என்னும் உத்தியான், எல்லாம் என்பது இழிதிணையாய் எனவும், இன் அற்றோடு எனவும் பிரித்து, அஃறிணைக்கண்ணாகி இன் சாரியை அற்றுச் சாரியையோடு எனப் பொருள்தந்து எல்லாவற்றினையும் என வருதலும் கொள்க. ஏனைய வற்றோடும் இவ்வாறே ஒட்டுக.

இச் சொற்கு இரு திணைக்கண்ணும் அற்றுச் சாரியையும் நம்முச் சாரியையும் உருபு புணர்ச்சிக்கண் 'பதமுன் விகுதியும்' என்னும் சூத்திரத்தில் கூறியவாறே வேண்டியே வருதல் தோன்ற இன்றியமையா முற்றும்மையோடு உடனிகழ்ச்சிப் பொருளவாய் அற்றோடு என்றும் அடைந்தற்றாகும் என்றும் கூறினார்.

தாம், நாம், நீர் என்னும் மூவிடப்பெயர் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் வந்தமையானே தம், நம், நும் என விகாரப்பட்டுத் தமக்கு இனமான மூவிடப் பெயர்களை முறையே சார்ந்து சிறப்புப் பொருள் தாராமையின் ஒருபொருட் பன்மொழி அல்லவாய் வருதலின் இம் மூன்றும் சாரியை யிடைச்சொல் எனப்படும் ஆதலின், தம் என்பதைப் படர்க்கைப் பெயர்க்கும் நும் என்பதை முன்னிலைப் பெயர்க்கும் வருஞ் சூத்திரத்து அமைந்தாற் போல நம் என்பதனை ஈண்டுத் தன்மைப் பெயர்க்கு அமைத்தார் என்பதூஉம், தன்மை யாயினும் திணைப் பொதுமையினில்லாது பாணரேம் என்றாற் போல எல்லா நம்மையும் என்ற துணையானே உயர்திணைத் தன்மை யுணர்த்தும் என்பதூஉம் பெற்றாம்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், ஒரு சார் சாரியை வந்து பொருந்துமாறு கூறியது.

இ–ள்.: **எல்லா மென்ப திழிதிணை யாயின்** – எல்லாம் என்னும்

மகர வீற்று விரவுப் பெயர் அஃறிணைப் பெயரான காலத்து, **அற்றோடு உருபின் மேல் உம்முறுமே** – அற்றுச் சாரியையும் உருபின் மேல் உம் என்னும் சாரியையும் பெறும், **அன்றேல்** – அஃறிணை யன்றி எல்லாம் என்னும் விரவுப்பெயர் உயர்திணையான காலத்து, **நம்மிடை யடைந்து அற்றாகும்** – இடையே நம்முச் சாரியை அடைந்து முன் போல உருபின் மேல் உம்முன் பெறும்.

உ–ம்.:–

எல்லாவற்றையும், எல்லாவற்றொடும்; எல்லா வற்றிற்றலையும், எல்லாவற்றிற் செவியும் என அஃறிணைக்கண் உருபின் மேலும் பொருளினும் அற்று உம்முப் பெற்றது. எல்லா நம்மையும், எல்லாநம்மொடும், எல்லாநங்கையும், எல்லா நஞ்செவியும் என உயர்திணைக்கண் உருபினும் பொருளினும் நம்மும் உம்மும் பெற்றது. இவற்றிற்கு எல்லாரையும் எல்லாம் என்பது பொருளாக ஒட்டுக.

## விசாகப் பெருமாளையர்

இது, ஒருசார் நிலை மொழிகளோடு உருபு புணர்தற்கு ஒற்றுயிர்முதலீற் றுருபுகளென்றதனால் எய்தியதன் மேற் சிறப்புவிதி புணர்த்துகின்றது.

இ–ள்.: எல்லாமென்பது – எல்லா மென்னும் பொதுப்பெயர், **இழிதிணையாயின்** – அஃறிணையில் வரும்போது (அதனோடு ஆறுருபுகளும் புணரின்) (இடை) – இடையிலே, **அற்று** – அற்றுச் சாரியையும், **உருபின் மேல்** – உருபின் மேல், **உம்** – முற்றும்மையும், **உறும்**– பெறும், **அன்றேல்** – உயர்திணையில் வரும்போது, **இடை** – இடையிலே, **நம்** – நம்முச் சாரியை, **அடைந்து** – அடைந்து, **அற்றாகும்** – உருபின் மேல் முற்றும்மையும் பெறும், எ–று.

உ–ம்.:–

எல்லாவற்றையும், எல்லாநம்மையும், என வரும். மற்றவைகளோடும் இப்படியே ஒட்டுக. (எல்லாநம்மையும், உயர்திணைத் தன்மைப்பன்மை இரட்டுற மொழிதலால் இழிதிணையாய் இன் அற்றோடு எனக் கொண்டு எல்லாவற்றினையும் என வருமெனினுமாம்)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

எல்லாமென்பது எச்சாரியைகளைப் பெறும்?

எல்லா மென்ப திழிதிணை யாயின்

அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றே னம்மிடை அடைந்தற்றாகும்.

(எல்லாம் என்பது இழிதிணை ஆயின்
அற்றோடு உருபின் மேல் உம் உறுமே
அன்றேல் நம்இடை அடைந்து அற்று ஆகும்)

**இ–ள்.: எல்லாம் என்பது** – எல்லாமென்னும் பொதுப்பெயர், **இழிதிணை ஆயின் (இடை) அற்று உருபின்மேல் உம் உறும்** – அஃறிணையில் வரும்போது அதனோடு ஆறுருபுகளும் புணரின் இடையிலே அற்றுச்சாரியையும் உருபின்மேல் முற்றும்மையும் பெறும், **அன்றேல் இடை நம் அடைந்து அற்று ஆகும்** – உயர்திணையில் வரும்போது இடையிலே நம்முச்சாரியை யடைந்து அதுபோல் உருபின்மேல் முற்றும்மையும் பெறும், எ–று.

எல்லாம் என்பது உயர்திணையாயின் எல்லேம் என்பதுபோல மகரவீற்றுத் தன்மைப்பெயர்.

எல்லாம் என்பது அஃறிணையாயின் ஆறுருபுகளையும் எவ்வாறேற்கும்?

"எல்லாம் என்ப திழிதிணை யாயின் அற்றோ டுருபின்
மேல் உம் உறுமே."

**உ–ம்.:–**

எல்லாவற்றையும்.

எல்லா மென்பது உயர்திணையாயின் ஆறுருபுகளையு மெவ்வாறேற்கும்.

"அன்றேல் நம் இடையடைந்து அற்றாகும்"
(உயர்திணை யாயின் நம் இடையடைந்து உருபின்
மேல் உம் உறும்.)

**உ–ம்.:–**

எல்லாநம்மையும் எனவரும், மற்றையுருபுகளோடும் இப்படியே யொட்டுக. எல்லா நம்மையும் உயர்திணைத் தன்மைப்பன்மை.

இனி, இரட்டுற மொழிதலால், இழிதிணையாய் இன் அற்றோடு எனக்கொண்டு, எல்லாவற்றினையும் என வருதலுங் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, நிலைமொழியோடு உருபு புணர்தற்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

**இ–ள்.: எல்லா மென்பது** – எல்லாம் என்னும் பொதுப்பெயர், **இழி திணையாயின்** – அஃறிணைப் பொருளில் வருமாயின், **அற்றோடுருபின்**

**மேலும்முறும்** – (அதனோடே யாறுருபுகளும் புணர்தற்கு) இடையே அற்றுச் சாரியையும் உருபின் பின் முற்று உம்மையும் வரும், **அன்றேல்** – அல்லாமல் உயர்திணைப் பொருளில் வரின், **நம்மிடை யடைந்து** – இடையிலே நம்முச் சாரியை வந்து, **அற்றாகும்** – அதுபோல உருபின் பின் முற்றும்மையும் வரும், எ–று.

உ–ம்.:–

எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் எனவும்; எல்லா நம்மையும், எல்லா நம்மாலும் எனவும் வரும். ஒழிந்த உருபுகளோடு மொட்டிக் கொள்க. இனி யிரட்டுற மொழிதலால், எல்லாமென்பது இழிதிணையாய் இன்னற்றோடு எனப் பிரித்து, அஃறிணையிலே வந்து, இன் சாரியை அற்றுச் சாரியைபோடெனப் பொருள்பட எல்லாவற்றினையும் என வருதலுங் கொள்க. இச் சொல்லுக்கு இருதிணையிலும் அற்றுச் சாரியையும் நம்முச் சாரியையும் 'பதமுன் விகுதியும் பதமு'மென்னுஞ் சூத்திரத்திற் சொல்லியபடியே, உருபுப் புணர்ச்சிக்கு வேண்டியே நிற்பது தோன்ற இல்லாமற் கூடாததுவாகிய முற்றும்மையோடு உடனிகழ்ச்சிப் பொருளனவாக 'அற்றோ'டென்றும், 'அடைந் தற்றாகும்' என்றுங் கூறினார். (படர்க்கை) தாம் (தன்மை) நாம் (முன்னிலை) நீர் என்னு மூவிடப்பெயர் வேற்றுமைப் புணர்ச்சியில் வந்ததினாலே, தம் நம் நும் என விகாரப்பட்டுத் தமக்கினமான அம் மூவிடப் பெயர்களை முறையே சார்ந்து சிறப்புப்பொருள் தாராததினாலே ஒருபொருட்பன் மொழியல்லவாகி வருதலால் இம் மூன்றுஞ் சாரியை யிடைச் சொல் எனப்படுமாதலால், தம் என்பதைப் படர்க்கைக்கும், நும்மென்பதை முன்னிலைப் பெயர்க்கும், வருஞ் சூத்திரத்தில் அமைத்தது போல, நம்மென்பதை யிங்கே தன்மைப் பெயர்க்கு அமைத்தா ரென்பதும், தன்மை யாயினுந் திணைப் பொதுமையிலே நில்லாமல், 'பாணரேம்' என்றாற் போல, எல்லா நம்மையும் என்ற அளவிலே உயர்திணைத் தன்மையை யுணர்த்துமென்பதும்

பெறப்பட்டன. அற்றோடு உம்முறும் அற்றாகும் என முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–**

**எல்லாம் என்பது** – 'எல்லாம்' என்னும் இருதிணைப் பொதுப்பெயர், **இழி திணை ஆயின்** – அஃறிணையில் வரும்போது (அதனோடு ஆறு உருபுகளும் புணர்ந்தால்), **அற்றோடு** – (இடையில்) அற்றுச் சாரியையும், **உருபின்மேல் , உம் உறும்** – முற்றும்மையையும் பெறும்; **அன்றேல்** – அன்றாயின் (உயர்திணையில் வரும்போது), **இடை** – இடையிலே, **நம் அடைந்து** – நம் சாரியை பெற்று, **அற்று ஆகும்** – அவ்வாறாகும் (உருபின் மேல் முற்றும்மையையும் பெறும்).

உதாரணம்:–

எல்லாம் + ஐ = எல்லாவற்றையும் – அஃறினை
எல்லாம் + ஐ = எல்லாவற்றையும் – உயர்திணை

குறிப்பு:–

நம் – தன்மையிடத்துச் சாரியை, 'உயர்திணையாயின்' என்றாலும் எல்லா நம்மையும் என்பது உயர்திணைத் தன்மைக்குமாத்திரமே வருமெனக் கொள்க.
இனி, இரட்டுற மொழிதலால் 'இழிதிணையாய் இன் அற்றோடு' எனப் பிரித்து, 'எல்லாவற்றினையும்' என 'அற்று' 'இன்' என்னும் இரண்டு சாரியை வருதலுங்கொள்க. மற்றை உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: எல்லாம் என்பது** – எல்லாமென்னும் பொதுப்பெயர், **இழிதிணை ஆயின் (இடை) அற்று உருபின்மேல் உம் உறும்** – அஃறிணையில் வரும்போது அதனோடு ஆறுருபுகளும் புணரின் இடையிலே அற்றுச் சாரியையும் உருபின்மேல் முற்றும்மையும் பெறும், **அன்றேல் இடை நம் அடைந்து அற்று ஆகும்** – உயர்திணையில் வரும்போது இடையிலே நம்முச் சாரியை யடைந்து உருபின் மேல் முற்றும்மையும் பெறும், எ – று.

**உ–ம்.:–**

எல்லாவற்றையும், எல்லாநம்மையும் என வரும். மற்றை யுருபுகளோடும் இப்படியே பொட்டுக. எல்லாநம்மையும் உயர்திணைத் தன்மைப் பன்மை.

இனி, இரட்டுற மொழிதலால், இழிதிணையாய் இன் அற்றோடு எனக் கொண்டு, எல்லாவற்றினையும் என வருதலுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– **எல்லாம் என்பது** – எல்லாம் என்னும் பொதுப்பெயர், **இழிதிணை ஆயின் (இடை) அற்று உருபின் மேல் உம் உறும்** – அஃறிணையில் வரும்போது அதனோடு ஆறுருபுகளும் புணரின் இடையிலே அற்றுச்சாரியையும் உருபின்மேல் முற்றும்மையும் பெறும், **அன்றேல் இடை நம் அடைந்து அற்று ஆகும்,** – உயர்திணையில் வரும்போது இடையிலே நம்முச்சாரியை யடைந்து உருபின்மேல் முற்றும்மையும் பெறும்,. எ–று.

உ–ம்.:–

எல்லாவற்றையும், எல்லாநம்மையும் எனவரும். மற்றையுருபுகளோடும் இப்படியே யொட்டுக. எல்லாநம்மையும் உயர்திணைத்தன்மைப் பன்மை.

இனி, இரட்டுறமொழிதலால், இழிதிணையாய் இன் அற்றோடு எனக்கொண்டு, எல்லாவற்றினையும் என வருதலுங் கொள்க.

## வை. மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: (1) **எல்லாம் என்பது** – எல்லாம் என்னும் இருதிணைப் பொதுப்பெயர், **இழி திணை ஆயின்** – அஃறிணையில் வரும்பொழுது, (அதனோடு ஆறு உருபுகளும் புணர்ந்தால்,) **அற்றோடு உருபின்மேல் உம் உறும்**– இடையிலே அற்று என்னும் சாரியையும் உருபின்மேல் முற்றும்மையையும் பெறும்; (2) **அன்றேல்**–அன்றாயின் (உயர்திணையில் வரும்பொழுது), **இடை** – இடையிலே, **நம் அடைந்து** – நம் என்னும் சாரியைப் பெற்று, **அற்று ஆகும்** – அவ்வாறாகும் (உருபின்மேல் முற்றும்மையையும் பெறும்), எ–று.

உ–ம்.:

(1) எல்லாம் + ஐ = எல்லாவற்றையும் – அஃறிணை.

(2) எல்லாம் + ஐ = எல்லாநம்மையும் – உயர்திணை.

'எல்லாநம்மையும்' என்பதற்கு–எல்லாரையும் என்று பொருள்; படர்க்கை.

'உயர்திணையாயின்' என்றாலும், எல்லாநம்மையும் என்பது உயர்திணைத் தன்மைக்கு மாத்திரமே வருமெனக் கொள்வர் ஒருசாரார்.

இனி, இரட்டுறமொழிதலால், இழிதிணையாய் இன் அற்றோடு எனப் பிரித்து, எல்லாவற்றினையும் என அற்று, இன் என்னும் இரண்டு சாரியை வருதலும் கொள்க. மற்றை உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– **எல்லாம் என்பது** – எல்லாமென்னும் பொதுப்பெயர், **இழிதிணை ஆயின் (இடை) அற்று உருபின்மேல் உம் உறும்** – அஃறிணையில் வரும்போது அதனோடு ஆறுருபுகளும் புணரின் இடையிலே அற்றுச்சாரியையும் உருபின்மேல் முற்றும்மையும் பெறும்; **அன்றேல் இடை நம் அடைந்து அற்று ஆகும்** – உயர்திணையில் வரும்போது இடையிலே நம்முச்சாரியை யடைந்து உருபின்மேல் முற்றும்மையும் பெறும., எ–று.

உ–ம்.:–

எல்லாவற்றையும், எல்லாநம்மையும் – என வரும். மற்றையுருபுகளோடும் இப்படியே யொட்டுக. எல்லா நம்மையும் உயர்திணைத்தன்மைப் பன்மை.

இனி, இரட்டுற மொழிதலால், இழிதிணையாய் இன் அற்றோடு எனக்கொண்டு, 'எல்லாவற்றினையும்' என வருதலுங் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– **எல்லாம் என்பது**–எல்லாம் என்னும் பொதுப்பெயர், **இழி திணை ஆயின்**–அஃறிணையில் வரும்போது (அதனோடு ஆறுருபுகளும் புணரின்), (இடை)–இடையிலே, **அற்று**–அற்றுச் சாரியையும், **உருபின் மேல்**–உருபின்மேல், **உம் உறும்** – முற்றும்மையும் பெறும்; **அன்றேல்** – உயர்திணையில் வரும்போது, **இடை**– இடையிலே, **நம் அடைந்து** – நம் சாரியையைப் பெற்று, **அற்று ஆகும்** – உருபின்மேல் முற்றும்மையும் பெறும். **எ–று**

பொ–ரை.:–

எல்லாம் என்னும் பொதுப்பெயர், அஃறிணையில் வரும்போது, அதனோடு ஆறு உருபுகளும் புணர்ந்தால், இடையில் அற்றுச் சாரியையும் உருபின்மேல் முற்றும்மையும் பெறும்; உயர்திணையில் வரும்போது, இடையில் நம்முச்சாரியைபும் உருபின் மேல் முற்றும்மையும் பெறும்.

உ–ம்.:–

எல்லாம் + ஐ = எல்லாவற்றையும் – அஃறிணை.

எல்லாம் + ஐ = எல்லாநம்மையும் – உயர்திணைத் தன்மைப் பன்மை.

மற்றை உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

(எல்லாநம்மையும் என்பதற்கு எல்லாரையும் என்றுபொருள்; (படர்க்கை).)

இதனை, தன்மைப் பன்மையில் வரும் நம்முச்சாரியை பெற்று வரும் எல்லாம் என்னும் பெயர்ச்சொல், 'பாணரேம்' என்றாற்போல,உயர்திணைத் தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல்லாகக் கொள்க எல்லாம் என்னும் பெயர்ச்சொல்லில் ஈறு தொகுத்தல், ஆம் தன்மைப் பன்மை விகுதிபெனக் கொள்க.

இனி, இரட்டுற மொழிதலால் இழிதிணையாய் இன் அற்றோடு எனக் கொண்டு எல்லாவற்றினையும் என அற்று, இன் என்னும் இரண்டு சாரிபை வருமெனினுமாம்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) எல்லாம் என்பது – எல்லாம் என்னும் பொதுப் பெயர், இழிதிணையாயின் – அஃறிணையில் வரும்போது (அதனோடு ஆறுவேற்றுமை உருபுகளும் புணரின்), (இடை – இடையிலே,) அற்றோடு – அற்றுச் சாரியையோடு. உருபின் மேல் உம் உறும் – உருபின்மேல் முற்றும்மையும் பெறும்;

(2) அன்றேல் – அஃறிணையிலேன்றி உயர்திணையில்வரும் போது, இடை – இடையிலே. நம் – நம்முச் சாரியை. அடைந்து – பெற்று, அற்றாகும் – அதுபோல உருபின்மேல் முற்றும்மையும் பெறும்.

உதாரணம்

(1) எல்லாம் + ஐ = எல்லாவற்றையும் – அஃறிணை

(2) எல்லாம் + ஐ = எல்லாநம்மையும் – உயர்திணை

மற்ற உருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

எல்லாநம்மையும் – உயர்திணைத் தன்மைப்
பன்மை.

இனி, இரட்டுறமொழிதலால், 'இழிதிணையாய்
இன் அற்றோடு' எனக் கொண்டு,
எல்லாவற்றினையும் என்பதில், அற்று இன்
என்னும் இரண்டு சாரியை பெறுதலோடு எனக்
கூறினும் பொருந்தும்.

## மோசசு பொன்னையா

எல்லாம் என்னும் இருதிணைப் பொதுப் பெயர் அஃறிணைப் பொருளதாயின், உருபு புணர்ச்சியில் இடையில் அற்றுச் சாரியையையும், உருபின் பின்னர் முற்றும்மையையும் பெறும்; உயர்திணைப் பொருளதாயின், இடையில் நம்முச் சாரியையையும் உருபின் பின்னர் முற்றும்மையையும் பெறும், எ–று.

எ–டு.:–

எல்லாவற்றையும் –அஃறிணை
எல்லா நம்மையும் – உயர்திணை
மற்றை உருபுகளோடும் இவ்வாறே அமைக்க.
இரட்டுற மொழிதலால் 'இழிதிணையாய் இன் அற்றோடு' எனப் பிரித்து, எல்லாவற்றினையும் என அற்றும் இன்னும் உடன் வருதலையும் அமைத்துக் கொள்க.

(6)

245. எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே.

எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை
தள்ளி நிரலே தம் நும் சாரப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே.

ellārum ellīrum e<u>n</u>pavaṟṟu ummai
ṭa<u>l</u><u>l</u>i niralē ṭam num sārap
pullum urupi<u>n</u> pi<u>n</u><u>n</u>ar ummē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Special rule for ellärum, ellirum**

The Pronouns ellarum and ellirum (when declined) reject the um, add respectively tam and num, and then affix the (rejected) um to the Case-ending.

## ஒப்புமைப் பகுதி

எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியும்
எல்லீரு மென்னும் முன்னிலை யிறுதியும்
ஒற்றும் உகரமும் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
உம்மை நிலையும் இறுதி யான
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன
நும்மிடை வரூஉம் முன்னிலை மொழிக்கே

(தொல். எழு.: 192)

எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லும் உருபின் பின்ன ரும்மே

(இ.வி.: 153)

எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லும் உருபின் பின்ன ரும்மே

(மு.வீ.: 226)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: இவ் விருவகைச் சொல்லினும் ஈற்றில் நின்ற உம்மையை யழித்து முறையே தம்மும் நும்மும் சார உருபின் பின்னே உம்மை புணரும், எ – று.

வ–று.:–

எல்லார் தம்மையும், எல்லீர் நும்மையும் [1]எனவும், எல்லார்

பாட வேறுபாடு.:–

1. என உயர்திணைக்கண்ணே தம்மும் நும்மும் உருபின் மேல் உம்மும்பெற்றன

தங்கையும், எல்லீர்நுங்கையும் [1]எனவும் உருபினும் பொருளினும் சாரியையும் உம்மும் வந்தன.

எல்லாரையும் எல்லீரையும், எல்லார்கையும் எல்லீர்கையும், [2]எனச் சாரியையை இடையில் ஏலாதும்வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், இதுவும் அது.

இ–ள்.: எல்லாரும் என்னும் உயர்திணைப் படர்க்கைப் பெயரோடும் எல்லீரும் என்னும் முன்னிலைப் பொதுப்பெயரோடும் ஆறு உருபும் புணருமிடத்து, அவ்விரு பெயரின் இறுதிகளின் நின்ற முற்றும்மைகளைத் தள்ளி, அந்நிலைக்களங்களிற் படர்க்கைப் பெயர்க்குத் தம்முச் சாரியையும் முன்னிலைப்பெயர்க்கு நும்முச் சாரியையும் பொருந்த, அவற்றால் தள்ளுண்ட முற்றும்மைகள் உருபின் பின்னே வந்து பொருந்தும், எ–று.

உ–ம்.:–

எல்லார் தம்மையும், எல்லாரையும் எனவும்; எல்லீர் நும்மையும், எல்லீரையும் எனவும் விகற்பித்து வந்தன. ஏனையவற்றோடும் இவ்வாறே ஒட்டுக.

நந்தம்மை, நுந்தம்மை எனப் படர்க்கைக்கு உரிய தம்முச் சாரியை தன்மை முன்னிலைகளின் வருதல் ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே' என்னும் வழுவமைதி என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், மகரவீற்று உயர்திணைப் பெயருக்கும் விரவுத்திணைப் பெயருக்கும் சாரியை புணருமாறு கூறியது.

இ–ள்.:– எல்லாரும் எல்லீரும் – எல்லாரு மென்னும் மகர வீற்று உயர்திணைப் படர்க்கைப் பெயரும் எல்லீரு மென்னும் மகர வீற்று

பாட வேறுபாடு.:–

1. எனப் பொருளினும் பெற்றன
2. என ஏலாது வந்தன

விரவுத்திணை முன்னிலைப் பன்மைப் பெயரும், **என்பவற்றும்மை தள்ளி** – இவ்விரு வகைச் சொல்லினும் ஈற்றினின்ற உம்மை கெடுத்து, **நிரலே தம் நும் சாரப்** – முறையே தம் சாரியை நும் சாரியை இடையே சார, **புல்லும் உருபின் பின்னர் உம்மே** – பின்னர் உருபு சேர்ந்து அதன் பின் உம் புணரும் என்றவாறு.

**உ–ம்.:–**

எல்லார்தம்மையும், எல்லீர்நும்மையும், எல்லார் தங்கையும், எல்லீர்நுங்கையும் என உருபினும் பொருளினும் சாரியையும் உம்மும் வந்தவாறு காண்க. இவ்வாறன்றி எல்லாரையும் எல்லீரையும் எல்லார் கையும் எல்லீர்கையும் எனச் சாரியை இடையில் இல்லாமலும் வருமெனக் கொள்க.

''சார''வென்ற இலேசானே கரியார்தம்மையும், சான்றார் தம்மையும், கரியீர்நும்மையும், சான்றீர் நும்மையும் என மற்றப் படர்க்கையினும் முன்னிலை யினும் ஒட்டுக.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.:** எல்லாரு மெல்லீரு மென்பவற்று – (ஆறுருபும் புணருமிடத்து) எல்லாரும் எல்லீரும் என்கிற விருபெயர்களினுடைய (விறுதியிலுள்ள), **உம்**–முற்றும்மைகளை, **தள்ளி** – தள்ளி, **நிரல்** – முறையாக, **தம்**–தம்முச் சாரியையும், **நும்** – நும்முச் சாரியையும், **சார** – அவையிருந்த விடங்களிலே பொருந்த, **உம்** – அவற்றினாலே தள்ளுண்ட முற்றும்மைகள், **உருபின் பின்னர்** – உருபுகளின் பின்னே, **புல்லும்** – வந்து புணரும், எ–று.

**உ–ம்.:–**

எல்லார் தம்மையும், எல்லாரையும், எல்லீர் நும்மையும், எல்லீரையும், என விகற்பித்து வந்தன. (நந்தம்மை, நுந்தம்மை, எனப் படர்க்கைக்குரிய தம்முச் சாரியை தன்மை முன்னிலைகளில் வருதல் ஓரிடம் பிற விடந்த ழுவலுமுளவே யென்னும் வழுவமைதி.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

எல்லாரு மெல்லீருமென்னுஞ் சொற்கள் ஆறுருபுகளையு மேற்குமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம் நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே.
(எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை
தள்ளி நிரலே தம் நும் சாரப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே.)

**இ–ள்.:– எவ்வாரும் எல்லீரும் என்பவற்று உம்மை தள்ளி** – ஆறுருபும் புணருமிடத்து எல்லாரும் எல்லீரும் என்னும் இரு பெயர்களினுடைய இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி, **நிரல் தம் நும் சார** – முறையே தம்முச்சாரியையும் நம்முச்சாரியையும் அவையிருந்த இடங்களிலே பொருந்த, **உம் உருபின் பின்னர்ப் புல்லும்** – அவற்றினாலே தள்ளுண்ட முற்றும்மைகள் உருபுகளின் பின்னே வந்து பொருந்தும், எ–று.

எல்லாரும் எல்லீரு மென்னும் பெயர்கள் ஆறுருபுகளையும் ஏற்கு மிடத்துப் படுஞ்செய்கைகள் யாவை?

இறுதியும்மைகளைத் தள்ளலும் தம் நும் சாரியைகளை முறையே பொருந்தலும் அவற்றின் பின்னே உருபுகளைப் பெறுதலும் அவற்றின்பின்னர் உம்முப் பெறுதலுமாகிய நான்கு செய்கைகளுமாம்.

உ–ம்.:–

எல்லார்தம்மையும், எல்லாரையும் எனவும், எல்லீர்நும்மையும், எல்லீரையும் எனவும், விகற்பித்து வந்தன. மற்றையுருபுகளோடும் இப்படியேயொட்டுக. இங்கே கூறிய தம் நும் என்பன சாரியைகள், வருஞ் சூத்திரத்தில் வருவன பொதுப் பெயர்கள்.

நந்தம்மை, நுந்தம்மை எனப் படர்க்கைக்குரிய தம்முச்சாரியை தன்மை முன்னிலைகளில் வருதல் "ஒரிடம் பிறவிடந் தழுவலு முளவே" என்னும் வழுவமைதி.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: எல்லாரு மெல்லீரு மென்பவற்று** – ஆறுருபுகளும் புணருமிடத்துப் படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயருமாகிய இவ்

விரண்டனது, **உம்மைதள்ளி** – முற்றுஉம்மைகளை நீக்கி, **நிரலே**– முறையாகவே, **தம் நும் சார** – படர்க்கைப் பெயர்க்குத் தம்முச் சாரியையும், முன்னிலைப் பெயர்க்கு நும்முச் சாரியையும் பொருந்த, **புல்லு முருபின் பின்ன ரும்மே**– (அத் தள்ளுபட்ட) முற்றும்மைகள் உருபின்னே வந்து பொருந்தும், **எ–று.**

தம் நும்மே யெனத் தேற்றேகாரங் கொடாததினாலே, சாரியை யின்றி வருதலுங் கொள்க.

**உ–ம்.:–**

எல்லார்தம்மையும், எல்லாரையும், எல்லீர்நும்மையும் – எல்லீரையும், என விகற்பித்து வந்தன. ஒழிந்த வுருபுகளோடு மிவ்வாறே யொட்டுக. நந்தம்மை, நுந்தம்மை எனப் படர்க்கைக் குரிய தம் சாரியை தன்மை முன்னிலைகளிலே வருதல், **'ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே'** என்ற சூத்திரத்தின்படி வழுவமைதி யென்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :– எல்லாரும் எல்லீரும் என்பவற்று** – (ஆறுருபும் புணருமிடத்து) 'எல்லாரும்' 'எல்லீரும்' என்கிற இருபெயர்களினுடைய, **உம்மை** – (இறுதியிலுள்ள) முற்றும்மைகளை, **தள்ளி** – நீக்கி, **நிரலே** – முறையே, **தம்** – தம்சாரியையும், **நும்** – நும்சாரியையும், **சார** (அவையிருந்த இடங்களிலே) பொருந்த, **உம்** – (அவற்றினால் நீக்கப்பட்ட) முற்றும்மைகள், **உருபின் பின்னர்** – உருபுகளின் பின்னே, **புல்லும்** – (வந்து) புணரும்.

எல்லாம்+ஐ= எல்லார் தம்மையும்
எல்லீர் + ஐ = எல்லீர் நும்மையும்

**குறிப்பு:–**

இவை 'எல்லாரையும்', 'எல்லீரையும்' எனச் சாரியை பெறாமல் வருதலும் உண்டு. 'நந்தம்மை', 'நுந்தம்மை' என்பவற்றில் படர்க்கைக்குரிய சாரியைகள், தன்மை முன்னிலைகளோடு கலந்து வருதல் இடவழுமைதி என்றறிக.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை தள்ளி** – ஆறுருபும் புணருமிடத்து எல்லாரும் எல்லீரும் என்னும் இரு பெயர்களினுடைய இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி, **நிரல் தம் நும் சார** – முறையே தம்முச் சாரியையும் நும்முச் சாரியையும் அவை யிருந்த

இடங்களிலே பொருந்த, **உம் உருபின் பின்னர்ப் புல்லும்** – அவற்றினாலே தள்ளுண்ட முற்றும்மைகள் உருபுகளின் பின்னே வந்து பொருந்தும், எ–று.

உ– ம்.:–

எல்லார் தம்மையும், எல்லாரையும் எனவும், எல்லீர் நும்மையும், எல்லீரையும் எனவும் விகற்பித்து வந்தன. மற்றை யுருபுகளோடும் இப்படியே யொட்டுக.

நந்தம்மை, நுந்தம்மை எனப் படர்க்கைக்குரிய தம்முச் சாரியை தன்மை முன்னிலைகளில் வருதல் "ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே" என்னும் வழுவமைதி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை தள்ளி** – ஆறுருபும் புணருமிடத்து எல்லாரும் எல்லீரும் என்னும் இரு பெயர்களினுடைய இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி, **நிரல் தம் நும் சார** –முறையே தம்முச்சாரியையும் நும்முச்சாரியையும் அவையிருந்த இடங்களிலே பொருந்த, – **உம் உருபின் பின்னர்ப்புல்லும்** – அவற்றினாலே தள்ளுண்ட முற்றும்மைகள் உருபுகளின் பின்னேவந்து பொருந்தும். எ–று.

உ–ம்.:–

எல்லார்தம்மையும், எல்லாரையும், எ–ம், எல்லீர் நும்மையும், எல்லீரையும். எ–ம்.

விகற்பித்துவந்தன. மற்றையுருபுகளோடும் இப்படியே யொட்டுக.

நந்தம்மை, நுந்தம்மை எனப் படர்க்கைக்குரிய தம்முச்சாரியை தன்மை முன்னிலைகளில் வருதல் 'ஓரிடம்பிறவிடந்தழுவலுமுளவே' என்னும் வழுவமைதி.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** (ஆறு உருபுகளும் புணருமிடத்து), **எல்லாரும் எல்லீரும் என்பவற்று** – எல்லாரும் எல்லீரும் என்கிற இருபெயர்களினுடைய, **உம்மை** – (இறுதியிலுள்ள) முற்றும்மைகளை, **தள்ளி** – நீக்கி, **நிரலே** – முறையே, **தம்** – தம் என்னும் சாரியையும், **நும்** – நும் என்னும் சாரியையும், சார – (அவையிருந்த இடங்களிலே) பொருந்த, **உம்** – (அவற்றினாலே நீக்கப்பட்ட)

முற்றும்மைகள், **உருபின் பின்னர் புல்லும்** – உருபுகளின் பின்னே வந்து பொருந்தும், எ–று.

உ–ம்.:–

எல்லாரும் + ஐ = எல்லார் தம்மையும்.
எல்லீரும் + ஐ = எல்லீர் நும்மையும்.
எல்லாரையும், எல்லீரையும் எனச் சாரியை பெறாமல் வருதலும் உண்டு.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை தள்ளி** – ஆறுருபும் புணருமிடத்து எல்லாரும் எல்லீரும் என்னும் இருபெயர்களினுடைய இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி, **நிரல் தம் நும் சார** – முறையே தம்முச்சாரியையும் நும்முச்சாரியையும் அவையிருந்த இடங்களிலே பொருந்த, **உம் உருபின் பின்னர்ப் புல்லம்** – அவற்றினாலே தள்ளுண்ட முற்றும்மைகள் உருபுகளின் பின்னே வந்து பொருந்தும். **எ–று.**

**உ–ம்.:–**

எல்லார்தம்மையும், எல்லாரையும், எல்லீர்நும்மையும், எல்லீரையும் – விகற்பித்து வந்தன. மற்றை யுருபுகளோடும் இப்படியே யொட்டுக.

நந்தம்மை, நுந்தம்மை எனப் படர்க்கைக்குரிய தம்முச்சாரியை தன்மை முன்னிலைகளில் வருதல் "ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே" (சூ–380) என்னும் வழுவமைதி.

## கா.நமச்சிவாய முதலியார்

**எல்லாரும் எல்லீரும் என்பவற்று** – (ஆறு வேற்றுமை உருபுகளும் புணருமிடத்து) எல்லாரும் எல்லீரும் என்னும் இருபெயர்களின் (இறுதியிலுள்ள), **உம்மை** – முற்றும்மைகளை, **தள்ளி** – நீக்கி, **நிரல்** – முறையே, **தம்** – தம் என்னும் சாரியையும், **நும்** – நும் என்னும் சாரியையும், சார (அவையிருந்த இடங்களில்) பொருந்த, **உம்** – (அவற்றினாலே நீங்கிய) முற்றும்மைகள், **உருபின் பின்னர்** – உருபுகளின் பின்னே, **புல்லும்** – வந்து புணரும்.

உதாரணம்:–

எல்லாரும்+ஐ=எல்லார்தம்மையும்

எல்லீரும் + ஐ = எல்லீர்நும்மையும்

எனச் சாரியை பெற்று வந்தன.

படர்க்கைக்குரிய தம்சாரியை நந்தம்மை, நுந்தம்மை எனத் தன்மை முன்னிலைகளில் வருதல், "ஓரிடம் பிறவிடந் தழுவலும் உளவே" (சூ. 380) என்னும் வழுவமைதி.

## மோசகு பொன்னையா

எல்லாரும் என்னும் உயர்திணைப் படர்க்கைப் பெயரும் எல்லீரும் என்னும் முன்னிலைப் பொதுப் பெயரும் உருபு புணர்ச்சியில் இறுதியில் நின்ற முற்றும்மைகளை நீக்கி முறையே தம், நும் என்னுஞ் சாரியைகளைப் பெற்ற பின்னர் அவ்வும்மைகளை உருபின் பின்னர் சேர்த்துக் கொள்ளும், எ–று.

எ–டு.:–

எல்லார் தம்மையும் – படர்க்கைப் பெயர்

மற்றை உருபுகளோடும் இவ்வாறே அமைக்க.

தம் நும்மே சார எனத் தேற்ற வேகார மின்றி வந்தமையால், எல்லாரையும், எல்லீரையும் என வருதலையுங் கொள்க.

படர்க்கைக்குரிய தம்மை முதலிற் கூறியதால் நந்தம்மையும், நுந்தம்மையும் எனப் படர்க்கைக்குரிய தம்முச்சாரியையைத் தன்மை முன்னிலைப் பெயர்களுக்கும் கொள்க.

நம், தம், நும் என்பன முறையே நாம், தாம், நீம்>நீர் என்னும் இடப்பெயர்களின் விகாரமாய்ச் சிறப்புப் பொருள் தராது வரும் இடைச் சொற்கள் எனவே கொள்க. அவை, எல்லாம் என்னும் பெயரின் அடியாய்ப் பிறக்கும் சொற்களைச் சார்ந்து நின்று இடப்பொதுமை நீக்கி உரிமைப் படுத்திச் சிறிது பொருள் பயந்தன எனலாம். சாரியைகள் சொல் தொடர்ந்து செல்லும் நெறிக்கண் நின்று, அதற்குப் பற்றுக் கோடாகச் சிறிது பயந்தும், வேறாகி நின்ற இருமொழிகள் தம்மிற் சார்தற் பொருட்டு இயைத்து நின்று பொருள் பயவாதுமாய் அமையும். இவையும் அற்று, தாம், தான், தன்

என்பனவும் நின்ற சொற்குப் பற்றுக்கோடாய்ச் சிறிது பொருள் பயந்து நின்றன எனக் கொள்க.

(7)

246. தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்
நீ நீர் என்எம் நின்நு மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல.

தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்
நீ நீர் என் எம் நின் நும் ஆம் பிற
குவ்வின் அவ் வரு நான்கு ஆறு இரட்டல

ṭān̲ ṭām nām muṭal kuṛukum yān̲ yām
nī nīr en̲ em nin̲ num ām piṛa
kuvvin̲ av varu nān̲ku āṛu irattala

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Special rule for tän, täm etc.

(When declined), tan, tam, and nam shorten (their initial vowel-consonants); **yan, yam, ni** and **nir** become respectively **en, em, nin**, and **num**; when ku (the sign of the Fourth Case) is affixed, (the increment) a is inserted; and there is no doubling (of the final consonant) in (the formation of) the Fourth and sixth Cases.

## ஒப்புமைப் பகுதி

நும்மென் இறுதி இயற்கை யாகும்

(தொல். எழு.: 188)

தாம்நாம் என்னு மகர இறுதியும்
யாமென் இறுதியும் அதனோ ரன்ன
ஆஎ ஆகும் யாமென் இறுதி

ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்
ஏனை யிரண்டும் நெடுமுதல் குறுகும்

(தொல். எழு.: 189)

தான்யான் என்னும் ஆயீ ரிறுதியும்
மேன்முப் பெயரொடும் வேறுபா டிலவே

(தொல். எழு.: 193)

தான்யா னெனும் பெயர் உருபியல் நிலையும்

(தொல். எழு.: 353)

தான்றா நாமுதல் குறுகும் யான்யாம்
நீநீ ரென்னெம் நின்னும் மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல

(இ.வி.: 154)

நும்மத் தின்னையு நோக்கா தியலும்

(மு.வீ.: 221)

தாமு நாமு நெடுமுதல் குறுகும்

(மு.வீ.: 222)

யாமெம் மாகுமா ராயுங் காலே

(மு.வீ.: 223)

தான்முதல் குறுகும் யானென் னாகும்

(மு.வீ.: 227)

தான்தாம் நாமுதல் குறுகும் யான்யாம்
நீநீரென் னெம்நின் நுமாம் பிற
குவ்வின் அவ்வரும் நான்காறு இரட்டா

(தொ.வி.: 68)

## மயிலை நாதர்

எ–ன், இவ்வேழு [1] பெயரின்பின் ஆறு உருபும் இன்னவாறு முடிக்க வென்பதுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்:– தானென்றும் தாமென்றும் நாமென்றும் வருஞ் [2]சொற்களின் முதலுயிர் குறுகும் ; யானென்றும் யாமென்றும்

---

பாட வேறுபாடு.:–

1. பெயர்ப்பின் ஆறுருபும் முடிக்க

2. சொற்கள்

நீயென்றும் நீரென்றும் வருஞ் சொற்கள் முறையே என்னென்றும் எம்மென்றும் நின்னென்றும் நும்மென்றும் ஆகும்; இங்ஙனந் திரிந்து நின்றவழி நான்காமுருபு [1]புணருமிடத்து இடையே அகரச் சாரியை வரும்; இவற்றுள் நான்காமுருபும் ஆறாமுருபும் புணருமிடத்து [2]குற்றொற்றுக்கள் இரட்டாவாம், **எ—று.**

**வ—று:**

தன்னை தன்னால் தனக்கு தன்னின் தனது தன்கண் எனவும், தம்மை தம்மால் தமக்கு தம்மின் தமது தங்கண் எனவும், நம்மை நம்மால் நமக்கு நம்மின் நமது நங்கண் எனவும் வரும். என்னை எம்மை நின்னை நும்மை என இவையும் அவ்வாறே வரும்.

நான்காவதற்கு [3]விதி யகரவீறு நின்று ககர வொற்று மிக்கது.

'பிற' என்றதனானே வழக்கினுள் [4]நீயென்பது உன்னென்றும் [5]நீரென்பது உம்மென்றும் வரவும் பெறுமெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** இதுவும் அது.

**இ—ள்.:** இங்ஙனம் கூறிய இருதிணைப் பொதுவாய மூவிடப்பெயர் ஏழோடும் ஆறுருபும் புணருமிடத்துத் தான் தாம் நாம் என்னும் மூன்று பெயரும் நெடில் முதல் குறுகி, முறையே தன்னை தம்மை நம்மை என வரும்; யான் யாம் நீ நீர் என்னும் நான்கு பெயரும் முறையே என்னை எம்மை நின்னை நும்மை என வரும் ; இவ்வேழு பெயரோடும் குவ்வுருபு புணருமிடத்து, இடையே தனக்கு என அகரச் சாரியை வரும். குவ்வுருபின் அகரச் சாரியை வரினும், ஆறாம் உருபு உயிர்கள் வரினும், இவ்வேழு விகாரமொழிகளின் இறுதியவாய தனிக்குறில் முன் ஒற்றுக்கள் இரட்டாவாம், **எ—று.**

---

**பாட வேறுபாடு.:—** 1..புணர்விடத்து இவ்விடையே

2. முற்கூறியகுற்றொற்று

3.அகரம்வர ஈற்றுக் ககர வொற்று மிக்கது

4..நீயென்பதற்கு

5..நீரென்பதற்கு

ஒழிந்த உருபுகளோடும் இவ்வாறே ஒட்டுக.

பிற என்ற மிகையானே நீ என்பது உன்னை என்றும், நீர் என்பது உம்மை என்றும் வருதல் கொள்க. முன்னும் பின்னும் சாரியைப்பேறு கூறுவார் சாரியை பெறாது விகாரப்படு மொழிகளை இச் சூத்திரத்தால் தோன்ற இடையே கூறியது, இப் பொதுப்பெயர்களே இங்ஙனம் தம் நம் நும் எனக் கூறிய சாரியை யிடைச்சொல்லுமாயின என உய்த்துணர்தற்கு என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், தான் தாம், நாம், யான், யாம், நீ, நீர் என்னும் இவ்வேழு பெயரும் இன்னவாறு முடிக்கவென்பது கூறியது.

இ–ள்.:– **தான் தாம் நாம் முதல் குறுகும்** – தான், தாம், நாம் என்னும் இம் மூன்று சொல்லின் முதனின்ற நெட்டெழுத்துக் குறுகும், **யான் யாம் நீ நீர்** – யானென்றும் யாமென்றும் நீயென்றும் நீரென்றும் வரும் இந்நான்கு சொல்லும், **என் எம் நின் நும் ஆம்** – முறையே யான் என்னென்றும் யாம் எம்மென்றும் நீ நின்னென்றும் நீர் நும்மென்றும் கூறப்படும், பிற – பிறவுமாம்; அவை நீ உன்னென்றும் நீர் உம்மென்றும் வரும், **குவ்வின் அவ்வரும்** – அங்ஙனம் திரிந்து நின்றவிடத்து நான்காம் வேற்றுமைக் குவ்வுருபு புணருமிடத்து இடையே அகரச் சாரியை பெறும், **நான்கு ஆறு இரட்டல** – நான்காமுருபும் ஆறாமுருபும் புணருமிடத்து இடையே குற்றொற்று இரட்டாவாம்.

உ–ம்:–

தன்னை, தன்னொடு, தனக்கு, தன்னின், தனது, தன்கண், தம், நம், என், எம், நின், நும், உன், உம் சொற்களோடு உருபு பெற்றுத் திரிந்தது காண்க. தனக்கு, எனக்கு எனக் குவ்வின் அகரச் சாரியை வந்தவாறு காண்க. தனக்கு தனது என நான்கனுருபும் ஆறனுருபும் வரத் தனிக் குறில் முன் ஒற்று இரட்டாதவாறு காண்க.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ–ள்.: **தான் தாம் நாம்** – தான் முதலிய மூன்று பெயர்களும், **முதல் குறுகும்** – உருபுகள் புணருமிடத்து நெடுமுதல் குறுகி முறையே தன்னை தம்மை நம்மை என வரும், **யான் யாம் நீ நீர்**– யான் முதலிய நான்கு பெயர்களும், **என் எம் நின்னுமாம்** – உருபுகள் புணருமிடத்து முறையே

என்னை எம்மை நின்னை நும்மை என வரும், **குவ்வின்**– இவ்வேழு பெயரோடு குவ்வுருபு புணருமிடத்து, **அவ்வரும்** – நடுவே தனக்கு என அகரச் சாரியை வரும், **நான்கு** – குவ்வுருபின் அகரச் சாரியை வரினும், **ஆறு** –ஆறாமுருபுகள் வரினும், **இரட்டல்** – அவ்வேழு சொற்களிலு மிறுதியாகிய தனிக் குறின் முன்னொற்றுக்கள் இரட்டாவாம், எ–று.

ஒழிந்த உருபுகளோடும் இப்படியே ஒட்டுக. (பிற வென்றமையால் நீ –உன்னை எனவும், நீர் உம்மை எனவுந் திரிந்து வருதலுங் கொள்க)

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

உருபுகளாறும் புணருமிடத்து நெடுமுதல் குறுகும் பெயர்களும் வேறாகத் திரியும் பெயர்களு மிவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

தான்றா நா முதல் குறுகும் யான் யாம்
நீ நீர் என் எம் நின் நு மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிட்டல.

(தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்
நீநீர் என் எம் நின் நும் ஆம் பிற
குவ்வின் அவ்வரும் நான்கு ஆறு இரட்டல்

இ–ள்.: **தான் தாம் நாம் முதல் குறுகும்** – தான் தாம் நாம் என்னுமூன்று பெயர்களும் உருபுகள் புணருமிடத்து நெடுமுதல் குறுகி முறையே தன் தம் நம் என வரும், **யான் யாம் நீ நீர் என் எம் நின் நும் ஆம்** – யான் யாம் நீ நீர் என்னு நான்கு பெயர்களும் உருபுகள் புணருமிடத்து முறையே என் எம் நின் நும் எனத் திரியும். **குவ்வின் அவ்வரும்** – இவ்வேழு பெயரோடும் குவ்வுருபு புணருமிடத்து நடுவே அகரச்சாரியை வரும், **நான்கு ஆறு இரட்டல** – இவ்வேழு விகாரமொழிகளோடு நான்கனுருபும் ஆறனுருபும் புணருமிடத்துத் தனிக்குறின் முன்னொற்றுக்கள் இரட்டாவாம், எ–று.

முதல் குறுகும் பெயர்கள் யாவை?

''தான் தாம் தாம் முதல் குறுகும்''

வேறாகத் திரியும் பெயர்கள் யாவை?

''யான், யாம், நீ, நீர், என், எம், நின், நும், ஆம்''

இவ்வேழும் குவ்வுருபேற்குமிடத்து இடையே வரும் சாரியை யாது?

'குவ்வின் அவ்வரும்'

ஆறனுருபும் அகரச் சாரியையோடு கூடிய நான்கனுருபும் வரின் இவ்வேழும் எவ்வாறு புணரும்?

உ–ம்.:–

(1) தான் – ஐ – தன்னை

தாம் – ஐ – தம்மை

நாம் – ஐ – நம்மை எனவும்,

யான் – ன் – என்னை

யாம் – ஐ – எம்மை

நீ – ஐ – நின்னை

நீர் – ஐ – நும்மை எனவும் வரும். ஒழிந்த உருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

(2) தான் – அ – கு – தனக்கு

தாம் – அ – கு – தமக்கு எனக் குவ்வுருபு புணருமிடத்து அகரச்சாரியை பெற்றன.

(3) தன் – அ – கு – தனக்கு எனவும்,தனது,தனாது,தன எனவும் அகரச் சாரியையும் ஆறாம் வேற்றுமை உருபுகளும் வந்த இடத்தும் தனிக் குற்றொற்றிரட்டாவாயின.

பிற என்ற மிகையால் நீ,நீர் என்பன முறையே உன் உம் எனவும் திரிந்து வருதல் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, எய்தியதன் மேற் சிறப்பு விதியும், எய்தியது விலக்கலு முணர்த்திற்று.

இ–ள்.: தான் றாநாமுதல் குறுகும் – (இங்கே சொல்லப்பட்ட திணைப்பொதுவாகிய மூவிடப் பெயரேழோடும் ஆறுருபும் புணரு மிடத்து) தான் தாம் நாம் என்னும் மூன்று பெயரும் நெடுமுதல் குறுகிய முறையே தன்னை, தம்மை, நம்மை என வரும். யான் யாம் நீ நீர் – இந்த நான்கு பெயரும் முறையே, என் நின் நும்மாம் – என்னை எம்மை நின்னை நும்மை என வரும். ஒழிந்த வுருபுகளோடு மொட்டுக. குவ்வினவ் வரும் – இந்த ஏழு பெயரோடுங் குவ்வுருபு புணரும்போது இடையிலே தனக்கு தமக்கு என அகரச் சாரியை வரும். ஒழிந்த சொற்களோடு மொட்டுக. நான்காறிரட்டல

**குவ்வுருபின்** – அகரச் சாரியை வரினும் ஆறாம் வேற்றுமை யுருபுயிர்கள் வரினும் இவ்வேழு விகாரமொழிகளின் இறுதியிலுள்ளனவாகிய தனிக்குறின் முன்னொற்றுக்க ளிரட்டித்து நில்லாவாம், **எ–று.**

'பிற'வென்றதினாலே, நீயெனப்பது உன்னை யெனவும், நீர் என்பது உம்மை யெனவும், வருதல் கொள்க. முன்னும் பின்னுஞ் சாரியை பெறுவது சொல்ல வந்தவர், சாரியை பெறாது விகாரப்படு மொழிகளை யிச் சூத்திரத்தினாலே யிடையிலே தோன்றக் கூறிபது எதற்காக வெனின், இந்தப் பொதுப்பெயர்களே யிப்படித் தம், நம், நும் எனக் கூறிய சாரியை யிடைச்சொற்களுமாயின வெனமனதூன்றி யுணர்தற்காக வென்க. இச் சூத்திரத்தில் 'நான்காறிரட்டல' வென்ற ஒன்றும் எய்தியது விலக்கல். இச் சூத்திரத்தை நான்கு முடிபாக முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– (உருபுகள் புணருமிடத்து), **தான் தாம் நாம்** – இம்மூன்று பெயர்களும், **முதல் குறுகும்** – முதல் நெடில் குறுகி (முறையே தன் தம் நம் என) வரும்; **யான் யாம் நீ நீர்** – இந் நான்கு பெயர்களும், **என் எம் நின் நும் ஆம்** – (முறையே) என் எம் நின் நும் எனவரும்; **குவ்வின்** – (இவ்வெழு பெயரோடும்) குவ்வுருபு புணருமிடத்து, **அ வரும்** – (நடுவில்) அகரச் சாரியை வரும்; **நான்கு** – நான்காம் வேற்றுமை யுருபு வந்து புணரும் போது அகரச் சாரியையுயிர் வந்தாலும், **ஆறு** – ஆறாம் வேற்றுமை உருபுகளின் முதலுயிர்கள் வந்தாலும், **இரட்டல** – (அவ்வேழு விகாரமொழிகளிலும் இறுதியாகிய தனிக்குறில் முன்னொற்றுக்கள்) இரட்டாவாம்.

உதாரணம்:–

| | | | |
|---|---|---|---|
| தான் + ஐ = தன்னை | | யான் + ஐ = என்னை | என், எம், |
| தாம் + ஐ = தம்மை | முதல் | யாம் + ஐ = எம்மை | நின், நும் |
| நாம் + ஐ = நம்மை | குறுகின | நீ + ஐ = நின்னை | எனத் திரிந் |
| மற்றையுருபுகளோடுங் கூட்டுக. | | நீர் + ஐ = நும்மை | தன. |

தான் + கு = தன் + அ + கு = தனக்கு என கு வர அகரச்சாரியை பெற்றுத் தனிக்குறில் முன்னொற்று இரட்டாதாயிற்று.

தான் + அது = தன் + அது = தனது
தான் + ஆது = தன் + ஆது = தனாது
தான் + அ = தன் + அ = தன

என ஆறாம்வேற்றுமை உருபுகள் புணருமிடத்துத் தனிக்குறில் முன்னொற்று இரட்டாதாயிற்று.

குறிப்பு:–

'தன்னுடைய' என்பதில் 'உடைய' என்றது சொல்லுருபாதலின் தனிக்குறில் முன்னொற் றிரட்டாமை அதற்குப் பொருந்தாதென்க.

'பிற' என்றதனால் 'நீ' என்பது 'உன்' எனவும், 'நீர்' என்பது 'உம்' எனவும் திரிந்து வருதல் கொள்க. 'நுன்' என வழங்குவது திசைச்சொல்.

சாரியை பெறும் மொழிகளை முன்னும் பின்னும் கூறிச் சாரியை பெறாது விகாரப்படுமவற்றை இங்கு இடையிற் கூறியது, 'தம்' முதலிய இவ்விகாரப் பொதுப் பெயர்களே சாரியைகளுமாம் என்றறிவித்தற் கென்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: தான் தாம் நாம் முதல் குறுகும்** – தான் தாம் நாம் என்னு மூன்று பெயர்களும் உருபுகள் புணருமிடத்து நெடுமுதல் குறுகி முறையே தன் தம் நம் என வரும், **யான் யாம் நீ நீர் என் எம் நின் நும் ஆம்** – யான் யாம் நீ நீர் என்னு நான்கு பெயர்களும் உருபுகள் புணருமிடத்து முறையே என் எம் நின் நும் எனத் திரியும், **குவ்வின் அவ்வரும்** – இவ்வேழு பெயரோடு குவ்வுருபு புணருமிடத்து நடுவே அகரச் சாரியை வரும், **நான்கு ஆறு இரட்டல்** – குவ்வுருபின் அகரச் சாரியை வரினும் ஆறாம் வேற்றுமை யுருபுயிர்கள் வரினும் இவ்வேழு விகாரமொழிகளினி றுதியிலுள்ளன வாகிய தனிக்குறின் முன்னொற்றுக்கள் இரட்டாவாம். எ–று.

உ – ம்.:–

(1) தான் + ஐ = தன்னை, தாம் + ஐ = தம்மை,
நாம்+ஐ = நம்மை. எனவும்,
யான் +ஐ = என்னை, யாம் +ஐ = எம்மை,
நீ+ஐ = நின்னை, நீர்+ஐ = நும்மை
எனவும் வரும். ஒழிந்த உருபுகளோடும் இப்படியே யொட்டுக.

(2.) தனக்கு, தமக்கு எனக் குவ்வுருபு புணருமிடத்து அகரச் சாரியை பெற்றன.

(3) தனக்கு எனவும், தனது, தனாது, தன எனவும் அகரச் சாரியையும் ஆறாம் வேற்றுமை யுருபுயிர்களும் வந்தவிடத்துந் தனிக்குற்றொற் றிரட்டாவாயின.

பிற என்ற மிகையால், நீ நீர் என்பன முறையே உன் உம் எனவுந் திரிந்து வருதல் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். தான் தாம் நாம் முதல் குறுகும்** – தான் தாம் நாம் என்னு மூன்று பெயர்களும் உருபுகள் புணருமிடத்து நெடுமுதல் குறுகி முறையே தன் தம் நம் எனவரும், – **யான் யாம் நீ நீர் என் எம் நின் நும்ஆம்** – யான் யாம் நீ நீர் என்னு நான்கு பெயர்களும் உருபுகள் புணருமிடத்து முறையே என் எம் நின் நும் எனத்திரியும், **குவ்வின் அவ்வரும்** – இவ்வெழுபெயரோடு குவ்வுருபு புணருமிடத்து நடுவே அகரச்சாரியை வரும், – **நான்கு ஆறு இரட்டல** – குவ்வுருபின் அகரச்சாரியை வரினும் ஆறாம் வேற்றுமை யுருபுயிர்கள்வரினும் இவ்வேழு விகாரமொழிகளினிறுதியி லுள்ளனவாகிய தனிக்குறின் முன்னொற்றுக்கள் இரட்டாவாம். எ–று.

உ–ம்.:–

(1) தான் + ஐ = தன்னை, தாம் + ஐ = தம்மை, நாம் + ஐ= நம்மை. எனவும் யான் + ஐ = என்னை, யாம் + ஐ = எம்மை, நீ + ஐ = நின்னை, நீர் + ஐ = நும்மை. எனவும் வரும். ஒழிந்த உருபுகளோடும் இப்படியே யொட்டுக.

(2) தனக்கு, தமக்கு எனக் குவ்வுருபு புணருமிடத்து அகரச்சாரியை பெற்றன.

(3) தனக்கு, எனவும் தனது, தனாது, தன. எனவும் அகரச்சாரியையும் ஆறாம் வேற்றுமை யுருபுயிர்களும் வந்தவிடத்துந் தனிக்குற்றொற் றிரட்டாவாயின.

பிற என்றமிகைபால், நீ நீர் என்பன முறையே உன் உம் எனவும் திரிந்து வருதல் கொள்க.

## வை. மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: (1) (உருபுகள் புணருமிடத்து), **தான் தாம் நாம்** –இம் மூன்று பெயர்களும், **முதல் குறுகும்** – முதல் நெடில் குறுகி (முறையே தன் தம் நம் என) வரும்; (2) **யான் யாம் நீ நீர்** – இந்நான்கு பெயர்களும், **என் எம் நின் நும் ஆம்** – (முறையே) என் எம் நின் நும் என வரும்; (3) **குவ்வின்** – (இவ்வேழு பெயரோடும்) குவ்வுருபு புணருமிடத்து, **அ வரும்** – (நடுவில்) அகரச் சாரியை வரும்; (4) **நான்கு** – நான்காம் வேற்றுமையுருபு புணரும்போது அகரச் சாரியையின் உயிர் வந்தாலும், **ஆறு** – ஆறாம்

வேற்றுமை யுருபுகளின் முதல் உயிர்கள் வந்தாலும், இரட்டல் – (அவ்வேழு விகாரமொழிகளிலும், இறுதியாகிய தனிக்குறில் முன்னொற்றுக்கள்) இரட்டாவாம், எ–று.

உ–ம்.:–

(1) தான் + ஐ = தன்னை, தாம் + ஐ = தம்மை,
நாம் + ஐ = நம்மை – முதல் குறுகின.

(2) யான் + ஐ = என்னை, யாம் + ஐ = எம்மை,
நீ+ ஐ = நின்னை, நீர் + ஐ = நும்மை – என்,
எம், நின், நும் எனத் திரிந்தன.

(3) தான் + கு = தனக்கு - கு வர அகரச் சாரியை பெற்றது.

(4) தன் + அ+கு = தனக்கு,
தன் +அது = தனது
தன் +ஆது = தனாது

தன் + அ = தன – நான்காம் வேற்றுமையில் அகரச் சாரியை பெறுமிடத்தும், ஆறாம் வேற்றுமை யுருபு உயிர்கள் புணருமிடத்தும் தனிக் குறில் முன்னொற்று இரட்டாதாயிற்று.

'தன்னுடைய' என்பதில் உடைய என்பது சொல்லுருபாதலின், தனிக்குறில் முன்னொற்று இரட்டாமை அதற்குப் பொருந்தாதாம்.

'பிற' என்றதனால், நீ என்பது உன் எனவும், நீர் என்பது உம் எனவும் திரிந்து வருதல் கொள்க. 'நுன்' என வழங்குவது, திசைச்சொல்.

இனி, நீர் என்பது 'நீம்' எனத் திரிதலும், இங்கு 'பிற' என்றதனாலேயே கொள்ளப்பட வேண்டும். நீம் என்பது – சிறுபான்மை செய்யுளில் தனியாகவும், பெரும்பான்மை செய்யுளிலும் வழக்கிலும் 'கள்' என்னும் விகுதியோடு சேர்ந்து 'நீங்கள்' என்றும் பயிலும். இனி, இதனை மரூஉ மொழியில் அடக்குதலும் ஒன்று.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள்.:— தான் தாம் நாம் முதல் குறுகும் —** தான் தாம் நாம் என்னு மூன்று பெயர்களும் உருபுகள் புணருமிடத்த நெடுமுதல் குறுகி முறையே தன் தம் நம் என வரும். **யான் யாம் நீ நீர் என் எம் நின் நும் ஆம் —** யான் யாம் நீ நீர் என்னு நான்கு பெயர்களும் உருபுகள் புணருமிடத்து முறையே என் எம் நின் நும் எனத் திரியும். **குவ்வின் அவ்வரும் —** இவ்வேழு பெயரோடு குவ்வுருபு புணருமிடத்து நடுவே அகரச் சாரியை வரும். **நான்கு ஆறு இரட்டல —** குவ்வுருபின் அகரச்சாரியை வரினும் ஆறாம் வேற்றுமை யுருபுயிர்கள் வரினும் இவ்வேழு விகாரமொழிகளி னிறுதியிலுள்ளனவாகிய தனிக்குறின் முன்னொற்றுக்கள் இரட்டாவாம். **எ—று.**

**உ—ம்.;—**

(1) தான் + ஐ = தன்னை, தாம் + ஐ = தம்மை,
நாம் + ஐ = நம்மை.
யான் + ஐ = என்னை, யாம் + ஐ = எம்மை,
நீ + ஐ = நின்னை,
நீர் + ஐ = நும்மை. ஒழிந்த உருபுகளோடும்
இப்படியே பொட்டுக.

(2) தனக்கு, தமக்கு — எனக் குவ்வுருபு
புணருமிடத்து அகரச்சாரியை பெற்றன.

(3) தனக்கு; தனது, தனாது, தன — என
அகரச்சாரியையும் ஆறாம் வேற்றுமை
யுருபுயிர்களும் வந்தவிடத்துந் தனிக்குற்றொற்
றிரட்டாவாயின.

'பிற' என்ற மிகையால், நீ நீர் என்பன முறையே உன்
உம் எனவுந் திரிந்து வருவனவும் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள்.;— தான் தாம் நாம் —** தான் முதலிய மூன்று பெயர்களும், **முதல் குறுகும் —** (உருபுகள் புணருமிடத்து நெட்டெபத்துக்களாகிய) முதல் குறுகி (முறையே தன் தம் நம் என) வரும்; **யான் யாம் நீ நீர் —** யான் முதலிய நான்கு பெயர்களும், **என் எம் நின் நும் ஆம் —** (உருபுகள் புணருமிடத்து (முறையே) என் எம் நின்நும் என வரும்; **குவ் வின் —** (இவ்வெழு பெயரோடும்) குவ்வுருபு புணருமிடத்து, **அ வரும் —** (நடுவே) அகரச்சாரியை வரும்; **நான்கு —** நான்காம் வேற்றுமையின் குவ்வுருபின்

கண் அகரச் சாரியை வரினும், ஆறு – ஆறாம் வேற்றுமை யுருபுயிர்கள் வரினும், இரண்டல– (அவ்வேழு சொற்களிலு மிறுதியாகிய தனிக் குறின் முன்னோற்றுக்கள்) இரண்டாவாம்.,எ–று

பொ–ரை:–

தான், தாம், நாம் ஆகிய மூன்று பெயரும், வேற்றுமை உருபைப் பெறும்போது தன், தம், நம் என நெடில் முதல் குறுகும்; யான், யாம், நீ, நீர் ஆகிய நான்கு பெயர்களும் வேற்றுமை உருபுகளைப் பெறும்போது, என், எம், நின், நும் என வரும்; இவ்வேழு பெயரோடும் கு உருபு புணர்ந்தால் நடுவே, அகரச்சாரியை வரும்; கு உருபின்கண் அகரச்சாரியை வந்தாலும் ஆறாம் வேற்றுமை யுருபுயிர்கள் வந்தாலும், இவ்வேழு சொற்களிலும் இறுதியாகிய தனிக்குறில் முன் ஒற்றுக்கள் இரட்டாவாம்.

உ–ம்.:–

தான் + ஐ = தன்னை. – முதல் குறுகின.

தான் + ஆல் = தன்னால்.

தாம் + ஐ = தாம்மை.

தாம் + ஆல் – தம்மால்.

நாம் + ஐ = நம்மை.

நாம் + ஆல் = நம்மால்.

மற்ற உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

யான் + ஐ – என்னை. – என், எம், நின், நும் எனத் திரிந்தன.

யான் + ஆல் = என்னால்.

யாம் + ஐ = எம்மை.

யாம் + ஆல் = எம்மால்.

நீ + ஐ = நின்னை.

நீ + ஆல் = நின்னால்.

நீர் + ஐ = நும்மை.

நீர் + ஆல் = நும்மால்.

மற்ற உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

தான் + கு = தனக்கு. – நான்காம் வேற்றுமையில் அகரச்சாரியை பெறுமிடத்தும் அது உருபு புணருமிடத்தும் தனிக்குறின் முன்றொற்று இரட்டாவாயின.

தான் + அது = தனது.

தான் + அது = தனது.

தாம் + கு = தமக்கு.

தாம் + அது = தமது.

நாம் + கு = நமக்கு.

நாம் + அது = நமது.

யான் + கு = எனக்கு.

யான் + அது = எனது.

யாம் + ஐ = எம்மை.

யாம் + ஆல் = எம்மால்.

நீ + ஐ = நின்னை.

நீ + ஆல் = நின்னால்.

நீர் + ஐ = நும்மை.

நீர் + ஆல் = நும்மால்.

மற்ற உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

தான் + கு = தனக்கு. – நான்காம் வேற்றுமையில் அகரச்சாரியை பெறுமிடத்தும் அது உருபு புணருமிடத்தும் தனிக்குறின் முன்றொற்று இரட்டாவாயின்.

தான் + அது = தனது.

தாம் + கு = தமக்கு.

தாம் + அது = தமது.

நாம் + கு = நமக்கு.

நாம் + அது = நமது.

யான் + கு = எனக்கு.

யான் + அது = எனது.

யாம் + கு = எமக்கு.

யாம் + அது = எமது.

நீ + கு = நினக்கு.

நீ + அது = நினது.

நீர் + கு = நுமக்கு.

நீர் + அது = நுமது.

பிற என்றமையால் நீ – உன்னை எனவும், நீர் – உம்மை எனவும் திரிந்து வருதலும் கொள்க.

நுன் என வழங்குவது திசைச்சொல். இனி, நீர் என்பது நீம் எனத் திரிதலும் இங்கு, பிற என்றதனாலே கொள்ளப்படவேண்டும். நீம் என்பது சிறுபான்மை செய்யுளில் தனியாகவும், பெரும்பான்மை செய்யுளிலும், வழக்கிலும் கள் என்னும் விகுதியோடு சேர்ந்து 'நீங்கள்' என்றும் பயிலும். இனி, இதனை மரூஉ மொழியி லடக்குதலுமொன்று.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) தான்தாம் நாம்– தான் தாம் நாம் என்னும் மூன்று பெயர்களும், முதல்குறுகும் – (உருபுகள் புணருமிடத்து நெடில்) முதல் குறுகி முறையே தன் தம் நம் என வரும்;

(2) யான் யாம் நீ நீர்– யான் யாம் நீ நீர் என்னும் நான்கு பெயர்களும், என் எம் நின் நும் ஆம் – (உருபுகள் புணருமிடத்து முறையே) என் எம் நின் நும் என வரும்;

(3) குவ்வின் – (இவ்வேழு பெயரோடு) குவ்வுருபு புணருமிடத்து, அவ்வரும்– (நடுவே) அகரச்சாரியை வரும்.

(4) நான்கு – நான்காம் வேற்றுமை உருபாகிய குவ்வுருபு புணருமிடத்து அகரச்சாரியை வரினும், ஆறு – ஆறாம் வேற்றுமை உருபுகள் வரினும், இரட்டல் – (அவ்வேழு சொற்களிலும் இறுதியாகிய தனிக்குறின்முன் ஒற்றுக்கள்) இரட்டாவாம்.

உதாரணம்:–

| | | | | |
|---|---|---|---|---|
| (1) தான் | + | ஐ | = | தன்னை |
| | + | ஆல் | = | தன்னால் |
| தாம் | + | ஐ | = | தம்மை |
| | + | ஆல் | = | தம்மால் |
| நாம் | + | ஐ | = | நம்மை |
| | + | ஆல் | = | நம்மால் |

'தான்' முதலியவை முதல் குறுகின.

| | | | | |
|---|---|---|---|---|
| (2) யான் | + | ஐ | = | என்னை |
| | + | ஆல் | = | என்னால் |
| யாம் | + | ஐ | = | எம்மை |
| | + | ஆல் | = | எம்மால் |
| நீ | + | ஐ | = | நின்னை |
| | + | ஆல் | = | நின்னால் |
| நீர் | + | ஐ | = | நும்மை |
| | + | ஆல் | = | நும்மால் |

'யான்' முதலியவை திரிந்தன.

மற்றை உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

| | | | | |
|---|---|---|---|---|
| (3) தான் | + | கு | = | தனக்கு |
| யான் | + | கு | = | எனக்கு |

'கு' உருபு அகரச்சாரியை பெற்றது

இவ்வாறே பிற பெயர்களோடும் கூட்டுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (4) தன் | + | அ | + | கு | = | தனக்கு |
| | | | + | அது | = | தனது |
| தம் | + | அ | + | கு | = | தமக்கு |
| | | | + | அது | = | தமது |
| நம் | + | அ | + | கு | = | நமக்கு |
| | | | + | அது | = | நமது |
| என் | + | அ | + | கு | = | எனக்கு |
| | | | + | அது | = | எனது |
| எம் | + | அ | + | கு | = | எமக்கு |
| | | | + | அது | = | எமது |
| நின் | + | அ | + | கு | = | நினக்கு |
| | | | + | அது | = | நினது |
| நும் | + | அ | + | கு | = | நுமக்கு |

நம் + அது = நுமது

நான்காம் வேற்றுமையில் வரும் அகரச்சாரியையும், ஆறாம் வேற்றுமை உருபும் புணருமிடத்துத் தனிக் குறின் முன்னொற்று இரட்டாவாயின.

'பிற' என்றமையால், நீ – உன்(னை) எனவும், நீர் – உம்(மை) எனவும் திரிந்து வருதலுங் கொள்க.

நீம் என்னும் திசைச்சொல், 'கள்' விகுதி பெற்று நீங்கள் என வழங்குகின்றது.

## மோசசு பொன்னையா

உருபு புணர்ச்சியில் தான், தாம், நாம் என்னும் மூன்று பெயர்களும் நெடு முதல் குறுகி முறையே தன், தம், நம் எனவரும்; யான், யாம், நீ, நீர், என்னும் நான்கு பெயர்களும் முறையே என் எம், நின் நும் எனத் திரிந்து வரும். இவ்வேழும் பிறவும் நிற்க, அவற்றோடு குவ்வுருபு புணருமிடத்து இடையில் அகரச் சாரியை வரும். குவ்வுருபின் அகரச் சாரியை வரினும் ஆறாம் வேற்றுமை உருபுயிர்கள் வரினும், இவ்வேழு விகார மொழிகளின் இறுதியிலுள்ளனவாகிய தனிக்குறில் முன் ஒற்றுக்கள் இரட்டாவாம், எ–று.

எ–டு.:–

தன்னை, தம்மை, நம்மை – தான், தாம், நாம் முதல் குறுகின.

என்னை, எம்மை, நின்னை, நும்மை – யான், யாம், நீ, நீர் திரிந்தன.

மற்றை உருபுகளோடும் இவ்வாறே அமைக்க.

தனக்கு – குவ்வுருபு வர அகரச் சாரியை பெற்றது.

தனக்கு, தனது, தன – குவ்வுருபின் அகரச் சாரியையும், ஆறன் உயிர்களும் வரத் தனிக்குறில் முன் ஒற்று இரட்டாதாயிற்று.

பிற என்றதனால், நீ, நீர் என்பன முறையே, உன், உம எனத் திரிந்து உன்னை, உம்மை என வருதலையுங் கொள்க.

இவ்வாசிரியர் நெடுமுதல் குறுகி வரும் இம்மொழிகளின் முன்னர் வரும் ஆறன் உருபின் அகரம் ஏறி முடியும் என்று கூறியுள்ளது தொல்காப்பியர் கொள்கையோடு முரண்பட்டுள்ளது. அவர்,

*'ஆறன் உருபினும் நான்கன் உருபினுங்*
*கூறிய குற்றொற் றிரட்ட லில்லை*

*ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்*

*நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான'*

எனவும்,

*'நும்மெ னிறுதியும் அந்நிலை திரியாது'*

எனவும் கூறி ஆறன், நான்கன் உருபுகளின் புணர்ச்சிகளுக்குத் தொகைமரபில் பொதுவாக அகரச் சாரியைப் பேறு விதித்தார். அவை புணரியலில்,

*'ஆறன் உருபின் அகரக் கிளவி*

*ஈறா ககரமுனை கெடுதல் வேண்டும்'*

என்று கூறியதனோடு பொருந்த அமைந்தன. அகரக் கேடு அது உருபு ஒன்றிற்கே என்பது ஆறன் உருபில் அகரக்கிளவி ஓர் உறுப்பு என்று உடலொடு புணர்த்திக் கூறும் இந் நூற்பாவால் தெளிவுறும். எனவே, நினவ, எனவ என்றிவ்வாறு ஆறன் அகர உருபு அகரச் சாரியை பெற்று நின்று புணருவது 'ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்' என்ற விதியால் அமைந்துள்ளது.

இவ்வாசிரியர் அகரச் சாரியைப் பேற்றை நான்கன், உருபொன்றிற்கே விதித்து ஆறனுருபிற்கு விதியாததால் நினவ எனவ என்பன போன்று அகரச் சாரியை பெற்று ஆறன் அகர உருபேற்று முடிந்து நிற்குமவற்றை அமைத்துக் காட்டல் கூடாததாயினமை அறிக.

இனி, 'ஈறா ககரமுனை கெடுதல் வேண்டும்' என்ற நூற்பாவில், 'வேண்டும்' என்றதனால், அவ்வாறு கெடாது வழங்குவதும் உண்டு என்பது அவர்க்கு உடம்பாடு எனல் போதரும். தனாது, எனாது என்பன அவ்வாறுகெடாத அகர உயிரும் சாரியை அகரமும் கூடி நெடிலாக நின்றதன் விளைவு எனலாம். அதனைக் கண்டு இவ்வாசிரியர் ஆது என்பதும் ஆறன் உருபே எனக் கொண்டார் ஆதலின், அதற்கும் பொருந்த இவ்வாறு நூற்பா செய்தார் போலும் எனலும் ஒன்று.

247. ஆமா கோனவ் வணையவும் பெறுமே

ஆ மா கோன் அவ் அணையவும் பெறுமே

ā mā kōṉ av aṇaiyavum peṟumē

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Special rule for a, ma, ko**

The Nouns a, ma and ko(on being declined) may also add (the increment) n.

## ஒப்புமைப் பகுதி

மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன
அகரம் வல்லெழுத் தவையவன் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும்

(தொல். எழு.: 232)

ஆமா கோனவ் வணையவும் பெறுமே

(இ.வி.: 151)

ஆமா னகரமெய் யடையப் பெறுமே

(மு.வீ. : 256)

ஆனொற் றகரமொடு நிலையிட னுடைய

(மு.வீ.: 257)

## மயிலை நாதர்

எ–ன், ஒருசாரன சாரியை பெறுமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இம் மூன்று பெயரும் னகரச் சாரியை பெறவுங் கூடும், எ – று.

ஆவுடனே ஓதினமையான் [1]ஓரினம் பற்றி மாவென்றது விலங்கு மாவை யெனக் கொள்க.

---

பாட வேறுபாடு:–

1. ஓரிடம் பற்றி

வ—று.: ஆனை, மானை, கோனை என வரும்.

உம்மையால், ஆவை, மாவை, கோவை எனவும், இன் சாரியை பெற்று, ஆவினை மாவினை கோவினை எனவும், வருமெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், இதுவும் அது.

இ—ள்.: ஆ என்னும் பெயரும், மா என்னும் விலங்கின் பொதுப்பெயரும், கோ என்னும் இறைவனை உணர்த்தி நிற்கும் பெயரும் உருபுகள் புணருமிடத்து, னகரச் சாரியை பொருந்தவும் பெறும், எ—று.

உ—ம்.: ஆனை, ஆவை; மானை, மாவை; கோனை, கோவை என விகற்பித்து வருதல் காண்க. பிறவற்றோடும் இவ்வாறே ஒட்டுக.

எதிரது தழீஇய எச்சவும்மையானே, குவ்வுருபிற்கு னகரச் சாரியை ஒன்றுமே அமைபாது ஆனுக்கு மானுக்கு கோனுக்கு என உகரச் சாரியை உடன்பெறுதலும், ஆவுக்கு மாவுக்கு கோவுக்கு என உகரச் சாரியை ஒன்றுமே பெறுதலும், ஆவினுக்கு மாவினுக்கு கோவினுக்கு என இன் சாரியையும் உகரச் சாரியையும் உடன்பெறுதலும், ஆவினை மாவினை கோவினை என இன்னென வரூஉம் வேற்றுமை யுருபு ஒழிந்தவற்றிற்கு இன்சாரியை பெறுதலும் கொள்க.

> இனி, இரட்டுறமொழிதலான் ஆமா என ஒரு சொல்லாய்க் காட்டு ஆவினை உணர்த்தி நின்று இவ்விதிகள் பெறுதலும், அணையவும் என்றொழியாது பெறுமே என்றமைபானே ஆன் மான் கோன் ஆமான் என னகரச் சாரியை தனிமொழிக்கண்ணும் வருதலும் கொள்க.
>
> ஆ என்பதனோடு கோ என்பதனைச் சார வையாது மா என்பதனைச் சார வைத்தமையானே, கோ என்பது இறைவனை உணர்த்தியது என்பதூஉம், மா என்பது விலங்குமா என்பதூஉம் பெற்றாம்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், ஆ, மா, கோ என்னும் இம் மூன்று சொல்லிற்கும் ஒருசார் சாரியை பெறுமாறு கூறியது.

இ–ள்.: ஆ மா கோ – ஆ, மா, கோ வென்னும் இம்மூன்று பெயரும், னவ்வணையவும் பெறுமே – னகரச் சாரியை பெறவும் கூடும், எ–று.

உ–ம்.:–

ஆன், மான், கோன் என வரும்.

உம்மையால் ஆவை, மாவை, கோவை எனவும் ஆவினை மாவினை கோவினை எனவும் வரும் . ஊ, ஊன் என்று வருவனவும் உள.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ–ள்.: ஆ –ஆ வென்கிற பசுவின் பெயரும், மா – மா வென்கிற விலங்கின் பொதுப்பெயரும், கோ–கோவென்கிற விறைவனை யுணர்த்தி நிற்கும் பெயரும், னவ்வணையவும் – உருபுகள் புணருமிடத்து னகரச் சாரியை பொருந்தவும், பெறும் – பெறும், எ–று.

உ–ம்.:–

ஆனை, ஆவை, மானை, மாவை, கோனை, கோவை, என விகற்பித்து வருதல் காண்க. மற்றவைகளோடு மிப்படியே ஒட்டுக. (அணையவும் என்ற வும்மையால், குவ்வுருபு புணரும்போது ஆனுக்கு என உகரச் சாரியையு முடன் பெறுதலும் ஆவுக்கு என வுகரச் சாரியை யொன்றே பெறுதலும், ஆவினுக்கு என இன் சாரியையுடன் உகரச் சாரியை பெறுதலும் ஆவினை என மற்றை யுருபுகள் புணரும்போது இன் சாரியை யொன்றுமே பெறுதலும், இரட்டுறமொழிதலால் ஆமா வொரு சொல்லாய்க் காட்டுப்பசுவை யுணர்த்தி நின்ற விடத்தும், ஆமானை, ஆமானுக்கு, ஆமாவினுக்கு என இவ் விதி பெறுதலும், அணையுமென் றொழியாது பெறுமென்றமையால் ஆன், மான், கோன், எனத் தனிமொழிக்கண்ணும் னகரச் சாரியை வருதலுங் கொள்க.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

நகரச் சாரியை பெற்று உருபேற்பன இவையெனக் கூறும் சூத்திரம் யாது?

ஆமா கோனவ் வணையவும் பெறுமே

(ஆ மா கோன் அவ் அணையவும் பெறுமே)

**இ–ள்.:–** ஆ மா கோ – ஆவென்னும் பசுவின் பெயரும் மாவென்னும் விலங்கின் பொதுப்பெயரும் கோ என்னும் இறைவனை உணர்த்தி நிற்கும் பெயரும் **னவ் வணையவும் பெறும் – உருபுகள் புணருமிடத்து னகரச்** சாரியை பொருந்தவும் பெறும், எ –று.

உ–ம்.:–

ஆனை, ஆவை, மானை, மாவை, கோனை, மோவை என விகற்பித்து வருதல் காண்க. மற்றை யுருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

அணையவும் பெறுமென்றதனாற் பெறக்கிடப்பது யாது?

அவை தனுமொழியாக நிற்குமிடத்தும் ஆன், கோன் என நிற்றலும் உண்டென்பது பெறப்படும்.

இன்னும் உம்மையால், குவ்வுருபு புணரும்போது, ஆனுக்கு, மானுக்கு, கோனுக்கு என உகரச் சாரியையும் உடன் பெறுதலும், ஆவுக்கு, மாவக்கு, கோவுக்கு என உகரச் சாரியை யொன்றே பெறுதலும், ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு என இன் சாரியையும் உகரச் சாரியையும் உடன்பெறுதலும் ஆவினை, மாவினை, கோவினை என இன்னுருபொழிந்த உருபுகள் புணரும்போது இன் சாரியை பெறுதலுங் கொள்க.

## முகவை இராமனுச கவிராயர்

இது, உருபு புணர்தற்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி யுணர்த்துகின்றது.

**இ–ள்.:–** **ஆ மா கோ–** இம் மூன்று பெயர்களும், **னவ்வணையவும் பெறும்** – உருபு புணர்தற்கு னகரச் சாரியை வந்தடையவும் பெறும், எ–று.

'அடையவு' மென்றவும்மையால் அடையாமையையும் பெறுமென்றதாயிற்று. ஆகவே விகற்பித்து வருமெனக் கொள்க.

உ–ம்.:–

ஆனை – ஆவை ; மானை – மாவை ; கோனை – கோவை என வரும். ஒழிந்த வுருபுகளோடு மிவ்வாறே யொட்டுக. இன்னு மவ்வும் மையை னவ்வணையவும் பெறும் பிற சாரியை யணையவும் பெறு மென **எதிரது தழுவிய எச்சவும்மை** யாக்கிக் குவ்வுருபிற்கு னகரச் சாரியை

யொன்று மேயமையாமல், ஆனுக்கு, மானுக்கு, கோனுக்கு என உகரச் சாரியையுமுடன் வருதலும்; ஆவுக்கு, மாவுக்கு என உகரச்சாரியை யொன்றேவருதலும்; ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு என இன் சாரியையு முகரச் சாரியையும் வருதலும்; ஆவினை, மாவினை என இன்னுரு பொழிந்தவற்றிற்கு இன் சாரியை வருதலுங் கொள்க. அணையுமென்று நிறுத்தாமல் 'அணையவும் பெறுமே' யென்ற மிகுதியினாலே ஆன், மான், கோன் என னகசரச் சாரியை தனிமொழியில் வருதலுங் கொள்க. ஆமா என விரண்டினையுஞ் சேர்த்துக் கோவென்பதை யிறுதியிலே வைத்ததினாலே யவை யிரண்டும் மிருகங்களை யுணர்த்து மென்பதும் மற்றையது அரசனையுணர்த்திய உயர்திணைப் பெயரென்பதும் பெறப்படும். எ–று.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** ஆ – 'ஆ' என்னும் பசுவின் பெயரும், மா – 'மா' வென்னும் மிருகத்தின் பொதுப்பெயரும், கோ – 'கோ' என்னும் தலைவனது பெயரும், ன அணையவும் – (உருபுகள் புணருமிடத்து) னகரச்சாரியை பொருந்தவும், பெறும்.

குறிப்பு :–

'அணையவும்' என்ற உம்மையால் அணையாம லிருக்கவும் பெறும் என்றதாயிற்று; ஆகவே, விகற்பித்து வருமெனக் கொள்க.

உதாரணம்:–

ஆ + ஐ = ஆனை, ஆவை
மா + ஐ = மானை, மாவை
கோ+ஐ = கோனை, கோவை – னகரச் சாரியை பெற்றும் பெறாதும் விகற்பித்தன. மற்றை உருபுகளோடுங் கூட்டுக.

இன்னும் 'னவ்வணையவும்' என்ற உம்மையால் – குவ்வுருபு புணரும்பொழுது 'ஆனுக்கு' என உகரச்சாரியையும் உடன் பெறுதலும்; 'ஆவுக்கு' என உகரச்சாரியை யொன்றே பெறுதலும், 'ஆவினை' என மற்றை உருபுகள் புணரும்பொழுது இன்சாரியை ஒன்றே பெறுதலுங் கொள்க.

இரட்டுற மொழிதல் என்னு முத்தியால் "ஆமா' என ஒரு சொல்லாய்க் காட்டுப் பசுவை யுணர்த்திநின்ற விடத்தும் 'ஆமானை', 'ஆமாவை', 'ஆமாவினை', 'ஆமானுக்கு', 'ஆமாவுக்கு', 'ஆமாவினுக்கு', என இவ்விதிபெறுதலுங் கொள்க. 'அணையபவும்', என நிறுத்தாமல், 'பெறும்' என்றதனால் 'ஆன்', 'மான்', 'கோன்' 'ஆமான்' எனத் தனிமொழியிலும் னகரச்சாரியை பெறுதலுங் கொள்க. 'ஆமா' என இரண்டையும் ஒன்று சேர்த்து 'கோன்' என்பதை இறுதியில் வைத்ததனால், முன்னவை அஃறிணை யென்பதும் பின்னது உயர்திணை யென்பதும் பெறப்படும். உரையிற்கோடலால் 'ஊ' என்பதும் ஊனை என னகரச்சாரியை பெறுதலுங் கொள்க. இனி, 'ஆன் நெய் தெளித்து' என னகரம் அகரத்தோடு வருதலைப் புறனடையாற் கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: ஆ மா கோ – ஆ வென்னும் பசுவின் பெயரும் மா வென்னும் விலங்கின் பொதுப்பெயரும் கோ வென்னும் இறைவனை யுணர்த்தி நிற்கும் பெயரும், **னவ்வணையவும் பெறும்** – உருபுகள் புணருமிடத்து னகரச் சாரியை பொருந்தவும் பெறும், எ–று.

உ–ம்.:–

ஆனை, ஆவை; மானை, மாவை; கோனை, கோவை என விகற்பித்து வருதல் காண்க. மற்றை யுருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

அணையவும் என்ற உம்மையால் குவ்வுருபு புணரும்போது, ஆனக்கு, மானுக்கு, கோனுக்கு என உகரச் சாரியையும் உடன்பெறுதலும், ஆவுக்கு, மாவுக்கு, கோவுக்கு என உகரச் சாரியை யொன்றே பெறுதலும், ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு என இன் சாரியையும் உகரச் சாரியையும் உடன் பெறுதலும், ஆவினை, மாவினை, கோவினை என இன்னுருபொழிந்த உருபுகள் புணரும்போது இன்சாரியை பெறுதலுங் கொள்க.

இனி, இரட்டுற மொழிதலால், ஆமா என ஒரு சொல்லாய்க் காட்டுப்பசுவை யுணர்த்தி நின்றவிடத்தும், ஆமானை, ஆமானுக்கு, ஆமாவினுக்கு என இவ் விதிகள் பெறுதலும், அணையுமென்றொழியாது பெறும்

என்றமையால், ஆன், மான், கோன், ஆமான் எனத் தனி மொழிக்கண்ணும் னகரச் சாரியை வருதலுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– ஆமாகோ –** ஆவென்னும் பசுவின் பெயரும் மாவென்னும் விலங்கின் பொதுப்பெயரும் கோவென்னும் இறைவனை யுணர்த்தி நிற்கும் பெயரும், **– னவ்வணையவும் பெறும் –** உருபுகள் புணருமிடத்து னகரச்சாரியை பொருந்தவும் பெறும். எ–று.

**உ–ம்.:–**

ஆனை, ஆவை; மானை, மாவை; கோனை, கோவை என விகற்பித்துபெறுதல் காண்க. மற்றை யுருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

அணையவும் என்ற உம்மையால், குவ்வுருபு புணரும்போது, ஆனுக்கு, மானுக்கு, கோனுக்கு என உகரச்சாரியையும் உடன் பெறுதலும், ஆவுக்கு, மாவுக்கு, கோவுக்கு என உகரச்சாரியை யொன்றே பெறுதலும், ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு என இன்சாரியையும் உகரச்சாரியையும் உடன் பெறுதலும், ஆவினை, மாவினை, கோவினை என இன்னுரு பொழிந்த வுருபுகள் புணரும்போது இன்சாரியை பெறுதலுங் கொள்க.

இனி, இரட்டுறமொழிதலால், ஆமா என ஒரு சொல்லாய்க்காட்டுப் பசுவையுணர்த்தி நின்ற விடத்தும், ஆமானை, ஆமானுக்கு, ஆமாவினுக்கு என இவ்விதிகள் பெறுதலும், அணையுமென் றொழியாது பெறும் என்றமையால், ஆன், மான், கோன், ஆமான் எனத் தனிமொழிக் கண்ணும் னகரச்சாரியை வருதலுங் கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:– அ –** ஆ என்னும் பசுவின் பெயரும், **மா –** மா என்னும் மிருகத்தின் பொதுப்பெயரும், **கோ –** கோ என்னும் தலைவனது பெயரும், **ன அணையவும் –** (உருபுகள் புணருமிடத்து) னகரச் சாரியை பொருந்தவும், **பெறும்.**

'அணையவும்' என்ற உம்மையால், அணையாமலிருக்கவும் பெறுமென்றதாயிற்று; ஆகவே, விகற்பித்து வருமெனக் கொள்க.

**உ-ம்.: -**

ஆ + ஐ = ஆனை, ஆவை; மா + ஐ = மானை, மாவை; கோ + ஐ = கோனை, கோவை - னகரச் சாரியை பெற்றும் பெறாதும் விகற்பித்தன; மற்றை யுருபுகளோடும் கூட்டுக.

இன்னும், 'னவ்வணையவும், என்ற உம்மையால் குவ்வுருபு புணரும் பொழுது ஆனுக்கு என உகரச் சாரியையும் உடன் பெறுதலும், ஆவுக்கு என உகரச் சாரியை ஒன்றே பெறுதலும், ஆவினுக்கு என இன் சாரியையுடன் உகரச் சாரியை பெறுதலும், ஆவினை என மற்றை யுருபுகள் புணரும்பொழுது இன் சாரியை ஒன்றே பெறுதலும் கொள்க. மா, கோ என்பனவும் இவ்வாறே.

இரட்டுறமொழிதலால், ஆமா என ஒரு சொல்லாய்க் காட்டுப்பசுவை உணர்த்தி நின்ற இடத்தும், ஆமானை, ஆமாவை, ஆமானுக்கு, ஆமாவுக்கு, ஆமாவினுக்கு, ஆமாவினை என இவ்விதி பெறுதலும் கொள்க.

அணையும் என்று நிறுத்தாமல் 'அணையவும் பெறும்' என்றதனால், ஆன், மான், கோன், ஆமான் எனத் தனிமொழியிலும் னகரச் சாரியை பெறுதலும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள்.:-**ஆ மா கோ - ஆவென்னும் பசுவின் பெயரும் மாவென்னும் விலங்கின் பொதுப்பெயரும் கோவென்னும் இறைவனை யுணர்த்திநிற்கும் பெயரும், னவ்வணையவும் பெறும் - உருபுகள் புணருமிடத்து னகரச்சாரியை பொருந்தவும் பெறும். எ-று.

**உ-ம். :-**

ஆ + ஐ = ஆனை, ஆவை; மா + ஐ = மானை, மாவை; கோ + ஐ = கோனை, கோவை - என விகற்பித்து வருதல் காண்க. மற்றையுருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

'அணையவும்' என்ற உம்மையால், குவ்வுருபு புணரும்போது, ஆனுக்கு, மானுக்கு, கோனுக்கு என உகரச்சாரியையும் உடன்பெறுதலும், - ஆவுக்கு, மாவுக்கு, கோவுக்கு என உகரச்சாரியை யொன்றே பெறுதலும், -

ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு என இன் சாரியையும் உகரச்சாரியையும் உடன் பெறுதலும், ஆவினை, மாவினை, கோவினை என இன்னுருபொழிந்த வுருபுகள் புணரும்போது இன் சாரியை பெறுதலுங் கொள்க.

இனி, இரட்டுறமொழிதலால், ஆமா என ஒருசொல்லாய்க் காட்டுப்பசுவை யுணர்த்தி நின்றவிடத்தும், ஆமானை, ஆமானுக்கு, ஆமாவினுக்கு என இவ்விதிகள் பெறுதலும், ஆணையுமென் றொழியாது 'பெறும்' என்றமையால், ஆன், மான், கோன், ஆமான் எனத் தனி மொழிக்கண்ணும் னகரச்சாரியை வருதலுங் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– ஆ–ஆ என்கிற பசுவின் பெயரும், மா– மா என்கிற விலங்கின் பொதுப்பெயரும், கோ – கோ என்கிற இறைவனை உணர்த்தி நிற்கும் பெயரும், ன **அணையவும் பெறும்** – (உருபுகள் புணருமிடத்து) னகரச்சாரியை பொருந்தவும் பெறும். எ–று.

பொ–ரை.:–

ஆ என்கிற பசுவின் பெயரும் மாஎன்கிற விலங்கின் பொதுப்பெயரும், கோ என்கிற அரசனை உணர்த்தி நிற்கும் பெயரும், உருபுகள் புணருமிடத்து னகரச்சாரியை பொருந்தவும் பெறும்.

எ–ம்.;–

ஆ + ஐ = ஆனை, ஆவை – னகரச்சாரியை பெற்றும், பெறாமலும் விகற்பித்து வந்தன.

மா + ஐ = மானை, மாவை

கோ + ஐ = கோனை, கோவை.

'அணையவும்' என்ற உம்மையால், குவ்வுருபு புணரும்போது ஆனுக்கு என உகரச் சாரியையு முடன் பெறுதலும், ஆவுக்கு என உகரச்சாரியை ஒன்றே பெறுதலும், ஆவினுக்கு என இன் சாரியையுடன் உகரச்சாரியை பெறுதலும், ஆவினை என மற்றையுருபுகள் புணரும்போது இன்சாரியை ஒன்றுமே பெறுதலும், இரட்டுற மொழிதலால், ஆமா, ஒருசொல்லாகக் காட்டுப்பசுவை யுணர்த்தி நின்ற விடத்தும், ஆமானை, ஆமானுக்கு, ஆமாவினுக்கு என

இவ்விதி பெறுதலும், அணையு மென் றொழியாது பெறும் என்றமையால் ஆன், மான், கோன் எனத் தனிமொழிக் கண்ணும் னகரச் சாரியை வருதலும் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

ஆ – (பசுவினை உணர்த்தும்) ஆ என்னும் பெயரும், மா – (விலங்கினை உணர்த்தும்) மா என்னும் பெயரும், கோ – (அரசனை உணர்த்தி நிற்கும்) கோ என்னும் பெயரும், **ன அணையவும் பெறும்** – (உருபுகள் புணருமிடத்து) னகரச்சாரியை பொருந்தவும் பெறும்.

'**அணையவும் பெறும்**' என்றதனால், அணையாதிருக்கவும் பெறும் என்றதாயிற்று. எனவே, விகற்பம் பெற்றுவரும் என்றபடி.

**உதாரணம்:–**

ஆ+ஐ =ஆனை,ஆவை; மா +ஐ=மானை, மாவை;
கோ+ ஐ=கோனை, கோவை;

என விகற்பம் பெற்று வருதல் காண்க.

'**அணையவும்**' என்ற உம்மையால், குவ்வுருபு புணரும்போது ஆனுக்கு என உகரச்சாரியையும் உடன் பெறுதலும், ஆவுக்கு என உகரச்சாரியை யொன்றே பெறுதலும், ஆவினுக்கு என இன்சாரியையுடன் உகரச்சாரியை பெறுதலும், ஆவினை என மற்றை உருபுகள் புணரும்போது இன்சாரியை யொன்றுமே பெறுதலும் கொள்க.

**இரட்டுற மொழிதலால்**, ஆமா என்பது ஒரு சொல்லாய்க் காட்டுப்பசுவை யுணர்த்தி நின்றவிடத்தும், ஆமானை, ஆமானுக்கு, ஆமாவினுக்கு என இவ்விதி பெறுதல் கொள்க.

'**அணையும்**' என்று கூறியதோடு நில்லாது, '**பெறும்**' என்றமையால், ஆன், மான், கோன் எனத் தனிமொழிக்கண்ணும் னகரச் சாரியை வருதல் கொள்க.

## மோசகு பொன்னையா

ஆ, மா, கோ என்னும் மூன்று பெயர்களும் உருபு புணர்ச்சியில் னகரச் சாரியையால் பொருந்தவும் பெறும் எ–று.

**எ–டு.:–**

ஆனை, மானை, கோனை.

மற்றைய உருபுகளோடும் இவ்வாறே அமைக்க. அணையவும் என்ற உம்மையால், ஆவை, மாவை, கோவை எனவும், ஆனுக்கு, மானுக்கு, கோனுக்கு எனவும், ஆவுக்கு, மாவுக்கு, கோவுக்கு எனவும், ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு எனவும், ஆவினை, மாவினை, கோவினை எனவும் முறையே னகரச்சாரியை பெறாமல் புணர்தலையும், னகரச்சாரியையையும் உகரச்சாரியையையும் பெற்றுப் புணர்தலையும், உகரச் சாரியை ஒன்றையே பெற்றுப் புணர்தலையும் இன்சாரியையையும் உகரச் சாரியையையும் பெற்றுப் புணர்தலையும் இன் உருபு ஒன்றும் நீங்கலாக ஏனைய இன்சாரியை பெற்றுப் புணர்தலையும் கொள்க.

இரட்டுற மொழிதலால் ஆமா என ஒரு சொல்லாய் நின்று காட்டுப்பசுவை உணர்த்தினவிடத்தும் இவ்விதிகள் பெறுதலைக் கொள்க. பெறும் என்ற மிகையாலே தனிமொழிக் கண்ணும் ஆன், மான், கோன் என னகரச்சாரியை பெற்று வருதலையுங் கொள்க. ஊ என்ற சொல்லும் அவ்வாறே ன ஒற்றுப்பெற்று வழங்கிற்று என்பதையும் அறிக.

தொல்காப்பியர் விதித்த சாரியைகளைப் பெற்று ஆஇன், மாஇன், கோஒன் என நின்று ஆஇனை, மாஇனை, கோஒனை என வழங்கிய சொற்கள் நெடில் முன்னர் வரும் குறில் கெடுதலாகிய முறைமையின்படி இகர, ஒகரங்கள் கெட்டு ஆனை, மானை, கோனை எனவும், பின்னர் தனிமொழியிலும் ஆன், மான், கோன் எனவும் வழங்கினவாக, இவ்வாசிரியர் இவ்வாறு விதி செய்தார். நெடில்முன் வருங்குறில் கெடுதல் நீஇர்>நீர்; மூஉழக்கு>மூழக்கு; போஇன்ஆன்> போனான் என ஆயினமை நோக்கி உணரப்படும்.

248. ஒன்று முத[1]லெட் டீறா மெண்ணூர்
பத்தின்முன் ஆன்வரிற் பவ்வொற் றொழியமேல்
எல்லா மோடு மொன்பது மிற்றே.

ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண் ஊர்
பத்தின் முன் ஆண் வரின் ப ஒற்று ஒழிய மேல்
எல்லாம் ஓடும் ஒன்பதும் இற்றே.

onūu mutal ettu īūu ām eṇ ūr
paṭṭin mun āṇ varin pa oūūu oḷiya mēl
ellām ōtum onpaṭum iūūē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Special rule for Numerals ending in pattu

When (the increment) an is added to pattu preceded by any of the first eight Numerals, all (the letters) except-the consonant p, are dropped; and the same of onpatu.

## ஒப்புமைப் பகுதி

ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம்
எல்லா எண்ணுஞ் சொல்லுங் காலை
ஆனிடை வரினும் மான மில்லை
அஃதென் கிளவி ஆவயிற் கெடுமே
உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே

(தொல். எழு.: 200)

ஒன்று முதலெட் டளவா மெண்ணூர்
பத்தின்முன் னான்வரிற் பவ்வொற் றொழியமே
லெல்லா மோடு மொன்பது மிற்றே

(இ.வி.: 157)

---

பாட வேறுபாடு:-

1. லெட்டளவாம்

ஒன்று முதலெட் டீறா மெண்களை
ஊர்ந்து வரும்பத் தானொடு சிவணிப்
பகரவொற் றொழியமே லெல்லா மோடும்

(மு.வீ.: 230)

ஒன்பது மானொடு மொத்து நடக்கும்

(மு.வீ.: 231)

## மயிலை நாதர்

எ—ன், ஒருசார் எண்பெயர் சாரியை பெற்று முடியுமா றுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: ஒன்று முதல் எட்டு ஈறாம் எண்களோடு வரும் பத்தென்னு மெண் முன்னர் ஆனென்னுஞ் சாரியை வரிற் பத்தென்னு மொழியிற் பகர வொற்றொழிய மேல் நின்ற எல்லாம் கெடும் ;[1] ஒன்பதென்பதன் முன்னும் ஆன் வரின் பகர வொற்றொழிய மேல் நின்ற எல்லாம் கெடும்; எ—று.

வ—று.:—

ஒருபானை, இருபானை, ஒன்பானை என வரும்.

## சங்கரநமச்சிவாயர்

எ—னின், இதுவும் அது.

இ—ள்.: ஒன்று முதல் எட்டு ஈறாம் எண்களோடு புணர்ந்த பத்து என்னும் எண் முன்னர் உருபுகள் புணருமிடத்து இடையே ஆன் சாரியை வரின், அப் பத்தென்னும் எண்ணினது பகர ஒற்று ஒன்றுமே நிற்க மேல் நின்ற எல்லா வெழுத்தும் கெடும்; ஒன்பது என்னும் எண் முன்னரும் உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வரின், அதன் பகர வொற்று நிற்க மேல் நின்ற எல்லா எழுத்தும் கெடும், எ—று.

உ— ம்.:—

ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை; இருபானை, இருபதை, இருபஃதை எனவும்; ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை

பாட வேறுபாடு.:—

1. ஒன்பதன் முன்னும்

எனவும் விகற்பித்து வரும். பிறவற்றோடும் இவ்வாறே ஒட்டுக. ஒருபது ஒருபஃது என விகாரப் பட்டு வரும் பத்து என்பார் எண்ணூர் பத்து என்றார்.

வரின் என்றமையான் வருதற்கும் இதுவே விதி என்பதூஉம், இவ்வாறே ஆன் வருதலைப் பராமுக மாகக் கூறினமையின் உகரச் சாரியை இன் சாரியை களும் வேண்டுழி வரும் என்பதூஉம் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், ஒன்று முதல் எட்டீறாம் எண்களோடு பத்தென்னும் எண்ணுப் பெயர் வந்து புணர்ந்து ஒன்றாய் நின்ற சொற்கள் சாரியை பெற்றுத் திரியுமாறு கூறியது.

இ—ள்.:— **ஒன்று முதல் எட்டளவாம் எண்ணூர்** — ஒன்று முதலாக எட்டு ஈறாக நின்ற எண்களின் மேலே ஊர்ந்து வரும், **பத்தின் முன் ஆன்வரில்** — பத்தென்னும் எண் முன்னர் ஆனென்னும் சாரியை வந்தால், **பவ்வொற் றொழிய மேலெல்லாம் ஓடும்** — பத்தென்னும் மொழியிற் பகர ஒற்றொழிய மேல் நின்ற எல்லாம் கெடும், **ஒன்பதும் இற்றே** — ஒன்பது என்பதன் முன் ஆன் வரினும் பவ் வொற்று ஒழிய எல்லாம் கெடும், எ—று.

உ—ம்.:—

ஒருபானை, இருபானை எனவும் ஒழிந்த எண்ணோடும் ஒட்டுக. ஒன்பானை, ஒன்பானொடு எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ—ள்.: **ஒன்றுமுதல்** — ஒன்று முதல், **எட்டீறாம்** — எட்டீறாகிய, **எண்**— எண்களோடு, **ஊர்**—புணர்ந்த, **பத்தின் முன்** — பத்தென்கிற வெண்முன் (உருபுகள் புணருமிடத்து), **ஆன்**—ஆன்சாரியை, **வரின்** — வருமாயின், **பவ்வொற்று** — பகரமெய், **ஒழிய**—நிற்க, **மேல்**—அதன்மேலே நின்ற, **எல்லாம்**— எல்லாவெழுத்தும், **ஓடும்**—கெடும், **ஒன்பதும்**— ஒன்பதென்கிற வெண் முன்னும், **இற்று** — உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வரின் அதன் பகரமெய் நிற்க மேலேநின்ற வெல்லா வெழுத்துங் கெடும், எ—று.

ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை எனவும், ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை, எனவும், விகற்பித்து வரும். மற்றவைகளோடும் இப்படியே

யொட்டுக. (ஒருபது ஒருபஃது என விகாரப்பட்டு வருகிற பத்தென்பார் எண்ணூர் பத்தென்றார் ஆன் வருதலைப் பரா முகமாகச் சொன்னமையால் உகரச் சாரியை இன் சாரியைகளும் வேண்டியவிடத்து வருமெனக் கொள்க)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஒருபது இருபது முதலிய குற்றுகரவீற்றெண்ணுப் பெயர்கள் ஆன் சாரியை வரின் எவ்வாறாம்?

ஒன்று முதலெட் டீறா மெண்ணூர்
பத்தின்முன் ஆன்வரிற் பவ்வொற் றொழியமேல்
எல்லா மோடு மொன்பது மிற்றே.

(ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண் ஊர்
பத்தின் முன் ஆண் வரின் ப ஒற்று ஒழிய மேல்
எல்லாம் ஓடும் ஒன்பதும் இற்றே.)

**இ–ள்.:– ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண் ஊர் பத்தின் முன்** – ஒன்று முதல் எட்டீறாகிய எண்களோடு புணர்ந்த பத்தென்னும் எண் முன் உருபுகள் புணருமிடத்து, **ஆன்வரின்** – ஆன்சாரியை வருமாயின் ,**பவ்வொற்று ஒழியமேல் எல்லாம் ஓடும்**–அப்பத்தென்னுமெண்ணினது பகரமெய்யொன்றுமே நிற்க அதன்மேலே நின்ற எல்லாவெழுத்துங் கெடும். **ஒன்பது இற்று** – ஒன்பதென்னு மெண்முன்னும் உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வரின் அதன் பகர மெய் நிற்க மேலே நின்ற எல்லாவெழுத்துங் கெடும், எ–று.

ஆன் வரின் என்றமையால் ஆன் வராவிடத்து ஒருபதனை,ஒருபஃதனை, ஒருபதினை, ஒருபஃதினை, ஒருபஃதை, ஒருபதை என அன் பெறுதலும் இன் பெறுதலும் பெறாமையுங் கொள்க.

உருபுகொள்ளல் எனாமையின் ஒருபான் எழுபான் ஒன்பான் என உருபேலாது தனித்து நிற்றலும் கொள்க.

**உ–ம்.:–**

ஒரு – பத்து – ஆன் – ஐ – ஒரு – ப் – ஆன் – ஐ – ஒருபானை, ஒரு பானோடு, எழுபானை எனவும். ஒன்பானை, ஒன்பானால் எனவும் வரும்.

## முகவை இராமனுச கவிராயர்

**இ–ள்.:–** ஒன்று முதலெட்டீறா மெண்ணூர்–ஒன்று முதல் எட்டு முடிவாகக் கிடந்த எண்களோடே புணர்ந்த, பத்தின் முன் – பத்தென்னு

மெண்ணின் முன், ஆன் வரின் – (உருபு புணர்தற்கு) ஆன் சாரியை வருமாயின், பவ்வொற்றொழிய மேலெல்லா மோடும் –பகரவொற்று ஒன்று தவிர மேலே நின்ற வெழுத்தெல்லாங் கெடும், ஒன்பது மிற்று – ஒன்பதென்னு மெண்ணுப்பெயர் முன்னும் உருபுகள் புணர்தற்கு ஆன் சாரியை வரின் இவ்வாறே பகர வொற்று நிற்க மேல் நின்ற எழுத்தெல்லாங் கெடும், எ–று.

'ஆன்வரின்' எனப் பராமுகமாகச் சொன்னதினாலே விகற்பித்து வருமெனவும்; ஒருபானுக்கு, ஒருபானினை என உகரச் சாரியை இன் சாரியைகளும் வேண்டுமிடத்து வருமெனவுங் கொள்க.

உ–ம்.:–

ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை, இருபானை, இருபதை, இருபஃதை எனவும். ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை எனவும் விகற்பித்து வந்தன. பிற வேற்றோடு மிவ்வாறே யொட்டுக. எண்ணூர்பத்தென்பது ஒருபது இருபது என விகாரப்பட்டு வரும் பத்தெனக் கொள்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உரை :– ஒன்றுமுதல் –, எட்டு ஈறு ஆம் – எட்டுவரையிலுள்ள, எண் – எண்ணுப் பெயர்களோடு, ஊர் – புணர்ந்த, பத்தின்முன் – 'பத்து' என்னும் எண்ணுப் பெயரின்முன் (உருபுகள் புணருமிடத்து), ஆன் – 'ஆன்' சாரியை, வரின் – வந்தால், ப ஒற்று ஒழிய – பகரமெய் ஒன்றுதவிர, மேல் – அதன்மேல் நின்ற, எல்லாம் – எல்லாவெழுத்துக்களும் (அகர உயிரும் 'து' என்னும் உயிர்மெய்யும்), ஓடும் – கெடும்; ஒன்பதும் – 'ஒன்பது' என்னும் எண்முன்னும் (உருபுகள் புணருமிடத்து ஆன்சாரியைவந்தால்), இற்றே – இவ்வாறேயாம் (பகரமெய் மாத்திரம் நிற்க மேலே நின்ற எல்லாவெழுத்துங் கெடும்).

குறிப்பு :–

'எண்ணூர் பத்து' எனப் பொதுப்படக் கூறியதனால், 'ஒருபது', 'ஒருபஃது' என இடை ஒற்றுக் கெட்டும் ஆய்தமாகத் திரிந்தும் வருமென்றதாயிற்று; அவை: ஒருபது – ஒருபஃது, இருபது – இருபஃது, முப்பது – முப்பஃது, நாற்பது – நாற்பஃது, ஐம்பது – ஐம்பஃது, அறுபது – அறுபஃது, எழுபது – எழுபஃது, எண்பது – எண்பஃது என்பன.

'ஆன்வரின்' என்றதனால், ஆன்சாரியை வருதற்கும் இதுவே விதியென்க. 'வரும்' என வருதலைப் பராமுகமாகச் சொன்னதனால் வராமலிருத்தலுங்கொள்க; எனவே, விகற்பித்து வருமென்றதாயிற்று என்றுணர்க.

உ-ம்.:-

ஒருபது + ஐ = ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை விகற்பித்தன.

ஒன்பது + ஐ = ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை

இன்னும் ஆன்வருதலைப் பராமுகமாகச் சொன்னதனால், 'ஒருபானுக்கு', 'ஒருபானினை' என உகரச் சாரியை இன் சாரியைகளும் வேண்டுமிடத்து வருமெனக் கொள்க. மற்றை உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

## ஆறுமுக நாவலர்

இ-ள்.: **ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண் ஊர் பத்தின் முன்**- ஒன்று முதல் எட்டீறாகிய எண்களோடு புணர்ந்த பத்தென்னு மெண்முன் உருபுகள் புணருமிடத்து, **ஆன் வரின்** - ஆன் சாரியை வருமாயின், **பவ்வொற்று ஒழிய மேல் எல்லாம் ஓடும்** - அப் பத்தென்னு மெண்ணினது பகர மெய் யொன்றுமே நிற்க அதன்மேலே நின்ற எல்லா வெழுத்துங் கெடும், **ஒன்பதும் இற்று**-ஒன்பதென்னு மெண் முன்னும் உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வரின் அதன் பகர மெய் நிற்க மேலே நின்ற எல்லா வெழுத்துங் கெடும், எ-று.

உ-ம்.:-

ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை. எனவும். ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை எனவும், விகற்பித்து வரும். மற்றவைகளோடும் இப்படியே யொட்டுக.

ஒருபது, ஒருபஃது என விகாரப்பட்டு வரும் பத்தென்பார் எண்ணூர் பத்தென்றார்.

ஆன் வருதலைப் பராமுகமாகச் சொன்னமையால், உகரச் சாரியை இன் சாரியைகளும் வேண்டிய விடத்து வருமெனக் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ-ள்.:- **ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண் ஊர் பத்தின்முன்** - ஒன்று முதல் எட்டீறாகிய எண்களோடு புணர்ந்த பத்தென்னு மெண்முன்

உருபுகள் புணருமிடத்து, ஆன் வரின் – ஆன்சாரியை வருமாயின், பவ்வொற்று ஒழிய மேல் எல்லாம் ஓடும் – அப்பத்தென்னு மெண்ணினது பகரமெய் யொன்றுமே நிற்க அதன்மேலே நின்ற எல்லாவெழுத்துங் கெடும், ஒன்பதும் இற்று – ஒன்பதென்னு மெண்முன்னும் உருபுகள் புணருமிடத்து ஆன்சாரியை வரின் அதன் பகரமெய் நிற்க மேலே நின்ற எல்லாவெழுத்துங் கெடும். எ–று.

உ–ம்.:–

ஒரு பானை, ஒருபதை, ஒருபஃதை, எனவும் ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை, எனவும் விகற்பித்து வரும். மற்றவைகளோடும் இப்படியே யொட்டுக.
ஒருபது, ஒருபஃது என விகாரப்பட்டுவரும் பத்தென்பார், எண்ணூர்பத்தென்றார்.
ஆன் வருதலைப் பராமுகமாகச் சொன்னமையால், உகரச்சாரியை இன்சாரியைகளும் வேண்டியவிடத்து வருமெனக் கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் – எட்டுவரையி லுள்ள, எண் – எண்ணுப் பெயர்களோடு, ஊர் – புணர்ந்த, பத்தின் முன் – பத்து என்னும் எண்ணுப் பெயரின் முன் (ஆறு உருபுகள் புணருமிடத்து), ஆன் – ஆன் சாரியை, வரின் – வந்தால், ப ஒற்று ஒழிய – பத்து என்னும் எண்ணினது பகர மெய் ஒன்றுமே நிற்க, மேல் – அதன்மேலே நின்ற, எல்லாம் – எல்லா வெழுத்துக்களும், ஓடும் – கெடும்; ஒன்பதும் – ஒன்பது என்னும் எண்ணின் முன்னும் (உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வந்தால்), இற்றே – இவ்வாறே யாகும் (பகர மெய் மாத்திரம் நிற்க மேலே நின்ற எல்லா வெழுத்தும் கெடும்); எ–று.

ஒருபது, ஒருபஃது என இடையொற்றுக் கெட்டும் ஆய்தமாகத் திரிந்தும் விகாரப்பட்டு வரும் பத்து என்பார், 'எண்ணூர் பத்து', எனப் பொதுப்படக் கூறினார். அவை ஒருபது ஒருபஃது, இருபது இருபஃது, முப்பது முப்பஃது, நாற்பது நாற்பஃது, ஐம்பது ஐம்பஃது, அறுபது அறுபஃது, எழுபது எழுபஃது, எண்பது எண்பஃது என்பன.

'ஆன்வரின்' என்றதனால், ஆன் சாரியை வருதற்கும் இதுவே விதி யென்க.

'வரின்' என வருதலைப் பராமுகமாகச் சொன்ன தனால், வராமலிருத்தலும் கொள்க; எனவே, விகற்பித்து வரு மென்றதாயிற்று.

உ–ம்.:–

ஒருபது +ஐ= ஒருபானை; ஒருபதை : ஒருபஃதை

ஒன்பது+ஐ=ஒன்பானை; ஒன்பதை, ஒன்பஃதை விகற்பித்து வந்தன.

இன்னும், ஆன் வருதலைப் பராமுகமாகச் சொன்ன தனாலும் ஒருபானுக்கு ஒருபானினை என உகரச் சாரியை இன் சாரியைகளும் வேண்டுமிடத்து வருமெனக் கொள்க. மற்றை உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:–ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண் ஊர் பத்தின் முன் – ஒன்று முதல் எட்டீறாகிய எண்களோடு புணர்ந்த பத்தென்னுமெண் முன் உருபுகள் புணருமிடத்த, ஆன் வரின் – ஆன் சாரியை வருமாயின், பவ்வொற்று ஒழிய மேல் எல்லாம் ஓடும் – அப் பத்தென்னு மெண்ணினது பகரமெய் யொன்றுமே நிற்க அதன்மேலே நின்ற எல்லவெழுத்துங் கெடும்; ஒன்பதும் இற்று – ஒன்பதென்னு மெண்முன்னும் உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வரின் அதன் பகரமெய் நிற்க மேலே நின்ற எல்லா வெழுத்துங் கெடும். எ–று.

உ–ம்.:–

ஒருபது + ஐ = ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை, ஒன்பது + ஐ = ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை – என விகற்பித்து வந்தன.மற்றவைகளோடும் இப்படியே யொட்டுக.

ஒருபது, ஒருபஃது என விகாரப்பட்டு வரும் பத்தென்பார், 'எண்ணூர் பத்' தென்றார்.ஆன் வருதலைப் பராமுகமாகச் சொன்னமையால், உகரச் சாரியை இன் சாரியைகளும் வேண்டியவிடத்து வருமெனக் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

ஒன்று முதல் – ஒன்று முதலாக, எட்டு ஈறாம்– எட்டீறாகிய, எண் – எண்களோடு, ஊர் – புணர்ந்த, பத்தின் முன் – பத்து என்னும் எண் முன் (உருபுகள் புணருமிடத்து), ஆன் – ஆன் சாரியை, வரின் – வருமாயின், பவ்வொற்று – பகரமெய், ஒழிய – நிற்க, மேல் – அதன் மேலே நின்ற, எல்லாம் – எல்லாவெழுத்தும், ஒடும் – கெடும்; ஒன்பதும் – ஒன்பது என்னும் எண் முன்னும், இற்று – (உருபுகள் புணருமிடத்தில் ஆன்சாரியை வரின் அதன் பகரமெய்நிற்க மேலே நின்ற எல்லாவெழுத்தும்) இதுபோலக் கெடும்.

ஒருபது, ஒருபஃது என விகாரப்பட்டு வருகிற பத்தென்பார் 'எண்ணூர் பத்து' என்றார்.

'வரின்' என்றதனால் வாராமையும் கொள்க.

**உதாரணம்:–**

ஒருபது + ஐ = ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை எனவும். ஒன்பது + ஐ = ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை எனவும் வரும்.
ஆன் வருதலைப் பராமுகமாகச் சொன்னமையால், உகரச் சாரியை, இன்சாரியைகளும் வேண்டிய விடத்து வருமெனக்கொள்க.

**உதாரணம்:–**

ஒருபானுக்கு–உ, ஒருபதினை – இன்

## மோசசு பொன்னையா

ஒன்று முதல் எட்டு ஈறாக உள்ள எண்களோடு புணர்ந்த பத்து என்னும் எண் முன்னர் உருபுகள் புணருங்கால், ஆன் சாரியை வருமாயின், அப் பத்து என்னும் எண்ணின் பகர மெய் ஒன்றே நிற்க, ஏனை எல்லா எழுத்துக்களும் கெடும்; ஒன்பது என்னும் எண் முன்னர் உருபுகள் புணருங்காலும் இவ்வாறேபாகும், எ–று.

ஒருபது, ஒருபஃது, இருபது, இருபஃது, முப்பது, முப்பஃது, நாற்பது, நாற்பஃது, ஐம்பது, ஐம்பஃது, அறுபது, அறுபஃது, எழுபது, எழுபஃது, எண்பது, எண்பஃது என்பன எண்ணூர்பத்து எனக் கொள்க. ஆன்வரின் எனப் பராமுகமாகச் சொன்னதனால், ஆன் வாராது இருத்தலுங் கொள்க. எனவே, விகற்பித்து வரும் என்றாயிற்று.

எ–டு.:–

ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை

ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை – விகற்பித்து வந்தன.

மற்றைய உருபுகளோடும் இப்படியே அமைக்க.

## 249. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

வவ் இறு சுட்டிற்கு அற்று உறல் வழியே.

vav iṛu suttiṛku aṛṛu uṛal vaḷiyē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Special rule for Demonstrative ending in v**

Arru should be always added to the Demonstrative ending in v.

## ஒப்புமைப் பகுதி

சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்
கெட்ட இறுதி யியல்திரி பின்றே

(தொல். எழு.: 184)

வவ்விறு | சுட்டிற் கற்றுறல் வழியே

(இ.வி.: 155)

சுட்டுமுதல் வகர மற்றொடு சிவணும்

(மு.வி.: 217)

## மயிலை நாதர்

எ–ன், ஒருசாரன சாரியை பெறுமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– வகர வீறாயுள்ள மூவகைச் [1]சுட்டிற்கும் அற்றுச் சாரியை வருதல் முறைமை, எ–று.

பாட வேறுபாடு.:–

1.சுட்டிற்கு முன்னும்

வ—று.:—

அவற்றை. இவற்றை, உவற்றை, அவற்றுக்கண்

என[1] வரும்.

'வழி' என்ற மிகையான், இவற்றிற்கு இச் சாரியை வந்தாலும், முதன் முச் சுட்டின் முன்னும் எகர வினா முன்னும்[2] இச்சாரியை வந்து வகரமெய் பெற்றாலும் தனிக் குறின் முன் ஒற்று இரட்டாவாறு கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், இதுவும் அது.

இ—ள்.: அஃறிணைப் பன்மையவாய வகர ஈற்று மூன்று சுட்டுப் பெயர்க்கும் உருபுகள் புணருமிடத்து, அற்றுச் சாரியை பொருந்தல் முறைமையாம், எ—று.

உ—ம்.:—

அவற்றை, இவற்றை, உவற்றை என அற்றுச் சாரியை வேண்டியே வருதல் காண்க. 'வழியே' என்ற மிகையானே அவற்றினை. இவற்றினை, உவற்றினை என இன் சாரியை வருதலும் தனிக் குறிலின் முன்னொற்று உயிர்வரின் இரட்டாமையும் கொள்க. பிறவற்றோடும் இவ்வாறே ஒட்டுக.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், சுட்டு முதல் வகர வீற்றிற்குச் சாரியை முடிவு கூறியது.

இ—ள்.: வவ்விறு சுட்டிற்கு – அவ், இவ், உவ் என்னும் சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகர ஈற்றிற் சொற்கு, அற்றுறல் வழியே – அற்றுச் சாரியை பெறுதல் முறைமையாம் என்றவாறு.

---

பாட வேறுபாடு.:—

1. 'பதமுன் விகுதியும்...ஆகும்' என்பதனான் வரும்

2. இச் சாரியை வந்தால் இடையில் வகர வுடம்படுமெய் பெறுமென்பார்க்கும் அவைதனிக்குறின் முன் ஒற்று உயிர்வர இரட்டாமற் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: வவ்விறு சுட்டிற்கு** – வகர மெய்யீற்று மூன்று சுட்டுப்பெயர்களுக்கும், **அற்றுறல்** – உருபுகள் புணருமிடத்து அற்றுச் சாரியை பொருந்தல், **வழி** –முறைமையாம், எ–று.

**உ–ம்.:–**

அவற்றை, இவற்றை, உவற்றை என அற்றுச் சாரியை வேண்டியே வருதல் காண்க. (வழியே யென்ற மிகையால் அவற்றினை, இவற்றினை என இன் சாரியை வருதலுந் தனிக்குறின் முன்னொற்று உயிர் வரினிரட்டாமையுங் கொள்க) மற்றவைகளு மிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வகர வீற்றுச் சுட்டுப்பெயர்கள் உருபுகள் புணருமிடத்து எவ்வாறாம்?

வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

(வவ்விறு சுட்டிற்கு அற்று உறல் வழியே.)

**இ–ள்.: வவ்விறு சுட்டிற்கு** – வகரமெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கும், **அற்று உறல் வழி** – உருபுகள் புணருமிடத்து அற்றுச்சாரியை பொருந்துதல் முறையாம், எ–று.

**உ–ம்.:–**

அவ்–அற்று–ஐ–அவற்றை, இவற்றை, உவற்றை என அற்றுச் சாரியை வேண்டியே வருதல் காண்க.

வழியே என்ற மிகையால், அவற்றினை, இவற்றினை, உவற்றினை என அற்றோடு இன் சாரியை வருதலும், தனிக்குறின் முன்னொற்று உயிர்வரி னிரட்டாமையுங் கொள்க. ஒழிந்த உருபுகளோடும் இப்படியே யொட்டுக.

(அவ்–ஐ–அவை, கொல்–ஐ–கொலை. கல்–ஐ–கலை, என வரும்; விகுதிப்புணர்ச்சிக்கண் தனிக்குறின் முன்னொற்றிரட் டாமைக்கும் வழியே யென்ற மிகையே விதியாம்.)

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

இ—ள்.: வவ்விறு சுட்டிற்கு – அஃறிணைப் பன்மையவாகிய வகர வீற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கு, அற்றுறல் வழி—(உருபு புணர்தற்கு) அற்றுச் சாரியை பொருந்துவது முறைமை, எ—று.

உ—ம்.:—

அவற்றை, இவற்றை, உவற்றை என வரும். 'வழியே' யென்ற மிகுதியினாலே, அவற்றினை இவற்றினை உவற்றினை என அற்றுச் சாரியையோடு இன் சாரியை வருதலுங் கொள்க. ஒழிந்த வுருபுகளோடு மிவ்வாறே யொட்டுக.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உரை :– வ இறு சுட்டிற்கு – (அஃறிணைப் பலவின்பாலாகிய 'அவ்' 'இவ்' 'உவ்' என்னும்) வகர மெய்யீற்று மூன்று சுட்டுப்பெயர்களுக்கும், அற்று உறல் – (உருபுகள் புணருமிடத்து) 'அற்று' என்னுஞ்சாரியை பொருந்தல், வழி – முறைமையாம்.

உ—ம்:.:—

அவ் + ஐ = அவற்றை
இவ் + ஐ = இவற்றை
உவ் + ஐ = உவற்றை – என அற்றுச் சாரியை வேண்டியே வந்தன. மற்றை வேற்றுமைகளோடுங் கூட்டுக.

குறிப்பு :—

'உறும்' என நிறுத்தாமல் 'வழியே' என்றதனால், 'அவற்றினை' 'இவற்றினை' 'உவற்றினை' என அற்றுச்சாரியையோடு இன்சாரியை வருதலும்; தனிக்குறில்முன் ஒற்று இரட்டாமையும்; அவை, இவை, உவை என்னும் வையீற்றுச் சுட்டுப்பெயர்கள், அவையிற்றை இவையிற்றை உவையிற்றை என இற்றுச்சாரியை பெறுதலும்; எவற்றை யாவற்றை என வினாப்பெயரும் இவ்வாறு நிற்றலுங்கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: வவ்விறு சுட்டிற்கு – வகர மெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கும், அற்று உறல் வழி – உருபுகள் புணருமிடத்து அற்றுச் சாரியை பொருந்துதல் முறையாம், எ–று.

உ–ம்.:–

அவற்றை, இவற்றை, உவற்றைற என அற்றுச்சாரியை வேண்டியே வருதல் காண்க.

வழியே என்ற மிகையால், அவற்றினை, இவற்றினை, உவற்றினை என இன்சாரியை வருதலும், தனிக்குறின் முன்னொற்று உயிர்வரினிரட்டாமையுங் கொள்க. ஒழிந்த உருபுகளோடும் இப்படியே யொட்டுக.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். வவ்விறு சுட்டிற்கு – வகரமெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கும், – அற்று உறல் வழி – உருபுகள் புணருமிடத்து அற்றுச்சாரியை பொருந்துதல் முறையாம். எ–று.

உ–ம்.:–

அவற்றை, இவற்றை, உவற்றை என அற்றுச்சாரியை வேண்டியே வருதல் காண்க.

வழியே என்ற மிகையால், அவற்றினை, இவற்றினை, உவற்றினை என இன்சாரியை வருதலும், தனிக்குறின் முன்னொற்று உயிர்வரினிரட்டாமையுங் கொள்க. ஒழிந்த உருபுகளோடும் இப்படியே யொட்டுக.

## வை. மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– வ இறு சுட்டிற்கு – (அஃறிணைப் பலவின்பாலாகிய அவ் இவ் உவ் என்னும்) வகர மெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்கட்கும், அற்று உறல் – (உருபுகள் புணருமிடத்து) அற்று என்னுஞ் சாரியை பொருந்துதல், வழி – முறைமையாம்; எ – று.

உ–ம்.:–

அவ்+ஐ – அவற்றை, இவ்+ஐ = இவற்றை, உவ்+ஐ = உவற்றை என அற்றுச்சாரியை வேண்டியே வந்தன. மற்றை வேற்றுமைகளோடும் கூட்டுக. 'உறும்' என்று நிறுத்தாமல் 'வழியே' என்ற மிகையால் – அவற்றினை, இவற்றினை, உவற்றினை என அற்றுச் சாரியையோடு இன் சாரியை வருதலும்; தனிக்குறில் முன் ஒற்று உயிர்வர இரட்டாமையும்; அவை, இவை, உவை என்னும் வையீற்றுச் சுட்டுப்பெயர்கள் அவையிற்றை, இவையிற்றை, உவை யிற்றை என இற்றுச் சாரியை பெறுதலும் ; எவற்றை என வினாப்பெயரும் இவ்வாறு நிற்றலும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– வவ்விறு** சுட்டிற்கு – வகர மெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கும், **அற்று உறல் வழி** – உருபுகள் புணருமிடத்து அற்றுச் சாரியை பொருந்துதல் முறையாம். எ–று.

உ–ம்..:–

அவ் + ஐ = அவற்றை

இவ் + ஐ = இவற்றை.

உவ் + ஐ = உவற்றை. – என அற்றுச்சாரியை வேண்டியே வருதல் காண்க.

'வழியே' என்ற மிகையால், அவற்றினை, இவற்றினை, உவற்றினை என இன்சாரியை வருதலும், தனிக்குறின் முன்னொற்று உயிர்வரினிரட்டாமையுங் கொள்க. ஒழிந்த உருபுகளோடும் இப்படியே யொட்டுக.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– வ இறு சுட்டிற்கு – வகர மெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கும், அற்று உறல் – (உருபுகள் புணருமிடத்து) அற்றுச் சாரியை பொருந்துதல், **வழி** – முறைமையாம். எ–று

உ–ம்.:–

அவ் + ஐ = அவற்றை.

இவ் + ஐ = இவற்றை.

உவ் + ஐ = உவற்றை.

என அற்றுச் சாரியை வேண்டியே வருதல் காண்க. மற்ற வேற்றுமைகளோடும் இப்படியே கூட்டுக.

'வழியே' என்ற மிகையால் அவற்றனை, இவற்றினை என இன்சாரியை வருதலும், தனிக்குறின் முன்னொற்று உயிர்வரின் இரட்டாமையும் கொள்க. அவை, இவை, உவை என்னும் வையீற்றுச் சுட்டுப் பெயர்கள் அவையிற்றை, இவையிற்றை, உவையிற்றை என இற்றுச் சாரியை பெறுதலும்; எவற்றை என வினாப்பெயரும் இவ்வாறு நிற்றலும் கொள்க எனக் கூறுப. இஃது அற்றுச் சாரியை விதித்தலையும் இரட்டாமையையும் கூறியபடி.

## கா.நமச்சிவாய முதலியார்

**வவ் இறு சுட்டிற்கு** – வகர மெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கும், **அற்று உறல்** – (உருபுகள் புணருமிடத்து) அற்றுச் சாரியை பொருந்தல், **வழி** – முறைமையாம்.

உதாரணம்:–

அவற்றை = அவ் + அற்று + ஐ

இவற்றை = இவ் + அற்று + ஐ

உவற்றை = உவ் + அற்று + ஐ

'வழியே' என்ற மிகையால், அவற்றினை, இவற்றினை என அற்றுச்சாரியையோடு இன்சாரியை வருதலும், 'தனிக்குறின் முன்னொற்று உயிர்வரின்' (சூ–205)) இரட்டாமையுங் கொள்க. மற்றவைகளும் இப்படியே.

## மோசசு பொன்னையா

அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பலவின்பால் வகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கட்கு உருபு புணர்ச்சியில் அற்று என்னும் சாரியை பொருந்துதல் முறையாகும், எ–று.

**எ–டு.**

அவற்றை, இவற்றை, உவற்றை

மற்ற உருபுகளோடும் இப்படியே அமைக்க.

வழியே என்ற மிகையால், எவற்றை என வினாப்பெயர் இவ்வாறு அற்றுப் பெற்று முடிதலையுங்கொள்க. அதனாலே, அவற்றினை, இவற்றினை, உவற்றினை என அவற்றோடு இன்பெற்று முடிதலையும், தனிக்குறில் முன் ஒற்று இரட்டாமையும் கொள்க. இன்னும் அதனாலே, அவையிற்றை, இவையிற்றை, உவையிற்றை என அற்றுப் பெறாது ஐயும் இற்றும் பெற்று முடிவனவற்றையும் கொள்க.

(11)

250. சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே.

சுட்டின் முன் ஆய்தம் அன் வரின் கெடுமே.

suttin̲ mun̲ āyṭam an̲ varin̲ ketumē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Gutturals in Demonstratives**

The gutturals (in pronouns) preceded by the (three) Demonstrative letters are usually dropped, when these words are followed by (the increment) an.

## ஒப்புமைப் பகுதி

யாதென் இறுதியுஞ் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தங் கெடுதல் ஆவயினான

(தொல். எழு.: 201)

யாதெ னிறுதியுஞ் சுட்டுமுத லாகிய
வாய்த விறுதியு மன்னொடு சிவணு
மாய்தங் கெடுத லாவயி னான

(இ.வி.: 156)

யாது மாய்தச் சுட்டு மன்பெறும்
ஆவயி னாய்த மழியுஞ் சுட்டே

(மு.வீ.: 405)

ஆய்தச் சுட்டும் யாது மன்பெறும்
ஆவயி னாய்த மழியுஞ் சுட்டே

(மு.வீ.: 232)

## மயிலை நாதர்

எ–ன், எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ–ள்.: மூவகைச் சுட்டின் முன்னுமுள்ள ஆய்தம் அன் சாரியை வரிற் கெடும், எ– று.

வ–று.:–

அதனை, இதனை, உதனை என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ– னின், இதுவும் அது.

இ–ள்.: அஃது இஃது உஃது எனவரும் மூன்று சுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து இடையே அன் சாரியை வரின், மொழிமுதற் சுட்டெழுத்துக்கள் மூன்றின் முன் நின்ற ஆய்தம் கெடும், எ–று.

உ–ம்.:–

அதனை, அஃதை; இதனை, இஃதை; உதனை, உஃதை எனச் சாரியை விகற்பித்து வருதலும், வந்தவழி ஆய்தம் கெடுதலும் காண்க.

அன் சாரியை வருதல் நோக்கி ஆய்தம் கெட்டவழி, அது இது உது என ஆய்தமில்லாச் சுட்டுப் பெயர்களாய்ப் பின்னர் அன் சாரியை பெறுதலின், அவற்றிற்கும் இதுவே விதி எனக் கொள்க.

வ–று.:–

அதனை, அதை; இதனை, இதை; உதனை, உதை; என விகற்பித்தது வருதல் காண்க. அன் வருதலைப் பராமுகமாகக் கூறினமையின், குவ் வுருபு புணர்வழி அதற்கு என அன் சாரியை தனித்து வருதலே யன்றி அதனுக்கு என உகரச் சாரியையுடன் வருதலும் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

இ–ள்.:– சுட்டின்முன் ஆய்தம் – மூவகைச் சுட்டின் முன் ஆய்தம், அன்வரிற் கெடுமே – அன் சாரியை வரிற் கெடுமாம், எ–று.

உ–ம்.:–

அதனை, இதனை, உதனை என வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இ–ள்.: சுட்டின்முன்** – அஃது இஃது உஃது என்கிற சுட்டுப்பெயர்களின் மொழிமுதற் சுட்டெழுத்தின் முன்னின்ற, **ஆய்தம்** – ஆய்தமானது, **அன்வரின்** – அச்சுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து அன் சாரியை வரின், **கெடும்** – கெடும், **எ–று.**

**உ–ம்.:–**

அஃது + ஐ அதனை அஃதை எனச் சாரியை விகற் பித்து வருதலும் + வந்தவழி, ஆய்தங் கெடுதலுங் காண்க. (அன் சாரியை வருதலை நோக்கி ஆய்தங் கெட்டவழி அது, இது, உது, என வாய்த மில்லாச் சுட்டுப் பெயர்களாய்ப் பின்பு அன் சாரியை பெறுதலால் ஆய்தமில்லாச் சுட்டுப் பெயர்களுக்கும் இதுவே விதி யெனக் கொள்க. அன் வருதலைப் பராமுகமாகக் கூறலாற் குவ்வுருபு புணரும் போது அதற்கு என அன் சாரியை தனித்து வருதலல்லா மலும் அதனுக்கு என உகரச் சாரியை யுடன் வருதலுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அஃது முதலிய சுட்டுப்பெயர்கள் அன் சாரியைவரின் எவ்வாறாம்?

சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே.

(சுட்டின் முன் ஆய்தம் அன் வரின் கெடுமே).

**இ–ள்.: சுட்டின் முன் ஆய்தம்** – அஃது இஃது உஃது என்னும் மூன்று சுட்டுப் பெயர்களில் அம்மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னின்ற ஆய்தம், **அன்வரின் கெடும்** – உருபுகள் புணருமிடத்து அன்சாரியை வரிற் கெடும், எ–று.

**உ–ம்.:–**

அஃது–ஐ–அதனை, அஃதை, இஃது–ஐ–இதனை, இஃதை; உஃது–ஐ–உதனை, உஃதை, எனச் சாரியை விகற்பித்து வருதலும் வந்தவழி ஆய்தங் கெடுதலுங் காண்க.

அன்சாரியை வருதுலை நோக்கி ஆய்தங் கெட்டவழி, அது, இது, உது என ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர் களாய்ப் பின்பு அன்சாரியை பெறுதலால், ஆய்த மில்லாச் சுட்டுப் பெயர்களுக்கும் இதுவே விதியெனக் கொள்க.

அன் வருதலைப் பராமுகமாகக் கூறலால், குவ்வுருபு புணரும் போது அதற்கு என அன்சாரியை தனித்து வருதலே யன்றி அதனுக்கு என உகரச்சாரியையுடன் வருதலுங் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ—ள்.: சுட்டின்முன் னாய்தம்** – அஃது இஃது உஃது என்னு மூன்று சுட்டுப் பெயர்களில் அம்மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னின்ற ஆய்தம், **அன்வரிற் கெடும்** – (உருபு புணர்தற்கு) அன் சாரியை வரிற் கெடும், எ—று.

'அன் வரி' னெனப் பராமுகமாகச் சொன்னதினாலே, விகற்பித்து வருமெனக் கொள்க.

**உ—ம்.:—**

அதனை—அஃதை, இதனை—இஃதை, உதனை—உஃதை என விகற்பித்து வந்தமையும் வந்தவழி யாய்தங் கெட்டமையுங் காண்க. ஆய்த மில்லா தியல்பாக நின்ற அது, இது, உது என்னஞ் சுட்டுப் பெயர்களும் பின்பு அன் சாரியை பெறுதலின் அவற்றிற்கு மிதுவே விதி யெனக் கொள்க. இன்னுமதினாலே, குவ்வுருபு புணரும்போது, அதற்கு என அன் சாரியை தனித்து வருதலே யன்றி அதனுக்கு என உகரச் சாரியையுடன் வருதலுங் கொள்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :— சுட்டின்முன்** —(அஃது இஃது உஃது என்னும், மூன்று சுட்டுப் பெயர்களில் மொழி முதற்) சுட்டெழுத்தின் முன்நின்ற, **ஆய்தம்** —, **அன்வரின்** — (அச்சுட்டுப்பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து) அன்சாரியை வந்தால், **கெடும்:—**

குறிப்பு:—

'அன் வரின்' என்றதனால் அன் சாரியை வருதற்கும் இதுவே விதி என்க. 'வரின்' என வருதலைப் பராமுகமாகச் சொன்னதனால், வாராமலிருத்தலுங் கொள்க; எனவே, விகற்பிக்கு மென்றாதாயிற்று.

**உ—ம்::—**

அஃது + ஐ = அதனை, அஃதை
இஃது + ஐ = இதனை, இஃதை
உஃது + ஐ = உதனை, உஃதை எனச் சாரியை விகற்பித்தும் சாரியை வந்தவிடத்து ஆய்தம் கெட்டும் 'வந்தன.

அன்சாரியை வருதலைநோக்கி ஆய்தங் கெட்டவிடத்து அது, இது, உது, என ஆய்தமில்லாச் சுட்டுப் பெயர்களாய்ப் பின்பு அன்சாரியை பெறுதலால், ஆய்தமில்லாச் சுட்டுப் பெயர்கள் அது – அதனை, இது–இதனை, உது–உதனை என இவ்விதியால் அன்சாரியை பெறுதலுங்கொள்க. இன்னும் குவ்வுருபு புணரும்போது அன்சாரியை 'அதனுக்கு' என உகரச்சாரியையுடன் வருதலையும் அமைத்துக் கொள்க.

இன்னுமதனால் அதை, இதுக்கு எனச்சாரியையின்றி வருதலுங் கொள்க. இச்சூத்திரத்தில் உப லக்ஷணத்தால், வினாப்பெயராகிய எது என்பது 'எதனுக்கு' 'எதை' என இவ்வாறு வருதலுங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: சுட்டின்முன் ஆய்தம் – அஃது இஃது உஃது என்னு மூன்று சுட்டுப்பெயர்களில் அம்மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னின்ற ஆய்தம், அன் வரின் கெடும் – உருபுகள் புணருமிடத்து அன் சாரியை வரிற் கெடும், எ–று.

உ–ம்.:–

அஃது+ஐ=அதனை, அஃதை; இஃது+ஐ=இதனை, இஃதை; உஃது+ஐ=உதனை, உஃதை எனச் சாரியை விகற்பித்து வருதலும் வந்தவழி ஆய்தங் கெடுதலுங் காண்க.

அன் சாரியை வருதலை நோக்கி ஆய்தங் கெட்டவழி, அது, இது, உது என ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களாய்ப், பின்பு அன் சாரியை பெறுதலால், ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களுக்கும் இதுவே விதி யெனக் கொள்க.

அன் வருதலைப் பராமுகமாகக் கூறலால், குவ்வுருபு புணரும்போது அதற்கு என அன் சாரியை தனித்து வருதலே யன்றி அதனுக்கு என உகரச் சாரியையுடன் வருதலுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். சுட்டின் முன் ஆய்தம்** – அஃது இஃது உஃது என்னு மூன்று சுட்டுப் பெயர்களில் அம்மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னின்ற ஆய்தம், – **அன்வரின் கெடும்** – உருபுகள் புணருமிடத்து அன்சாரியைவரிற் கெடும். எ–று.

உ–ம்.:–

அஃது + ஐ = அதனை, அஃதை; இஃது + ஐ = இதனை, இஃதை; உஃது + ஐ = உதனை, உஃதை எனச் சாரியை விகற்பித்து வருதலும் வந்தவழி ஆய்தங்கெடுதலுங் காண்க.

அன்சாரியை வருதலை நோக்கி ஆய்தங்கெட்டவழி, அது, இது, உது என ஆய்தமில்லாச் சுட்டும் பெயர்களாய்ப், பின்பு அன்சாரியை பெறுதலால் ஆய்தமில்லாச் சுட்டுப் பெயர்களுக்கும் இதுவே விதியெனக்கொள்க.

அன் வருதலைப் பராமுகமாகக் கூறலால், குவ்வுருபு புணரும்போது அதற்கு என அன்சாரியை தனித்து வருதலே யன்றி, அதனுக்கு என உகரச் சாரியையுடன் வருதலுங்கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: சுட்டின் முன்** – (அஃது இஃது உஃது என்னும் மூன்று சுட்டுப் பெயர்களில் மொழிமுதற்) சுட்டெழுத்தின் முன்நின்ற, **ஆய்தம்** –, **அன் வரின்** – (அச் சுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து) அன் சாரியை வந்தால், **கெடும்**–; எ–று.

'**அன் வரின்**' என்றதனால், அன் சாரியை வருதற்கும் இதுவே விதி யென்க. '**வரின்**' என வருதலைப் பராமுகமாகச் சொன்னதனால், வராமலிருத்தலும் கொள்க; எனவே விகற்பிக்கு மென்றதாயிற்று.

உ ம்.:–

அஃது + ஐ = அதனை, அஃதை; இஃது+ஐ = இதனை, இஃதை; உஃது+ஐ = உதனை, உஃதை எனச் சாரியை விகற்பித்தும், சாரியை வந்தவிடத்து ஆய்தம் கெட்டும் வந்தன.

'அன்' சாரியை வருதலை நோக்கி ஆய்தங் கெட்டவிடத்து அது இது உது என ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களாகிப் பின்பு அன் சாரியை பெறுதலால், ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்கள் அது – அதனை, இது – இதனை, உது – உதனை என 'அன்' சாரியை பெறுதற்கும் இதுவே விதியென்க.

இன்னும் 'அன்' சாரியை வருதலைப் பராமுகமாகக் கூறியதனால் – குவ்வுருபு புணரும்போது அது+கு =அதற்கு என 'அன்' சாரியை தனித்து வருதலல்லாமலும், அதனுக்கு என உகரச் சாரியையுடன் வருதலும், கொள்க. இன்னும் அதனால் – 'அதை,' 'இதுக்கு' எனச் சாரியையின்றி வருதலும். அத்தை, அத்தால் என வழங்குதலும் கொள்க.

இச் சூத்திரத்து உபலக்ஷணத்தால் வினாப்பெயராகிய எது என்பது எதனை, எதனுக்கு, எதை என இவ்வாறு வருதலும் அமையும்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– சுட்டின்முன் ஆய்தம் – அஃது இஃது உஃது என்னு மூன்று சுட்டுப்பெயர்களில் அம் மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னின்ற ஆய்தம், அன் வரின் கெடும் – உருபுகள் புணருமிடத்து அன் சாரியை வரிற் கெடும். எ–று.

உ–ம்..:–

அஃது + ஐ = அதனை, அஃதை; இஃது + ஐ = இதனை, இஃதை; உஃது + ஐ = உதனை, உஃதை எனச் சாரியை விகற்பித்து வருதலும் வந்தவரி ஆய்தங் கெடுதலுங் காண்க.

அன்சாரியை வருதலை நோக்கி ஆய்தங் கெட்டவழி, அது, இது, உது என ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களாய்ப், பின்பு அன்சாரியை பெறுதலால், ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களுக்கும் இதுவே விதியெனக்கொள்க.

உ–ம். :–

அதனை, அதை; இதனை; இதை, உதனை, உதை.

அன்வருதலைப் பராமுகமாகக் கூறலால், குவ்வுருபு புணரும்போது அதற்கு என அன்சாரியை தனித்து வருதலேயன்றி அதனுக்கு என உகரச்சாரியை யுடன்வருதலுங் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– சுட்டின் முன்** – (அஃது இஃது உஃது என்கிற சுட்டுப் பெயர்களின் மொழி முதல்) சுட்டெழுத்தின் முன்னின்ற, **ஆய்தம்** – ஆய்தமானது, **அன் வரின்** – (அச்சுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து) அன் சாரியை வரின், **கெடும்** – கெடும். எ–று.

பொ–ரை.:–

அஃது இஃது உஃது என்னும் இம் மூன்று சுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணரும்போது, அன் சாரியை வந்தால் ஆய்தம் கெடும்.

'அன்வரின்' என்றதனால், அன் சாரியை வருதற்கும் இதுவே விதியென்க. 'வரின்' என வருதலைப் பராமுகமாகச் சொன்னதனால், வாராமலிருத்தலும் கொள்க; எனவே, விகற்பிக்கு மென்ற தாயிற்று.

உ–ம்..:–

அஃது + ஐ = அதனை, அஃதை.

இஃது + ஐ = இதனை, இஃதை.

உஃது + ஐ = உதனை, உஃதை.

எனச் சாரியை விகற்பித்து வருதலும், சாரியை வந்தவழி ஆய்தம் கெடுதலும் காண்க.

அன் சாரியை வருதலை நோக்கி ஆய்தம் கெட்டவழி அது இது உது என ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர் களுக்கும் இதுவே விதியெனக் கொள்க. அன்

வருதலைப் பராமுகமாகக் கூறலால் குவ் வுருபு புணரும்போது, அது+கு=அதற்கு என அன் சாரியை தனித்து வருதலல்லாமலும், அதனுக்கு என உகரச்சாரியையுடன் வருதலும் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**சுட்டின்முன் –** (அஃது இஃது உஃது என்னும் சுட்டுப் பெயர்களின் மொழிமுதற்) சுட்டெழுத்தின் முன் நிற்கும், **ஆய்தம் –** ஆய்தமானது, **அன்வரின் கெடும் –** (அச்சுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து) அன்சாரியைவரின் கெடும்.

**'வரின்'** என்றதனால் சாரியை வாராமையுங் கொள்க.

**உதாரணம்:–**

அஃது + ஐ = அதனை, அஃதை
இஃது + ஐ = இதனை, இஃதை
உஃது + ஐ = உதனை, உஃதை

எனச் சாரியை விகற்பம் பெற்று வருதலும், வந்தவழி ஆய்தங் கெடுதலும் காண்க.

அன்சாரியை வருதலை நோக்கி ஆய்தங் கெட்டவழி அது, இது, உது என ஆய்தமில்லாச் சுட்டுப் பெயர்களாய்ப் பின்பு அன்சாரியை பெறுதலால், ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களுக்கும் இதுவே விதியெனக் கொள்க.

அன் வருதலைப் பராமுகமாகக் கூறலால், குவ்வுருபு புணரும் போது, அதற்கு என அன்சாரியை வரதலேயன்றி அதனுக்கு என உகரச்சாரியை உடன் வருதலுங் கொள்க.

## மோசகூ பொன்னையா

அஃது, இஃது, உஃது என்ற சுட்டுப் பெயர்களில் சுட்டின் முன்னர் நின்ற ஆய்தம் உருபு புணர்ச்சியில் அன்சாரியை வந்து பொருந்துமாயின் கெடும், எ–று.

அன் வரின் என்றதினால் அன்சாரியை வராமலிருத் தலுங் கொள்க. அன்சாரியை வருதற்கும் இதுவே விதியாகக் கொள்க.

எ–டு.:–

அதனை, இதனை, உதனை – அன்வர ஆய்தம் கெட்டது.

அஃதை, இஃதை, உஃதை – அன் இன்றி ஆய்தம் நின்றது

உரையிற் கோடலால் ஆய்தம் இல்லாச் சுட்டுப் பெயர்கள் அதனை, இதனை, உதனை என அன்சாரியை பெறுவதற்கும் இதனையே விதியாகக் கொள்க.

அன்சாரியை வருதலைப் பராமுகமாகக் கூறியதனால், அதற்கு எனவும், அதனுக்கு எனவும் முறையே இவ்வுருபு அகரச்சாரியையைத் தனித்துப் பெற்றும், அதனுடன் உகரச் சாரியையைப் பெற்றும் வருவதையுங் கொள்க. இன்னும் அதனாலே எதனை, எதனுக்கு, எதை என வினாப்பெயர் இம்முடிபேற்று வருவதையும் அமைக்க.

(12)

**251. அத்தி னகர மகரமுனை யில்லை**

அத்தின் அகரம் மகரம் முனை இல்லை

aṭṭiṉ akaram makaram muṉai illai

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Special rule for attu**

Attu drops is a after (a final) a.

## ஒப்புமைப் பகுதி

**அத்தின் அகரம் அகரமுனை யில்லை**

(தொல். எழு.: 126)

**அத்தின் அகர மகரமுனை யில்லை**

(இ.வி.: 60)

**அத்துறி னகரவீ றழியு மென்ப**

(மு.வீ.: 178)

## மயிலை நாதர்

எ–ன், அத்துச் சாரியைக்கு ஆவதோர் விதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: இயல்பானும் விதியானும் நின்ற அகரத்தின் முன் வந்த அத்துச் சாரியையின் அகரம் கெடும், எ —று.

வ—று.:—

மகத்துக்கை, மரத்துக்குறை என, இரண்டகரக் கண்ணும் [1]கெட்டது.

## சங்கர நமச்சிவாயர் சிவஞானமுனிவர்

எ—னின், அத்துச் சாரியைக்கு ★*'இ ஈ ஐ வழி' என்னும் சூத்திரத்தான்'* ★ எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள்.:—

அத்துச் சாரியையின் அகர உயிர், இயல்பினும் விதியினும் நின்ற அகர உயிரீற்றின் முன் வரின், வகர உடம்படுமெய் பெறாது கெடும், எ—று.

உ—ம்.:—

மகத்துக்கை, மரத்துக்குறை என இரண்டு அகர ஈற்றின் முன்னும் கெட்டது.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், அத்துச் சாரியை விகாரப்படுமாறு கூறியது.

இ—ள்.:— அத்தின் அகரம் — அத்துச் சாரியையின் முதனின்ற அகரம், அகர முனை இல்லை — இயல்பானும் விதியானும் நின்ற அகர ஈற்று முன் இல்லையாம், எ—று.

உ—ம்.:—

மகத்துக்கை, மரத்துக்குறை என இரண்டு அகரத்தின்கண்ணும் கெட்டது.

## விசாகப் பெருமாளையர்

இது, அத்துச் சாரியைக்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

---

பாட வேறுபாடு.:—

1. முன்வந்த அத்துச் சாரியையின் அகரம்

இ–ள்.:– அத்தின் – அத்துச் சாரியையினது, அகரம்–அகர வுயிரானது, அகரமுனை – இயல்பினும் விதியினுநின்ற அகர வுயிரீற்றின் முன்வரின், இல்லை – வகரவுடம் படுமெய் பெறாது கெடும், எ–று.

உ–ம்.:–

மக+ அத்து+ கை–மகத்துக்கை, மர+அத்து+குறை = மரத்துக்குறை, என விரண்டு அகரவீற்றின் முன்னுங் கெட்டது.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அத்துச்சாரியை முதலெழுத்துக் கெடப்பெறுவது எவ்விடத்து?

அத்தி னகர மகரமுனை யில்லை.

(அத்தின் அகரம் அகரமுனை இல்லை.)

இ–ள்.: அத்தின் அகரம் – அத்துச்சாரியையினது அகரவுயிர், அகர முனை இல்லை – இயல்பினும் விதியினு நின்ற அகரவுயிரீற்றின் முன் வரின் வகரவுடம்படுமெய் பெறாது கெடும், எ–று.

உ–ம்.:–

மக – அத்து – கை – மகத்துக்கை, மர–அத்து குறை– மரத்துக்குறை என இரண்டு அகரவீற்றின் முன்னுங் கெட்டது.

## முகவை இராமானுச கவிராயர்

இது, அத்துச் சாரியைக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ–ள்.:– அத்தினகரம் – அத்துச் சாரியையினது அகர வுயிர், அகரமுனை யில்லை – இயற்கையாகவுஞ் செயற்கையாகவும் நின்ற அகர வுயிரீற்றின் முன்னே கெடும், எ–று.

உ–ம்.:–

மகத்தை – மரத்தை எனவும், மகத்துக்கை – மரத்துக் குறை எனவும்; இரண்டகர வீற்றின் முன்னும் அத்தின் அகரங் கெட்டமை காண்க. மகத்துக்கை – மரத்துக்குறை

யென்பன பொருட்புணர்ச்சி. மாட்டேற்றினாலே உருபுப் புணர்ச்சி பொருட் புணர்ச்சியை யொக்கு மென்றலின் ஐயப்பட வேண்டா.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :– அத்தின் –** அத்துச்சாரியையின் (முதலிலுள்ள) **அகரம் –** அகர உயிர், **அகரம்முனை –** (இயல்பினாலும் விதியினாலும் நிலைமொழியீற்றில் நின்ற) அகர உயிரின் முன்வந்தால், **இல்லை –** கெடும்.

குறிப்பு:–

உயிரீற்று மொழியின் முன் அத்துச்சாரியை வருதற்கும் இதுவே விதி.

**உ–ம்:–**

மக + அத்து = மகத்தை, மகத்துக்கை – இயல்புயிரீறு
மர + அத்து = மரத்தை, மரத்துக்குறை – விதி யுயிரீறு.

'அகர முனையில்லை' என்றதனால் – 'போழ்தத்து வள்ளன்மை', 'அவைபத்துச் சென்றார் எனப் பிற உயிரீற்றின் முன் அத்தின் அகரம் கெடாதென்க.

இனிச் சிறுபான்மை அத்தின் அகரம் 'விளவத்துக் கோடு' 'அதவத்துக்கண்' என அகரவீற்றின்முன் கெடாமலும், 'நிலாத்துக் கொண்டான்' 'துலாத்துக்கோல்' என ஆகரவீற்றின் முன்னும், 'தேத்து' என ஏகாரவீற்றின் முன்னும் கெட்டும் வருமென்றறிக.

இச்சூத்திரம் இவ்வாசிரியர் தொல்காப்பியத்தினின்று எடுத்துக் கொண்ட மேற்கோள்.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: **அத்தின் அகரம் –** அத்துச் சாரியையினது அகரவியிர், **அகரமுனை இல்லை –** இயல்பினும் விதியினு நின்ற அகர வுயிரீற்றின் முன்வரின் வகர வுடம்படுமெய் பெறாது கெடும், எ–று.

**உ–ம்.:–**

மக+அத்து+கை = மகத்துக்கை, மர+அத்து+குறை = மரத்துக்குறை என இரண்டு அகரவீற்றின் முன்னுங்கெட்டது.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– அத்தின் அகரம் – அத்துச்சாரியையினது அகரவுயிர், – அகரமுனை இல்லை – இயல்பினும் விதியினு நின்ற அகரவுயிரீற்றின் முன் வரின் வகரவுடம்படுமெய் பெறாது கெடும். எ–று.

உ–ம்.:–

மக+அத்து+கை= மகத்துக்கை, மர+அத்து+குறை = மரத்துக்குறை என இரண்டு அகரவீற்றின் முன்னுங் கெட்டது.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: அத்தின் – அத்துச் சாரியையின் முதலிலுள்ள, அகரம் – அகர வுயிரானது, அகரம் முனை – (இயல்பினாலும் விதியினாலும் நிலைமொழியீற்றில் நின்ற) அகர வுயிரின் முன் (வந்தால்), இல்லை – கெடும்; எ–று.

உயிரீற்றுமொழியின் முன் அத்துச் சாரியை வருதற்கும் இதுவே விதி.

உ–ம்.:–

மக + அத்து = மகத்தை, மகத்துக்கை – இயல்பு உயிரீறு.

மர + அத்து = மரத்தை, மரத்துக்குறை – விதி உயிரீறு.

'அகரமுனை யில்லை' என்றதனால், போழ்தத்து வள்ளன்மை, அவையத்துச் சென்றார் எனப் பிற உயிரீற்றின் முன் அத்தின் அகரம் கெடா தென்க.

இனி, சிறுபான்மை அத்தின் அகரம் விளவத்துக்கோடு, அதவத்துக்கண் என அகர வீற்றின் முன் கெடாமலும்; நிலாத்துக் கொண்டான், துலாத்துக்கோல் என ஆகார வீற்றின் முன்னும், தேத்து என ஏகார வீற்றின் முன்னும் கெட்டும் வருமெனவும் அறிக.

இது, தொல்காப்பியச் சூத்திரம்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– அத்தின் அகரம் – அத்துச்சாரியையினது அகரவுயிர், அகரமுனை இல்லை – இயல்பினும் விதியினு நின்ற அகரவுயிரீற்றின்முன் வரின் வகரவுடம்படுமெய் பெறாது கெடும். எ–று.

உ–ம்.:–

மக + அத்து + கை = மகத்துக்கை, மர + அத்து + குறை = மரத்துக்குறை – என முறையே இயல்பு விதி என்னும் இரண்டு அகரவீற்றின் முன்னுங் கெட்டது.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– அத்தின் – அத்துச்சாரியையினது, **அகரம்** – அகர உயிரானது, **அகரமுனை** – (இயல்பினும் விதியினும் நின்ற) அகர உயிரீற்றின்முன் வரின், **இல்லை** – (வகர உடம்படுமெய் பெறாது) கெடும். எ–று

பொ–ரை.:–

அத்துச் சாரியை அகரவுயிரீற்றின் பின் வரின், அதன் முதலெழுத்தாகிய அகரம் கெடும்.

உ–ம்..:–

மக + அத்து + கை = மகத்துக்கை.

மர + அத்து + குறை = மரத்துக்குறை.

என இயல்பாகியும் விகாரமாகியும் நின்ற அகர ஈற்றின்முன் கெட்டது.

'அகரமுனையில்லை' என்றதனால், போழ்தத்து வள்ளன்மை, அவையத்துச்சென்றார் எனப் பிற உயிரீற்றின் முன் அத்தின் அகரம்கெடா தென்க.

இனி, உரையிற் கோடலால், சிறுபான்மை அத்தின் அகரம் விளவத்துக்கோடு, அதவத்துக்கண் என அகரவீற்றின்முன் கெடாமலும்; நிலாத்துக் கொண்டான், துலாத்துக்கோல் என ஆகாரவீற்றின் முன்னும், தேத்து என ஏகாரவீற்றின் முன்னும் கெட்டும் வருமெனவும் அறிக.

## கா.நமச்சிவாய முதலியார்

அத்தின் – அத்துச்சாரியையினது, அகரம் – அகர வுயிரானது, அகரமுனை – (இயல்பினும் விதியினுநின்ற) அகர வுயிரீற்றின் முன்வரின், இல்லை – கெடும்.

உதாரணம்:–

மகர + அத்து + கை = மரத்துக்கை (இயல்பீறு)

மர + அத்து + குறை = மரத்துக் குறை (விதியீறு)

## மோசசு பொன்னையா

அத்துச் சாரியையினது அகர உயிர் இயல்பினும் விதியினும் நின்ற அகர உயிரீற்றின் முன்னர் வரின் கெடும், எ–று.

இது தொல்காப்பிய நூற்பா.

எ–டு.:–

மகத்துக்கை; மரத்துக்குறை

அகரமுனை இல்லை என்றதனால் நிலாத்துக் கொண்டான், துலாத்துக்கோல், தேத்து என ஆகார ஏகாரங்களின் முன்னர் அது கெட்டு வருதலையும், போழ்தத்து, அவையத்து எனப் பிற உயிர்களின் முன்னர் அத்தின் அகரம் கெடாமையையும் கொள்க.

(13)

**252. இதற்கிது சாரியை யெனி[1]னள வின்மையின்**
**விகுதியும் பதமு முருபும் பகுத்திடை**
**நின்ற வெழுத்தும் பதமு மியற்கையும்**
**ஒன்ற [2]வுணர்த்த லுரவோர் நெறியே.**

---

பாட வேறுபாடு.:–

1. அளபின்மையின்

2. உணர்த்துதல்

இதற்கு இது சாரியை எனின் அளவு இன்மையின்
விகுதியும் பதமும் உருபும் பகுத்து இடை
நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்
ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே.

iṭaṟku iṭu sāriyai eṉiṉ aḻavu iṉmaiyiṉ
vikuṭiyum paṭamum urupum pakuṭṭu itai
niṉṟa eḷuṭṭum paṭamum iyaṟkaiyum
oṉṟa uṇarṭṭal uravōr neṟiyē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Finding out the Euphonic Terminations

As it is impossible to enumerate the particular increments of particular words, it is the duty of the wise to seperate the Terminations, words and Case-endings (wherever these occur in the inflected word) and to point out clearly whether there is inserted a literal or a verbal increment, or none at all.

## மயிலைநாதர்

எ—ன், சாரியைக்கு ஆவதோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: இச் சொற்குச் [1]சாரியை யிதுவென்று சொற்றொறும் சாரியை [2]சொல்லுதலுறின், அளவின்றிப்[3]பெருகலின், நிலைப் பதத்தையும் அதன்வழி [4]வருமுறையவான விகுதியே பதமே உருபே யென்றிவற்றையும் பிரித்து இரண்டற்கும் இடையிற் பொருத்த முடைத்தாய் நின்ற எழுத்துச் சாரியையே மொழிச் சாரியையே, இயல்பே யென்றவற்றுள் இன்னது நின்றதென்று பொருந்தும்படி யறிந்து உணர்த்துதல் புலவரது முறைமை, எ—று.

---

பாட வேறுபாடு.:— 1.சாரியையாமிது.
2.சொல்லலுறின்.
3.பெருத்தலின்.
4.வருவனவான.

வ–று.:–

உண்டதென்பதனை, உண்+ ட்+ அ+ து எனப் பிரித்து அகர எழுத்துச் சாரியை வந்ததெனவும், உண்கின்றன னென்பதனை உண்கின்று + அன் + அன் எனப் பிரித்து மொழிச்சாரியை வந்ததெனவும், உண்டா னென்பதனை உண் + ட் + ஆன் எனப் பிரித்துச் சாரியை வாராது இயல்பாய் வந்ததெனவும் பகுதி விகுதிகட்கு இடையே இரு சாரியையும் இயல்புமானவாறு காண்க.

“ஆனமணி யியம்புங் கானத் தான” என்பதனை, ஆ ன் அ மணி ......தான எனவும், “ஆனநெய் [1]தெளித்து” என்பதனை, ஆன் அ நெய் [2]தெளித்து எனவும், ஒன்றேகால் என்பதனை ஒன்று ஏ கால் எனவும், கலனேகுறுணி என்பதனை கலன் ஏ குறுணி எனவும் கலனே தூணி என்பதனை கலன் ..ஏ தூணி எனவும் பிரித்து எழுத்துச் சாரியை வந்ததெனவும், புளியங்காயென்பதனை. புளி அம் காய் எனவும், வண்டின் காலென்பதனை வண்டு இன் கால் எனவும் பிரித்து மொழிச்சாரியை வந்ததெனவும், ஆமணி என்பதனை, ஆ மணி எனப் பிரித்துச் சாரியை வாராது இயல்பாய் வந்ததெனவும் இரு பதங்கட்குமிடையே இருசாரியைகளும் இயல்பும் ஆனவாறு காண்க. ஆனை யென்பதனை, ஆ ன் ஐ எனவும், அவற்றை யென்பதனை அவ் அற்று ஐ எனவும். [3]மாலை என்பதனை மால் + ஐ எனவும் பிரித்துப் பதவுருபுகட்கிடையே இரு சாரியையும் இயல்பு மானவாறு காண்க. இவ்வாறே எடுத்தோதாத சாரியைகளெல்லாம் எடுத்து முடிக்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், சாரியைக்கு ஆவதோர் புறனடை உணர்–ற்று.

இ – ள்.: விகுதி முதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியை என்று வரையறுத்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளும் தனித்தனி

பாட வேறுபாடு.:– 1.தெளிந்தது .

2.தெளிந்தது.

3. மாவை என்பதனை மா ஐ எனவும்

சொல்லப் புகின் வரையறைப்படாமையின், விகுதிப் புணர்ச்சியினையும் பதப் புணர்ச்சியினையும் உருபு புணர்ச்சியினையும் கண்டுழிப் பகுத்து, இடையே நின்ற ஏகாரம் அகரம் முதலிய எழுத்துச் சாரியையினையும், அன் ஆன் முதலிய பதச் சாரியையினையும், இவ்விரண்டு சாரியையும் தோன்றா இயல்பினையும் தெரிய அறிவித்தல் பெரியோரது நெறியாம், எ–று.

**உ–ம்.:–**

"ஆனமணி இயம்பும் கானத்தான" எனவும், "ஆனநெய் தெளித்து நான நீவி" எனவும் விதித்த பொருட் புணர்ச்சிக்கண் 'உருபின் முடிபவை ஒக்குமப் பொருளினும்' என்ற மாட்டேற்றான் அமைந்த னகரச் சாரியை யன்றி அகரச் சாரியையும் உடன் வந்தன.

இனி, விதியாது ஒழிந்தன்வற்றின்கண் பாட்டின் பொருள் எனக் குற்றியலுகரத்து இன் சாரியையும், மரத்திலை என மஃகான் புள்ளிக்கு அத்துச் சாரியை யும் வந்தன. தன்கை, என்கை எனச் சாரியை யின்றி இயல்பாய் வந்தன. இவ்வாறே மூவகைப் புணர்ச்சியும் பகுத்துணர்ந்து கொள்க.

எல்லாச் சாரியையும் இடைப் பதமேனும், எழுத்துச் சாரியை பதச்சாரியை எனப் பகுத்தல் வேறறிதற்கு இட்ட இலச்சினையாம் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், சாரியைக்கு ஆவதோர் புறநடை கூறியது.

இ–ள்.: இதற்கிது சாரியை எனின் – இச் சொற்கு இச் சாரியையாம் என்று சொற்றோறும் சாரியை சொல்லலுறின், **அளவு இன்மையின்** – சொற்கள் அளவிலவாதலின் சாரியையும் அளவின்றிப் பெருகுமதனால், **விகுதியும்** – நிலைமொழியான பதத்தையும் அதன் வழிவரும் விகுதியையும், **பதமும்** – பதத்தின் முன்னே வரும் பதமும், **உருபும் பகுத்து** – பதத்தின் முன்னே வரும் உருபையும் பிரித்து, **இடைநின்ற எழுத்தும் பதமும்** – இடையே நின்ற எழுத்துச் சாரியையே மொழிச் சாரியையே, **இயற்கையும் ஒன்ற உணர்த்தல்** – இயல் பேயென்று இன்னதென்று பொருந்தும்படி அறிந்து உணர்த்தல், **உரவோர் நெறியே** – புலவரது நெறி, எ–று.

## விசாகப் பெருமாளையர்

இது, சாரியைக்காவதோர் புறனடை யுணர்த்துகின்றது.

**இ–ள்.: இதற்கிது சாரியை யெனின்** – விகுதி முதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியையென்று அளவு செய்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளுந் தனித்தனி சொல்லப் புகின், **அளவின்மையின்**–அளவுபடாமையால், **விகுதியும்** – விகுதிப் புணர்ச்சியையும், **பதமும்** – பதப் புணர்ச்சியையும், **உருபும்** –உருபுப் புணர்ச்சியையும், **பகுத்து** – கண்டவிடத்துப் பகுத்து, **இடைநின்ற** –நடுவே நின்ற, **எழுத்தும்** – ஏகாரம் அகரம் முதலிய வெழுத்துச் சாரியையினையும், **பதமும்** – அன் ஆன் முதலிய பதச் சாரியையினையும், **இயற்கையும்**–இவ் விரண்டு சாரியையுந் தோன்றாத வியல்பினையும், **ஒன்றவுணர்த்தல்** – தெரியவறிவித்தல், **உரவோர்** – பெரியோரது, **நெறி** – கடனாகும், எ–று.

வ–று.:–

ஆனநெய் தெளித்து நானநீவி – விதித்த பொருட் புணர்ச்சிக்கண் உருபின் முடிபவை யென்பதனால், அமைந்த னகர மெய்ச் சாரியை யன்றியும் அகரச் சாரியையு முடன் வந்தது, இனி விதியாதொழிந்தவற்றின் கண் பாட்டின்பொருள் எனக் குற்றியலுகரத்திற்கு இன் சாரியை வந்தது. தன்கை எனச் சாரியை யின்றி யியல்பாக வந்தது. இப்படியே மூவகைப் புணர்ச்சிகளையும் பகுத்துணர்ந்து கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

**இன்னது இன்னசாரியையைப் பெறுமென்று முற்றவெடுத்துக் கூறலாகாமையின் சாரியையை இவ்வாறு நிச்சயித்துணர்கவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?**

இதற்கிது சாரியை யெனினள வின்மையின்
விகுதியும் பதமு முருபும் பகுத்திடை
நின்ற வெழுத்தும் பதமும் இயற்கையும்
ஒன்ற வுணர்த்த லுரவோர் நெறியே.

(இதற்கு இது சாரியை எனின் அளவு இன்மையின்
விகுதியும் பதமும் உருபும் பகுத்து இடை
நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்
ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே.)

**இ—ள்.:— இதற்கு இது சாரியை எனின் அளவு இன்மையின் —** விகுதிமுதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியை யென்று அளவுசெய்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளுந்தனித்தனி சொல்லப்புகின் அளவுபடாமையால், **விகுதியும் பதமும் உருபும் பகுத்து —** விகுதிப்புணர்ச்சியையும் பதப்புணர்ச்சியையும் உருபுபுணர்ச்சியையுங் கண்ட விடத்துப் பகுத்து, **இடைநின்ற எழுத்தும் பதமும் —** நடுவே நின்ற ஏகாரம் அகரம் முதலிய வெழுத்துச் சாரியையினையும், **அன் ஆன் முதலிய பதச்சாரியையினையும், இயற்கையும் —** அவை பெறாது பதமு முருபும் தாமே இயல்பாகநிற்கும் இயற்கை நிலையினையும், **ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறி —** தெரிபவறிவித்தல் பெரியோரது கடனாகும், எ—று.

வ—று.:—

(1) "ஆன நெய் தெளித்து நாண நீவி" என விதித்த பொருட்புணர்ச்சிக்கண், "உருபின் முடிபுவை யொக்குமப் பொருளினும்" என்ற மாட்டேற்றால் அமைத்தனகர மெய்ச்சாரியை யன்றி. அகரச் சாரியையும் உடன் வந்தது.

(2). இனி விதிபாதொழிந்தவற்றின்கண், பாட்டின் பொருள் எனக் குற்றியலுகரத்திற்கு இன்சாரியை வந்தது.

(3) தன்கை, என்னை எனச் சாரியையின்றி இயல்பாக வந்தன.

இப்படியே மூவகைப் புணர்ச்சிகளையும் பகுத்துணர்ந்து கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, சாரியைக்காவதோர் புறனடைபுணர்த்துகின்றது.

**இ—ள்.: இதற்கிது சாரியை யெனின் —** விகுதி முதலிய புணர்ச்சிகளில் (இதற்கு இது சாரியை யென்று வரையறுத்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளுந்) தனித்தனி சொல்லப் புகின், **அளவின்மையின் —** வரையறைப்படாமையால், **விகுதியும் பதமு முருபும் பகுத்து —** விகுதிப் புணர்ச்சியில் விகுதியையும் பதப் புணர்ச்சியிற் பதத்தையும் உருபுப் புணர்ச்சியில் உருபையும் பிரித்து, **இடை நின்ற வெழுத்தும் பதமு மியற்கையும் —** இடையிலே நின்ற ஏகார முதலிய எழுத்தை யெழுத்துச் சாரியை யெனவும், அன் ஆன் முதலிய பதத்தைப் பதச்சாரியை யெனவும். இவ் விரண்டு மில்லாத இயல்பை இயற்கை யெனவும், **ஒன்ற வுணர்த்தல்—**தெரிய அறிவித்தல், **உரவோர் நெறி —** அறிவுடையோர்வழியாம், எ—று.

வ—று.:—

என்றிசினோர் என விகுதிப் புணர்ச்சியிலே 'யாகா'வென்னுஞ் சூத்திரத்தாற் சொல்லப்பட்ட சின் அன்றி இகரச் சாரியையுமுடன் வந்தது. 'ஆனநெய் தெளித்து நான நீவி' எனப் பதப் புணர்ச்சியிலே 'ஆமா கோனவ் வணையவும் பெறு'மென விதித்த னகரச் சாரியை யன்றி அகரச் சாரியை யுமுடன் வந்தது.

இனி விதியா தொழிந்தனவற்றுள்ளே பாட்டின் பொருள் எனக் குற்றியலுகரத்தின் முன் இன் சாரியையும் மரத்திலை என மகரவீற்றின் முன் அத்துச் சாரியையும் வந்தன. என்கை, தன்கை எனச் சாரியை யின்றி யில்பாய் வந்தன. இவ்வாறே மூவகைப் புணர்ச்சிகளையும் பிரித்துணர்ந்து கொள்க.

எல்லா மிடைச் சொல்லாயினும் இப்படி யெழுத்துச் சாரியை பதச் சாரியை எனப் பிரித்தது அவற்றுள் வேறுபாடறிதற்கு வைத்த குறி யென வுணர்க. உணர்த்தல் நெறி என முடிக்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :—

**இதற்கு இது சாரியை எனின்** – (விகுதி முதலிய புணர்ச்சிகளில்) 'இதற்கு இதுசாரியை' என்று (வரையறுத்துத் தனித்தனி) சொல்லப் புகுந்தால், **அளவு இன்மையின்** – ஓர் அளவில்லாமையால், **விகுதியும்** – விகுதிப் புணர்ச்சியையும், **பதமும்** – பதப்புணர்ச்சியையும், **உருபும்** – உருபு புணர்ச்சியையும், **பகுத்து** – பிரித்து, **இடைநின்ற** – நடுவில் நின்ற, **எழுத்தும்** (ஏகாரம் முதலிய) எழுத்துச் சாரியையும், **பதமும்** – (அன் ஆன் முதலிய) பதச்சாரியையும், **இயற்கையும்**, (இவ்விரண்டு சாரியையுமில்லாத) இயல்பையும், **ஒன்ற உணர்த்தல்** – தெரிய அறிவித்தல், **உரவோர் நெறி** – அறிவுடையோரது முறைமையாம்.

உ—ம்:—

| எழுத்துச்சாரியை | பதச்சாரியை | இயல்பு |
|---|---|---|
| நடந்தது – (அ) | நடந்தனன் (ஆன்) | நடந்தான் – விகுதிப்புணர்ச்சி |
| ஆனநெய் –(ன்,அ) | வண்டின்கால் இன்) | தன்கை – பதப்புணர்ச்சி |
| சாத்தனுக்கு(உ) | எவற்றை (அற்று) | என்னால் – உருபுபுணர்ச்சி |

குறிப்பு :-

இவ்வாறே இம்மூவகைப் புணர்ச்சியையும் பகுத்தறிந்து கொள்க. எல்லாச் சாரியைகளும் இடைச் சொல்லாயிருக்க, 'அன்' 'ஆன்' முதலியவற்றைப் பதச்சாரியை என்றது "பொருள்தரிற் பதமாம்" என்றதனோடு மாறுபடினும் அது சாரியைகளுள் வேறுபாடு அறிதற்கு வைத்த குறியென்க.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: இதற்கு இது சாரியை எனின் அளவு இன்மையின் -** விகுதி முதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியை யென்றளவு செய்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளுந் தனித்தனி சொல்லப்புகின் அளவுபடாமையால், **விகுதியும் பதமும் உருபும் பகுத்து -** விகுதிப் புணர்ச்சியையும் பதப் புணர்ச்சியையும் உருபு புணர்ச்சியையுங் கண்டவிடத்துப் பகுத்து, **இடை நின்ற எழுத்தும் பதமும் -** நடுவே நின்ற ஏகாரம் அகரம் முதலிய வெழுத்துச் சாரியையினையும் அன் ஆன் முதலிய பதச் சாரியையினையும், **இயற்கையும் -** இவ்விரண்டு சாரியையுந் தோன்றாத இயல்பினையும், **ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறி -** தெரிய வறிவித்தல் பெரியோரது கடனாகும், எ-று.

வ-று.:-

(1) "ஆன நெய் தெளித்து நான நீவி" என விதித்த பொருட் புணர்ச்சிக்கண்; "உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்" என்ற மாட்டேற்றால் அமைந்த னகர மெய்ச் சாரியை யன்றி, அகரச் சாரியையும் உடன் வந்தது.

(2) இனி விதியாதொழிந்தவற்றின்கண், பாட்டின் பொருள் எனக் குற்றியலுகரத்திற்கு இன்சாரியை வந்தது.

(3) தன்கை, என்கை எனச் சாரியை யின்றி இயல்பாக வந்தன.

இப்படியே மூவகைப் புணர்ச்சிகளையும் பகுத்துணர்ந்து கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள். இதற்கு இது சாரியை எனின் அளவு இன்மையின் -** விகுதிமுதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியையென்று அளவுசெய்து

விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளுந் தனித்தனி சொல்லப்புகின் அளவுபடாமையால், **விகுதியும் பதமும் உருபும் பகுத்து** – விகுதிப்புணர்ச்சியையும் பதப்புணர்ச்சியையும் உருபு புணர்ச்சியையுங் கண்டவிடத்துப் பகுத்து, **இடை நின்ற எழுத்தும் பதமும்** – நடுவேநின்ற ஏகாரம் அகரம் முதலியவெழுத்துச் சாரியையினையும் அன் ஆன் முதலிய பதச்சாரியையினையும், **இயற்கையும்** – இவ்விரண்டு சாரியையுந் தோன்றாத இயல்பினையும், **ஒன்ற உணர்த்தல் உரவோர்நெறி** – தெரியவறிவித்தல் பெரியோரது கடனாகும். எ–று.

கண்ணுருபிற்கு இன்சாரியை வராதென்றுங் கொள்ளற்க; நாட்டின் கணிருந்தான் எனக் கண்ணு ருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டி னீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வராதென்றுங் கொள்க.

உருபுபுணர்ச்சியுள்.:–

"ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியினொக்குமன்ன னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே" எனப் பொதுப்படவிதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, நம்பிகு என உயிரீற்றுயர் திணைப்பெயர் முன் வந்த குவ்வுருபு மிகாதென்றும், நம்பிக்கண் என மன்னென்றமையாற் கண்ணுருபு மிகாதென்றும், நம்பிக்கு எனக் குவ்வுருபு மன்னென்றமையான் மிகுமென்றுங் கொள்க. மற்றவைகளும் இப்படியே காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:** இதற்கு இது **சாரியை எனின்** – (விகுதிப் புணர்ச்சி முதலிய புணர்ச்சிகளில்) இதுக்கு இது சாரியை என்று (வரையறுத்துத் தனித்தனி) சொல்லப் புகுந்தால், **அளவு இன்மையின்** – ஓர் அளவு இல்லாமையால், **விகுதியும்** – விகுதிப் புணர்ச்சியும், **பதமும்** – பதப் புணர்ச்சியையும், **உருபும்** – உருபுப் புணர்ச்சியையும், **பகுத்து** – பிரித்து, **இடை நின்ற** – நடுவில் நின்ற, **எழுத்தும்** – (ஏகாரம் அகரம் முதலிய) எழுத்துச்சாரியையும் **பதமும்** – (அன் ஆன் முதலிய) பதச் சாரியையையும், **இயற்கையும்** – (இவ் விரண்டு சாரியையும் இல்லாத) இயல்பையும், **ஒன்ற உணர்த்தல்** – தெரிய அறிவித்தல், **உரவோர் நெறி** – அறிவுடையோரது முறைமையாம்; எ – று.

**உ – ம்.:–**

| | | |
|---|---|---|
| **எழுத்துச்சாரியை** | **பதச்சாரியை** | **இயல்பு** |
| நடந்தது நடந்தனன் | நடந்தான்–விகுதிப்புணர்ச்சி. | |
| ஆன்நெய் | வண்டின்கால் | தன்கை–பதப்புணர்ச்சி. |
| சாத்தனுக்கு | எவற்றை என்னால்– உருபுபுணர்ச்சி. | |

இவ்வாறே மூவகைப்புணர்ச்சிகளையும் பகுத்தறிந்து கொள்க.

எல்லாச்சாரியைகளும் இடைச்சொல்லாயினும், இவ்வாறு எழுத்துச் சாரியை பதச்சாரியை எனப் பிரித்தது, அவற்றுள் வேறுபாடு அறிதற்கு வைத்த குறி யென அறிக.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– இதற்கு இது சாரியை எனின் அளவு இன்மையின்** – விகுதி முதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியையென்று அளவு செய்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளுந் தனித்தனி சொல்லப் புகின் அளவுபடாமமையால், **விகுதியும் பதமும் உருபும் பகுத்து** – விகுதிப்புணர்ச்சியையும் பதப்புணர்ச்சியையும் உருபுபுணர்ச்சியையுங் கண்டவிடத்துப் பகுத்து, **இடை நின்ற எழுத்தும் பதமும்** – நடுவே நின்ற (ஏகாரம் அகரம் முதலிய) வெழுத்துச்சாரியையினையும் (அன் ஆன் முதலிய) பதச்சாரியையினையும், **இயற்கையும்** – இவ்விரண்டு சாரியையுந் தோன்றாத இயல்பினையும், **ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறி** – தெரிய வறிவித்தல் பெரியோரது கடனாகும். எ–று.

பதப் புணர்ச்சி. (ஆ + நெய் = ஆனநெய்)
விகுதிப் புணர்ச்சி. (செய் + ஆய் = செய்குவாய்)
உருபு புணர்ச்சி. (அவன் + கு = அவனுக்கு)
அ, ஏ – முதலியவை எழுத்துச்சாரியை.
அன், ஆன், அற்று – முதலியவை பதச்சாரியை.

**உ–ம்.:–**

(1) "அன நெய்" இது விதித்த பொருட்புணர்ச்சிக்கண், "உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்" (சூ–238) என்ற மாட்டேற்றால் அமைந்த னகரமெய்ச் சாரியையன்றி, அகரச் சாரியையும் உடன்வந்தது.

(2) இனி விதியா தொழிந்தவற்றின்கண், "பாட்டின் பொருள்" எனக் குற்றியலுகரத்திற்கு இன் சாரியை வந்தது.

(3) "தன்கை," "என்கை" எனச் சாரியையின்றி இயல்பாகவந்தன.

இப்படியே மூவகைப் புணர்ச்சிகளையும் பகுத்துணர்ந்து கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**இதற்கு இது சாரியை எனின்** – (விகுதி முதலிய புணர்ச்சிக்கண்) இதற்கு இது சாரியையென்று தனித்தனி சொல்லப்புகின், **அளவின்மையின்** – அளவுபடாமையால், **விகுதியும்** – விகுதிப் புணர்ச்சியையும், **பதமும்**– பதப் புணர்ச்சியையும், **உருபும்** – உருபு புணர்ச்சியையும், **பகுத்து** – பிரித்து, **இடைநின்ற** – நடுவே நின்ற, **எழுத்தும்** – (ஏகாரம் அகரம் முதலிய) எழுத்துச் சாரியையினையும், **பதமும்** – அன் ஆன் முதலிய பதச்சாரியையினையும், **இயற்கையும்** – இவ்விரண்டு சாரியையுந் தோன்றாத இயல்பினையும், **ஒன்ற உணர்த்தல்** – பொருந்த அறிவித்தல், **உரவோர்** – அறிஞரது, **நெறி** – கடனாகும்.

**உதாரணம்.:–**

'ஆனநெய் தெளித்து நான நீவி'
என்பதில், பொருட் புணர்ச்சிக்கண், **'உருபின் முடிபவை ஒக்குமப் பொருளினும்'** (சூ–238) என்பதனால், அமைந்த னகரமெய்ச் சாரியையேயன்றி, அகரமாகிய எழுத்துச்சாரியையும் உடன் வந்தது.
இனி, விதி கூறாது ஒழிந்தவற்றின்கண், பாட்டின்பொருள் எனக் குற்றியலுகரத்திற்கு இன் என்னும் பதச்சாரியை வந்தது.
தன்கை எனச் சாரியையின்றி இயல்பாக வந்தது.
இப்படியே மூவகைப் புணர்ச்சிகளையும் பகுத்து உணர்ந்துகொள்க.

## மோசசு பொன்னையா

விகுதி, பத, உருபு புணர்ச்சிகளில் இதற்கு இதுவே சாரியை என வரையறுத்து உரைக்கப் புகின் வரையறைப் படாது ஆதலின், அவற்றின் விகுதி, பதம், உருபு ஆகியவற்றைப் பகுத்து இடை நின்றவற்றை இஃது

எழுத்துச் சாரியை, இது பதச்சாரியை, இஃது இயல்பு எனத் தெரிய அறிவுறுத்துதல் அறிஞர் கடனாகும், எ—று.

எ—டு.:—

| எழுத்துச்சாரியை | பதச்சாரியை | இயல்பு |
| --- | --- | --- |
| நடந்தது (த்) | நடந்தனன் (அன்) | நடந்தான் – விகுதிப் புணர்ச்சி |
| ஆனநெய் (அ) | வண்டின்கால் (இன்) | தன்கை – பதப்புணர்ச்சி |
| சாத்தனுக்கு (உ) | எவற்றை (அற்று) | என்னால் – உருபு புணர்ச்சி |

எழுத்துச்சாரியை, பதச்சாரியை என்பன இரண்டும் இடைச் சொற்களே.

**(14)**

253. விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்
உரைத்த [1]விதியினோர்ந் தொப்பன கொளலே.

விகுதி பதம் சாரியை உருபு அனைத்தினும்
உரைத்த விதியின் ஓர்ந்து ஒப்பன கொளலே.

vikuṭi paṭam sāriyai urupu a̠naiṭṭi̠num
uraiṭṭa viṭiyi̠ ōrnṭu oppa̠na ko̠ḷalē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Exception to the Combination

The General rules given above for the combination of termination, words, increments and Case-endings, must be applied with discrimination (wherever individual cases are concerned).

பாட வேறுபாடு.:—

1.விதியுளோர்ந்

## ஒப்புமைப் பகுதி

மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்
உயிர்மிக வருவழி யுயிர்கெட வருதலுஞ்
சாரியை யுள்வழிச் சாரியை கெடுதலுஞ்
சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலுஞ்
சாரியை யியற்கை உறழத் தோன்றலும்
உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப் பெயர்க் கவ்விய னிலையலும்
மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலும்
அன்ன பிறவும் தன்னியன் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப

(தொல். எழு.: 158)

மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலு
முயிர்மிக வருவழி யுயிர்கெட வருதலுஞ்
சாரியை யுள்வழிச் சாரியை கெடுதலுஞ்
சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலுஞ்
சாரியை யியற்கை யுறழத் தோன்றலு
முயர்திணை மருங்கி னொழியாது வருதலு
மஃறிணை விரவுப்பெயர்க் கவ்விய னிலையலு
மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலு
மன்ன பிறவுந் தன்னியன் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கு
மைகார வேற்றுமைத் திரிபென மொழிப

(இ.வி.: 75)

வலமிகும் வழிமெலி மிகுதலு மெலிமிகும்
வழிவலி மிகுதலு மியல்பின் வழிமிகு
தலுமுயிர் வழியுயிர் கெடுதலுஞ் சாரியை
வரும்வழி சாரியை கெடுதலும் மெய்வே
றாகிடத் தியற்கை யாதலும் பொதுப்பெயர்க்
கவ்விய னிலையலு மையுரு பியல்பே

(மு.வீ.: 197)

## மயிலை நாதர்

எ—ன், [1]எனைவகைப் புணர்ச்சிக்கும் [2]ஏற்பதோர் கருவி யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: விகுதியே பதமே சாரியையே உருபே யென் [3]றிவ்வெல்லா வற்றின்கண்ணும் ஓரிடத்துச் சொன்ன விதியை யோர்ந்து அவற்றிற்குப் பொருத்தமுடையன விசாரித்தறிந்து புணர்க, எ—று.

இஃது [4]என்னை சொல்லியவாறோ வெனின், விகுதி புணர்ப்புழிச் சொன்ன பகுதி யீற்றழிவு முதலானவை பதப்புணர்ச்சி முதலானவற்றிற்கு வரவும், பதப்புணர்ச்சிக்கட் சொன்ன இயல்பே விகாரமே யென்றவை ஒழிந்த மூவிடத்து வரவும், உருபு புணர்ச்சிக்கட் சொன்ன சாரியை முதலானவை ஏனை மூன்றிடத்து வரவும் பெறும். அவை ஆங்காங்கு எடுத்துச் சொல்லுவான் புகிற் [5]பெருகுதலிற் சுருங்குதற் பொருட்டுப் பொதுப்படக் கூறினாரெனக் கருதி அவ்விடங்கட்கு வேண்டுவன அறிந்து வருவித்துப் புணர்க்க வென்க.

வ—று.:—

கரியானென்னும் பகுபத முடிப்புழிப் பண்புப்பகுதி ஈறுகெடு மெனக்கூறினார்; அதனானே கருநீலமெனப் [6]பதமுடிப் புழியும் கெடுக்க. புளியங்காயெனப் பதமுடிப்புழி, உருபு புணர்ச்சிக்கட் சொன்ன சாரியை வருதலும், சாரியை யீற்று மகரம் மகரவீற்றுப் புணர்ச்சி போலத் திரிதலும் கொள்க. உருபு புணர்ச்சிக்கண் நீயென்பது நின்னென நிற்கு மென்றார்; அவ்வாறே பொருட் புணர்ச்சிக் கண்ணும் நின்கை யெனப் புணர்க்க. இவ்வாறே பிறவும் வருவித்துக் கொள்க.

'ஓர்ந்து' என்பது ஏற்புழிக் கோடற்கென்க.

---

பாட வேறுபாடு.:—

1. எவ்வகை
2. (1)ஒப்பதோர் (2) இயைவதோர்
3. இவையெல்லா
4. (1) என்ன; (2) என்
5. பெருத்தலிற
6. பதம் புணர்ப்புழியும்

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், இங்ஙனம் கூறிய நான்கின் புணர்ச்சிக்கும் ஆவதோர் புறனடை உணர் – ற்று.

இ—ள்.:– விகுதியே பதமே சாரியையே உருபே என்னும் நான்கின் புணர்ச்சிக்கண்ணும் விதிகள் பொதுப்படக் கூறப்பட்டனவேனும், அவ் விதிகளுள் இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என உய்த்துணர்ந்து, எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியை அதற்குக் கொள்க, எ – று.

விகுதிப் புணர்ச்சியுள் 'றவ்வொ டுகர உம்மைநிகழ் பல்லவும்' எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளது என்று கருதி, இவ்விகுதி வந்துழி யெல்லாம் இவ்விரு காலமும் பொருந்தும் என்று கொள்ளற்க; சென்று என்புழி இறந்தகாலமும், சேறு என்புழி எதிர்காலமும் பொருந்தும் என்று கொள்க.

பதப் புணர்ச்சியுள் 'அல்வழி இ ஐம் முன்னராயின் இயல்பும் மிகலும் விகற்பமு மாகும்' எனப் பொதுப்பட விதித்தாரேனும் விதியுளது என்று கருதி, ஆடிதிங்கள் என இயல்பாம் என்றும், பருத்திக்குறிது என மிகும் என்றும் கொள்ளற்க. பருத்தி குறிது என எழுவாய்க்கண் இயல்பாம் எனவும், ஆடித்திங்கள் எனப் பண்புத்தொகைக்கண் மிகும் எனவும் கொள்க.

சாரியைப் புணர்ச்சியுள் 'பதமுன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்' எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று கருதி, நாட்டினின் நீங்கினான் என இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்கு இன் சாரியை வரும் என்றும், நாட்டுக்கண் இருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன் சாரியை வாராது என்றும் கொள்ளற்க. நாட்டின்கண் இருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன் சாரியை வரும் என்றும், நாட்டின் நீங்கினான் என இன்னுருபிற்கு இன் சாரியை வாராது என்றும் கொள்க.

உருபு புணர்ச்சியுள் 'ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின் ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே'

எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளது என்று கருதி நம்பிகு என உயிரீற்று உயர்திணைப் பெயர் முன்வந்த குவ்வுருபு மிகா என்றும், நம்பிக்கண் என 'மன்' என்றமையாற் கண்ணுருபு மிகும் என்றும் கொள்ளற்க; நம்பிகண் எனக் கண்ணுருபு மிகா என்றும், நம்பிக்கு எனக் குவ்வுருபு 'மன்' என்றமையான் மிகும் என்றும் கொள்க. பிறவும் அன்ன.

சாரியைப் புணர்ச்சி ஏனை மூவகைப் புணர்ச்சியினையும் சார்ந்து இடையே தோன்றல் விகாரமாய் வந்து புணர்தலின், விகுதி பதம் சாரியை உருபு என உருபிற்கு முற்கூறினார்.

இச் சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள் கொள்ளாது, இந் நால்வகைப் புணர்ச்சியுள் ஒன்றற்குச் சொன்ன விதி மற்றொன்றற்கும் கொள்க எனப் பொருள் கொள்வாரும் உளர். அப்பொருட்கமைந்த சொல் இச் சூத்திரத்தின்மையானும், சாரியை சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதங்களும்' என்றும், 'ஈறுபோதல்' என்னும் சூத்திரத்து அவ் விகாரம் விகுதிப் புணர்ச்சிக் கணன்றிப் பதப் புணர்ச்சிக்கண்ணும் வரும் என்பது தோன்றப் 'பண்பிற்கு இயல்பே' என்றும், புணரியல் விதி பெயர் வினை இடை உரி நான்கிற்கும் பொருந்தும் என்பது தோன்ற 'மெய்ப்புயிர் முதலீறாம் இருபதங்களும்' என்றும். விதந்துரைத்த 'சிறப்பு விதிகளுள் 'உருபின் முடிபவை ஒக்குமப் பொருளினும்' என்றும் 'ஒற்றுயிர் முதலீற்று உருபுகள் புணர்ச்சியின் ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே' என்றும் கூறியவாற்றான் அப்பொருள் அமைந்துகிடத்தலானும் அது பொருந்தாது என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், எனைவகைப் புணர்ச்சிக்கும் ஏற்பதோர் கருவி கூறியது.

இ—ள்.: விகுதி பதம் சாரியை — விகுதியின்கண்ணும் பதத்தின் கண்ணும் சாரியையின் கண்ணும், **உருபு அனைத்தினும்** — உருபின்கண்ணும் இவ்வெல்லாவற்றின் கண்ணும், **உரைத்த விதியினோர்ந்து** — ஓரிடத்திற் சொன்ன விதியை ஓர்ந்து, **ஒப்பன**

கொளலே – எவற்றிற்கும் பொருத்தமுடையன விசாரித்து அறிந்து புணர்க்க ஒப்பன கொளலே.

## விசாகப் பெருமாளையர்

இது, இந்த நான்கு புணர்ச்சிகளுக்கு மாவதோர் புறனடை யுணர்த்துகின்றது.

**இ–ள்.:** **விகுதி** – விகுதியும், **பதம்** – பதமும், **சாரியை** – சாரியையும், **உருபு** – உருபும் ஆகிய, **அனைத்தினும்** –நான்கின் புணர்ச்சிகளிடத்தும், **உரைத்த** – பொதுப்படச் சொல்லப்பட்ட, **விதியின்** – விதிகளுள், **ஓர்ந்து** – இவ்விதி இதற்குப் பொருந்தும். இவ்விதி இதற்குப் பொருந்தாது என வுய்த்துணர்ந்து, **ஒப்பன** – எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியை, **கொளல்** – அதற்குக் கொளல், எ–று.

வ–று.:–

விகுதிப்புணர்ச்சியுள் றவ்வொடு கரவும்மை நிகழ்பல்லவும் எனப் பொதுப்பட விதித்தாரேனும் சென்று என்கிறவிடத்து இறந்த காலமும் சேறு என்கிற விடத்து எதிர்காலமும் பொருந்து மென்று கொள்க.

பதப் புணர்ச்சியுள் அல்வழி இ ஐம் முன்னராயி னியல்பு மிகலும் விகற்பமுமாகும் எனப் பொதுப்பட விதித்தாரேனும் பருத்தி குறிது என வருகிற எழுவாய்ப் புணர்ச்சிக்கண் ணியல்பாமெனவும் ஆடித்திங்கள் என வருகிற பண்புத்தொகைக்கண் மிகு மெனவுங் கொள்க.

சாரியைப் புணர்ச்சியுள் பதமுன் விகுதியும் பதமுமுருபும் புணர் வழி யொன்றும் பலவுஞ் சாரியை வருதலுந் தவிர்தலும் விகற்பமுமாகும் எனப் பொதுப்பட விதித்தாரேனும், நாட்டின் கணிருந்தான் என கண்ணுருபிற்கு இன் சாரியை வருமென்றும் நாட்டினீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வாராதென்றுங் கொள்க. உருபு புணர்ச்சியுள் ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சினொக்கு, மன்னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே எனப் பொதுப்பட விதித்தாரேனும்

நம்பிகண் எனக் கண்ணுருபு மிகாதென்றும் நம்பிக்கு எனக் குவ்வுருபு மன்னென்றமையால் மிகுமென்றுங் கொள்க. மற்றவைகளு மிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பல்வகைப் புணர்ச்சிக்கண்ணும் அஃததற்குப் பொருந்தும் விதியினையே ஆய்ந்துகொள்ளுகவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்
உரைத்த விதியினோர்ந் தொப்பன கொளலே.
(விகுதி பதம் சாரியை உருபு அனைத்தினும்
உரைத்த விதியின் ஓர்ந்து ஒப்பன கொளலே.)

**இ–ள்.: விகுதி பதம் சாரியை உருபு அனைத்தினும்** – விகுதியும் பதமுஞ் சாரியையும் உருபும் ஆகிய நான்கின் புணர்ச்சியினிடத்தும், **உரைத்த விதியின் ஓர்ந்து** – பொதுப்படச் சொல்லப்பட்ட விதிகளுள் இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என உய்த்துணர்ந்து, **ஒப்பன கொளல்** – எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியை அதற்குக் கொள்க, எ–று.

வ–று.:–

(1) விகுதிப்புணர்ச்சியுள் "றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்" எனப்பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, இவ்விகுதி வந்தவிடத் தெல்லாம் இவ்விரண்டு காலமும் பொருந்துமென்று கொள்ளற்க; சென்று, சென்றும் என்றவிடத்து இறந்தகாலமும், சேறு, சேறும் என்றவிடத்து எதிர்காலமும் பொருந்தும் என்று கொள்க.

(2) பதப்புணர்ச்சியுள்: "அல்வழி இஐம் முன்ன ராயினியல்பு மிகலும் விகற்பமு மாகும்" எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைத்து ஆடிதிங்கள், குவளைகண் என இயல்பா மென்றும், பருத்திக்குறிது, யானைக்குதிரை என மிகுமென்றுங் கொள்ளற்க; பருத்திகுறிது என எழுவாய்க் கண்ணும் யானை குதிரை என உம்மைத்தொகைக் கண்ணும் இயல்பா மெனவும்;

ஆடித்திங்கள் எனப் பண்புத்தொகைக் கண்ணும், குவளைக்கண் என உவமைத்தொகைக்கண்ணும் மிகுமெனவுங் கொள்க.

(3) சாரியைப் புணர்ச்சியுள்: "பதமுன் விகுதியும் பதமு முருபும் புணர்வழியொன்றும் பலவுஞ் சாரியை வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்" எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைத்து, நாட்டினி னீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டுக் கணிருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன்சாரியை வராதென்றுங் கொள்ளற்க: நாட்டின் கண் ணிருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டினீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வராதென்றுங் கொள்க.

(4) உருபுபுணர்ச்சியுள்: "ஒற்றுயிர் முதலீற்றுருபுகள் புணர்ச்சியி னொக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே" எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைத்து, நம்பிகு என உயிரீற்றுயர்திணைப் பெயர்முன் வந்த குவ்வுருபு மிகாதென்றும், நம்பிக்கண் என மன்னென்றமையாற் கண்ணுருபு மிகுமென்றுங் கொள்ளற்க; நம்பிகண் எனக் கண்ணுருபு மிகாதென்றும், நம்பிக்கு எனக் குவ்வுருபு மன்னென் றமையான் மிகுமென்றுங் கொள்க.

மற்றவைகளும் இப்படியே காண்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, இங்கே சொல்லிய நால்வகைப் புணர்ச்சிக்கு மாவதொரு புறனடை கூறுகின்றது.

**இ–ள்.: விகுதி பதஞ் சாரியை யுருபனைத்தினும்** – விகுதிப் புணர்ச்சி பதப் புணர்ச்சி உருபுப் புணர்ச்சி சாரியைப் புணர்ச்சி யென்னும் நால்வகைப் புணர்ச்சியுள்ளும், **உரைத்த விதியுள்** – சொன்ன விதிகள் பொதுப்பட நிற்பினுமவற்றுள், **ஓர்ந்து** – (இவ்விதி யிதற்குப் பொருந்து மிதற்குப் பொருந்தா தென) ஆராய்ந்துணர்ந்து, **ஒப்பனகொளல்** – எவ்விதி

யெதற்குப் பொருந்துமோ அவ் விதியை யதற்கு ஒத்திருப்பனவாகக் கொள்க, எ—று.

வ—று.:—

விகுதிப் புணர்ச்சியுள், 'றவ்வொடுகர வும்மை நிகழ்பல்லவு'மெனப் பொதுப்பட விதித்தாராயினும் , விதியுளதென் றெண்ணி இவ் விகுதி வந்தவிடத் தெல்லாம் இந்த விரண்டு காலமும் பொருந்துமென்று கொள்ளாது சென்று – சென்றும் என்பன இறந்த காலமும், சேறு – சேறும் என்பன எதிர்காலமும் பொருந்து மெனக் கொள்க. 'தவ்வொடிறப்பு மெதிர்வு' மென்பதற்கு மிவ்வாறே கொள்க. பதப்புணர்ச்சியுள், 'அல்வழி இ ஐ முன்னயினியல்பு மிகலும் விகற்பமுமாகு'மெனப் பொதுப்பட விதித்தாராயினும், விதியுள தென்றெண்ணி, ஆடி திங்களென இயல்பா மென்றும், பருத்திக்குறிது என மிகுமென்றுங் கொள்ளாது, ஆடித்திங்க ளெனப் பண்புத் தொகைக்கு மிகுமென்றுங் கொள்ளாது பருத்திகுறிது என எழுவாய்ச் சந்திக்கு மிகாதென்றுங் கொள்க. சாரியைப் புணர்ச்சியுள் 'பதமுன் விகுதியும் பதமு முருபும் புணர்வுழி யொன்றும் பலவுஞ்சாரியை வருதலுந் தவிர்தலும் விகற்பமுமாகு'மெனப் பொதுப்பட விதித்தாராயினும், விதியுளதென் றெண்ணி, நாட்டினி னீங்கினா னென இன் உருபிற்கு இன் சாரியை வரு மென்றும், நாட்டுக்கண் ணிருந்தானெனக் கண் உருபிற்கு இன் சாரியை வாராதென்றுங் கொள்ளாது, இன்னுருபிற்கு இன்சாரியை வாராதென்றும், நாட்டின் கண்ணெக் கண்ணுருபிற்கு இன்சாரியை வருமென்றுங் கொள்க. உருபுப் புணர்ச்சியுள் 'ஒற்றுயிர் முதலீற்றுருபுகள் புணர்ச்சியி னொக்கு மன்னப் பெயர் வேற்றுமைப் புணர்ப்பே' எனப் பொதுப்பட விதித்தாராயினும், விதியுளதென் றெண்ணி, நம்பிகு என உயிரீற் றுயர்திணைப் பெயர் முன் குவ்வுருபு மிகாதென்றும், நம்பிக்கண் என மன்னென்றதினாலே மிகு மென்றுங் கொள்ளாது நம்பிக்கு என மன்னென்றதினாலே குவ்வுருபு மிகுமென்றும், நம்பிகண்

எனக் கண்ணுருபு மிகா தென்றுங் கொள்க. பிறவுமிப்படியே காண்க. சாரியைப் புணர்ச்சி மற்றை மூவகைப் புணர்ச்சியையுஞ் சார்ந் திடையே தோன்றல் விகாரமாய் வந்து புணர்தலின் 'விகுதி பதஞ் சாரியை யுருபென' உருபிற்கு முற் கூறினார்.

இனி யிச்சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள் கொள்ளாமல் இந்த நால்வகைப் புணர்ச்சியுள்ளே யொன்றிற்குச் சொன்ன விதி மற்றொன்றிற்குங் கொள்க வெனப் பொருள் கொள்வாரு முண்டு. அப் பொருளுக்கு அமைந்த சொல் இச் சூத்திரத்திலில் லாததினாலும் 'பகுதி விகுதி யிடைநிலை சாரியை சந்தி விகாரமாறினுமேற்பவை முன்னிப்புணர்ப்ப முடியு மெப்பதங்களு'மென்றும், 'ஈறுபோத லென்னுஞ்' சூத்திரத்திற் சொன்ன விகாரங்கள் விகுதிப் புணர்ச்சிக்காவது மன்றிப் பதப்புணர்ச்சிக்கு மாமென்பது தோன்றப் 'பண்பிற்கியல்'பென்றும், புணரியல் விதி பெயர் வினை யிடை யுரி நான்கிற்கும் பொருந்து மென்பது தோன்ற, மெய்யுயிர் 'முதலீறா மிருபதங்களு'மென்றும், எடுத்துரைத்த சிறப்பு விதிகளுள் 'உருபின் முடிபை யொக்குமப் பொருளினும்' என்றும், 'ஒற்றுயிர் முதலீற்றுருபுகள் புணர்ச்சியி, னொக்குமன் னப் பெயர் வேற்றுமைப் புணர்ப்பே' என்றுங் கூறியதினாலே, அப் பொருளமைந்து கிடப்பதினாலும் அது பொருந்தா தென்க. கொளல் என்பது வியங்கோ ளாதலால் இதற்குப் பயனிலை மூன்றிடத் தைம்பாலிலுள் யாதொன்றை யாயினும் வருவித்து முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **விகுதி** – விகுதிப் புணர்ச்சியும், **பதம்** – பதப்புணர்ச்சியும், **சாரியை** – சாரியைப் புணர்ச்சியும் **உருபு** – உருபு புணர்ச்சியும் ஆகிய, **அனைத்தினும்** – நான்கு புணர்ச்சிகளிடத்தும், **உரைத்த** – பொதுப்படச் சொல்லப்பட்ட, **விதியின்** – விதிகளுள், **ஓர்ந்து** – ('இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது' என்று) ஆராய்ந்தறிந்து, **ஒப்பன** – எவ்விதி யெதற்குப் பொருந்துமோ அவ்விதியை, **கொளல்** – அதற்குக் கொள்க.

குறிப்பு :–

விகுதிப்புணர்ச்சியுள் "றவ்வொடுகர உம்மை நிகழ்

பல்லவும்'' எனப் பொதுப்பட விதித்தாராயினும், 'சென்று' என்றவிடத்து இறந்தகாலமும், 'சேறு' என்றவிடத்து எதிர்காலமும் பொருந்துமெனக் கொள்க.

பதப்புணர்ச்சியுள் ''அல்வழி இ ஐ முன்னராயின் இயல்பும் மிகலும் விகற்பமுமாகும்'' எனப்பொதுப்பட விதித்தாராயினும், 'புரவிகளிறுகள்' என உம்மைத் தொகையில் இயல்பாகியும் 'ஆடித்திங்கள்' எனப் பண்புத் தொகையில் மிகுந்தும், 'கிளிகுறிது', 'கிளிக்குறிது' எனச் சில எழுவாய்த் தொடரில் விகற்பித்தும் வருமெனக் கொள்க.

சாரியைப் புணர்ச்சியுள் ''பதமுன் விகுதியும் பதமுமுருபும் – புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை – வருதலுந் தவிர்தலும் விகற்பமுமாகும்'' எனப் பொதுப்பட விதித்தாராயினும், 'நாட்டின்கண் இருந்தான்' எனக் கண்ணுருபிற்கு இன்சாரியை வருமென்றும், 'நாட்டி னீங்கினான்' என இன்னு ருபிற்கு இன்சாரியை வாராதென்றுங் கொள்க.

உருபுபுணர்ச்சியுள் ''ஒற்றுயிர் முதலீற்றுருபுகள் புணர்ச்சியின் ஒக்கு மன்னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே'' எனப் பொதுப்படக் கூறினாராயினும், 'நம்பிகண்' எனக் கண்ணுருபுமிகாதென்றும், 'நமபிக்கு' எனக் குவ்வுருபு மிகுமென்றுங் கொள்க. மற்றவையு மிப்படியே.

இனி, இச்சூத்திரத்துக்கு 'இந்நால்வகைப் புணர்ச்சி களுள் ஒன்றற்குச் சொன்ன விதி மற்றொன்றிற்குங் கொள்க' எனப்பொருள் கூறுவாருமுளர்; அது பொருந்தாமைக்கு நியாயங்களை விரித்தி யுரையிற்கண்டுணர்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: விகுதி பதம் சாரியை உருபு அனைத்தினும்** – விகுதியும் பதமுஞ் சாரியையும் உருபும் ஆகிய நான்கின் புணர்ச்சி யியினிடத்தும், **உரைத்த விதியின் ஓர்ந்து** – பொதுப்படச் சொல்லப்பட்ட விதிகளுள் இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என உய்த்துணர்ந்து, **ஒப்பன கொளல்** – எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியை அதற்குக் கொள்க, எ–று.

**வ–று.:–**

(1) விகுதிப்புணர்ச்சியுள்; “றவ்வொ டுகர வும்மை நிகழ்பல்லவும்” எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுள தென்று நினைந்து, இவ்விகுதி வந்த விடத்தெல்லாம் இவ்விரண்டு காலமும் பொருந்தும் என்று கொள்ளற்க; சென்று, சென்றும் என்றவிடத்து இறந்தகாலமும், சேறு, சேறும் என்றவிடத்து எதிர்காலமும் பொருந்தும் என்று கொள்க.

(2) பதப்புணர்ச்சியுள், “அல்வழி இ ஐம் முன்ன ராயி னியல்பு மிகலும் விகற்பமு மாகும்” எனப் பொதுப்பட விதித்தா ரேனும், விதியுளதென்று நினைந்து, ஆடிதிங்கள், குவளைகண், என இயல்பாமென்றும், பருத்திக்குறிது, யானைக் குதிரை என மிகுமென்றுங் கொள்ளற்க; பருத்தி குறிது என எழுவாய்க் கண்ணும், யானை குதிரை என உம்மைத்தொகைக் கண்ணும் இயல்பாமெனவும், ஆடித்திங்கள் எனப் பண்புத்தொகைக்கண்ணும், குவளைக்கண் என உவமைத் தொகைக் கண்ணும் மிகுமெனவுங் கொள்க.

(3) சாரியைப்புணர்ச்சியுள்: “பதமுன் விகுதியும் பதமு முருபும் புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்” எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, நட்டினினீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டுக்கணிருந்தான் எனக் கண்ணுரு பிற்கு இன்சாரியை வாராதென்றுங் கொள்ளற்க; நாட்டின்கணிருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன் சாரியை வருமென்றும், நாட்டினீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வாராதென்றுங் கொள்க.

(4) உருபு புணர்ச்சியுள் "ஒற்றுயிர் முதலீற்றுருபுகள் புணர்ச்சி னொக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே" எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, நம்பிகு என உயிரீற்றுயர்திணைப் பெயர்முன் வந்த குவ்வுருபு மிகாதென்றும், நம்பிக்கண் என மன்னென்றமையாற் கண்ணுருபு மிகுமென்றுங் கொள்ளற்க; நம்பிகண் எனக் கண்ணுருபு மிகாதென்றும் நம்பிக்கு எனக் குவ்வுருபு மன்னென் றமையான் மிகுமென்றுங் கொள்க. மற்றவைகளும் இப்படியே காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். விகுதி பதம் சாரியை உருபு அனைத்தினும்** – விகுதியும் பதமுஞ் சாரியையும் உருபும் ஆகிய நான்கின் புணர்ச்சியினிடத்தும், – **உரைத்த விதியின் ஓர்ந்து** – பொதுப்படச் சொல்லப்பட்ட விதிகளுள் இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது எனவுய்த்துணர்ந்து – **ஒப்பனகொளல்** – எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியை அதற்குக் கொள்க. எ—று.

வ—று.:–

**(1)** விகுதிப் புணர்ச்சியுள்:– ''றவ்வொ டுகரவும் மைநிகழ் பல்லவும்'' எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, இவ்விகுதி வந்தவிடத்தெல்லாம் இவ்விரண்டு காலமும் பொருந்தும் என்று கொள்ளற்க. சென்று, சென்றும் என்றவிடத்து இருந்த காலமும், சேறு, சேறும் என்றவிடத்து எதிர்காலமும் பொருந்துமென்று கொள்க.

**(2) பதப்புணர்ச்சியுள்:**– ''அல்வழி இ ஐம் முன்னராயினியல்பு மிகலும் விகற்பமு மாகும்'' எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, ஆடி திங்கள், குவளைகண் என இயல்பா மென்றும், பருத்திக்குறிது, யானைக் குதிரை என மிகுமென்றுங் கொள்ளற்க. பருத்திகுறிது என எழுவாய்க் கண்ணும், யானை குதிரை என உம்மைத் தொகைக் கண்ணும் இயல்பாமெனவும், ஆடித் திங்கள் எனப் பண்புத் தொகைக் கண்ணும், குவளைக் கண் என உவமைத் தொகைக் கண்ணும் மிகுமெனவுங் கொள்க.

**(3) சாரியைப் புணர்ச்சியுள்:**– ''பதமுன் விகுதியும் பதமு முருபும் புணர்வழியொன்றும் பலவுஞ் சாரியை வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்'' எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, நாட்டினினீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டுக் கணிருந்தான் எனக் கண் தொகையிலும், இயல்பாம் மண்சுமந்தான் என்பது, மண்ணைச் சுமந்தான் என விரிதலால், இரண்டனுருபு மாத்திரந் தொக்க தொகை. மண்கூடை என்பது, மண்ணையுடைய கூடை என விரிதலால், உருபும் பயனும்

உடன்றொக்க தொகை. கற்கறித்தான், கட்குடித்தான் எனத் தனிக்குறிலைச் சார்ந்த லகர னகரம், வருமொழிவினையாய விடத்தும், வேற்றுமைப் பொதுவிதி யேற்றல் காண்க.

நம்பியைக் கொணர்ந்தான், அரசனை வணங்கினான் என உயர்திணைப் பெயரிடத்தே விரிந்தது. ஆடூஉவறிசொல், மகடூஉவறி சொல், பல்லோரறியுஞ்சொல், நான்முகற் றொழுது என உயர்திணைப் பெயரிடத்தே தொக்கது.

கொற்றனைக் கொணர்ந்தான் எனப் பொதுப் பெயரிடத்தே விரிந்தது. ஆண் பெற்றான், பெண் பெற்றாள் எனப் பொதுப் பெயரிடத்தே தொக்காது.

அன்னபிறவும் என்றதனால், தற்கொண்டான், எற்பணியாள் என உறழ வேண்டியவிடத்துத் திரிந்தே வருதலும், விளக்குறைத்தான் என இனமெல்லெழுத்து மிகவேண்டியவிடத்து வல்லெழுத்து மிகுதலும், மரங் குறைத்தான் என மவ்வீறுகெட்டு வல்லெழுத்து மிகவேண்டியவிடத்து மகரம் இனமெல்லெழுத்தாகத் திரிதலும், மாடுகொண்டான், பயறுதின்றான் என டறவொற்றிரட்ட வேண்டியவிடத்து இரட்டாமையும், மருந்து தின்றான் என மென்றொடர் வன்றொடராக வேண்டியவிடத்து அங்ஙன மாகாமையும், வேறொட்டான், தாடொழுதான் என லகர ளகரந் தகரம்வரத் திரியவேண்டியவிடத்துக் கெடுதலும், குரிசிற்றடிந்தான், அவட்டொடர்ந்தான் என உயர்திணைக்கட் கெடாது திரிந்து நிற்றலும், பிறவுங் கொள்க.

இன்னும், எண்ணின் கணின்ற இறந்தததுதழீஇய இழிவு சிறப்பும்மைகளால், வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோ டொருங்கொத்து, தெள்குபிடித்தான், எஃகுதொடுத்தான், நாகுகட்டினான், வரகுதந்தான் என இயல்பில் இயல்பாகியும், மகப்பெற்றான், பலாக்குறைத் தான், வடுப்பெற்றான், சுக்குத்தின்றான், பூத்தொடுத்தான், சேப்பெற்றான், கோக்கறந்தான் என வருமொழிவினை யாயவிடத்தும் விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும் பாலனவென்க.

## வை. மு. சடகோபராமாநுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: **விகுதி** – விகுதிப் புணர்ச்சியும்; **பதம்** – பதப் புணர்ச்சியும், **சாரியை** – சாரியைப் புணர்ச்சியும், **உருபு** – உருபு புணர்ச்சியும் ஆகிய, **அனைத்தினும்** – நான்கு புணர்ச்சிகளிடத்தும், **உரைத்த** – பொதுப்படச் சொல்லப்பட்ட, **விதியின்** – விதிகளுள், **ஓர்ந்து** – (இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என்று) ஆராய்ந்து அறிந்து, **ஒப்பன** – எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியே, **கொளல்** – (அதற்குக்) கொள்க; எ–று.

வ–று.:–

விகுதிப் புணர்ச்சியுள் **"றவ்வொ டுகர வும்மை நிகழ்பல்லவும்"** எனப் பொதுப்பட விதித்தாராயினும், '**சென்று**' என்ற இடத்து இறந்தகாலமும், '**சேறு**' என்ற இடத்து எதிர்காலமும் பொருந்து மென்று கொள்க.

பதப் புணர்ச்சியுள் **"அல்வழி இ ஐ முன்ன ராயின்; இயல்பும் மிகலும், விகற்பமுமாகும்"** எனப் பொதுப்பட விதித்தாராயினும் 'யானை குதிரைகள்' என உம்மைத் தொகையில் இயல்பாயும், 'ஆடித் திங்கள்' எனப் பண்புத்தொகையில் மிகுந்தும், 'கிளிகுறிது,' கிளிக்குறிது எனச் சில எழுவாய்த் தொடரில் விகற்பித்தும் வருமென்று கொள்க.

சாரியைப் புணர்ச்சியுள் **"பதமுன் விகுதியும் பதமு முருபும், புணர் வழி யொன்றும் பலவுஞ் சாரியை, வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்"** எனப் பொதுப்பட விதித்தாராயினும், 'நாட்டின்கண் இருந்தான்'எனக் கண்ணுருபிற்கு இன் சாரியை வருமென்றும். 'நாட்டினீங்கினான்' என இன்னுருபிற்கு இன் சாரியை (பெரும்பாலும்) வரா தென்றும் கொள்க.

உருபு புணர்ச்சியுள் **"ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின், ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே"** எனப் பொதுப்பட விதித்தாராயினும், '**நம்பிகண்**' எனக் கண்ணுருபு மிகா தென்றும், '**நம்பிக்கு**' எனக் குவ்வுருபு மிகு மென்றும் கொள்க. மற்றவைகளும் இப்படியே.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– விகுதி பதம் சாரியை உருபு அனைத்தினும் –** விகுதியும் பதமுஞ் சாரியையும் உருபும் ஆகிய நான்கின் புணர்ச்சியினிடத்தும், **உரைத்த விதியின் ஓர்ந்து –** பொதுப்படச் சொல்லப்பட்ட விதிகளுள் இவ் விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என வுய்த்துணர்ந்து, **ஒப்பன கொளல் –** எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியை அதற்குக் கொள்க. எ–று.

உ–ம்.:–

(1) விகுதிப்புணர்ச்சியுள் : "றவ்வொ டுகர வும்மைநிகழ்பல்லவும்" (சூ–145) எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுள தென்று நினைந்து, இவ்விகுதி வந்தவிடத்தெல்லாம் இவ்விரண்டு காலமும் பொருந்தும் என்று கொள்ளற்க; சென்று, சென்றும் என்ற விடத்து இறந்தகாலமும், சேறு, சேறும் என்றவிடத்து எதிர்காலமும் பொருந்தும் என்று கொள்க.

–243 ஆவது சூத்திரம் பார்க்க.

(2) பதப்புணர்ச்சியுள், "அல்வழி இ ஐம் முன்ன ராயி னியல்பு மிகலும் விகற்பமு மாகும்" (சூ–176) எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, ஆடிதிங்கள் குவளைகண் என இயல்பாமென்றும், பருத்திக்குறிது யானைக்குதிரை என மிகுமென்றுங் கொள்ளற்க; பருத்திகுறிது என எழுவாய்க்கண்ணும், யானைகுதிரை என உம்மைத்தொகைக் கண்ணும் இயல்பாமெனவும், ஆடித்திங்கள் எனப் பண்புத்தொகைக் கண்ணும், குவளைக் கண் என உவமைத்தொகைக் கண்ணும் மிகுமெனவுங் கொள்க.

(3) சாரியைப்புணர்ச்சியுள் : "பதமுன் விகுதியும் பதமுமுருபும் புணர்வழியொன்றும பலவுஞ் சாரியை வருதலுந் தவிர்தலும் விகற்பமுமாகும்" (சூ–243) எனப் பொதுப்பட விதித்தாலேனும், விதியுளதென்று நினைந்து, 'நாட்டுக்க ணிருந்தான்' எனக் கண்ணுருபிற்கு இன்சாரியை வாராதென்றுங் கொள்ளற்க; நாட்டின்கணிருந்தான் எனக்கண்ணுருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டினீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வாராதென்றுங் கொள்க.

(4)உருபு புணர்ச்சியுள்: "ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியினொக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே" எனப் பொதுப்பட விதித்தாரேனும் விதியுளதென்று நினைந்து நம்பிகு என உயிரீற்றுயர்திணைப்பெயர் முன் வந்த குவ்வுருபு மிகாதென்றும், நம்பிக்கண் என மன்னொற் றமையாமற் கண்ணுருபு மிகாதென்றும்,நம்பிக்கு எனக் குவ்வுருபு மன்னென்றமையான் மிகுமென்றும் கொள்க. பற்றவைகளும் இப்படியே காண்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**விகுதி** – விகுதியும், **பதம்** – பதமும், **சாரியை** – சாரியையும், **உருபு** – உருபும் ஆகிய, **அனைத்தினும்** – எல்லாப் புணர்ச்சிகளிடத்தும், **உரைத்த** – பொதுப்படச் சொல்லப்பட்ட, **விதியின்**– விதிகளுள், **ஓர்ந்து** –(இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என) உய்த்துணர்ந்து, **ஒப்பன**– எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியை, **கொளல்** – அதற்குக் கொள்க.

**வரலாறு:–**

**விகுதிப்புணர்ச்சியுள்,**

'றவ்வொ டுகர வும்மை நிகழ் பல்லவும்' (சூ–145)
எனப் பொதுப்பட விதித்தாரேனும், சென்று என்னுமிடத்து இறந்தகாலமும், சேறு என்னுமிடத்து எதிர்காலமும் பொருந்துமெனக் கொள்க.

**பதப்புணர்ச்சியுள்,**

'அல்வழி இ ஐ முன்னராயின் இயல்பும் மிகலும் விகற்பமுமாகும்'
எனப் பொதுப்பட விதித்தாரேனும், பருத்தி குறிது என வருகிற எழுவாய்ப் புணர்ச்சிக்கண் இயல்பா மெனவும், ஆடித் திங்கள் என வருகிற பண்புத் தொகைக்கண் மிகுமெனவுங் கொள்க.

**சாரியைப் புணர்ச்சியுள்**

'பதமுன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை வருதலுந் தவிர்தலும் விகற்பமுமாகும்'
எனப் பொதுப்பட விதித்தாரேனும் நாட்டின்க

ணிருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டி னீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வாராதென்றுங் கொள்க.

**உருபுபுணர்ச்சியுள்,**

'ஒற்றுயிர் முதலீற்றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே' (சூ242)

எனப் பொதுப்பட விதித்தாரேனும். நம்பிகன் எனக் கண்ணுருபு மிகாதென்றும், நம்பிக்கு எனக் குவ்வுருபு மிகு மென்றுங் கொள்க. மற்றவைகளு மிப்படியே.

## மோசசு பொன்னையா

விகுதிப்புணர்ச்சி, பதப்புணர்ச்சி, சாரியைப்புணர்ச்சி, உருபுபுணர்ச்சி என்னும் நான்கு புணர்ச்சிகளிடத்தும் பொதுப்படச் சொல்லப்பட்ட விதிகளுள் பொருந்துமாறு தெரிந்து ஏற்பவற்றைக் கொள்க, **எ–று.**

**வரலாறு.:–**

விகுதிப் புணர்ச்சியுள், 'றவ்வொ டுகர வும்மை நிகழ் பல்லவு' எனப் பொதுப்பட விதித்தாரேனும், சென்று, சென்றும் என்பன இறப்பும் சேறு, சேறும் என்பன எதிர்வும் உணர்த்துமே யன்றி இரண்டும் இறப்பும் எதிர்வும் உணர்த்தா என ஏற்பக் கோடல்.

*பதப்புணர்ச்சியுள்,*

*'அல்வழி இஐம் முன்ன ராயின்*
*இயல்பு மிகலும் விகற்பமு மாகும்'*

எனப் பொதுப்பட விதித்தாரேனும், உம்மைத் தொகையில் யானை குதிரைகள் என இயல்பும், பண்புத்தொகையில் சாரைப்பாம்பு என மிகுதலும், எழுவாய்த் தொடரில் கிளி குறிது, கிளிக்குறிது என விகற்பித்தலும் அமையும் என ஏற்பக் கோடல்.

*சாரியைப் புணர்ச்சியுள்*

*'பதமுன் விகுதியும் பதமு முருபும்*
*புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை*
*வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்'*

எனப் பொதுப்பட விதித்தாரேனும், நாட்டின்கண் இருந்தான் எனக் கண்ணுருபுக்கு இன்சாரியை வரும் என்றும், நாட்டின் நீங்கினான் என இன்னுருபிற்குப் பெரும்பாலும் இன்சாரியை வருதவில்லை எனவும் ஏற்பக் கோடல்.

*உருபு புணர்ச்சியுள்,*
*'ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்*
*ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே'*

எனப் பொதுப்பட விதித்தாரேனும், நம்பிகண் எனக் கண்ணுருபு மிகாதென்றும், நம்பிக்கு எனக் குவ்வுருபு மிகுமென்றும் ஏற்படக்கோடல்; பிறவற்றையும் இவ்வாறே கொள்க.

**(15)**

**254. இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்**
**உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்**
**விரவுப் பெயரின் விரிந்து நின்றும்**
**அன்ன பிறவு மாகுமை யுருபே.**

இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும்
உயர்திணை இடத்து விரிந்தும் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவும் ஆகும் ஐ உருபே.

iyalpi<u>n</u> vikāramum vikāraṭṭu iyalpum
uyarṭiṇai itaṭṭu virinṭum ṭokkum
viravup peyari<u>n</u> virinṭu ni<u>n</u>ṟum
a<u>n</u><u>n</u>a piṟavum ākum ai urupē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Special rule for the second case

The combination of the Second case may also natural where is should be mutational, and mutational where it should be natural; it

may also have its sign (ai) expressed or understood after Personal and Common-class Nouns, besides being liable to other changes of a similar kind.

## மயிலை நாதர்

எ–ன், ஐகார வேற்றுமைத் திரிபு தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– இவ்வாறு வரப்பெறும், ஐகார வேற்றுமை; உருபினும் பொருளினும், எ–று.

வ–று.:–

இயல்பின் விகாரமாவது, "வழிபடு தெய்வ நிற்புறங்காப்ப" என்பது. விகாரத்தியல்பாவன, மண் கொணர்ந்தான் பொன் கொணர்ந்தானென்பன. உயர்திணையிடத்து விரிந்து நின்றன, நம்பியைக் கொணர்ந்தான் நங்கையைக் கொணர்ந்தா னென்பன. உயர்திணையிடத்துத் தொக்கு வந்தன, மகற்பெற்றான் மகட்பெற்றா னென்பன. விரவுப் பெயரின் விரிந்து நின்றன, கொற்றனைக் கொணர்ந்தான் கொற்றியைக் கொணர்ந்தா னென்பன.

'அன்னபிறவும்' என்றதனால், [1]வில்லைக்கொள் வில்கொள் விற்கொள் என்பன போல்வனவுங் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், வேற்றுமைப் புணர்ச்சிக்கு ஆவதோர் புறனடை உணர் – ற்று:

இ–ள்.: வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த பொது விதியோடு தானும் ஒருங்கு முடிதலே யன்றி, அங்ஙனம் விதித்த இயல்பின்கண் விகாரமாயும் விகாரத்தின்கண் இயல்பாயும், உயர்திணைக்கண் விரிந்தும் தொக்கும், விரவுப்பெயர்க்கண் விரிந்தும் விரிதலொழிந்தும், இவைபோல்வன பிற வேறுபாடாயும் வரும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி, எ–று.

---

பாட வேறுபாடு.:–

1. ஆடூஉவறிசொல் மகடூஉவறிசொல், வில்லைக்கொள்.

உயிரே ஒற்றே சாரியையே என்றிவை தோன்றல் திரிதல் கெடுதல் உறழ்ச்சி விகற்பங்களை எல்லாம் உள்ளடக்கி இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும் என்றும், எல்லா வேற்றுமையும் விரிந்தும் தொக்கும் வருதல் போலாது இவ் வேற்றுமை உயர்திணைப் பெயர்க்கண்ணும் விரவுப்பெயர்க்கண்ணும் விரிதலே தகுதியாய்த் தொகுதல் தகுதியாயும் வலிந்து கோடலாயும் வரும் என்பது தோன்ற விரிந்தும் தொக்கும் விரிந்தும் விரிதனின்றும் என்றும், நெருநலளவும் வருத்திப பிணி இன்று நின்றது என்பது போல ஒழிதற்பொருள் தோன்ற நின்று என்றும் கூறினார்.

மேலைச் சூத்திரத்து 'ஒப்பன கொளலே' என்ற மையான், இவ் விதிகளை இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி வந்துழி யெல்லாம் கூட்டாது, வேற்றுமைப் பொதுப்புணர்ச்சியோடு ஒருங்கொத்து முடிவன இவை, இப் புறனடைச் சிறப்பு விதியான் முடிவன இவை என உய்த்துணர்ந்து ஏற்பனவற்றோடும் கூட்டுக.

வ—று.:—

" வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப" என இயல்பின் விகாரமாயிற்று. மண்கொணர்ந்தான் என விகாரத்து இயல்பாயிற்று. நம்பியைக்கொணர்ந்தான் என உயர்திணைக்கண் விரிந்தது. [2]"ஆடூஉவறிசொல் மகடூஉவறிசொல் பல்லோரறியுஞ்சொல்" 'நான்முகற் றொழுது' என அதன்கண் தொக்கது. கொற்றனைக் கொணர்ந்தான் என விரவுப்பெயர்க்கண் விரிந்தது. ஆண்பெற்றாள், பெண்பெற்றாள், "தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத்துணை", "வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப" என அதன்கண் தொக்கது. இவ் விரண்டிடத்துத் தொகையுள் சில தகுதியாயும் சில வலிந்து கோடலாயும் வருதல் காண்க.

'அன்ன பிறவும்' என்றமையானே தற்கொண்டான், "எற்பணியாளாய்" என உறழப்படுவன திரிந்தே வருதலும், இன்னும் வருவன உளவேல் அவையும் கொள்க.

இங்ஙனம் எண்ணின்கண் நின்ற இறந்ததுதழீஇய இழிவு சிறப்பும்மைகளானே, வேற்றுமைக்கு என விதித்த பொதுவிதியோடு ஒருங்கு ஒத்து வரகு கட்டினான் என

இயல்பின்கண் இயல்பாயும், விளக்குறைத்தான் பலாக்குறைத்தான் கடுக்குறைத் தான் என விகாரத்தின்கண் விகாரமாயும் வருதலே பெரும்பால என்க.

இனி, விரவுப்பெயர்க்கண் விரிந்து நின்றும் என்பதற்கு இவ்வாறன்றி, எழுந்திருந்து என்பதற்கு இருந்து என்பதனை அசைநிலையாக்கி எழுந்து என ஒருபொருள் கோடல் போல, நின்று என்பதனை அசைநிலையாக்கி விரிந்து என் ஒருபொருள் கொள்ளின், வழக்கின்கண்ணும் செய்யுட்கண்ணும் தொக்கு வரும் இலக்கியங்கட்கு இலக்கணம் இன்றாம் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இரண்டாம் வேற்றுமைத் திரிபு தொகுத்துக் கூறியது.

**இ–ள்.:– இயல்பின் விகாரமும்** – இயல்பாகப் புணருமிடத்து விகாரமாகப் புணர்தலும், **விகாரத் தியல்பும்** – விகாரமாகிப் புணருமிடத்து இயல்பாகிப் புணர்தலும், **உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும்** – உயர்திணைப் பெயரிடத்து ஐயுருபு விரிந்தும் மறைந்தும் நிற்றலும், **விரவுப்பெயரின் விரிந்து நின்றும்** – விரவுத்திணைப் பெயரில் ஐயுருபு விரிந்தும் மறைந்தும் நிற்றலும், **அன்ன பிறவும் ஆகும் ஐயுருபே** – இதுபோல் பிறவும் இரண்டாம் வேற்றுமை உருபினும் பொருளினுமாம், எ–று.

**உ–ம்.:–**

"வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப" எனப் பொதுப் பெயர்க்கண் இயல்பாகப் புணரும் புணர்ச்சி திரிபு விகாரப் புணர்ச்சி ஆயிற்று. தாய் கொலை செய்தான் என இயல்பாய் வருமிடத்துத் தாய்க் கொலை செய்தான் எனத் தோன்றல் விகாரம் ஆயிற்று. மண் கொணர்ந்தான், பொன் கொணர்ந்தான், என்பது விகாரத்தியல்பு. நம்பியைக் கொணர்ந்தான், நங்கையைக் கொணர்ந்தான் என உயர்திணை யிடத்து விரிந்து நின்றது. மகற்பெற்றான், மகட் பெற்றான் என்பது இரண்டனுருபு தொக்கு வந்தது. ஆடூஉ அறிசொல் என்பதுமது. கொற்றனைக் கொணர்ந்தான் கொற்றியைக் கொணர்ந்தான் என்பது விரவுப்பெயர் ஈற்றின் ஐயுருபு கொள்ளுக. மகப் பெற்றான் என விரவுப் பெயர்க்கண்ணும் கெடுதல் கொள்க.

''பிறவு''மென்ற இலேசானே விளங் குறைத்தான் என்பதனை விளக்குறைத்தான் எனவும் மரக்குறைத்தான் என வல்லெழுத்து மிகுமிடத்து மரங் குறைத்தான் என மெல்லெழுத்தோடு தோன்றலும் பலாக் குறைத்தான், கடுக் குறைத்தான், சேக் கட்டினான் என உயிர் வருமிடத்து உயிர் கெட்டு வருதலும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, வேற்றுமைப் புணர்ச்சிக்காவதோர் புறனடை யுணர்த்துகின்றது.

இ-ள்.: **இயல்பின் விகாரமும்** - பொதுவிதியோடு முடிதலே யன்றி அப்படி விதித்த இயல்பிலே விகாரமாகியும், **விகாரத்தியல்பும்** - விகாரத்திலே யியல்பாகியும், **உயர்திணையிடத்து** - உயர்திணையினிடத்து, **விரிந்தும்** - வெளிப்பட்டும், **தொக்கும்** - மறைந்தும், **விரவுப்பெயரின்** - பொதுப்பெயரின்கண், **விரிந்தும்** - வெளிப்பட்டும், **நின்றும்** - மறைந்தும், **அன்ன பிறவும்** - அவை போல்வன பிற வேறுபாடுகளும், **ஆகும்** - ஆகி வரும், **ஐ யுருபு** - இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி, எ-று.

'வழிபடுதெய்வ நிற்புறங் காப்ப' என இயல்பின் விகாரமாயிற்று. மண்கொணர்ந்தான், என விகாரத் தியல்பாயிற்று. நம்பியைக் கொணர்ந்தான் என உயர்திணையிடத்து விரிந்தது. பல்லோரறியுஞ் சொல் என அதனிடத்தே தொக்கது. கொற்றவனைக் கொணர்ந்தான் என விரவுப்பெயரிடத்து விரிந்தது. ஆண்பெற்றாள் என விரவுப் பெயரிடத்தே தொக்கது. 'அன்ன பிறவு' மென்றமையால் தற்கொண்டான் எனவுறழப்படுவது திரிந்தே வருதலும் பிறவுங் கொள்க. இறந்ததுதழீஇய இழிவுசிறப்பும்மைகளான் வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோ டொருங்கொத்து வரகு கட்டினான் என இயல்பிலியல் பாகியும், பலாக்குறைத்தான் என விகாரத்தில் விகார மாகியும் வருதலே பெருபாலன வென்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் வரும் பல்வகை விகாரங்களையு மெடுத்துக் கூறுஞ் சூத்திரம் யாது?

இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரித்துத் தொக்கும்

விரவுப் பெயரின் விரிந்துந் நின்றும்
அன்ன பிறவு மாகுமை யுருபே

**இ–ள்.:– இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும்** – வேற்றுமைப்புணர்ச்சிக்கு விதித்த பொதுவிதியோடு தானும் ஒருங்கு முடிதலேயன்றி யப்படி விதித்த இயல்பிலே விகாரமாகியும், விகாரத்திலே இயல்பாகியும், **உயர்த்திணையிடத்து விரிந்துந் தொக்கும்** – உயர்திணைப் பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும், **விரவுப்பெயரின் விரிந்தும் நின்றும்** – பொதுப்பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும், **அன்ன பிறவும் ஆகும் ஐயுருபு** – அவை போல்வன பிற வேறுபாடுகளாகியும் வரும் இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி, எ–று.

**வ–று.:–**

(1) வழிபடு தெய்வ நிற்புறங் காக்க எனவும், மகட்கொடுத்தான், தலைவற் புகழ்ந்தான், தாய்க்கொலை, ஒன்னலர்ச் செகுத்தான் எனவும், இயல்பாக வேண்டிய விடத்து விகாரமாயிற்று.

இவை இயல்பாக வேண்டியவிடத்து விகாரமாயினமைக்குக் காரண மென்னை?

நிற்புறங்காக்க, மகட்கொடுத்தான், தலைவற் புகழ்ந்தான், தாய்க்கொலை, ஒன்னலர்ச் செகுத்தான் என்பன முறையே நின்னைப்புறங்காக்க, மகளைக் கொடுத்தான், தலைவனைப் புகழ்ந்தான், தாயைக்கொன்று கொலை, ஒன்னலரைச் செகுத்தான் எனப் பொருள் விரியும். விகாரப்படாது நின்புறங்காக்க, மகள் கொடுத்தான், தலைவன் புகழ்ந்தான் என இயல்பாக முடியுமாயின் மேற்கூறிய வாறு பொருள் விரியா; ஆதலின், "பொதுப் பெயருயர் திணைப் பெயர்களீற்றுமெய் வலிவரி னியல்பா மாவியரமுன் வன்மை மிகா" என்ற விதிப்படியும் "தன்னென் நின்னீறியல்பாம்" என்ற விதிப்படியும் இயல்பாக வேண்டியவிடத்து விகாரப் பட்டனவென்க.

"கனிதின்றான், வரைபிளந்தான் பந்துதந்தான், இயல்பினும் விதியினும் என்னுஞ் சூத்திரவிதிப் படியும் எனவும், மண்சுமந்தான், பொன்கொடுத்தான், ணன வல்லினம் வரட்டறவும் நவும்பிறவரினியல்புமாகும் வேற்றுமைக்கு" என்ற விதிப்படியும் எனவும் காய்தின்றான். தேர்செய்தான், தமிழ்படித்தான். ("யரழமுன்னர்க் கசதப

வேற்றுமை மிகலும்'' என்ற விதிப்படியும்) எனவும் பால்குடித்தான். வாள்பிடித்தான். (''லள வேற்றுமையிற் றடவும்'' என்ற விதிப்படியும் எனவும். பால்குடித்தான், வாள்பிடித்தான். (''வள வேற்றுமையிற் றடவும்'' என்ற விதிப்படியும்) எனவும், வரம்பெற்றான், செயமுற்றான், மரம் வெட்டினான். (''மவ்வீறொற்றழிந்து'' என்ற விதிப்படியும் எனவும், விகாரமாக வேண்டியவிடத்து இயல்பாயிற்று. இவ்விகாரத்தியல்பு வருமொழி வினையாய விடத்தெனக் கொள்க.

வருமொழி வினையாகாது பெயரேயாக இரண்ட னுருபும் பயனும் உடன்றொக்க தொகையிலே வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோடொருங் கொத்து விகாரத்தில் விகாரமாகும். அஃதாவது வேற்றுமைக்கென விதித்த பொதுமுடிபே தனக்கும் முடிபாக முடிவதாம். ''ணன் வல்லினம் வரட்டறவும் பிறவரி னியல்புமாகும்'' என்ற விதிப்படி சிறுகண்களிறு என்

(4) கொற்றனைக் கொணர்ந்தான் எனப் பொதுப் பெயரிடத்தே விரிந்தது. ஆண்பெற்றான், பெண் பெற்றான் எனப் பொதுப்பெயரிடத்தே தொக்கது.

உயர்திணைப்பெயரிடத்தும் பொதுப்பெயரிடத்தும் உருபு விரிதற்குக் காரணமென்னை?

நம்பியைக் கொணர்ந்தான் கொற்றனைக் கொணர்ந்தான் என்பன நம்பிகொணர்ந்தான் கொற்றன் கொணர்ந்தான் என விரியாது நிற்குமாயின் எழுவாய்த்தொட ராகு மாதலின் விரிய வேண்டியதாயிற்று.

அன்ன பிறவும் என்றதனால், தற்கொண்டான், எற்பணியாள் என (''தன்னென்னெனன்பவற் றீற்றுனவ் வன்மையோ டுறழும்'' என்ற விதிப்படி) உறழவேண்டிய விடத்துத் திரிந்தே வருதலும். விளக்குறைத்தான் என இனமெல்வெழுத்து மிகவேண்டிய விடத்து வல்லெழுத்து மிகுதலும், மரங்குறைத்தான் என மவ்வீறு கெட்டு வல்லெழுத்து மிகவேண்டியவிடத்து மகரம் இனமெல்லெழுத்தாகத் திரிதலும், மாடு கொண்டான், பயறு தின்றான் என ட ற வொற் றிரட்டவேண்டியவிடத்து இரட்டாமையும் மருந்து தின்றான் என மென்றொடர் வன்றொடராக வேண்டியவிடத்து அங்ஙனமாகாமையும்,

வேறொட்டான் தாடொழுதான் என லகர ளகரந் தகரம் வரத் திரிய வேண்டியவிடத்துக் கெடுதலும், குரிசிற்றடிந்தான், அவட் டொடர்ந்தான் என உயர்திணைக்கட் கெடாது திரிந்து நிற்றலும் பிறவுங் கொள்க.

இன்னும் எண்ணின்கணின்ற இயந்தது தழீஇய இழிவுசிறப்பும்மைகளால், "இடைத்தொடராய்தத் தொடர்" என்னுஞ் சூத்திரத்தில் வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோ டொருங் கொத்து, தெள்கு பிடித்தான். எஃகு கொடுத்தான், நாகு கட்டினான். வரகு தந்தான், என இயல்பில் இயல்பாகியும், "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரப்படி மகப்பெற்றான், பலாக்குறைத்தான், வடுப்பெற்றான். சுக்குத்தின்றான், பூத்தொடுத்தான், சேப்பெற்றான் கோக்கறந்தான் என வருமொழி வினையாயவிடத்தும் விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பாலன வென்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை யுணர்த்துகின்றது.

**இ–ள்.: இயல்பின் விகாரமும்** – (வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த பொதுவிதியோடு தானு முழுவது மொத்து முடிதலு மன்றி) அங்கே விதித்த இயல்பிலே விகாரமாகியும், **விகாரத் தியல்பும்**–விகாரத்திலே யியல்பாகியும், **உயர்திணையிடத்து விரிந்துந் தொக்கும்**–உயர்திணைப் பெயரிடத்து விரிதலே தகுதியாகியுந் தொகுதலே தகுதியாகியும், **விரவுப்பெயரின் விரிந்தும்** – பொதுப்பெயரிலே விரிதலே தகுதியாகியும், **நின்றும்**–அவ்விரித லொழிந்தும், **அன்ன பிறவுமாகு மையுருபு**–அவை போல்வனவாகிய பிற வேறுபாடாகியும் வரும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி, எ–று.

உயிரும் ஒற்றும் சாரியையும் என்றிவை தோன்றலும், திரிதலும், கெடுதலும், உறழ்ச்சியாகிய விகற்பமும் என்றிவற்றை யெல்லா முள்ளடக்கி, இயல்பின் விகாரமும் விகாரத் தியல்புமென்றும்; எல்லா வேற்றுமையும் விரிந்துந் தொக்கும் வருவது போலாகாமல், இவ் வேற்றுமை யுயர்திணைப் பெயரிலும் பொதுப்பெயரிலும் விரிதலே தகுதியாயுந் தொகுதலே தகுதியாயும் வலிந்து கொள்ளலாகியும் வருமென்பது தோன்ற, 'விரிந்துந்

தொக்கும் விரிந்தும் விரிதல் நின்றும்' என்றுங் கூறினார். மேலைச் சூத்திரத்து 'ஒப்பன கொளலே' யென்றதினாலே இவ்விதிகளை யிரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி வந்த விடத்தெல்லாங் கூட்டாமல் வேற்றுமைப் பொதுப்புணர்ச்சியோ டொத்து முடிவன விவை; இப் புறனடைச் சிறப்பு விதியால் முடிவன விவை யெனப் பகுத்துணர்ந்து ஏற்பனவற்றோடு கூட்டுக.

வ—று.:—

வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப – இது 'நின்னீ றியல்பா முறவே' என்ற இயல்பு விரியைக் கொள்ளாது விகாரமாயிற்று. மண் கொணர்ந்தான் – இது 'ணனவல் லினம் வரட்டறவு'மென்ற விதியைக் கொள்ளாது இயல்பாயிற்று. நம்பியைக் கொணர்ந்தானென – உயர்திணை யிடத்து விரிந்தது. 'ஆடூஉவறிசொல், மகடூஉவறிசொல் பல்லோரறியுஞ் சொல்' என அதனிடத்துத் தொக்கது. கொற்றனைக் கொணர்ந்தான் எனப் பொதுப்பெயரில் விரிந்தது. ஆண்பெற்றாள், பெண்பெற்றாள், 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணி' என அதனிடத்துத் தொக்கது. இந்த விரண்டிடத்துத் தொகையுள்ளே சில தகுதியாயுஞ் சில வலிந்து கொள்ளலாயும் வருதல் காண்க. 'அன்ன பிறவு' மென்றதினாலே, தற்கொண் டான், எற்பணியாள் என 'தன் என்பவற் றீற்று னவ்வன்மையோ டுறழு' மென்ற விதியைக் கொள்ளாது திரிந்தே வருதலும், இன்னும் வருவன வுளவாயின் அவைபுங் கொள்க.

இங்கே பெண்ணி நின்ற இழிவுசிறப்பு உம்மை களாலே, வேற்றுமைக் கென விதித்த பொதுவிதியோ டொத்து, 'உயிர்த்தொடர் முன் மிகாவேற்றுமை' என்ற விதியை யேற்று, வரகு கட்டினான் என வியல்பிலே யியல்பாகியும், 'இயல்பினும் விதியினு நின்றவுயிர் முன் கசதப மிகு' மென்ற விதியை யொத்து விளக்குறைத் தான் பலாக்குறைத்தான் என விகாரத்திலே விகாரமாகியும் வருதலே பெரும்பால வெனக் காண்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :— ஐ உருபு – இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி, இயல்பின்

**விகாரமும் விகாரத்தியல்பும்** – (பொதுவிதிப்படி முடிதலேயன்றி அப்படிவிதித்த) இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும், **உயர்திணை இடத்து** – உயர்திணைப் பெயரிடத்து, **விரிந்தும்** – உருபு வெளிப்பட்டும், **தொக்கும்** – உருபுமறைந்தும், **விரவுப் பெயரின்**– பொதுப்பெயரிடத்து, **விரிந்தும்** – உருபு வெளிப்பட்டும், **நின்றும்** – உருபுமறைந்தும், **அன்ன பிறவும்** – அவைபோல்வன வேறுபாடுகளும், **ஆகும்** – ஆகிவரும்.

உ–ம்.:–

"நிற்புறங்காப்ப""நின்னீறு இயல்பாம்"
என இயல்பாக வேண்டுமிடத்து விகாரமாயிற்று).
'மண் கொணர்ந்தான்'
"ணனவல்லினம்வரட்டறவும்"
என விகாரமாக வேண்டுமிடத்து இயல்பாயிற்று.
நம்பியைக் கொணர்ந்தான்
உயர்திணையிடத்து விரிந்தது.
"நான்முகற்றொழுது"
உயர்திணையிடத்துத் தொக்கது
கொற்றனைக் கொணர்ந்தான்
விரவுப்பெயரிடத்துவிரிந்தது
ஆண்பெற்றான்
விரவுப்பெயரிடத்துத் தொக்கது.

குறிப்பு:–

'அன்னபிறவும்' என்றதனால் 'தற்கொண்டான்' என உறழவேண்டுமிடத்துத் திரிந்தே வருதலும் பிறவுங்கொள்க. எண்ணில் வந்த இறந்தது தழுவிய இழிவுசிறப்பும்மைகளால் வேற்றுமைக்கு என்று விதித்த பொதுவிதியோடு பெரும்பான்மை ஒத்து, 'வரகுதந்தான்' என இயல்பில் இயல்பாகியும், 'பலாக்குறைத்தான்' என விகாரத்தின் விகாரமாகியும் வரும் என்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும்** – வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த பொதுவிதியோடு தானும் ஒருங்கு முடிதலே யன்றி யப்படி விதித்த இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும், **உயர்திணையிடத்து விரிந்துந் தொக்கும்** – உயர்திணைப்பெயரிடத்து

வெளிப்பட்டும் மறைந்தும், **விரவுப்பெயரின் விரிந்தும் நின்றும்** – பொதுப்பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும், **அன்ன பிறவும் ஆகும்** – அவை போல்வன பிற வேறுபாடுகளாகியும் வரும், **ஐயுருபு** – இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி, எ–று.

வ–று.:–

(1) வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப எனவும், மகட் கொடுத்தான், தலைவற் புகழ்ந்தான், தாய்க்கொலை, ஒன்னலர்ச் செகுத்தான் எனவும், இயல்பாக வேண்டிய விடத்து விகாரமாயிற்று.

(2) கனிதின்றான், வரைபிளந்தான், பந்துதந்தான் எனவும், மண்சுமந்தான், பொன்கொடுத்தான் எனவும், காய்தின்றான், தேர்செய்தான், தமிழ்படித்தான் எனவும், பால் குடித்தான், வாள் பிடித்தான் எனவும், வரம்பெற்றான், செயமுற்றான், மரம்வெட்டினான், எனவும் விகாரமாக வேண்டியவிடத்து இயல்பாயிற்று. இவ்விகாரத்தியல்பு வருமொழி வினையாய விடத்தெனக் கொள்க, வருமொழி வினையாகாது பெயரேயாக இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க தொகையிலே வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோ டொருங்கொத்து விகாரத்தில் விகாரமாகும், மண்கூடை புண்கை என ணகரவீறு, இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க தொகையினும், இயல்பாம். மண்சுமந்தான் என்பது மண்ணைச் சுமந்தான் என விரிதலால், இரண்டனுருபு மாத்திரந் தொக்க தொகை. மண்கூடை என்பது, மண்ணையுடைய கூடை என விரிதலால், உருபும் பயனும் உடன்றொக்க தொகை. கற்கறித்தான், கட்குடித்தான் எனத் தனிக்குறிலைச் சார்ந்த லகர ளகரம், வருமொழி வினையாய விடத்தும், வேற்றுமைப் பொது விதியேற்றல் காண்க.

(3) நம்பியைக் கொணர்ந்தான், அரசனை வணங்கினான் என உயர்திணைப் பெயரிடத்தே விரிந்தது. ஆடூஉவறிசொல், மகடூஉவறிசொல் பல்லோரறியுஞ்சொல், நான்முகற்றொழுது என உயர்திணைப் பெயரிடத்தே தொக்கது.

(4) கொற்றனைக் கொணர்ந்தான் எனப் பொதுப்பெயரிடத்தே விரிந்தது. ஆண்பெற்றாள், பெண்பெற்றாள் எனப் பொதுப்பெயரிடத்தே தொக்கது.

'அன்ன பிறவும்' என்றதனால், தற்கொண்டான், எற்பணியாள் என உறழவேண்டிய விடத்துத் திரிந்தே வருதலும், விளக்குறைத்தான் என இனமெல்லெழுத்து மிக வேண்டியவிடத்து வல்லெழுத்து மிகுதலும், மரங்குறைத்தான் என மவ்வீறு கெட்டு வல்லெழுத்து மிக வேண்டியவிடத்து மகரம் இனமெல்லெழுத்தாகத் திரிதலும் , மாடு கொண்டான், பயறு தின்றான், என ட ற வொற்றிரட்ட வேண்டிய விடத்து இரட்டாமையும், மருந்து தின்றான் என மென்றொடர் வன்றொடராக வேண்டியவிடத்து அங்ஙனமாகாமையும், வேறொட்டான், தாடொழுதான் என லகர ளகரந் தகரம் வரத் திரிய வேண்டிய விடத்துக் கெடுதலும், குரிசிற்றடிந்தான், அவட்டொடர்ந்தான் என உயர்திணைக்கட் கெடாது திரிந்து நிற்றலும், பிறவுங்கொள்க.

இன்னும், எண்ணின்கணின்ற இறந்ததுதழீஇய இழிவு சிறப்பும்மைகளால், வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோ டொருங்கொத்து, தெள்குபிடித்தான், எஃகுதொடுத்தான், நாகு கட்டினான், வரகு தந்தான் என இயல்பில் இயல்பாகியும், மகப்பெற்றான், பலாக் குறைத்தான், வடுப்பெற்றான், சுக்குத்தின்றான், பூத்தொடுத்தான், சேப்பெற்றான், கோக்கறந்தான் என வருமொழி வினையாய விடத்தும் விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பாலன வென்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும்** – வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த பொதுவிதியோடு தானும் ஒருங்குமுடிதலேயன்றிப் படி விதித்த இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும் – **உயர்திணையிடத்து விரிந்துந்தொக்கும்** – உயர்திணைப் பெயரிடத்து வெளிப்படுத்தியும் மறைந்தும், – **விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்** – பொதுப் பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும், – **அன்ன பிறவும் ஆகும்** – அவைபோல்வன பிறவேறுபாடுகளாகியும் வரும், – **ஐயுருபு** – இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி.

வ–று.:–

(1) வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப எனவும் மகட்கொடுத் தான் தலை வற்புகழ்ந்தான், தாய்க்கொலை, ஒன்னலர்ச்

செகுத்தான். எனவும் இயல்பாக வேண்டிய விடத்து விகாரமாயிற்று.

(2) கனிதின்றான், வரைபிளந்தான், பந்துதந்தான். எனவும் மண்சுமந்தான், பொன் கொடுத்தான் எனவும் காய்தின்றான், தேர்செய்தான், தமிழ்படித்தான். எனவும் பால் குடித்தான், வாள்பிடித்தான் எனவும் வரம் பெற்றான், செயமுற்றான், மரம் வெட்டினான் எனவும் விகாரமாக வேண்டியவிடத்து இயல்பாயிற்று. இவ்விகாரத்தியல்பு வருமொழி வினையாய விடத்தெனக் கொள்க. வருமொழிவினையாகாது பெயரேயாக இரண்டனுருபும் பயனும் உடன் தொக்க தொகையிலே வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோ டொருங்கொத்து விகாரத்தில் விகாரமாகும். மண்கூடை கை என ணகரவீறு, இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க தொகையிலே வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோ டொருங்கொத்து விகாரத்தில் விகாரமாகும். மண்கூடை, புண் கை என ணகரவீறு, இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க தொகையினும் இயல்பாம். மண் சுமந்தான் என்பது மண்ணைச் சுமந்தான் என விரிதலால் இரண்டன் உருபு மாத்திரந் தொக்க தொகை. மண்கூடை என்பது மண்ணையுடைய கூடை என விரிதலால் உருபும் பயனும் உடன் தொக்க தொகை. கற்கறித்தான், கட்குடித்தான் எனத் தனிக்குறிலைச் சார்ந்த லகர ளகரம்,வருமொழி வினையாயவிடத்தும்,வேற்றுமைப் பொதுவிதியேற்றல் காண்க.

(3)நம்பியைக் கொணர்ந்தான்,அரசனை வணங்கினான் எனுயர்திணைப் பெயரிடத்தே விரிந்தது. ஆடுவறிசொல், மகடூவறிசொல், பல்லோ ரறியுஞ்சொல், நான்முகற் றொழுது என உயர்திணைப் பெயரிடத்தே தொக்கது.

(4)கொற்றனைக் கொணர்ந்தான் எனப் பொதுப் பெயரிடத்தே விரிந்தது. ஆண்பெற்றாள், பெண்பெற்றாள் எனப் பொதுப்பெயரிடத்தே தொக்கது.

'அன்னபிறவும்' என்றதனால், – தற்கொண்டான் எற்பணியாள் என உழறவேண்டிய விடத்துத் திரிந்தே வருதலும், விளக்குறைத்தான் என இனமெல் லெழுத்து

மிகவேண்டியவிடத்து வல்லெழுத்து மிகுதலும், அரங்குறைத்தான் என மவ்வீறு கெட்டு வல்லெழுத்து மிக வேண்டியவிடத்து மகரம் இனமெல் லெழுத்தாகத் திரிதலும், மாடு கொண்டான், பயறு தின்றான் என ட ற வொற் றிரட்டவேண்டியவிடத்து இரட்டாமையும், மருந்து தின்றான் என மென்றொடர் வன்றொடராக வேண்டிய விடத்து அங்ஙனமாகா மையும், வேறொட்டான் தாடொழுதான் என லகர ளகரந் தகரம் வரத் திரிய வேண்டியவிடத்துக் கெடுதலும், குரிசிற்றடிந்தான் அவட்டொடர்ந்தான் என உயர்திணைக்கட் கெடாது திரிந்து நிற்றலும், பிறவுங் கொள்க.

இன்னும் எண்ணின்கணின்ற இறந்ததுதழீஇய இழிவு சிறப்பும்மைகளால், வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோடொருங் கொத்து, தெள்குபிடித்தான், எஃகுதொடுத்தான், நாகு கட்டினான், வரகு தந்தான் என இயல்பில் இயல்பாகியும், மகப்பெற்றான், பலாக்குறைத் தான், வடுப்பெற்றான், சுக்குத்தின்றான், பூத்தொடுத்தான், சேப்பெற்றான், கோகறந்தான் என வருமொழி வினையாயவிடத்தும் விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பாலான வென்க.

## வை. மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– ஐ உருபு – இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி, இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும் – (பொதுவிதிப்படி முடிதலே யன்றி அப்படி விதித்த) இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும்; **உயர்திணையிடத்து** – உயர்திணைப் பெயரினிடத்து, **விரிந்தும்** – உருபு வெளிப்பட்டும், **தொக்கும்** – உருபு மறைந்தும்; **விரவுப் பெயரின்** – பொதுப்பெயரினிடத்து, **விரிந்தும்** – உருபு வெளிப்பட்டும், **நின்றும்** – உருபு மறைந்தும்; **அன்ன பிறவும்** – அவை போல்வன பிற வேறுபாடுகளும், **ஆகும்** – ஆகிவரும்; எ–று.

உ – ம்.:–

நின் + புறங்காப்ப= 'நிற்புறங்காப்ப' – "நின்னீறியல் பாம்" என இயல்பாக வேண்டுமிடத்து விகாரமாயிற்று.

மண் சுமந்தான், பொன் கொடுத்தான் – 'ணன வல்லினம் வரட்டறவும்' என விகாரம் வேண்டுமிடத்து இயல்பாயிற்று.

நம்பியைக் கொணர்ந்தான் – உயர்திணையிடத்து விரிந்தது.

மகன் + பெற்றாள் – மகற்பெற்றாள் – உயர்திணை யிடத்துத் தொக்கது.

கொற்றனைக் கொணர்ந்தான் – பொதுப்பெயரிடத்து விரிந்தது.

ஆண்பெற்றாள்–பொதுப்பெயரிடத்துத் தொக்கது.

'அன்ன பிறவும்' என்றதனால், 'தற்கொண்டான்' என விகற்பிக்க வேண்டுமிடத்துத் திரிந்தே வருதலும், பிறவுங் கொள்க. (தன் + கொண்டான்.)

எண்ணுப்பொருளில் வந்த இறந்தது தழுவிய இழிவுசிறப்பு **உம்மைகளால்** , வேற்றுமைக்கு என்று விதித்த பொதுவிதியோடு ஒத்து 'வரகு தந்தான்' என இயல்பில் இயல்பாகியும், 'சுக்குத் தின்றான்' என விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பான்மை யென்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்:–இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும் – வேற்றுமைப் புணர்ச்சிக்குவிதித்த பொது விதியோடு தானும் ஒருங்கு முடிதலே யன்றி யப்படி விதித்த இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும், உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும் – உயர்திணைப்பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும்,விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்– பொதுப் பெயரிணத்து வெளிப்பட்டும் மறைந்தும், அன்னபிறவும்–அவைபோல்வன பிற வேறுபாடுகளா கியும் வரும், ஐ உருபு – இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி, எ–று.

உ–ம் :–

(1) 'இயல்பின் விகாரமும்' நிற்புறங் காப்ப, மகட்கொடுத்தான், தலைவற்புகழ்ந்தான், தாய்க் கொலை, ஒன்னலர்ச் செகுத்தான். என இயல்பாக வேண்டியவிடத்து விகாரமாயிற்று.

(2) கனிதின்றான், வரைபிளந்தான், பந்துதந்தான், மண்சுமந்தான், பொன் கொடுத்தான் , காய்தின்றான், தேர்செய்தான், தமிழ்படித்தான், பால் குடித்தான், வாள்பிடித்தான், வரம் பெற்றான், செயமுற்றான், மரம் வெட்டினான் என விகாரமாக வேண்டியவிடத்து

இயல்பாயிற்று. இவ்விகாரத்தியல்பு வருமொழி வினையாய விடத்தெனக் கொள்க. வருமொழி வினையாகாது பெயரேயாக இரண்டனுருபும் பயனும் உடன் தொக்க தொகையிலே வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோ டொருங்கொத்து விகாரத்தில் விகாரமாகும். மண் கூடை,புண் கை என ணகரவீறு, இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க தொகையினும் இயல்பாம். மண் சுமந்தான் என்பது மண்ணைச் சுமந்தான் என விரிதலால் இரண்டன் உருபு மாத்திரந் தொக்க தொகை. மண்கூடை என்பது மண்ணையுடைய கூடை என விரிதலால் உருபும் பயனும் உடன் தொக்க தொகை. கற்கறித்தான், கட்குடித்தான் எனத் தனிக்குறிலைச் சார்ந்த லகர ளகரம்,வருமொழி வினையாயவிடத்தும்,வேற்றுமைப் பொதுவிதியேற்றல் காண்க.

**(3) 'உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும்'** நம்பியைக் கொணர்ந்தான்,அரசனை வணங்கினான் எனுயர்திணைப் பெயரிடத்தே விரிந்தது. ஆடூவறிசொல், மகடூவறிசொல், பல்லோ ரறியுஞ்சொல், நான்முகற்றொழுது என உயர்திணைப் பெயரிடத்தே தொக்கது.

(4) விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும் – கொற்றனைக் கொணர்ந்தான் எனப் பொதுப்பெயரிடத்தே விரிந்தது. ஆண்பெற்றாள், பெண்பெற்றாள் எனப் பொதுப் பெயரிடத்தே தொக்கது.

'அன்னபிறவும்' என்றதனால், – தற்கொண்டான் எற்பணியாள் என உழறவேண்டிய விடத்துத் திரிந்தே வருதலும், விளக்குறைத்தான் என இனமெல் லெழுத்து மிகவேண்டியவிடத்து வல்லெழுத்து மிகுதலும், அரங்குறைத்தான் என மவ்வீறு கெட்டு வல்லெழுத்து மிக வேண்டியவிடத்து மகரம் இனமெல் லெழுத்தாகத் திரிதலும், மாடு கொண்டான், பயறு தின்றான் என ட ற வொற் றிரட்டவேண்டியவிடத்து இரட்டாமையும், மருந்து தின்றான் என மென்றொடர் வன்றொடராக வேண்டிய விடத்து அங்ஙனமாகா மையும், வேறொட்டான் தாடொழுதான் என லகர ளகரந் தகரம் வரத்

திரியவேண்டியவிடத்துக் கெடுதலும், குரிசிற்றடிந்தான் அவட்டொடர்ந்தான் என உயர்திணைக்கட் கெடாது திரிந்து நிற்றலும், பிறவுங் கொள்க.

இன்னும் எண்ணின்கணின்ற இறந்ததுதழீஇய இழிவு சிறப்பும்மைகளால், வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோடொருங் கொத்து, தெள்குபிடித்தான், எஃகுதொடுத்தான், நாகு கட்டினான், வரகு தந்தான் என இயல்பில் இயல்பாகியும், மகப்பெற்றான், பலாக்குறைத்தான், வடுப்பெற்றான், சுக்குத்தின்றான், பூத்தொடுத்தான், சேப்பெற்றான், கோகறந்தான் என வருமொழி வினையாயவிடத்தும் விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பாலான வென்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ-ள். இயல்பின் விகாரமும்** – (பொதுவிதியோடு முடிதலேயன்றி அப்படி விதித்த) இயல்பிலே விகாரமாகியும், **விகாரத்து இயல்பும்** – விகாரத்திலே இயல்பாகியும், **உயர்திணையிடத்து** – உயர்திணைப் பெயரின்கண், **விரிந்தும் தொக்கும்** – வெளிப்பட்டும் மறைந்தும், **விரவுப் பெயரின்** – பொதுப் பெயரின்கண், **விரிந்தும்** – வெளிப்பட்டும், **நின்றும்** – மறைந்தும், **அன்னபிறவும்** – அவை போல்வன பிறவேறுபாடுகளும், **ஆகும்** – ஆகி வரும், **ஐ உருபு** – இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி. எ–று

பொ–ரை.:-

பொதுவிதியோடு முடிதலே யன்றி, அப்படி விதித்த இயல்பிலே விகாரமாயும், விகாரத்திலே இயல்பாயும், உயர்திணையில் விரிந்தும் மறைந்தும், பொதுப்பெயரில் விரிந்தும் மறைந்தும், இவைபோல்வன பிறவேறு பாடாயும் வரும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி.

வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப'' – இது ''நின்னீறியல்பா முறவே'' என இயல்பாக வேண்டுமிடத்து விகாரமாயிற்று.

மண்கொணர்ந்தான் – இது '' ணன வல்லினம் வரட்டறவும்'' என விகார மாகவேண்டியவிடத்து இயல்பாயிற்று.

நம்பியைக் கொணர்ந்தான் – உயர்திணையிடத்து விரிந்தது.

பல்லோ ரறியுஞ் சொல் – உயர்திணையிடத்துத் தொக்கது.

கொற்றனைக் கொணர்ந்தான் – விரவுப்பெயரிடத்து விரிந்தது.

ஆண்பெற்றாள் என விரவுப்பெயரிடத்துத் தொக்கது.

'அன்னபிறவும்' என்றமையால், "தற்கொண்டான்" என உறழப்படுவது திரிந்தேவருதலும் பிறவும் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **இயல்பின் விகாரமும்** – (பொது விதியோடு முடிதலே யன்றி அப்படி விதித்த) இயல்பாக வேண்டிய விடத்து விகாரமாகியும்;

(2) **விகாரத்து இயல்பும்** – விகாரமாக வேண்டிய விடத்து இயல்பாகியும்;

(3) **உயர்திணையிடத்து** – உயர்திணைப் பெயரிடத்து, **விரிந்தும்** – வெளிப்பட்டும், **தொக்கும்** – மறைந்தும்;

(4) **விரவுப்பெயரின்** – பொதுப்பெயரின் கண், **விரிந்தும்**– வெளிப்பட்டும், **நின்றும்** – மறைந்தும்;

**அன்னபிறவும்** – அவைபோல்வன பிறவேறுபாடுகளும், **ஆகும்** – ஆகிவரும், **ஐயுருபு** – இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி.

**உதாரணம்.:–**

(1) 'வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப'

எனவும்,

மகட்கொடுத்தான்
தலைவற்புகழ்ந்தான்
தாய்க்கொலை
ஒன்னலர்ச்செகுத்தான்

எனவும் இயல்பாக வேண்டியவிடத்து விகாரமாயிற்று.

(2) கனிதின்றான்
வரைபிளந்தான்,பந்துதந்தான்

எனவும்,

மண்சுமந்தான், பொன்கொடுத்தான்

எனவும்,

காய்தின்றான், தேர்செய்தான்
தமிழ்கற்றான்

எனவும்,

பால்குடித்தான், வாள்பிடித்தான்

எனவும் விகாரமாக வேண்டியவிடத்து இயல்பாயிற்று

(3) நம்பியைக் கொணர்ந்தான்
அரசனை வணங்கினான்.

என உயர்திணைப் பெயரிடத்து விரிந்தது.

'ஆடூஉவறிசொல்'
'நான்முகற்றொழுது'

என உயர்திணைப் பெயரிடத்தே தொக்கது

(4) கொற்றனைக் கொணர்ந்தான்

எனப் பொதுப் பெயரிடத்தே விரிந்தது.

ஆண் பெற்றாள் பெண் பெற்றாள்

எனப் பொதுப்பெயரிடத்தே தொக்கது.

அன்னபிறவும்' என்றதனால்,
தற்கொண்டான், எற்பணியான்

என உறழவேண்டியவிடத்துத் திரிந்தே வருதலும்;

வேறொட்டான், தாடொழுதான்

என லகர ளகரங்கள் தகரம் வரத் திரியவேண்டிய விடத்துக் கெடுதலும்;

குரிசிற்றடிந்தான், அவட்டொடர்ந்தான்

என உயர்திணைக்கட் திரிந்து நிற்றலும் பிறவுங் கொள்க.

இன்னும் எண்ணின் கணின்ற இறந்தது தழீஇய இழிவு சிறப் பும்மையால், வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோடு ஒருங்கொத்து,

தெள்குபிடித்தான், எஃகு கொடுத்தான்,
நாகுகட்டினான், வரகு தந்தான்

என இயல்பில் இயல்பாகியும்;

மகப்பெற்றான், பலாக் குறைந்தான்,
வடுப்பெற்றான், சுக்குத் தின்றான்,
பூத்தொடுத்தான், சேப்பெற்றான்

என விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பாலன வென்க.

## மோசகு பொன்னையா

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் பொதுவிதிப்படி இயல்பாதல் விதி என்றவிடத்து விகாரமாகியும் விகாரமாதல் விதி என்ற விடத்து இயல்பாகியும்; உயர்திணைப் பெயரிடத்து உருபு வெளிப்பட்டும் அல்லது மறைந்தும்; பொதுப் பெயரிடத்து உருபு வெளிப்பட்டும் அல்லது மறைந்தும் பிறவாறும் வேறுபட்டு வரும், எ–று.

விரித்து நின்றும் என்பதை விரிந்தும் நின்றும் என உம்மைத்

தொகையாகக் கொண்டு விரிந்தும் அவ்வாறின்றியும் எனப் பொருள் கொள்க.

எ–டு.:–

'நின்னீறியல்பாம்' என இயல்பாதல் விதி என்றவிடத்து, 'நிற்புறங்காப்ப' என விகாரமாயிற்று.

'ணன வல்லினம் வரட்டறவும்' என விகாரமாதல் விதி என்றவிடத்து 'மண் சுமந்தாள்', 'பொன் கொடுத்தாள்' என இயல்பாயிற்று.

நம்பியைக் கொணர்ந்தான், மகன் பெற்றான் என உயர்திணையிடத்து உருபு முறையே வெளிப்பட்டும் மறைந்தும் வந்தது.

கொற்றனைக் கொணர்ந்தான், ஆண் பெற்றாள் எனப் பொதுப் பெயரிடத்து உருபு வெளிப்பட்டும், மறைந்தும் வந்தது.

அன்ன பிறவும் என்றதனால் தற்கொண்டான், என உறழவேண்டிய இடத்தில் திரிந்தே வருதலும்; விளக்குறைத்தாள் என இனமெல்லெழுத்து மிகவேண்டிய இடத்தில் வலிமிகுதலும்; மாடு கொண்டான், பயறு தின்றான் என ட, ற, ஒற்று இரட்ட வேண்டிய இடத்தில் இரட்டாமையும் பிறவுங் கொள்க. எண்ணின்கண் நின்ற இழிவு சிறப்பு உம்மையால் இயல்பில் இயல்பாகவும்; விகாரத்தில் விகாரமாகவும் வருதலே பெரும்பான்மை எனக் கொள்க.

(16)

**255. புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்
தம்மி னாகிய தொழின்மொழி வரினே
வல்லினம் விகற்பமு மியல்பு மாகும்.**

புள்ளியும் உயிரும் ஆய் இறு சொல் முன்
தம்மின் ஆகிய தொழில் மொழி வரினே
வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும்.

pul̲l̲iyum uyirum āy iṛu sol mun̲
ṭammin̲ ākiya ṭoḷil moḷi varin̲ē
vallin̲am vikaṛpamum iyalpum ākum.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Special rule for the third case**

(In the elliptical combination of the Third case), the hard initials of the second word indicating the action of the first, may or may not be doubled after the latter, whether these end in a consonant or vowel.

## ஒப்புமைப் பகுதி

புள்ளி இறுதியும் உயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்
தம்மி னாகிய தொழிற்சொல் முன்வரின்.
மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்
அம்முறை யிரண்டும் உரியவை உளவே
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்

(தொல். எழு.: 157)

புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்
றம்மி னாகிய தொழின்மொழி வரினே
வல்லினம் விகற்பமு மியல்புமா வனவுள

(இ.வி.: 76)

இனமாந் தொழிற்பெய ரெய்தின் வேற்றுமை
வழியியல் பாதலு முறழ்தலு மாகும்

(மு.வீ.: 196)

## மயிலை நாதர்

எ–ன், மூன்றாம் [1]வேற்றுமைத் தொகைக்கு ஆவதோர் விதியுணர்த்துதல் நுதலிற்று.

---

பாட வேறுபாடு.:–

1. (1) வேற்றுமை தொகுத்துணர்த்துதல்;

(2) வேற்றுமைத் தொகையுணர்த்துதல்

இ–ள்.:– ஒற்றும் உயிரும் ஈறாகிய சொன்முன் தம்மினாகிய தொழிற் சொல் வந்தால், வல்லெழுத்து விகற்பமாயும் இயல்பாயும் வரும், எ–று.

வ–று.:–

நாய் கோட்பட்டான் நாய்க் கோட்பட்டான், புலி கோட்பட்டான், புலிக் கோட்பட்டான் வளி கோட்பட்டான் வளிக் கோட்பட்டான் எனவும் நாய்கௌவப்பட்டான், புலி கௌவப்பட்டான்; சாரப்பட்டான், தீண்டப்பட்டான், பாயப்பட்டான் எனவும் வரும்.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், இதுவும் அது.

இ–ள்.: மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியுள் ஒற்றும் உயிரும் இறுதியாய் நின்ற சொல்முன்னர்க் 'கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள்' என்பவற்றுள் கருத்தாவாகிய நிலைமொழிப்பொருள், தம்மாலாகிய தொழிற் சொல் வரின் அங்ஙனம் வரும் வல்லினம் வேற்றுமைப் பொதுமுடிபு ஏலாது விகற்பமும் இயல்புமாம், எ–று.

இவ் விதியும் ஒப்பன கொள்க.

வ–று.:–

பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான், சூர்கோட் பட்டான், சூர்க்கோட்பட்டான், புலிகோட் பட்டான், புலிக்கோட்பட்டான் எனவும்; பேய்பிடிக்கப்பட்டான், புலிகடிக்கப்பட்டான் எனவும் வரும்.

உம்மையால் சுறாப் பாயப்பட்டான், அராத் தீண்டப்பட்டான் என வேற்றுமைப் பொதுவிதியான் மிக்கு முடிவனவே பெரும்பால என்க. இவற்றுள் தம்மினாகிய தொழில் பட்டான் என்பதாம்; கோள் என்பது முதலியவாய் இடைப்பிற வருவன தந்தொழிலாம்.

இங்ஙனமாயினும், இவ்விரண்டனையும் ஒரு சொல்லாக்கித் தம்மினாகிய தொழின்மொழி என்றார், பட்டான் என்புழி இது பட்டான் என்னும் பொருள்தோன்றக் கோள் என்பது முதலியன அதனை விசேடித்து நிற்கும் ஒற்றுமை நயங் கருதி என்க. வேற்றுமைநயம் கருதின் கோட்பட்டான் என்பது ஒழிந்தன எழுவாய்ப்

பயனிலையாகிய வினையெச்சம் முற்றுவினை கொண்டதாம்.

எழுவாய்க்கண்ணும் மூன்றாம் வேற்றுமைக்கண்ணும் கருத்தா உளவாகலின் தந்தொழிலையே ஈண்டுத் தம்மினாகிய தொழில் என்றார் எனின் ;– பேய்பிடித்தது என்னும் எழுவாய்க்கண் பேயாற்பிடித்தது என மூன்றாம் உருபும் விரித்தற் கமையும்; அங்ஙனம் விரித்தல் கூடாமையின் தந்தொழிலும் தம்மினாகிய தொழிலும் எழுவாய்க்கண் கருத்தாவும் மூன்றாம் வேற்றுமைக்கண் கருத்தாவும் தம்முள் வேறுபாடுடையவாம். அவ் வேறுபாடு அவ் விலக்கணம் கூறும்வழிக் காட்டுதும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், மேல் உயிரீற்றுக்கும் புள்ளியீற்றுக்கும் வேற்றுமைக்கண் கூறும் முடிபு பெறாது நிற்கும் மூன்றாம் வேற்றுமை முடிவு கூறியது.

இ–ள்.:– **புள்ளியும் உயிரும் ஆயிரு சொன்முன்** – நிலைமொழி ஒற்றும் உயிரும் ஈறாகிய சொல், **தம்மினாகிய தொழின்மொழி** – மூன்றாவதற்குரிய வினைமுதற் பொருளாகிய தொழிற்சொல், **வரின்** – வருமொழியாக வந்தால், **வல்லினம் விகற்பமும்** – வந்த வல்லெழுத்து உறழ்ச்சி விதி பெறுதலும், **இயல்புமாகும்** – இயல்பாய் முடிதலுமாம், எ–று.

உ–ம்.:–

நாய், புலி என நிறுத்தி, கோட்பட்டான், பாய்ப்பட்டான் என வருவித்து இயல்பாயினவாறு காண்க. பேய் கோட்பட்டான், பேய்க் கோட்பட்டான், வளிகோட்பட்டான், வளிக்கோட்பட்டான் என இவை உறழ்ந்தன. நாய் கவ்வப்பட்டான், புலி கவ்வப்பட்டான் எனவுமாம்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமிது.

இ–ள்.: **புள்ளியு முயிரு மாயிறு சொன் முன்** – மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியுள்ளே மெய்யும் உயிரும் இறுதியாக நின்ற சொற்களின் முன், **தம்மினாகிய** – கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களாலாகிய, **தொழின்மொழி** – தொழிற்சொல், **வரின்** – வந்தால், **வல்லினம்** – அவ்விடத்து வருகிற வல்லினம், **விகற்பமும்** – உறழ்ச்சியும், **இயல்பும்** – இயல்பும், **ஆகும்** – ஆகும், எ–று. (இவ்விதியும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி போல ஒப்பன கொள்க.)

வ—று.:—

பேய்கோட்பட்டான் – பேய்க் கோட்பட்டான், சூர்கோட்பட்டான்– சூர்க்கோட்பட்டான் எனவும், பேய்பிடிக்கப்பட்டான், புலிகடிக்கப்பட்டான் எனவும் வரும். (உம்மையால் அராத் தீண்டப்பட்டான். சுறாப் பாயப்பட்டான் என வேற்றுமைப் பொதுவிதியான் முடிவனவே பெரும்பாலன வென்க.)

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

உயிரீற்றுப்புணர்ச்சி மெய்யீற்றுப் புணர்ச்சிகளிலே வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட முடிபு பெறாத மூன்றாம் வேற்றுமை முடிபு கூறுஞ் சூத்திரம் யாது?

புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்
றம்மி னாகிய தொழின்மொழி வரினே
வல்லினம் விகற்பமு மியல்பு மாகும்.
(புள்ளியும் உயிரும் ஆய் இறு சொன்முன்
தம்மின் ஆகிய தொழில் மொழி வரினே
வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும்.)

**இ—ள்.: புள்ளியும் உயிரும் ஆய் இறு சொன்முன்** –மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியுள் ஒற்றும் உயிரும் இறுதியாக நின்ற சொற்களின்முன், **தம்மின் ஆகிய தொழின்மொழி வரின்** – கருவி கருத்தா உடனிகழ்ச்சி என்பவற்றுட் கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களாகிய தொழிற்சொல் வந்தால், **வல்லினம் விகற்பமும் இயல்பம் ஆகும்** – அவ்விடத்து வரும் வல்லினம் வேற்றுமைப் பொதுமுடிபேலாது உறழ்ச்சியும் இயல்பும் ஆகும், எ—று.

இவ்விதியும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிபோல ஒப்பன கொள்க.

இங்கே தம்மினாகிய தொழில் என்பது யாது?

தம்மினாகிய தொழில் பட்டானென்பதாம்.

வ—று.:—

பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான்; சூர் கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான்; புலிகோட் பட்டான், புலிக்கோட்பட்டான் என வல்லினம் ஒருகான் மிகுந்தும் ஒருகாலியல்பாயும் விகற்பித்தன.

பேய்பிடிக்கப்பட்டான், புலிகடிக்கப்பட்டான் என

வல்லினம் இயல்பாயின.

உம்மையால், அராத்தீண்டப்பட்டான், சுறாப்பாயப் பட்டான் என வேற்றுமைப்பொதுவிதியான் மிக்கு முடிவனவே பெரும்பாலன வென்க.

இவ்விறுதிகள் ஏனை வேற்றுமைக்கண் எவ்வாறு வரும்?

நாய்க்கால் தேர்க்கால் கிளிக்கால் என மிக்கேவரும்.

## முகவை இராமனுச கவிராயர்

இதுவுமது.

**இ—ள்.:** புள்ளியு முயிருமாயிறு சொன்முன்— (மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியுள்) ஒற்று முயிருமிறுதியாகி நின்ற சொற்களின் முன், **தம்மினாகிய தொழின்மொழி வரின்** — கருவி கருத்தா வுடனிகழ்வதன் பொரு ளென்றவற்றுள் கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள் தம்மாலாகிய தொழிற்சொற்கள் வரின், **வல்லினம் விகற்பமு மியல்புமாகும்** — அங்கே வரும் வல்லினம் வேற்றுமைப் பொது விதியைக் கொள்ளாமல் விகற்பித்தும் இயல்பாகியு முடியும், எ—று.

மே'லொப்பன கொளலே' யென்றதானா லிரண்டாம் வேற்றுமைக்குச் சொன்னபடி யிதற்குங் கொள்க.

**வ—று:—**

பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான் சூர்கோட் பட்டான், சூர்க்கோட்பட்டான்; புலிகோட்பட்டான், புலிக்கோட்பட்டான் எனவும், பேய்பிடிக்கப்பட்டான், புலிகடிக்கப்பட்டான் எனவும் வரும். உம்மையால் சுறாப் பாயப்பட்டான், அராத் தீண்டப்பட்டான் என வேற்றுமைப் பொது விதியினாலே மிக்கு முடிவனேவே பெரும்பாலவென்க. இவற்றுள், தம்மினாகிய தொழில் பட்டானென்பதாம். கோள் என்பது முதலியவாய் இடைவருவன தந்தொழிலாம், இப்படியாயினு மிவ் விரண்டினையு மொரு சொல்லாக்கித் தம்மினாகிய தொழின்மொழி யென்றார், பட்டா னென்றபோது இது பட்டானென்னும் பொருள் தோன்றக் கோளென்பது முதலாயின அதை விசேடித்து நிற்கும் ஒருமைப்பாடு பற்றி யென்க.

வேறுபடுத் தறிய வேண்டின் கோட்பட்டா னென்பது ஒழிய மற்றையவை எழுவாய்ப் பயனிலையாகிய வினையெச்சம்

முற்றுவினை கொண்டன. ஆனால், எழுவாயிலும் மூன்றாம் வேற்றுமையிலும் கருத்தா வுளவாதலால், தந்தொழிலையே யிங்கே தம்மினாகிய தொழிலென்றா ரெனின், பேய்பிடித்த தென்னு மெழுவாயிலே பேயாற்பிடித்த தென மூன்றாம் வேற்றுமை யுருபு விரிந்து நிற்கக் கூடாமையால், தந்தொழிலும், தம்மினாகிய தொழிலும், எழுவாய்க் கருத்தாவும், மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவும் தம்முள் வேறுபாடுடையனவாம். அவ் வேறுபாடு அவ் விலக்கணங் கூறும்போது காட்டப்படும். வல்லினம் விகற்பமுமி யல்புமாகு மென முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :-** **புள்ளியும் உயிரும் ஆய் இறுசொல் முன்** – (மூன்றாம் வேற்றுமைத்தொகையில்) மெய்யும் உயிரும் இறுதியாகிநின்ற சொற்களின் முன், **தம்மின் ஆகிய தொழில்மொழி** – கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களாலாகிய வினைச்சொற்கள், **வரின்** – (வருமொழியாக) வந்தால், **வல்லினம்** – (அவ்விடத்துவரும்) வல்லினம், (பொதுவிதிப்படி முடிதலேயன்றி), **விகற்பமும்** – உறழ்ச்சியும், **இயல்பும்** – ஆகும்.

**உ–ம்:-**

பேய் கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான்.புலி கோட்பட்டான், புலிக் கோட்பட்டான்.பேய்பிடிக்கப் பட்டான், புலிகடிக்கப்பட்டான் – இயல்பு

'பட்டான்' என்பது தம்மினாகிய தொழில்; கோள்முதலிய இடையில்வந்தன தந்தொழில்; இவ்விரண்டையும் ஒருசொல்லாக்கித் 'தம்பினாகிய தொழின்மொழி' என்றார். உம்மையால் 'அராத்தீண்டப்பட்டான்', 'சுறாப்பாயப் பட்டான்' என வேற்றுமைப் பொதுவிதியால் முடிவனவே பெரும்பாலனவென்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:** **புள்ளியும் உயிரும் ஆய் இறு சொன்முன்** – மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியுள் ஒற்றும் உயிரும் இறுதியாக நின்ற சொற்களின் முன், **தம்மின் ஆகிய தொழில்மொழி வரின்** – கருவி கருத்தா உடனிகழ்ச்சி என்பவற்றுட் கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள் களாலாகிய தொழிற்சொல் வந்தால், **வல்லினம் விகற்பமும் இயல்பும்**

**ஆகும் –** அவ்விடத்து வரும் வல்லினம் வேற்றுமைப் பொதுமுடிபோலாது உறழ்ச்சியும் இயல்பும் ஆகும், எ–று.

இவ் விதியும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி போல ஒப்பன கொள்க.

வ–று.:–

(1) பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான்; சூர்கோட் பட்டான். சூர்க்கோட்பட்டான்; புலிகோட்பட்டான், புலிக்கோட்பட்டான் என வல்லினம் ஒருகான் மிகுந்தும் ஒருகா லியல்பாயும் விகற்பித்தன.

(2) பேய்பிடிக்கப்பட்டான், புலிகடிக்கப்பட்டான் என வல்லினம் இயல்பாயின.

உம்மையால் அராத் தீண்டப்பட்டான், சுறாப் பாயப்பட்டான் என வேற்றுமைப் பொதுவிதியான் மிக்கு முடிவனவே பெரும்பாலன வென்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். புள்ளியும் உயிரும் ஆய் இறு சொன்முன் –** மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியுள் ஒற்றும் உயிரும் இறுதியாகநின்ற சொற்களின் முன், **தம்மின் ஆகிய தொழில் மொழி வரின், –** கருவி கருத்தா உடனிகழ்ச்சி என்பவற்றுட் கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களா லாகிய தொழிற்சொல் வந்தால், **– வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும்** – அவ்விடத்து வரும் வல்லினம் வேற்றுமைப் பொதுமுடிபேலாது உறழ்ச்சியும் இயல்பும் ஆகும். எ–று.

இவ்விதியும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிபோல ஒப்பனகொள்க.

வ–று.:–

(1)பேய்கோட்பட்டான், பேய்க் கோட்பட்டான்; சூர்கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான்; புலிகோட் பட்டான், புலிக்கோட்பட்டான் என வல்லினம் ஒருகான் மிகுந்தும் ஒரு காலியல்பாயும் விகற்பித்தன.
(2)பேய் பிடிக்கப்பட்டான், புலி கடிக்க்ப்பட்டான் என வல்லின இயல்பாயின.
உம்மையால், அராத்தீண்டப்பட்டான், சுறாப் பாயப்பட்டான் வேற்றுமைப் பொதுவிதியான் மிக்கு முடிவனவே பெரும்பாலனவென்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: **புள்ளியும் உயிரும் ஆய் இறு சொல் முன்** – (மூன்றாம் வேற்றுமைத் தொகையில்) மெய்யும் உயிரும் இறுதியாகி நின்ற சொற்களின் முன், **தம்மின் ஆகிய தொழில் மொழி** – கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களாலாகிற வினைச்சொற்கள் ( செயப்பாட்டு வினைச்சொற்கள்); **வரின்** – (வருமொழியாக) வந்தால், **வல்லினம்**– (அவ்விடத்து வரும்) வல்லினம், (பொதுவிதிப்படி முடிதலேயன்றி), **விகற்பமும்** – உறழ்ச்சியும், இயல்பும் –, **ஆகும்**–; எ – று.

உ.–ம்.:–

பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான்; புலிகோட் பட்டான், புலிக்கோட்பட்டான் – விகற்பம். பேய்பிடிக்கப் பட்டான், புலிகடிக்கப்பட்டான் – இயல்பு. உம்மையால் – அராத் தீண்டப்பட்டான்: சுறாப் பாயப்பட்டான் எனப் பொதுவிதியால் முடிவனவே பெரும்பாலனவாம்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– **புள்ளியும் உயிரும் ஆய் இறு சொன்முன்** – மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியுள் ஒற்றும் உயிரும் இறுதியாக நின்ற சொற்களின் முன், **தம்மின் ஆகிய தொழில்மொழி வரின்** – கருவி கருத்தா உடனிகழ்ச்சி என்பவற்றுட் கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களா லாகிய தொழிற்சொல் வந்தால், **வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும்** – அவ்விடத்து வரும் வல்லினம் வேற்றுஐமப் பொதுமுடி பேலாது உறழ்ச்சியும் இயல்பும் ஆகும். எ–று.

இவ்விதியும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிபோல ஒப்பன கொள்க.

உ.–ம்.:–

(1) 'விகற்பமும்' – பேய்கோட்பட்டான், பேய்க் கோட்பட்டான்; சூர்கோட்பட்டான், சூர்க் கோட்பட்டான்; புலிகோட்பட்டான், புலிக்கோட் பட்டான் என வல்லினம் ஒருகான் மிகுந்தும் ஒருகாலியல்பாயும் விகற்பித்தன.

(2) பேய்பிடிக்கப்பட்டான், புலிகடிக்கப்பட்டான் என வல்லினம் 'இயல்பும்' இயல்பாயின.

உம்மையால், அராத் தீண்டப்பட்டான், சுறாப் பாயப்பட்டான்

– என வேற்றுஐமப் பொதுவிதியான் மிக்குமுடிவனவே பெரும்பாலான வென்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**புள்ளியும் உயிரும் ஆய் இறு சொல்முன்** – (மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சி யுள்ளே) மெய்யும் உயிரும் இறுதியாக நின்ற சொற்களின்முன், **தம்மின் ஆகிய** – கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களா லாகிய, **தொழின் மொழி** – தொழிற்சொல், **வரின்**–வந்தால், **வல்லினம்** – (அவ்விடத்துவரும்) வல்லினம், **விகற்பமும்** – உறழ்ச்சியும், **இயல்பும் ஆகும்** – இயல்பும் ஆகும்.

இவ்விதியினும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிபோல ஒன்பன கொள்க.

உதாரணம்:–

பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான் சூர்கோட் பட்டான், சூர்க்கோட்பட்டான் என விகற்பம் பெற்றன, பேய்பிடிக்கப்பட்டான் புலிகடிக்கப்பட்டான் என இயல்பாயின.

உம்மையால் அராத் தீண்டப்பட்டான், சுறாப் பாயப்பட்டான் என வேற்றுமைப் பொதுவிதியான் முடிவனவே பெரும்பாலன.

## மோசசு பொன்னையா

மூன்றாம் வேற்றுமைத் தொகையில் மெய்யும், உயிரும் இறுதியாய் நின்ற சொற்களின் முன்னர் கருத்தாப் பொருட்கண் ஆகும் வினைச் சொற்கள் வருமாயின், வல்லினம் உறழ்ந்தும், இயல்பாயும் முடியும், எ–று.

எ–டு.:–

பேய் கோட்பட்டான், பேய்க் கோட்பட்டான

புலி கோட்பட்டான், புலிக் கோட்பட்டான் – உறழ்தல்

பேய் பிடிக்கப்பட்டான், புலி கடிக்கப்பட்டான் – இயல்பு

உம்மையால் சுறாப் பாயப்பட்டான், அராத் தீண்டப்பட்டான் எனப்பொது விதியால் மிக்கு முடிவதே பெரும்பான்மை எனக் கொள்க.

எழுவாய்க்கண் நிகழும் கருத்தாப் பொருள் தம் தொழில் என்றும்; மூன்றாம் வேற்றுமைக்கண் நிகழும் கருத்தாப்

பொருள் தம்மின் ஆகிய தொழில் என்றும் இலக்கண ஆசிரியர்களால் குறியிட்டாளப்பட்டு வருகின்றன.

(17)

**256. இதற்கிது [1]முடிபென் றெஞ்சா தியாவும்**
**விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்**
**வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.**

இதற்கு இது முடிபு என்று எஞ்சாது யாவும்
விதிப்ப அளவு இன்மையின் விதித்தவற்று இயலான்
வகுத்து உரையாதவும் வகுத்தனர் கொளலே.

iṭaṟku iṭu mutipu eṉṟu eñsāṭu yāvum
viṭippa aḻavu iṉmaiyiṉ viṭiṭṭavaṟṟu iyalāṉ
vakuṭṭu uraiyāṭavum vakuṭṭaṉar koḻalē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Exception for the chapter on Orthography

It being impossible to particularize the combination in every individual instance, instances, which are not specified, must be decided by comparing them with those, which are.

### மயிலை நாதர்

எ–ன், இவ் வதிகாரத்துட் சொன்ன பொருட்கெல்லாம் ஏற்பதோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– இவ் வதிகாரத்துட் சொல்லாத எழுத்திலக்கணமாய் வருவன வெல்லாம் இதுவே விதியாக ஈண்டே சொல்லிக் கொள்க,எ–று.

---

பாட வேறுபாடு.:–

1. முடிவென்று

வ—று.:—

"[1]உருவே யுணர்வே யொலியே [2]தன்மை,
யெனவீரெழுத்து மீரிரு பகுதிய."(1)

"காணப் பட்ட வுருவ மெல்லா, மாணக்காட்டும்
வகைமை நாடி, வழுவி லோவியன் கைவினை
போல, வெழுதப்படுவ துருவெழுத் [3]தாகும்"(2);

"கொண்டவோர் குறியாற் கொண்டவதனை,
யுண்டென் றுணர்வ துணர்வெழுத் தாகும்." (3) ;

"இசைப்படு புள்ளி னெழாஅல் போலச், செவிப்புல
னாவ தொலியெழுத் தாகும்" (4) ;

"முதற்கா ரணமுந் துணைக்கா ரணமுந்,
துணைக்கா ரணத்தொடு தொடரியவுணர்வு,
மவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்,
மிடற்றுப் [4]பிறந்திசைப்பது தன்மை யெழுத்தே" (5)

என்னும் இப் பகுதியுள் ஒலியெழுத்தே செவிப்புலனாய்ப் பொருள்தருஞ் சிறப்பு நோக்கி, அதனை எடுத்தோதினார்; ஒழிந்தன மூன்றும் ஈண்டே உரைத்துக் கொள்க. இவ்வாறன்றி

"வடிவுபெயர் தன்மை யுண்முடிவு நான்காய், நடைபெறு
நாவலர் நாடிய வெழுத்தே";

"கட் [5]புல னல்லாக் கடவுளைக் காட்டுஞ், சட்டகம்
போலச் செவிப்புல வொலியை, யுட்கொளற் கிடுமுரு
பாம்வடிவெழுத்தே";

"வடிவுமுதன் மும்மையின் வழங்கு மெழுத்திற், படுபல
பகுதிக் கிடுபெயர் பெயரே.";

---

பாட வேறுபாடு.:—

1.உருபே

2.தன்மையென,

விருவகை யெழுத்து மீரிரண்டாகும்

3. ஆமே

4.பிறப்பது

5. புலனில்லாக்

"தான முயற்சி [1]தரக்கொளச் செவிப்புல, னாயவொலி
தன்மைவுயெழுத்தா கும்மே";

"உருவு முதன் மும்மையோ டொன்றிய வியல்பை,
மரு[2]வுளந் துணிவுற வருமுடி பெழுத்தே."

இவ்வாறு பகுத்துரைக்கப்படும் எழுத்துக் கூறுபாடும், போயினான் சொல்லினானென வருஞ் சொற்கள், இறந்தகாலந் தரும் இன்னிடை நிலைபெறாது, போனான் சொன்னான் என வருவனவும், புக்கான் நக்கான் முதலானவும், வாரியோள் வாருங்கோள் வந்தியோள் [3]வாருங்கிடீர் என்றற் றொடக்கத்துக் காலவழக்காய் வருவனவுமான பதத்தின் கூறும், இந்தவனந்தல், குளாம்பல், மராடி, [4]செங்கழுநீர் என்றற் றொடக்கத்துப் புணர்ச்சிக் கூறும் இவை போல்வன பிறவும் இதுவே நிலனாகத் தந்து முடிக்க.

கட்டளைக் கலித்துறை

"அடையெண் பெயர்முறை தோற்றம் வடிவள வாதியந்தம்
இடைநிலை போலியென் றீரைந் தெழுத்து மிருபதமும்
படுபுணர்[5]மூன்றினியல்பும் விகாரமுஞ் சாரியையும் உட
[6]னுணர் வாரை யெழுத்தறி வாரென்ப ருத்தமரே."

வெண்பா

"எழுபா னிரண்டெழுத்தி னேற்றபதத் தைஞ்ஞான்
கொடுமூன் றுயிரீறைம் பான்மூன் – றருமெய்யீ றாறா

பாட வேறுபாடு.:–

1. (1) தரக்கொளல், (2) தரக்கோள்
2. உளத்துணிவருமுண் முடிபு
3. (1) வருங்கெடீர்; வாருங்கடீர்
4. (1) செங்கழநீர்; (2) செங்கழனி.
5. மூன்று மியல்பும்
6. னறிவாரை

றுருபியன்மூ வாறா மெழுத்துரை நூற் பாவிருநூற்
றோரிரண்டாப் பார்.''

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், இவ் வதிகாரத்திற்கு ஆவதோர் புறனடை உணர்—ற்று.

இ—ள்.: இதற்கு இது முடிபு என்று இவ் வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றை எல்லாம் தனித்தனி வரையறுத்து விதிக்கப் புகின் அதற்கு ஓர் வரையறை இன்மையின், வகுத்து விதித்தனவற்றின் இலக்கணங்களை ஏதுவாகக் கொண்டு வகுத்து, விதியுரையாதனவற்றையும் கருதல் அளவையான் வகுத்து விதி உரைத்துக் கொள்க, எ—று.

வ—று.:—

எழுத்தியலுள் 'மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி எழுத்து' என உரைத்தமைபானே ''கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும், சட்டகம் போலச் செவிப்புல ஒலியை, உட்கொளற் கிடுமுரு பாம்வடி வெழுத்தே'' எனப் பிறர் கூறியவாறு இவ்வொலி வடிவைக் காட்டுதற்கு ஒரு கருவியாக வரைந்து கொள்ளப்பட்டது, வரிவடிவெழுத்து எனவும்; பதவியலுள் 'அன் ஆன் அள் ஆள்' என்னும் சூத்திரத்து முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கு என உரைத்தமைபானே பெருமாள் என்னும் பதம், பெருமையை யுடையான் என்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்னும் பதத்தினது இறுதி ஆன் விகுதி ஆள் விகுதியாய் ஒரோவிடங்களில் திரிந்து ஆண்பாலையே உணர்த்தி நின்றது எனவும்; உயிரீற்றுப் புணரியலுள் 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்' என உரைத்தமையானே 'ஙன வல்லினம் வரட்டறவும்' என்புழி டகரமும் வல்லினமாதலின் மிகுந்தது எனவும்; மெய்யீற்றுப் புணரியலுள் 'நும் தம், எனவும் நம் ஈறாமவ்வருஞநவே' என உரைத்தமையானே அம் என்னும் சொல்லிறுதி மகரமும் குற்றொற் றாதலின் தன்னொடு மயங்காத மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து அந்நலம் என அழகினது நலம் என்னும் பொருட்டாய் வரும் எனவும்; உருபு புணரியலுள் 'வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே' என உரைத்தமையானே அதுபோலும் வினாவும் எவற்றை என அற்றுச் சாரியை பெறும் எனவும்; இரண்டாம்வேற்றுமைக்கும் மூன்றாம்

வேற்றுமைக் கும் புறனடை உரைத்தமையானே ஏழாம் வேற்றுமை யும் "மண் புகுந்தும் விண்பறந்தும் மாலும் அயனும் காணா ஒரு பொருள்" என வேற்றுமைப் பொதுவிதி ஏலாது சிறுபான்மை வரும் எனவும் கொள்க.

இன்னும் இவ்வைந்தியலுள்ளும் வகுத்துரை யாதனவற்றை எல்லாம் இடர்ப்படாது இதுவே நிலனாக வகுத்துரைத்துக் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், இவ்வதிகாரத்துட் சொன்ன பொருட்கெல்லாம் ஏற்பதோர் புறநடை கூறியது.

இ—ள்.: இதற்கு இது முடிபென்று – இச் சொற்கு இதுவே விதியாக முடிப்பவென்று, எஞ்சாது யாவும் விதிப்ப – குறைவில்லாமல் எல்லாச் சொற்களுக்கும் விதித்தலைச் செய்ய, அளவின்மையின் – சொற்கள் அளவு படாது ஆகையினாலே, விதித்தவற்றியலான் – இவ்வதிகாரத்துட் சொல்லிய அதிகாரங் கொண்டு, வகுத்துரையாதவும் – எடுத்து விதியாத சொற்களும், வகுத்தனர் கொளலே – வகுத்தனர்; கொள்க, எ—று.

"அடையெண் பெயர்முறை தோற்றம் வடிவள வாதியந்தம்
இடைநிலை போலியென் றீரைந் தெழுத்து மிருபதமும்
படுபுணர் மூன்றி னியல்பும் விகாரமுஞ் சாரியையும்
உடனுணர் வாரை யெழுத்தறி வாரென்ப ருத்தமரே"

## விசாகப் பெருமாளையர்

இது, இவ் வதிகாரத்திற் காவதோர் புறனடை யுணர்த்துகின்றது.

இ—ள்.: இதற்கிது முடிபென்று – இதற்கு இது முடிபென்று, யாவும்– இவ்வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றை யெல்லாம், எஞ்சாது – குறையாமல், விதிப்பு – தனித்தனி அளவுசெய்து விதிக்கப் புகின், அளவின்மையின்–அதற்கு ஓரளவில்லாமையால், விதித்தவற்று – வகுத்து விதித்தவற்றினுடைய, இயலான் – இலக்கணங்களை யேதுவாகக் கொண்டு, வகுத்துரையாதவும் – வகுத்து விதி யுரையாதனவற்றையும், வகுத்தனர் கொளல் – கருதலளவையால் வகுத்து விதியுரைத்துக் கொள்க, எ—று.

எழுத்தியனுள் "மொழி முதற் காரணமா மணுத்திரளொலி யெழுத்து" என உரைத்தமையால், 'கட்புலனில்லாக் கடவுளைக் காட்டுஞ், சட்டகம் போலச் செவிப்புல

வொலியை யுட்கொளற்கிடு முருபாம் வடிவெழுத்தே' எனப் பிறர் கூறியவாறு இவ்வொலி வடிவைக் காட்டுதற்கு ஓர் கருவியாக எழுதிக் கொள்ளப்பட்டது வரிவடிவெழுத் தெனக் கொள்க.

பதவியலுள் "அன்–ஆன், அள்–ஆள் என்னுஞ் சூத்திரத்திலே முறையே அன்–ஆன், விகுதி ஆண்பாற் கென வுரைத்தமையால் பெருமாள் என்கிற பதம் பெருமையை யுடையானென்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்கிற பதத்தினது ஆன் விகுதி ஆள் விகுதியாக ஒரோவிடத்தே திரிந்து ஆண்பாலையே யுணர்த்தி நின்ற தெனக் கொள்க.

உயிரீற்றுப் புணரியலுள் "இயல்பினும் விதியினு நின்ற உயிர்முன் கசதபமிகும்" என்று சொன்ன மையால், 'ணனவல்லினம் வரட்டறவும்' என்றவிடத்து டகரமும் வல்லினமாதலின் மிகுந்ததெனக் கொள்க.

மெய்யீற்றுப் புணரியலுள் "நுந்தம் எனவும் நம் மீறா மவ்வருஞநவே' என வுரைத்தமையால் அம்மென்கிற சொல்லிறுதி மகரமுங் குற்றொற் றாதலின் தன்னொடு மயங்காத மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து அந்நலம் என அழகினது நல மென்னும் பொருளதாய் வருமெனக் கொள்க;

உருபு புணரியலுள் "வவ்விறுசுட்டிற் கற்றுறல் வழியே" என வுரைத்தமையால் அதுபோலும் வினாவும் எவற்றை என அற்றுச் சாரியை பெறுமெனவும், இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை யுரைத்தமையால் ஏழாம் வேற்றுமையும், மண்புகுந்தும் விண்பறந்து மாலுமயனுங் காணாவொரு பொருள், என வேற்றுமைப் பொதுவிதி யேலாது சிறுபான்மை வருமெனவுங் கொள்க. (இன்னும் இவ்வைந் தியலுள்ளும் வகுத்துரையாதனவற்றை யெல்லாம் துன்பப்படாமல் இதுவே இடமாக முடித்துக் கொள்க.

"அடையெண்பெயர்முறைதோற்றம்வடிவளவாதியந்த
மிடைநிலைபோலியென்றீரைந்தெழுத்துமிருபதமும்
படுமுணர்மூன்றினியல்பும்விகாரமுஞ்சாரியையு
முடனுணர்வாரையெழுத்தறிவாரென்பருத்தமரே"

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

எழுத்ததிகாரத்துக்குப் புறனடை கூறுஞ் சூத்திரம் யாது?

இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்
விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.

(இதற்கு இது முடிபு என்று எஞ்சாது யாவும்
விதிப்ப அளவு இன்மையின் விதித்தவற்று இயலான்
வகுத்து உரையாதவும் வகுத்தனர் கொளலே).

**இ–ள்.: இதற்கு இது முடிபு என்று** – இதற்கு இது முடிபென்று, **யாவும் எஞ்சாது விதிப்ப** – இவ்வதிகாரத்துள் விதிக்கத்தகு வனவற்றை யெல்லாங் குறையாமல் தனித்தனி அளவு செய்து விதிக்கப்புகின், **அளவு இன்மையின்** –அதற்கு ஒரளவில்லாமையால், **விதித்தவற்று இயலான்** – வகுத்து விதித்தவற்றினுடைய இலக்கணங்களை ஏதுவாக்கிக் கொண்டு, **வகுத்து உரையாதவும் வகுத்தனர் கொளலே** – வகுத்து விதியுரையாதனவற்றையுங் கருதலளவையால் வகுத்து விதியுரைத்துக் கொள்க, எ–று.

விதிப்ப எனற்பால அகரங் குறைந்து நின்றது.

வ–று.:–

(1) எழுத்தியலுள், "மொழிமுதற்காரண மாமணுத் திரளொலியெழுத்து" என உரைத்தமையால், "கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ்சட்டகம் போலச் செவிப்புல வொலியை யுட்கொளற் கிடுமுருபாம் வடிவெழுத்தே" எனப் பிறர்கூறியவாறு, இவ்வொலிவடிவைக் காட்டுதற்கு ஒருகருவியாக எழுதிக்கொள்ளப் பட்டது, வரி வடிவெழுத் தெனக் கொள்க.

(2) பதவியலுள், "அன் ஆன் அள ஆள்" என்னுஞ் சூத்திரத்திலே முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென உரைத்தமையால், பெருமாள் என்னும் பதம் பெருமையை யுடையானென்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்னும் பதத்தினது ஆன் விகுதி ஆள் விகுதியாக ஒரோவிடத்தே திரிந்து ஆண்பாலையே யுணர்த்தி நின்றதெனக் கொள்க.

(3) உயிரீற்றுப்புணர்ச்சியுள், "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும். என்று சொன்ன மையால், "ணன வல்லினம் வரட்டறவும்" என்ற விடத்து டகாரமும் வல்லினமாதலின் மிகுந்ததெனக் கொள்க.

(4) மெய்யீற்றுப்புணர்ச்சியுள், "நுந்தம் எம் நம் மீறா மவ்வரு ஞனவே" என உரைத்தமையால், அம்மென்னுஞ் சொல்லிறுதி மகரமுங் குற்றொற்றாதலின் தன்னோடு மங்காத மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து அந்நலம் என அழகினது நலமென்னும் பொருளதாய் வருமெனக்கொள்க.

(5) உருபுபுணர்ச்சியுள், "வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே" என உரைத்தமையால், அதுபோலும் வினாவும் எவற்றை என அற்றுச்சாரியை பெறுமெனவும், இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை யுரைத்தமையால், ஏழாம் வேற்றுமையும் வரைபாய்வருடை, "மண்புகுந்தும் விண்பறந்து மாலு மயனுங் காணாவொரு பொருள்" என வேற்றுமைப் பொதுவிதியேலாது சிறுபான்மை வருமெனவுங் கொள்க.

இன்னும், இம்மூன்றியலுள்ளும் வகுத்துரையாதன வற்றை யெல்லாந் துன்பப்படாது இதுமுவே இடமாக முடித்துக் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, இவ் வதிகாரத்திற்கு ஓர் புறனடை யுணர்த்துகின்றது.

இ–ள்.: **இதற்கிது முடிபென்று** – இதனுக்கு இதுமுடிந்த இலக்கண மென்று, **எஞ்சாது** – சுருங்காமல், **யாவும்** – இவ் வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றை யெல்லாம், **விதிப்ப** – தனித்தனி வரையறுத்து விதிக்கப் புகின், **அளவின்மையின்** – அதற்கொரு வரம்பில்லை யாதலால், **விதித்தவற்றியலான்** – வகுத்து விதித்தவற்றி னிலக்கணங்களை யேதுவாகக் கொண்டு, **வகுத்துரையாதவும்** – வகுத்து விதி யுரையாதனவற்றையும், **வகுத்தனர்கொளல்** – (அனுமானப் பிரமாணத்தினாலே) வகுத்து விதியுரைத்துக் கொள்க எ–று.

'விதிப்ப' என்பது, அகரங் குறைந்து நின்றது. அவற்றுட் சில வருமாறு: எழுத்தியலுள், 'மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி யெழுத்'தென வுரைத்ததினாலே, கண்ணுக்குத் தெரியப்படாத கடவுளைக் காட்டும் விக்கிரகம் போலச் செவியினா லுணரப்படும் ஒலியை மனத்துட் கொள்ளுதற்கு இடப்பட்ட வுருவு வடிவெழுத்து, என்னும் பொருளைக் கொண்ட,

"கட்புலனில்லாக் கடவுளைக் காட்டுஞ்

சட்டகம் போலச் செவிப்புலவொலியை
யுட்கொளற் கிடுமுரு பாம்வடிவெழுத்தே''

எனப் பிறர் கூறிய இச் சூத்திரத்தின் படியே ஒலிவடிவைக் காட்டுதற்கு ஒருகருவியாக வட்டஞ் சதுர முதலிய வடிவை யுடையனவாக எழுதிக் கொள்ளப்பட்டது வடிவெழுத் தெனவும், பதவியலுள், 'அன்ஆன் அள்ஆள்' என்னுஞ் சூத்திரத்து முறையே, 'அன் ஆன் விகுதி யாண்பாற் கென வுரைத்த தினாலே, பெருமாள் என்னும் பதம் பெருமையை யுடையான் என்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்னும் பத்தினது இறுதி ஆன் விகுதி ஆள் விகுதியாகி யோரோரிடங்களிலே திரிந்து ஆண்பாலையே யுணர்த்தி நின்றதெனவும். உயிரீற்றுப் புணரியலுள், 'இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் கசதப மிகு' மென வுரைத்ததினாலே, 'ணனவல் லினம் வரட் டறவு' மென்றபோது, டகரமும் வல்லின மாதலால் டகர வொற்று மிக்கதெனவும்; மெய்யீற்றுப் புணரியலுள், 'நுந்தம் நம்மீறாமவ் வருஞநவே' என வுரைத்ததினாலே, அம் என்னுஞ் சொல்லிறுதி மகரமுங் குற்றெழுத்தைச் சார்ந்த ஒற்றாதலால் தன்னொடு மயங்காத மெல்லினம் வந்தால் அம் மெலினமாகத் திரிந்து, அந்நலம் என அழகினது நலமென்னும் பொருளை யுடையதாய் வருமெனவும்; உருபுபுணரியலுள் 'வவ்விறுசுட்டிற் கற்றுறல் வழியே' என வுரைத்தினாலே அதுபோல வினாவும், எவற்றை என அற்றுச் சாரியை பெறுமெனவும்; இரண்டாம் வேற்றுமைக்கு மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை யுரைத்ததினாலே, ஏழாம் வேற்றுமையும், 'மண்புகுந்தும் விண்பறந்தும்' என 'ணனவல்லினம் வரட்டறவு'மென்ற வேற்றுமைப் பெது விதியைக் கொள்ளாமற் சிறுபான்மை யியல்பா மெனவுங் கொள்க. இன்னுமிவ் வைந்தியலுள்ளும் வகுத்துரையாதன வற்றை யெல்லாம் இடர்ப்படாமல் இதுவே யிடமாக வகுத்துரைத்துக் கொள்க. அறிவுடையோர் வகுத்தனர் கொளலென முடிக்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– இதற்கு இது முடிபு என்று – இதுக்கு இதுதான் முடிந்த இலக்கணமென்று, யாவும் – (இவ்வதிகாரத்துள் விதிக்கத்தக்கவற்றை) எல்லாம், எஞ்சாது – குறையாமல், விதிப்பு – (தனித்தனி அளவுசெய்து) விதிக்கப் புகுந்தால் அதற்கு, அளவு இன்மையின் – ஒருவரம்பு

இல்லாமையால், **விதித்தவற்று** – வகுத்துவிதித்தவற்றினுடைய, **இயலான்** – (இலக்கணங்களை) ஏதுவாகக் கொண்டு, **வகுத்து உரையாதவும்** – வகுத்து விதிசொல்லாதவற்றையும், **வகுத்தனர் கொளல்** – (அநுமானப் பிரமாணத்தால்) வகுத்து விதிபுரைத்துக் கொள்க.

உ–ம்:–

எழுத்தியலுள் "மொழிமுதற்காரணமாமணுத் திரளொலி யெழுத்து என ஒலிவடி வெழுத்தை உரைத்தமையால், ஒலிவடிவைக்காட்டுதற்கு ஓர் கருவியாக எழுதப்பட்டது. வரிவடிவெழுத்து எனக் கொள்க.

பதவியலுள் "அன் ஆன் அள் ஆள்" என்னுஞ் சூத்திரத்தில் முறையே 'அன் ஆன்' விகுதி ஆண்பாற் கெனக் கூறியதனால், 'பெருமாள்' என்னும் பதம் பெருமையுடையான் என்னும் பொருள் தோன்ற நின்ற 'பெருமான்' என்ற பதத்தினது ஆன்விகுதி ஆள் விகுதியாக ஒரோவிடத்துத்திரிந்து ஆண்பாலையே யுணர்த்திநின்ற தெனக் கொள்க.

உயிரீற்றுப் புணரியலுள் "இயல்பினும் விதியினும்நின்ற வுயிர்முன் கசதப மிகும்" என உரைத்தமையால் "ணன வல்லினம்" என்னுஞ்சூத்திரத்து, வர + டறவும் = வரட்டறவும் என டகரமும் வல்லினமாதலின் மிகுந்ததெனக் கொள்க.

மெய்யீற்றுப்புணரியலுள் "நும்தம், எம்நம்மீறாமவ் வருஞநவே" எனக்கூறினதனால், 'அம்' என்னும் சொல் லிறுதி மகரமும் தனிக்குறிலடுத்த ஒற்றாதலின் தன்னோடு மயங்காத மெல்லினம் வந்தால் அதுவாய்த்திரிந்து அந்நலம் என அழிகியநலம் என்னும் பொருளதாய் வருமெனக் கொள்க.

உருபுபுணரியலுள் இரண்டாம் வேற்றமைக்கும் மூன்றாம் வேற்றமைக்கும் புறனடை கூறியதனால் ஏழாம் வேற்றுமையும், 'மண்புகுந்தும்', 'விண்பறந்தும்' என வேற்றுமைப் பொதுவிதி ஏலாமற் சிறுபான்மை வருமெனக் கொள்க.

இன்னும் இவ் வைந்தியலுள்ளும் வகுத் துரையாதவற்றை யெல்லாம் இதுவே இடமாக முடித்துக் கொள்க.

**"அடையெண் பெயர்முறை தோற்றம் வடிவள**
**வாதியந்தம்**

**இடைநிலை போலியென் றீரைந் தெழுத்து**

மிருபதமும்
படுபுணர் மூன்றி னியல்பும் விகாரமுஞ் சாரியையும்
உடனுணர் வாரை யெழுத்தறி வாரென்ப
உத்தமரே".

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: **இதற்கு இது முடிபு என்று** – இதற்கு இது முடிபென்று, **யாவும் எஞ்சாது விதிப்ப** – இவ் வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றை யெல்லாங் குறையாமல் தனித்தனி அளவு செய்து விதிக்கப் புகின், **அளவு இன்மையின்** – அதற்கு ஓரளவில்லாமையால், **விதித்தவற்று இயலான்** – வகுத்து விதித்தவற்றினுடைய இலக்கணங்களை ஏதுவாகக் கொண்டு, **வகுத்து உரையாதவும் வகுத்தனர் கொளல்** – வகுத்து விதியுரையாதனவற்றையுங் கருதலளவையால் வகுத்து விதியுரைத்துக் கொள்க, எ–று.

விதிப்ப எனற்பாலது அகரங் குறைந்து நின்றது.

வ–று.:

(1) எழுத்தியலுள், "மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி யெழுத்து" என உரைத்தமையால், "கட்புலனில்லாக் கடவுளைக் காட்டுஞ் சட்டகம் போலச் செவிப்புல வொலியை யுட்கொளற் கிடுமுரு பாம் வடிவெழுத்தே" எனப் பிறர் கூறியவாறு, இவ்வொலி வடிவைக் காட்டுதற்கு ஒரு கருவியாக எழுதிக் கொள்ளப்பட்டது வரிவடிவெழுத் தெனக் கொள்க.(2) பதவியலுள் " அன் ஆன் அள் ஆள்" என்னுஞ் சூத்திரத் திலே முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென உரைத்தமையால், பெருமாள் என்னும் பதம் பெருமையை யுடையானென்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்னும் பதத்தினது ஆன் விகுதி ஆள் விகுதியாக ஒரோவிடத்தே திரிந்து ஆண்பாலையே யுணர்த்தி நின்றதெனக் கொள்க.(3) உயிரீற்றுப் புணரியலுள், "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும்" என்று சொன்னமையால், "ண ன வல் லினம்வரட் டறவும்" என்றவிடத்து டகரமும் வல்லின மாதலின் மிகுந்ததெனக் கொள்க.(4) மெய்யீற்றுப்புணரியலுள், "நுந்தம் நம் மீறா மவ்வரு ஞநவே" என உரைத்தமையால், அம்மென்னும் சொல்லிறுதி மகரமுங் குற்றொற்றாதலின் தன்னொடு மயங்காத மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து அந்நலம்

என அழகினது நலமென்னும் பொருளதாய் வருமெனக் கொள்க.(5) உருபு புணரியலுள், ''வவ்விறு சுட்டிற் கற்றுறல்வழியே'' என உரைத்தமையால், அதுபோலும் வினாவும் எவற்றை என அற்றுச் சாரியை பெறு மெனவும், இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை யுரைத்தமையால், ஏழாம் வேற்றுமையும் ''வரைபாய் வருடை,'' ''மண்புகுந்தும் விண்பறந்து மாலு மயனுங் காணாவொருபொருள்'' என வேற்றுமைப் பொதுவிதி யேலாது சிறுபான்மை வருமெனவுங் கொள்க.

இன்னும், இவ் வைந்தியலுள்ளும் வகுத்துரையாதன வற்றையெல்லாந் துன்பப்படாது இதுவே இடமாக முடித்துக் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். இதற்கு இது முடிபு என்று** – இதற்கு இது முடிபென்று, – **யாவும் எஞ்சாது விதிப்ப** – இவ்வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றை யெல்லாங் குறையாமல் தனித்தனி அளவு செய்து விதிக்கப்புகின், – **அளவு இன்மையின்** – அதற்கு ஓரளவில்லாமையால், – **விதித்தவற்று இயலான்** – வகுத்து விதித்தவற்றினுடைய இலக்கணங்களை ஏதுவாகக் கொண்டு, – **வகுத்து உரையாதவும் வகுத்தனர் கொளல்** – வகுத்து விதியுரை யாதனவற்றையுங் கருதலளவையால் வகுத்து விதியுரைத்துக் கொள்க. எ–று.

விதிப்ப எனற்பாலது அகரங் குறைந்து நின்றது.

வ–று.;–

(1) எழுத்தியலுள், ''மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி யெபரெழுத்து'' என உரைத்தமையால், ''கடபுல னில்லாக் கடவுளைக் காட்டுஞ் சட்டகம் போலச் செவிப்புல வொலியை யுட்கொளா கிடுமுரு பாம்வடி வெழுத்தே'' எனப் பிறர் கூறியவாறு. இவ்வொலி வடிவைக் காட்டுதற்கு ஓர் கருவியாக எழுதிக் கொள்ளப்பட்டது வரிவடி வெழுத் தெனக் கொள்க.(2)பதவியலுள், ''அன் ஆன் அள் ஆள்'' என்னுஞ் சூத்திரத்தின் முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென உரைத்தமையால், பெருமாள் என்னும் பதம் பெருமையையுடையானென்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்னும் பதத்தினது ஆண் விகுதி ஆள்விகுதியாக ஒரோவிடத்தேதிரிந்து ஆண்பாலையே யுணர்த்தி நின்றதெனக் கொள்க.(3)உயிரீற்றுப்

புணரியலுள், "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும்" என்று சொன்னமையால், "ண ன வல்லினம் வரட்டறவும்" என்றவிடத்து டகரமும் வல்லினமாதலின் மிகுந்ததெனக் கொள்க.(4)மெய்யீற்றுப்புணரியலுள், "நுந்தம் எம் நம் மீறா மவ்வரு ஞநவே" என உரைத்தமையால், அம்மென்னுஞ் சொல்லிறுதி மகரமுங் குற்றொற்றாதலின் தன்னோடுமயங்காத மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து அந்நலம் என அழகினது நலமென்னும் பொருளதாய் வருமெனக் கொள்க.(5)உருபு புணரியலுள், "வவ்வீறு சுட்டிற் கற்றுறல் வழியே" என உரைத்தமையால், அதுபோலும் வினாவும் எவற்றை என அற்றுச்சாரியை பெறுமெனவும், இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை யுரைத்தமையால், ஏழாம் வேற்றமையும் வரைபாய் வருடை, "மண்புகுந்தும் விண்பறந்து மாலுமயனுங்காணா வொருபொருள்" என வேற்றுமைப் பொதுவிதியேலாது சிறுபான்மை வருமெனவுங் கொள்க.

இன்னும், இவ்வைந்தியலுள்ளும் வகுத்துரையாதன வற்றை யெல்லாந் துன்பப்படாது இதுவே இடமாக முடித்துக் கொள்க.

## வை. மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: இதற்கு இது முடிபு என்று – இதுக்கு இதுதான் முடிந்த இலக்கண மென்று, **யாவும்** – (இவ் வதிகாரத்துள் விதிக்கத் தக்கவற்றை) எல்லாம், **எஞ்சாது** – குறையாமல், **விதிப்பு** – (தனித்தனி அளவு செய்து) விதிக்கப் புகுந்தால் அதற்கு, **அளவு இன்மையின்** – ஒரு வரம்பு இல்லாமையால், **விதித்தவற்று இயலான்** – வகுத்து விதித்தவற்றினுடைய இலக்கணங்களை (ஏதுவாக)க்கொண்டு, **வகுத்து உரையாதவும்** – வகுத்து விதிசொல்லாதவற்றையும், **வகுத்தனர் கொளல்** – (அநுமாநப் பிரமாணத்தால்) வகுத்து விதியுரைத்துக் கொள்க; எ – று.

உ–ம்.:–

எழுத்தியலுள், "மொழிமுதற் காரணமாம் அணுத்திரளொலி எழுத்து" என ஒலி வடிவெழுத்தை உரைத்தனால், ஒலி வடிவைக் காட்டுதற்கு ஓர் கருவியாக எழுதப்பட்டது வரிவடி வெழுத்து எனக் கொள்க. பதவியலுள், "அன் ஆன் அள் ஆள்" என்னுஞ் சூத்திரத்தில் முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென

உரைத்ததனால், 'பெருமாள்' என்னும் பதம் பெருமையை யுடையா னென்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்கிற பதத்தினது ஆன் விகுதி ஆள் விகுதியாக ஒரோவிடத்துத் திரிந்து ஆண்பாலையே யுணர்த்தி நின்றதெனக் கொள்க.

உயிரீற்றுப் புணரியலுள், "**இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன், கசதப மிகும்**" என உரைத்ததனால், "**ணனவல் லினம்வரட் டறவும்**" என்ற இடத்து, டகரமும் வல்லினமாதலின் மிக்க தெனக் கொள்க.

மெய்யீற்றுப் புணரியலுள், "நும்தம், நம்மீறா மவ்வரு ஞநவே" என உரைத்ததனால், அம் என்னுஞ் சொல்லிறுதி மகரமும் தனிக் குறிலடுத்த ஒற்றாதலின் தன்னோடு மயங்காத மெல்லினம் வந்தால் அதுவாய்த் திரிந்து அந்நகை என அழகிய நகை யென்னும் பொருளதாய் வருமெனக் கொள்க.உருபுபுணரியலுள், இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை உரைத்ததனால், ஏழாம் வேற்றுமையும் மண் சேர்ந்து, விண் புகுந்து என வேற்றுமைப் பொதுவிதியை ஏலாமல் சிறுபான்மை வருமெனக் கொள்க.

இன்னும் இவ்வைந்தியலுள்ளும் வகுத்து உரையாதவற்றை யெல்லாம் இதுவே இடமாக முடித்துக் கொள்க

**"அடையெண் பெயர்முறை தோற்றம் வடிவள வாதியந்தம் இடைநிலை போலியென் றீரைந் தெழுத்து மிருபதமும் படுபுணர் மூன்றி னியல்பும் விகாரமுஞ் சாரியையும் உடனுணர் வாரை யெழுத்தறி வாரென்ப ருத்தமரே"**

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– **இதற்கு இது முடிவு என்று** – இதற்கு இது முடிபென்று, **யாவும் எஞ்சாது விதிப்ப** – இவ்வதிகாரத்துள் விதிக்கத்தகுவனவற்றை யெல்லாங் குறையாமல் தனித்தனி அளவுசெய்து விதிக்கப்புகின், **அளவு இன்மையின்** – அதற்கு ஓரளவில்லாமையால், **விதித்தவற்று இயலான்** – வகுத்து விதித்தவற்றினுடைய இலக்கணங்களை ஏதுவாகக் கொண்டு, **வகுத்து உரையாதவும் வகுத்தனர் கொளல்** – வகுத்து விதி யுரையாதனவற்றையுங் கருதலளவைபால் வகுத்து விதியுரைத்துக் கொள்க. **எ–று.**

'விதிப்ப' எனற்பாலது அகரங் குறைந்து நின்றது.

உ–ம்.:–

(1) எழுத்தியலுள், "மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி யெழுத்து" என உரைத்தமையால், "கட்புலனில்லாக் கடவுளைக் காட்டுஞ் சட்டகம்போலச் செவிப்புல வொலியை யுட்கொளற் கிடுமுருபாம் வடிவெழுத்தே" எனப் பிறர் கூறியவாறு, இவ்வொலிவடிவைக் காட்டுதற்கு ஒரு கருவியாக எழுதிக்கொள்ளப்பட்டது வரிவடிவெழுத்தெனக் கொள்க.

(2) பதவியலுள், "அன் ஆன் அள் ஆள்" என்னும் 140ஆவது சூத்திரத்திலே முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென உரைத்தமையால், பெருமாள் என்னும் பதம் பெருமையையுடையானென்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்னும் பதத்தினது ஆன்விகுதி ஆள்விகுதியாக ஒரோவிடத்தே திரிந்து ஆண்பாலையே யுணர்த்திநின்றதெனக் கொள்க.(3) உயிரீற்றுப் புணரியலுள், "இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன் க ச த ப மிகும்" (சூ–165) என்று சொன்னமையால், "ண ன வல்லினம்வரட் டறவும்" என்றவிடத்து டகரமும் வல்லினமாதலின் ('வர + டறவும் = வரட்டறவும்' என) மிகுந்ததெனக் கொள்க.

(4) மெய்யீற்றுப்புணரியலுள், "நுந்தம் எம் நம் மீறா மவ்வரு ஞநவே" (சூ–221) என உரைத்தமையால், அம்மென்னுஞ் சொல்லிறுதி மகரமுங் குற்றொற்றாதலின் தன்னொடு மயங்காத மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து அந்நலம் என அழகினது நலமென்னும் பொருளதாய் வருமெனக் கொள்க.(5)உருபுபிணரியலுள், "வவ்விறு சுட்டிற்கற்றுறல் வழியே" (சூ–250) என உரைத்தமையால், அதுபோலும் வினாவும் 'எவற்றை' என அற்றுச்சாரியை பெறுமெனவும்; இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் வுறனடை யுரைத்தமையால், (சூ–255,256) ஏழாம்வேற்றுமையும் 'வரைபாய் வருடை,' 'மண்புகுந்து' 'விண்பறந்து' என வேற்றுமைப்பொது விதியேலாது சிறுபான்மை வருமெனவுங் கொள்க.

இன்னும், இவ்வைந்தியலுள்ளும் வகுத்துரையாதன வற்றையெல்லாந் துன்பப்படாது இதுவே இடமாக முடித்துக்கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**இதற்கு இது முடிபு என்று** – இதற்கு இது முடிபு ஆகுமென்று, **யாவும்** – (இவ்வதிகாரத்துள் விதிக்கத் தகுவன வற்றை) எல்லாம், **எஞ்சாது**– குறையாமல், **விதிப்பு** – (தனித்தனி அளவு செய்து) விதிக்கப்புகின், **அளவு இன்மையின்** – அதற்கு ஓரளவில்லாமையால், **விதித்தவற்று** – வகுத்து விதித்தவற்றினுடைய, **இயலான்** – இலக்கணங்களை ஏதுவாகக் கொண்டு, வகுத்து உரையாதவும் வகுத்து விதியுரையாதனவற்றையும், **வகுத்தனர் கொளல்** – வகுத்து விதியுரைத்துக் கொள்க.

**உதாரணம்:–**

**(1) எழுத்தியலுள்,** 'மொழிமுதற் காரணமாமணுத் திரளொலி யெழுத்து' (சூ–58) என உரைத்தமையால்,

'கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ்
சட்டகம் போலச் செவிப்புல வொலியை
உட்கொளற் கிடுமுரு பாம்வடி வெழுத்தே'

எனப் பிறர் கூறியவாறு, இவ் வொலிவடிவைக் காட்டுதற்கு ஒரு கருவியாக எழுதிக்கொள்ளப்பட்டது வரிவடிவெழுத்து எனக் கொள்க.

**2. பதவியலுள்,** 'அன், ஆன், அள், ஆள்' (சூ–140) என்னுஞ் சூத்திரத்தில், முறையே அன், ஆன், விகுதி ஆண்பாற்கென உரைத்தமையால், பெருமாள் என்னுஞ்சொல், பெருமையை யுடையான் என்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்கிற பதத்தினது ஆன் விகுதி ஆள் விகுதியாக ஒரோவிடத்துத் திரிந்து ஆண்பாலையே உணர்த்தி நின்றதெனக் கொள்க.

**3. உயிரீற்றுப் புணரியலுள்** 'இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன் கசதப மிகும்' (சூ–165) என்று சொன்னமையால், 'ணன வல்லினம் வரட்டறவும்' என்றவிடத்து டகரமும் வல்லினமாதலின் மிகுந்ததெனக் கொள்க.

**4. மெய்யீற்றுப் புணரியலுள்,** 'நுந்தம், எம் நம் ஈறாம் மவ் வருஞநவே' (சூ.221) என உரைத்தமையால், அம் என்னும் சொல்லிறுதி மகரமும் குற்றொற்றாதலின் தன்னொடு மயங்காத மெல்லினம் வரின், அதுவாய்த் திரிந்து அந்நலம் என்பதுபோல, (அழகினது நலம்) வருமெனக் கொள்க.

**5. உருபு புணரியலுள்,** 'வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே' (சூ–250) என உரைத்தமையால், அதுபோல வினாவும் எவற்றை என அற்றுச்சாரியை பெறுமெனவும்;

இரண்டாம் வேற்றுமைக்கும், மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை உரைத்தமையால், ஏழாம் வேற்றுமையும், 'மண்புகுந்தும் விண்பறந்தும்' என வேற்றுமைப் பொதுவிதி யேலாது சிறுபான்மை வருமெனவுங் கொள்க.இன்னம் இவ்வைந்தியலுள்ளும் வகுத்துரையாதன வற்றை யெல்லாம் இடர்ப்படாமல் இதுவே இடமாக முடித்துக்கொள்க.

## மோசசு பொன்னையா

இதற்கு இது முடிபென்று விதிக்கத் தகுவனவற்றையெல்லாம் முடியக் கூறப்புகின் வரையறைப் படாது ஆதலின், விதிபெற்ற இவற்றின் முறைமைப்படியே விதி பெறாதவற்றிற்கும் அமைதி கூறிக்கொள்க, **எ–று.**

வரலாறு:–

எழுத்தியலுள், 'மொழி முதற் காரணம்' என ஒலியெழுத்தின் வடிவே கூறப்படினும், அதனைக் காட்டும் கருவியாக எழுதிக்கொள்ளப்பட்டதே வரிவடிவெழுத்து எனக் கொள்க. பவியலுள், 'அன் ஆன் அள் ஆள்' என்றவிடத்து அன், ஆன், ஆண்பால் விகுதிகள் என விதிக்கப் பட்டிருப்பினும், 'பெருமாள்' என்னுஞ் சொல் ஆள் விகுதி பெறினும், பொருள் நோக்கி, அவ்விகுதி ஆனின் திரிபாய ஆள் என உணர்ந்து அஃது ஆண்பாலையே உணர்த்தி நின்றது எனக் கொள்க.

உயிரீற்றுப் புணரியலில், 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன், கசதப மிகும்' என்றவாறே, 'ணனவல்லின வரட் டறவும்' என்றவிடத்தும் டகரமும் வல்லினமானதால் மிக்கதென்று கொள்க. மெய்யீற்றுப் புணரியலில், 'நும்தம் எம்நம் மீறாமவ் வருஞநவே' என்ற விதியாலே அழகினது நலம் என்னும் பொருளில், 'அந்நலம்' என முடிந்து அம் என்னுஞ்சொல்லின் மகரம் மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து நின்றது எனக் கொள்க.உருபு புணரியலில் வகரச் சுட்டிற்கு விதிக்கப்பட்ட அற்றுச் சாரியையை எவற்றை என முடிந்து வினாவிடைச் சொல்லும் பெற்றது என்றும், இரண்டாம், மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சிகட்குப் புறனடை அமைத்தமையால், வரைபாய் வருடை என ஏழாம் வேற்றுமைப் புணர்ச்சியும் சிறுபான்மை பொது விதி ஏலாது வரும் என்றும் கொள்க. இன்னும் இவ்வைந்து அதிகாரங்களில் விதியால் வரையறுக்கப் படாதன உண்டென்றால் அவற்றையும் இவ்வாறே முடித்துக் கொள்க.

**(18)**

நன்னூல் உரைவளம்

உருபு புணரியல் முற்றிற்று.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
### சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை-ஒப்பனையியல் | 250.00 |
| தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி | 225.00 |
| அரங்கேற்றுகாதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| Essays and Tributes on Tirukkural (1886-1986) | 100.00 |
| இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை | 60.00 |
| நீறணி பவளக் குன்றம் | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று | 170.00 |

**697 நன்னூல் உரைவளம் – 9 (உருபுப் புணரியல்) 95.00**